
பதில்
சொல்லு
கண்ணே
ஜெய்சக்தி
பதில் சொல்லு கண்ணே
*
பதில்
சொல்லு
கண்ணே
25
இருபத்தி ஐந்தாவது நாவல்

## நூல் விவர அட்டவணை

| | |
|---|---|
| நூலின் பெயர் | : பதில் சொல்லு கண்ணே! |
| ஆசிரியர் | : ஜெய்சக்தி |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| முதற் பதிப்பு | : ஜூலை, 2008 |
| மொழி | : தமிழ் |
| தாளின் தன்மை | : 11.6 K.g. வெள்ளைத் தாள் |
| நூலின் அளவு | : 1 x 8 கிரவுன் |
| அச்சு எழுத்து | : 11 புள்ளி |
| மொத்தப் பக்கங்கள் | : 304 |
| பைண்டிங் | : சாதா அட்டை |
| நூல் வெளியிடுவோர் | : அருணோதயம்<br>5/3, கௌடியா மடம் சாலை,<br>இராயப்பேட்டை,<br>சென்னை-14. |
| கணினி அச்சு | : வேலன் லேசர்<br>சென்னை-18. ✆:94441-01753 |
| அச்சிட்டோர் | : ஜீ.எம்.கிராபிக்ஸ்<br>சென்னை-14. |

**விலை: ரூ.100.00**




## பதிப்புரை

வளர்ந்து வரும் எழுத்தாளர் வரிசையிலே வாசகர்களின் பேராதரவைப் பெற்றவராக விளங்குபவர் திருமதி 'ஜெய்சக்தி' அவர்கள்.

நல்ல கருத்துக்களை, சுவையான சம்பவங்களை, பயனுள்ள செய்திகளைப் பின்னிப் பிணைந்து சிறப்பான கதைகளை எழுதிப் புகழ்பெற்று வருபவர் 'ஜெய்சக்தி'.

படிப்பதால் மனவளர்ச்சியும் மன அமைதியும் ஏற்படுகிறது. வருங்காலத்திற்கான ஆக்க பூர்வ மான கருத்துக்களும், சிந்தனைகளும் எதிர்கால வாழ்க்கையின் வெற்றிக்கு வித்திடுகிறது என்பது வாசகர்களின் ஏகோபித்த பாராட்டுக்கள்.

தொடர்ந்து வெற்றிப்பாதையை நோக்கி நடைபோடும் இவர் தனது 25வது நாவலை மிக அற்புதமாக எழுதித் தந்திருக்கிறார். படித்து மகிழ்ந்து பாராட்டுங்கள்.

அருணோதயம் அருணன்

# பதில் சொல்லு கண்ணே!

## 1



பொழுது விடிந்து விட்டது!

கண் விழித்தபடி புரண்டு படுத்தான் சசிசேகரன். சட்டென்று அவனுக்குப் புரிந்து விட்டது. அது அவனுடைய வழக்கமான படுக்கையறை அல்ல.

மெல்லக் கண்களைத் தேய்த்துக் கொண்டான். சோம்பல் முறித்தான்.

தன்னைக் குறித்தே அவனுக்குச் சிரிப்பு வந்தது. எப்படித்தான் தனக்குத் தூக்கம் வந்ததோ என்று.

'வேறொருத்தனாயிருந்தால் நொந்து நூலாகியிருப்பான். ஆனால் தனக்குத் தூக்கம் வருகிறதே' என்று எண்ணிக் கொண்டான்.

திரும்பவும் குப்புறப் படுத்துக் கொண்டான். அவனது நீண்ட ஆனால் கட்டுமஸ்தான உருவம் அந்தப் படுக்கையில் பாந்தமாக அழுந்திக் கொண்டது.

அரைமணி நேரம் மறுபடியும் உறங்கி விட்டான்!

''அண்ணா.. அண்ணா..'' என்று மாலினியின் குரல் கேட்கவும் எழுந்து அமர்ந்தான்.

''என்னடா..!'' என்றான் அன்பான குரலில்.

''அண்ணா.. காபி கொண்டு வந்திருக்கேன்..'' என்றாள்.

தங்கையைப் பார்த்தான். ஒரு தாய் வயிற்றில் பிறக்காத பெண் என்றாலும் தன் பாசத்துக்குரியவள். தன் மேல் பாசம் வைத்தவள்.

''நீ எதுக்குடா வந்தே..! சமையல்காரர்கிட்டே கொடுத்தனுப்பறதுதானே.''

''ஆமா...! இந்த டம்ளர் தூக்க முடியாத கனம். அந்த பங்களாவுக்கும், இந்த அவுட்ஹவுசுக்கும் ஏழுகடல். ஏழு மலை தாண்டி வரணும் பாத்தியா.. ரொம்பக் கஷ்டம்..'' என்றாள்.

அவளது இடக்குப் பேச்சு அவனுக்கு எப்போதும் பிடிக்கும். இப்போதுதான் பட்டப் படிப்பு முடித்திருந்தாள்.

சித்தியைப் போல கண்ணழகு. அப்பாவைப் போலவே மூக்கு, நெற்றி எல்லாமும் அதனாலோ என்னவோ அவனுக்கு அவளைப் பார்க்கும் போதெல்லாம் அப்பா நினைவு பெருகிக் கொண்டு வருகிறது!

அப்பா மறைந்து நேற்றோடு முப்பது நாள் முடிந்திருந்தது. முப்பதாம் நாள் செய்து முடித்ததற்குப் பிறகு தான் வக்கீல் கிருபாகரன் அப்படியொரு குண்டைத் தூக்கிப் போட்டது.



அப்பா!

அருமையானவர்!

தனது தாய் தன்னை மூன்று வயதில் விட்டுப் பிரிந்து விட்டார்களாம். எப்போதோ பார்த்த சினிமாப் படத்தின் ஒரே ஒரு காட்சி நினைவில் இருப்பதைப் போல் அம்மாவின் முகம் நினைவில் இருந்தது.

அவனது நான்கு வயது வரை அப்பாவே அவனை வளர்த்திருக்கிறார். ஆனால் பாட்டிதான் வற்புறுத்தி மறுபடியும் ஒரு கல்யாணம் செய்து வைத்தாராம்.

சித்தி மங்களம் மிகவும் நல்லவர். அப்படித்தான் அவன் நினைத்துக் கொண்டிருந்தான் நேற்று வரை.

தன்னை மூத்த மகனாகத்தான் வளர்த்தார். அம்மா இல்லாத குறையே அவனுக்குத் தெரிந்ததில்லை. அதிலும் மாலினி பிறந்ததற்குப் பிறகு அவன் தன்னைத் தானே மாலினியின் பாதுகாவலனாக நினைத்துக் கொண்டதற்குப் பிறகு எல்லாமே எளிதாக இருந்தது.

எப்போதும் சுற்றிலும் வேலைக்காரர்கள். அப்பாவின் அருகாமை எல்லாமுமாகச் சேர்ந்து அவன் வளர்ந்த விதத்தை ஆனந்தமாகவே அமைத்தது.

இப்போது இருபத்தைந்தாவது ஆண்டின் பிற்பகுதியில் இருந்தான்.

எப்போதுமே வேற்றுமை காட்டாமல் இருந்த சித்தி இப்போது ஒட்டு மொத்தமாக வேட்டு வைத்து விட்டார்.

சித்தி என்று கூப்பிடுவானே தவிர எப்போதும் சித்தியாக நினைத்ததே இல்லை. தாயாகவே கருதினான்.

தான் டீன் ஏஜில் இருந்தபோது சித்தி மிரட்டும்போது அவனும் பதிலுக்கு,

''மங்களம்.. வேண்டாம்!'' என்று பெயர் சொல்லி மிரட்டுவான்.

சித்தி ரசித்துச் சிரிப்பார்!

எப்போதும் வித்தியாசம் காட்டாத சித்தி என்ற நம்பிக்கையினால்தானே சொத்து விவகாரங்களில் அவன் தேவையான பாதுகாப்பு செய்து கொள்ளத் தவறி விட்டான்.

இன்னொரு மனது சொன்னது.

கண்டிப்பாக சித்திக்கு இந்த உயிலில் பங்கு இல்லை. ஒதுக்கி வைத்தது அப்பாதான். அவனுக்குக் கோபம் யார் மீதாவது வரவேண்டும் என்றால் அப்பா மீதுதான் வர வேண்டும். இனிமேல் என்ன கோபம் வந்தாலும் காட்டுவதற்கு அவர் இருக்கவில்லை. இனிமேலும் கோபம் காட்டித் தனக்கும் எதுவும் ஆகப் போவதில்லை.

நேற்றுத் தான் அவுட் ஹவுஸுக்கு வந்தபோது சித்தி அழுத அழுகை பொய்யாகவும் தோன்றவில்லை. ஆனால் உயிலைப் படித்த பிறகு எதன் மீதும் நம்பிக்கை இல்லாமல் போய்விட்டது.

உலகமே தன்னை ஏமாற்றி விட்டது போல உணர்ந்தான். அப்பாவே தனக்கு இப்படி ஒரு துரோகத்தைச் செய்ததற்குப் பிறகு யாரை நம்பி நமக்கு என்ன ஆகப் போகிறது என்ற எண்ணம்தான் தோன்றியது. அந்தக் கோபத்தில்தான் தங்களது மாளிகையை விட்டு விட்டு இந்த கெஸ்ட் ஹவுஸுக்குப் புறப்பட்டு விட்டான்.

உடனே வெளியேறுவதும் உசிதம் என்று தோன்றவில்லை.

சித்தி கதறி அழுதாள்!



''தம்பி! உங்கப்பா என்ன செஞ்சா என்ன இது பூராவும் உன்னுதாப்பா..! நான் எல்லாத்தையும் உன் பேருக்கு மாத்திடறேன்'' என்று கதறினார்.

அப்போது கிருபாகரன் குறுக்கிட்டுச் சொன்னார்.

''அம்மா..! அது முடியாது. உங்க காலத்துக்கும் எதையும் விக்கவோ, வாங்கவோ வேற யாராவது பேருக்கு மாத்தி விடவோ உங்களுக்கு உரிமை இல்லை. ஆனா.. வர்ற வருமானத்தை ஆண்டு அனுபவிக்க உரிமை உண்டுன்னு மட்டும்தான் எழுதியிருக்காரு'' என்றார்.

சசிசேகரன் இதையெல்லாம் ஒரு வெறுமையான பார்வையோடு பார்த்துக் கொண்டிருந்தானே தவிர வாயைத் திறக்கவில்லை.

இரவே கெஸ்ட் ஹவுஸுக்கு வந்து விட்டான். இடையில் ஒரே ஒரு ஏற்பாடு செய்தான்.

மேனேஜரிடம் பேசினான். ''சார்! எனக்கு மனசு சரியில்லை. ஒரு ஆறு மாசம் எங்காவது போயிட்டு வர்லாம்னு பாக்கறேன். நிர்வாகம் பண்ணுங்க..! ஏதாவது வித்தியாசமாத் தெரிஞ்சா.. மட்டும் எனக்குத் தெரிவிங்க..'' என்றான்.

தங்கள் குடும்பத்துப் பெரியவர் கிராமத்திலிருந்து சிவஞானம் அய்யாவை மட்டும் போனில் வேண்டிக் கொண்டான்.

''ஐயா! நான் கொஞ்ச நாள் வெளியூர் போறேன்.. நீங்க வீட்டுக்குத் துணையா வந்து இருங்க..'' என்று.

அவர் அவ்வப்போது அப்பாவோ, அவனோ வெளியூர் போகும்போது வந்து இருப்பவர்தான்.

''இந்தத் தடவை வரும்போது எப்பவுமே இங்க இருக்கற மாதிரி புறப்பட்டு வந்துடுங்க.. எங்களுக்கும் ஒரு ஆதரவா இருக்கும்'' என்றான்.

ஒரேயடியாகத் தான் வெளியேறுகிறோம் என்பதை அவன் யாரிடமும் சொல்லவில்லை. ஆனால் சித்திக்குப் புரிந்து விட்டாற்போல் தோன்றியது.

"தம்பி! நீ ரொம்ப அமைதியா இருக்கறதைப் பாத்தா எனக்குப் பயமா இருக்குது. எனக்கு இந்த சொத்தே வேண்டாம். நீங்க மூணு பேர் மட்டும் மிஞ்சினாப் போதும்" என்றார்.

அவன் உடனே ஒன்றும் பிரதிபலிப்பைக் காட்டிவிட வில்லை. முகவாய்க் கட்டையை நீவிக் கொண்டான்.

"நாங்க எப்பவும் உங்களை விட்டு விலகிடப் போற தில்லே... சித்தி..." என்றான்.

அதற்குப் பிறகுதான் சித்தி நிம்மதியாக உறங்கப் போனாற் போல் தோன்றியது.

அப்பாவின் பிரிவு எல்லாரையும்தான் தாக்கியிருந்தது. அந்தப் பரந்த தோள்களின் மீது ஏறிக் குதித்த அனுபவம் இப்போதுகூட அவனுக்கு நினைத்தால் சுகமாக இருந்தது.

அவன் சிறு குழந்தையாக இருந்தபோது குப்புறப் படுத்தாற் போன்ற தோற்றத்தில் இரண்டு உள்ளங்கை களாலும் அவனைத் தூக்கிச் சுற்றினால் சற்றும் அச்சப் படாமல் கலகலவெனச் சிரிப்பானாம். தனது மீசையை நீவிக் கொண்டே அப்பா சொல்லிச் சிரிப்பார்.

சித்தி மங்களத்துக்கு அப்பாவிடம் பயம்தான். பேச்சே உறுமல் மாதிரி இருக்கும். ஆனால் உள்ளம் நிறைய அன்பு. அது அவரோடு நெருங்கிப் பழகியவர்களுக்குத் தான் தெரியும்.

தான் சின்னப் பையனாக இருந்தபோது ஒருமுறை நிகழ்ந்த நிகழ்வு இப்போது அவனுக்கு நினைவுக்கு வந்தது.



ஒருமுறை அவன் ஏதோ செய்யக் கூடாத குறும்பு செய்து விட்டான். சித்தி அவனை அடித்து விட்டார்.

அப்பா சித்தியிடம் கோபமாகக் கேட்டார்.

''உன் பையனா இருந்தா இப்படி அடிச்சிருப்பியா?'' என்று.

என்றைக்குமே அப்பாவை எதிர்த்துப் பேசியதே இல்லை சித்தி. ஆனால் அன்றைக்குப் பேசினார்.

''அவனை நான் என் பையனா நினைச்சதாலதான் அடிச்சேன்'' என்று.

அப்பா திகைத்துப் போனார்.

''நான் வந்து மூணு வருஷமாச்சு. இதுவரைக்கும் என்கிட்டே வித்தியாசமான நடத்தை பாத்திருக்கீங்களா? ஆனா, இன்னைக்குப் பள்ளிக் கூடத்துல பக்கத்துல இருக்கிற பையனை குண்டூசியால குத்தியிருக்கான். அந்தப் பையனோட அம்மா ஏழைப்பட்டவ. என்கிட்டே வந்து சொல்லிட்டு அழுதுட்டுப் போனா. இதுக்கு அடிச்சுத் திருத்தலேன்னா.. வேற எதுக்கு அடிக்கறது?'' என்றார்.

அப்பா சுதாரித்துக் கொண்டார்.

"சாரி.. மங்களம்!" என்று அந்த இடத்தை விட்டு நகர்ந்து விட்டார். ஆனால் அன்று இரவே இன்னொன்றையும் கண்டார்.

''சாப்பிட மாட்டேன்'' என்று குப்புறப் படுத்து அழுத படி முரண்டு பிடித்த மகனிடம் மங்களம் கெஞ்சிக் கொண் டிருந்தார். கடைசியில்,

''பாரு.. சசி! நீ சாப்பிடலேன்னா நானும் சாப்பிட மாட்டேன்'' என்று போய்ப் படுத்துக் கொண்டார்.

சற்று நேரம் வரை தேம்பிக் கொண்டிருந்த சசிசேகரன் பிறகு எழுந்து நின்று,

"சரி.. சாப்பிடறேன்.. நீயும்.. வா!" என்று அழைத்தபடி எழுந்தான். முத்தமாரி பொழிந்தார் மங்களம்.

"தங்கம்.. இல்லே! ராஜா இல்லே! தப்பு செஞ்சங்காட்டித்தானே அடிச்சேன்.. யாருமே என்ற தங்கத்தை வந்து குறை சொல்ற மாதிரி நடந்துக்கக் கூடாது. உன்னைக் குறை சொன்னா எனக்கு ரோஷம் பொத்துக்கிட்டு வருதில்லே.." என்று பேசியபடி அழைத்துக் கொண்டு சென்று சாப்பிட வைப்பதைக் கண்ட நாளில் மருதமுத்து முடிவு செய்து கொண்டார்.

"இவள் சரியான தாய். இனிமேல் இவளது பிள்ளை வளர்ப்பில் தலையிட வேண்டியதில்லை" என்று. ஆனாலும் சசிசேகரனுக்குத்தான் அந்த வீட்டில் முதல் உரிமை என்பது போல் எண்ணத்தையும் மனைவிக்கு உண்டாக்கியிருந்தார்.

பெரியவனானதும் சக தோழரைப் போலவே நடத்தியிருந்தார். ஆனால் திடீரென்று உடல்நலக் குறைவு ஏற்பட்டது.

அறுபதை எட்டிக் கொண்டிருந்தார். கடந்த இரண்டு மூன்று மாதங்களாகவே உடல்நலக் குறைவுக்காக மருத்துவமனை போய் வந்து கொண்டிருந்தார்.

இந்த முறை மீண்டு வருவார் என்றுதான் எண்ணினார்கள். வக்கீல் கிருபாகரனிடம் ஒன்றிரண்டு முறை தனியாகப் பேசிக் கொண்டிருந்தார். ஆனால் இப்படியெல்லாம் உயில் எழுதி வைப்பார் என்பது யாரும் எதிர்பாராதது.

இத்தனை நினைவுகளும் மனதில் ஓடி மறைய ஒரு ஐந்து நிமிடம்தான் ஆகியது. சசிசேகரன் அந்த அவுட் ஹவுஸின் கூரையின் மேல் கண்களை ஒட்டியபடி மிக மெதுவாகக் காபியை ரசித்துக் குடித்தான்.



மாலினி அவன் அருகில் அமர்ந்து கொண்டாள்.

"மாலு! நல்லாப் படிக்கணும். பெரிய ஆளா வரணும்" என்றான் ஆத்மார்த்தமாக.

மாலினி அவனை கேள்விக்குறியாகப் பார்த்தாள். "அண்ணா! திடீர்ன்னு இந்த மாதிரி ஆசீர்வாதத்துக்கு என்ன அவசியம்? நேத்திலருந்தே நீ சரியில்லை அண்ணா! இந்த உயில் என்ன பெரிய விஷயம். நீ சொன்னாலும் சொல்லாட்டாலும் அம்மா உன்னைக் கேட்காம எதுவும் செய்யப் போறது இல்லே! நீ எதுக்கு ஏதோ விதமாவே பேசிகிட்டிருக்கே.." என்றாள் குரலில் கவலை தொனிக்க.

"இல்ல.. மாலு! நான் எந்த விதமான அலசல்களுக்கும் தயாரா இல்லே! முடிஞ்சது முடிஞ்சதுதான். எனக்கு சித்தி மேல எந்த வருத்தமும் இல்லே! நான் வருத்தப் படணும்ன்னா..." என்றவன் சட்டென்று பேச்சை நிறுத்திக் கொண்டான்.

ஒரு பெருமூச்சு விட்டான். பிறகு சொன்னான்.

"ஃபார் எ சேன்ஜ்... நான் ஒரு ஆறு மாசம்.. வெளியூர் போலாம்னு இருக்கேன்.."

"எங்கே?"

"எங்க வேணும்னாலும்..! அது இன்னும் முடிவு செய்யலே."

அதே நேரம் சித்தி ஒரு விதமான பட்படப்போடு உள்ளே வந்தாள்.

"தம்பி! என்னமோ பத்து செட் டிரஸ் எடுத்து வைக்கச் சொன்னியாம். எங்காவது போறியா?" என்றார் மங்களம்.

''ம்..!''

''எங்கே?''

''சும்மா.. ஒரு ரவுண்ட்..! ஒரு ஆறு மாசம்..'' மங்களம் மகனை ஊடுருவிப் பார்த்தார்.

''தம்பி! இப்பல்லாம் நீ ரொம்ப மாறிட்டே! மனசுல இருக்கறதை வெளிப்படையாப் பேசமாட்டேங்கறே..!'

''எல்லாரும் மனசுல. இருக்கறதை வெளிப்படையா பேசிடறாங்களா.. என்ன?''

''தம்பி! உங்க அப்பா எழுதின உயிலுக்கும் எனக்கும் சம்பந்தமே இல்லை..!''

''அப்படின்னு நம்பத்தான் நானும் விரும்பறேன்'' என்று சொல்ல வந்தவன் சொல்லாமலே விட்டு விட்டான்.

''சொல்லி என்னத்துக்கு ஆகப் போகிறது?''

''தம்பி! எப்பவும் இதெல்லாம் உன்னோட சொத்துத் தான்'' என்றார் மங்களம் கெஞ்சும் விதமாக.

''இப்படி நீ சொல்லி.. நான் கேட்க வேண்டிய நிலைமையே எனக்கு வித்தியாசமா.. இருக்கு..''

''தம்பி..! என்று மங்களம் தவிப்புடன் மறுபடி ஆரம்பிக்க அவன் வலது கையை உயர்த்தினான்.

''உயில் எழுதினது எழுதியதுதான்! எனக்கென்னமோ ஏதோ அன்னியர் வீட்ல, எனக்கு சொந்தமில்லாத இடத்துல இருக்கற மாதிரி ரொம்ப வருத்தமா இருக்கு. சித்தி..! ஒரு ஆறு மாசம் நான் வெளியூர் போறேன். உங்களுக்குப் பாதுகாப்புக்கு சிவஞானம் தாத்தாவை வரச் சொல்லியிருக்கேன். எப்பக் கூப்பிட்டாலும் செல்போன்ல கிடைப்பேன். எனக்கு கண்டிப்பாச் சேன்ஜ் தேவை... சித்தி..'' என்றான் கண்டிப்பான குரலில்.



சித்தி தேம்பித் தேம்பி அழுத போதும், மாலினி கண் கலங்கி அழுத போதும், குணசேகரன் கெஞ்சிய போதும் அவன் முடிவை மாற்றிக் கொள்ளவில்லை.

''சித்தி.. உன்மேல எனக்குக் கோபம் இல்லே! கோபம் எல்லாம் எங்க அப்பா மேலதான்'' என்றான்.

புறப்பட்டான்!

தனது சிவப்பு நிற சான்ட்ரோ காரில் ஏறும்போது சித்தியிடம் கிண்டலாக,

''சித்தி... இது என் சொந்த சம்பாத்தியத்தில் வாங்கியது'' என்று வேறு சொல்லிவிட்டுப் புறப்பட்டான்.

அந்த அதிகாலை நேரத்துக்கே கிருபாகரன் வந்து நிற்க.. மங்களம் கதறினார்.

''பாருங்க.. லாயர் சார்! எவ்வளவு சொல்லியும் கேட்காமப் போறான்..'' என்று.

கிருபாகரன் மௌனமாக அவன் கார் போன திசையைப் பார்த்துக் கொண்டு நின்றார்.

## 2



எப்போதோ படித்திருக்கிறான்.

''காதற்ற ஊசியும் வாராது காண் கடைவழிக்கே'' என்று மகன் எழுதி வைத்ததைக் கண்டுதான் பட்டினத்தார் ஞானம் பெற்றார் என்று.

நேற்று முன்தினம் வரை தன்னுடைய குடும்பமாக இருந்த நிலை எப்படி ஒரே நாளில் மாறியது? ஏன் இப்படி? இதனால்தான் ''பெண்களை நம்பாதே'' என்று சொன்னார்களோ?

சித்தியின் தூண்டுதலின் பேரில்தான் அப்பா அந்த மாதிரி எழுதினாரோ என்று தோன்றியது. ஏதோ ஒரு சினிமாவில் பார்த்திருக்கிறான் சித்தி நல்லவளாகவே

நடித்து கடைசியில் மகனுக்கு கேட்டு வைக்கிறாற்போல அது போல தனது சித்தியும் செய்து விட்டாரோ.

கதறும் கதறலைப் பார்த்தால் அப்படியெல்லாம் தோன்ற வில்லை. யோசனையுடன் காரை ஓட்டினான். எல்லாச் சொத்தையும் கொடுத்து விட்டுக் கால்நடையில் வெளி யேறுகிற நிலைமை இல்லை. சொந்தமாக வாங்கிய கார் இருக்கிறது. ஆனால் என்ன? சொந்தத் தொழிலைத் தானே பாக்கப் போகிறோம் என்ற எண்ணத்தில் அவன் மேலாண்மைக் கல்விக்கோ, கம்ப்யூட்டர் துறைக்கோ போகவில்லை.

''பி.ஏ.வில் ஆங்கில இலக்கியமும், எம்.ஏ.வில் தமிழ் இலக்கியமும் படித்த ஒரே ஆள் நீயாத்தான் இருக்கும்'' என்று அப்பா கூட கலாட்டா செய்வார். கல்லூரியில் எம்.ஏ. ஆங்கில இலக்கியம் படித்தான். தபாலில் எம்.ஏ. தமிழ் படித்து முடித்தான்.

கவிதைகளில் இலக்கியங்களில் மனம் செலுத்திய தாலோ என்னவோ அவனது ரசனைகள் மென்மையான வையாகவே இருந்தன.

அப்பா எத்தனையோ முறை சொன்னார். ''தம்பி.. டேய்! நிர்வாகம் பண்ண வாடா'' என்று தலையால் தண்ணீர் குடித்தார்.

''போங்கப்பா! நிர்வாகம் இருக்கவே இருக்கு. கொஞ்ச நாள் லைஃபை என்ஜாய் பண்றேன். அப்புறம் வந்தர் றேன்'' என்றான்.

அவரும் அவன் போக்கில் விட்டு விட்டார்.. ஒரு வேளை அந்த இலக்கிய மனம்தான் இத்தனை பெரிய விஷயத்தைச் சர்வ சாதாரணமாக எடுத்துக் கொள்ள உதவியதோ?



கசப்புடன் சிரித்துக் கொண்டான்.

பாட்டிதான் அடிக்கடி சொல்வார். ''தம்பி நாம யாருக் காவது உதவி செஞ்சா வேற எங்கிருந்தோ உதவி நமக்கு வரும். தர்மம் தலை காக்கும்னு. பரவாயில்லை. நமக்கும் அப்படித்தான் போல இருக்கிறது.''

உதவி எதிர்பாராத இடத்தில் இருந்து வந்தது.

நேற்றிரவே வீட்டை விட்டு வெளியேறி விடுவது என்று முடிவு செய்து விட்டான்.

எப்போது அப்பா இப்படி உயில் எழுதினாரோ அதற்குப் பிறகு எல்லாவற்றின் மேலும் வெறுப்புத்தான் வரும். சித்தியின் அன்பு உண்மையோ பொய்யோ தனக்குள் சந்தேகம் வந்து விட்ட பிறகு அங்கே இருந்து நரக வேதனை படக்கூடாது.

உயில் தனக்கு சாதகமாக இல்லை! அதனால் என்ன? வெளியே கிளம்பலாம். வெளியுலகம் பார்க்கலாம் என்று முடிவு செய்து கொண்டான்.

பாஸ் புக்கை எடுத்துப் பார்த்தான்.

ஒரு லட்ச ரூபாய்க்கு மேல் இருந்தது.

கைவசம் கார் இருக்கிறது!

பாட்டியின் பணத்தில் வாங்கிய கார்! பாட்டி அவனுக் காகப் போட்டு வைத்த டெபாசிட் இருக்கிறது. அது அப்படியே இருக்கட்டும்.

வாழ்க்கையை அடி மட்டத்தில் இருந்து பார்க்க வேண் டும். அதற்காகத்தான் அந்தக் காலத்தில் அரச குடும்பத் துக்கு குழந்தைகளைக் கூட குருகுலத்துக்கு அனுப்பி வைத்தார்கள்.

ஏழ்மையும் எளிமையும் என்னவென்று பார்க்க வேண் டும். தனக்கென்ன ஆண் பிள்ளை. ஒரு திண்ணையில்

படுத்துத் தூங்கினால் கூட ஆயிற்று என்கிற அளவுக்கு யோசித்து வைத்திருந்தான். ஆனால் அதற்கெல்லாம் அவசியம் இல்லாமல் போயிற்று.

இளமை இருக்கிறது. படித்த படிப்பு இருக்கிறது. உழைக்கத் தெம்பிருக்கிறது. இனிமேல் தன்னுடைய பிழைப்பைப் பார்த்துக் கொள்ளலாம்.

நல்ல வேளையாக அப்பாவுக்கு உடல்நிலை மோசமாக ஆரம்பித்தவுடனே ஏஜென்சி தொடர்பான கடைகளை மட்டுமே வைத்துக் கொண்டார். மில்லை ஏற்கனவே விற்றா யிற்று. சொத்துக்களாக மாற்றி வைத்து விட்டார். இப்போது சசிக்குத் தோன்றியது தவறு செய்து விட்டோம் என்று.

எப்போது நிர்வாகம் பார்க்கச் சொன்னாரோ அப்போதே நுழைந்திருக்க வேண்டும். அப்போது நுழைந்திருந்தால் நிலைமை தன் கட்டுக்குள் இருந்திருக்கும். இனிமேல் பேசி என்னத்துக்கு ஆகப் போகிறது? ஆனால் தந்தை தனது பொறுப்புக்களில் இருந்து தப்பித்தாலும் தான் தப்பித்து விடக்கூடாது என்பதற்காகத்தான் சிவஞானம் அய்யாவைக் கொண்டு வந்து பொறுப்பில் விட்டு விட்டு வந்தான்.

நேற்று மாலை அவனது சிந்தனைகளில் மேல்கண்ட விஷயங்கள் ஓடிக் கொண்டிருக்கு ம்போதுதான் அது நிகழ்ந்தது.

செல்போன் ஒலித்தது. எடுத்தான்.

''தம்பி! நான் நடேசன் பேசறேன்'' என்றது குரல்.

தங்களது உறவினர்களில் ஒருவர் நடேசன் என்று இருந்தார். அவரைத் தெரியும். ஆனால் அவர் கிராமத்தில் இருந்தார். அதுவுமில்லாமல் முப்பதாம் நாளுக்குக் கூட வந்து விட்டுப் போனாரே! என்று யோசித்தபடி.



''ஹலோ! சொல்லுங்க!'' என்றான்.

இப்போது குரல் புரிந்து விட்டது. அதனால்,

''மாமா..!'' என்று கூடச் சேர்த்துக் கொண்டான்.

''தம்பி! மங்களம் பேசினாப்ல. உயில் பத்தின எல்லா விஷயமும் சொன்னாப்ல..! நீங்க..''

''சும்மா நீன்னே பேசுங்க!'' என்றான்.

''அது.. வந்து.. தம்பி..'' என்று தயங்கியவர். சுதாரித்துக் கொண்டாற் போல ''சரி.. நீயும் ரொம்ப வருத்தத்துல இருக்கேன்னு.. சொன்னாப்ல..'' என்றார்.

''ம்..!'' என்று பெருமூச்சு விட்ட சசிசேகரன் சொன்னான்.

''எனக்குக் கோபம் சித்தி மேல இல்ல! அப்பா மேல தான்! அப்பா என்மேல நம்பிக்கை வைக்கலையோன்னு தோணுது'' என்றான்.

''அதான்ப்பா எனக்கும் புரியலே! எப்பவுமே உன்னைப் பத்திப் பெருமையாத்தான் பேசுவாரு. மங்களத்தைப் பத்தியும் நல்ல விதமாத்தான் சொல்வாரு'' என்றார் ஆழ்ந்த குரலில்.

இரண்டு பக்கமும் சற்று தர்ம சங்கடமான மௌனம் நிலவியது. பிறகு அவரே சொன்னார்.

''சரிப்பா! என்னமோ ஆறு மாசம் வெளியூர் போறேன்னு சொன்னியாம்.''

''ஆமா.. மாமா!''

''அதெப்படித் தம்பி.. மங்களத்துக்கு இதுவரைக்கும் எதுவும் தெரியாது. மாலினியும், குணசேகரனும் சின்ன வயசு. எப்படிச் சமாளிப்பாங்க?'' என்றார்.

''அதுக்குத்தான் சிவஞானம் மாமாவைக் கொண்டு வந்து இறக்கியிருக்கேன். நான் எங்கயிருந்தாலும்

குடும்பத்து மேல ஒரு கண் வச்சிருப்பேன். அட்லீஸ்ட் மாலினி கல்யாணம் வரைக்குமாவது'' என்றான்.

''நல்லது தம்பி உன் முடிவு எதுவானாலும் சரி. உனக்கு ஒரு நல்ல விஷயம் சொல்றதுக்குக் கூப்பிட்டேன்'' என்றார்.

''சொல்லுங்க...!'' என்றான்.

''தம்பி! உங்கப்பா என்ன நினைச்சாருன்னு தெரியலை... ஒரு ஆறு மாசத்துக்கு முன்னாடி ஒரு பத்தொன்பது ஏக்கர் நிலம் உன் பேர்ல வாங்கி அந்தப் பத்திரத்தை என் பொறுப்பில வச்சிருக்காரு. நீ பேசாம நம்ம ஊருக்கு வந்துரு. என்ன ஒரு நாப்பது, ஐம்பது கிலோ மீட்டர் தூரம்தானே, எப்ப வேண்ணாப் போய்ப் பார்த்துக்கலாம்..'' என்றார்.

''ம்..! எப்ப.. எப்ப வாங்கினாரு..!''

''அதான் ஆறு மாசத்துக்கு முன்னால அதுக்கப்புறம் உடம்பு சரியில்லாமப் போயிருச்சு.''

''உயில்ல அதைப் பத்தி ஒண்ணும் சொல்லலையே!'' என்றான்.

''அது தெரியலை! ஆனா, உன்ற பர்த்டேக்கு உனக்கு பிரஸன்ட் பண்றதா சொன்னாரு.'' என்றார் நடேசன்.

''ஓஹோ..!'' என்றான்.

''சரி.. நான் அங்கயே வர்றேன். வந்து மேற்கொண்டு என்ன செய்யணும்னு யோசிக்கலாம்'' என்றான்.

''தம்பி! ஒண்ணும் கவலைப்பட வேண்டாம். அஞ்சு ஏக்கரா பூராவும் தென்னந்தோப்பு. கொஞ்சம் கவனிச்சுப் பாத்தா.. மூணு தலைமுறைக்கு உட்கார்ந்து சாப்பிடலாம்'' என்றார் நடேசன்.

சசிசேகரன் வருகிறேன் என்று சொன்னதே அவருக்கு உத்வேகமாக இருந்தது.



இப்போது காரை பசுங்குடி கிராமம் நோக்கித்தான் ஓட்டிக் கொண்டிருந்தான். ஆயிற்று இன்னும் பத்து நிமிடங்களில் ஊரை எட்டி விடலாம். நடேசன் மாமா வீடு எங்கே இருக்கிறது என்று விசாரிக்க வேண்டும் என்று யோசித்துக் கொண்டிருக்கையிலேயே கார் ஊர் எல்லையைத் தொட்டது.

ஊர் எல்லையிலேயே நடேசன் மாமா காத்துக் கொண்டிருந்தார். காரை அடையாளம் கண்டு கொண்டு கை காட்டினார்.

''எப்படிக் கண்டு பிடிச்சீங்க?'' என்று கேட்டான்.

''இந்த ஊர்க்காரங்ககிட்டே யாருகிட்டயும் காரு கிடையாது. இந்த கிராமத்து வழியா வேண்ணா ரெண்டு மூணு காரு போகும். அதுல இந்த சிவப்புக் கார் யாருகிட்டயும் கிடையாது'' என்று சிரித்தார்.

நிலத்துக்குப் போனார்கள்.

''தம்பி! பத்திரத்தை எடுத்துப் பாத்தேன்.. பத்தொன்பது ஏக்கரா வருது. அஞ்சு ஏக்கர் முழுக்க தென்னந்தோப்பு..'' என்று சுற்றிக் காட்டினார்.

''நீங்கதான் கவனிச்சுக்கறீங்களா?''

''ஆமா..! வெட்டிப் பொழுதுதானே போக்கறேன்.. அதுதான்.. என்னையே பாத்துக்கச் சொன்னாரு..'' என்றார்.

தென்னந்தோப்பு பார்க்க ரம்மியமாக இருந்தது. இளநீர் வெட்டித் தந்தார்கள்.

குடித்து விட்டுச் சுற்றிலும் பார்த்தான்.

''தம்பி...! இந்த இடத்துல ஒரு கயித்துக் கட்டில் போட்டா.. ரொம்பச் சுகமா இருக்கும்..'' என்றார்.

''தங்கறதுக்கு..!'' என்று இழுத்தான்.

"கவலையே இல்லை! அதோ.. அந்த இடத்துல இருக்கிற ஓட்டு வீடு நம்முதுதான்.." என்றார்.

அழைத்துப் போனார்.

அவர்கள் மாளிகை அளவுக்குப் பெரிதாக இல்லையென்றாலும் சற்றுப் பெரியதாகவே இருந்தது.

"போதும்.. போதும்.. ஒருத்தனுக்கு.. இவ்வளவு போதாதா..!" என்றான்.

"சமையலுக்கு ஆள் போட்ரலாம்..!" என்றார்.

நடேசனுடன் அந்த வீட்டுக்குள் நுழைந்தான். கொஞ்சம் நாற்காலிகள் சமையல் சாமான்கள் என்று நடேசன் வாங்கி வைத்திருந்தார். ஒரு பெரிய அறையை அவனுக்காகத் தயார் செய்து வைத்திருந்தார். பெரிய மரக் கட்டில் ஒன்று இருந்தது. கட்டில் மெத்தை எல்லாமும் தயாராக இருந்தது.

"தம்பி! ஐயாவுக்குச் சேர வேண்டிய பணம் என்கிட்டே ஒரு லட்சம் இருந்தது. அது மட்டுமில்ல.. எப்ப வந்தாலும் சசி தங்கற மாதிரி மாதிரி ஏற்பாடுகள் செஞ்சு வைங்கன்னு சொன்னாரு.." என்றார் நடேசன்.

"சரி.. தம்பி! இன்னைக்கெல்லாம் எதைப் பத்தியும் கவலைப் படாம ரெஸ்ட் எடுங்க.. நாளையிலிருந்து என்ன செய்யறதுன்னு திட்டம் போட்டுக்கலாம்.." என்று கிளம்பினார்.

இரண்டு எட்டு எடுத்து வைத்தவர் "தம்பி! இன்னைக்கு மத்தியானம் எங்க வீட்ல இருந்து சாப்பாடு கொண்டாரேன்."

"சரி..!" என்று புன்னகைத்தான்.

குளித்து முடித்து விட்டு மறுபடியும் காரை எடுத்துக் கொண்டு ஊரை ஒரு சுற்றுச் சுற்றி வந்தான்.



மிகச் சிறிய ஊர்தான்!

கடைத்தெரு என்று சொல்லிக் கொள்கிற மாதிரி ஒரே ஒரு தெரு..

ஒரு சின்ன ஓட்டல், ஒரு சின்ன துணிக்கடை. ஒரு மருந்துக்கடை, ஒரு பார்பர் ஷாப் என்று அளவாக ஆனால் ஊரின் தேவையை நிறைவேற்றுகிற மாதிரிக் கடைகள் இருந்தன.

மீண்டும் தனது நிலத்துக்குள் நுழையும் போதுதான் கவனித்தான். நிலத்தின் அந்தக் கோடிக்குத் தொட்டாற் போல் ஒரு சிறிய பள்ளிக்கூடம் இருந்தது. தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்த ஆளை அழைத்துக் கேட்டான்.

"அதென்ன.. பள்ளிக் கூடமா?" என்று.

"ஆமாங்கய்யா.. பொட்டப் புள்ளைங்க ஸ்கூலுங்க. எட்டாவது வரைக்கும் இருக்குதுங்க.." என்றார்.

"பரவாயில்லை..! இவ்வளவு சிறிய ஊரில் ஒரு பள்ளிக்கூடம் இருக்கிறதே" என்று மகிழ்ச்சியடைந்தான்.

அதற்குள்ளாக பகலுணவு நேரம் ஆகியிருந்தது. நடேசன் தன் மனைவி ராதாமணியுடன் வந்தார்.

"தம்பி! ஒண்ணும் கவலைப்பட வேண்டாம். நான் இருக்கேன்.. உங்களைப் பாத்துக்கறேன்" என்று ஆதரவாகப் பேசினார்.

அன்பாகப் பரிமாறினார்.

நடேசன் ராதாமணி தம்பதியர்கள் வாழ்வில் ஒரு பெரிய சோகம் ஏற்பட்டிருந்தது.

ஒரே மகள்! திருமண வயதில் இருந்தாள். திருமணமும் செய்து கொடுத்தார்கள். ஆனால் என்ன நிகழ்ந்ததோ தெரியவில்லை. தற்கொலை செய்து கொண்டாள்.

மனமொடிந்து போனார்கள். அந்த சமயத்தில் சசிசேகரனின் அப்பாதான் ஆறுதல் படுத்தினாராம். சொன்னார்கள். சொன்னதற்குப் பிறகு ராதாமணி சொன்னார்.

''அத்தனை நல்லவரு.. தம்பி! மங்களமும் நல்ல பொண்ணுதான் ஆனா.. எப்படி இப்படி உயில் எழுதி வச்சாருன்னுதான் தெரியலே!'' என்றார் தனக்குள் பேசிக் கொள்வது போல.

''விடுங்கத்தே! என்ன நினைச்சாரோ.. நடந்தது நடந்து போச்சு.. இனி ஆக வேண்டியதைப் பார்ப்போம்.. உங்களுக்கும் ஒரு மகன் கிடைச்சான்னு வச்சுக்குங்க..'' என்றான் சசிசேகரன்.

இருவரும் மனம் நெகிழ்ந்து போனார்கள்.

''தம்பி..! எங்க பாப்பா போனதுக்கப்புறம் வாழ்க்கைக்கே ஒரு அர்த்தம் இல்லேன்னு நினைச்சேன். ஆனா.. இப்ப நீங்க வந்திருக்கீங்க..! ஏதோ நாலைஞ்சு வீடு இருக்கு.. கொஞ்சம் வாடகை வருது.. அது எங்களுக்குப் போதும் தம்பி! எங்க காலத்துக்குப் பிறகு அந்த சொத்தை இந்த ஸ்கூலுக்குப் பயன்படுத்திக்கச் சொல்லி ஊர்க்காரங்களுக்குச் சொல்லியிருக்கோம். இனி, நீ வந்துட்டே! நீ பாத்து என்னவும் பண்ணு'' என்றார்கள்.

அப்போதுதான் அவனுக்கு அந்த யோசனை தோன்றியது.

'செய்யறதுக்கு ஒண்ணுமில்லே! வாழ்க்கையில அர்த்தம் இல்லேன்னு ஏன் நினைக்கணும். கொஞ்சம் கவனம் செலுத்தினா இந்த ஊரிலேயே நிறைய செய்யலாம் போல இருக்கே' என்று எண்ணிக் கொண்டான்.

மனம் சமனப்பட்டது. அதற்குப் பிறகு கலகலவென்று சிரிக்க ஆரம்பித்தான்.



நடேசன் தம்பதியர் மிக மகிழ்ச்சியாக அதைக் கவனித்துக் கொண்டார்கள்.

வந்தது!

வேலை வந்தது! முழுவதுமாக அவன் நேரத்தை விழுங்கினாற் போல பெரிய பெரிய வேலைகள். திருப்பங்கள் எல்லாம் வந்தன.

## 3



''அண்ணா! அண்ணா!'' என்று மாலினி அழைக்கிறாற் போலவே இருந்தது.

''அடிபின்னிடுவேன்.. போடா!'' என்று பொய் மிரட்டல் மிரட்டுவதற்கு அருகில் குணசேகரன் இருக்கவில்லை.

''ஹாய்யாக'' என்பார்களே அது போல இரண்டு கைகளையும் தலைக்கு அணையாகக் கொடுத்து கட்டிலில் சாய்ந்திருக்க மாலினியும், குணசேகரனும் அவனது அறையிலேயே இரவு பத்து மணி வரைக்கும் அடைந்து கிடப்பார்கள்.

சில நேரங்களில் மங்களம் சித்தியும் கூட வந்து அவன் கால் மாட்டில் அமர்ந்திருப்பாள். சிறு வயதில் இருந்தே தூக்கி வளர்த்ததாலோ என்னவோ தாயாகவேதான் நினைத்திருந்தான். சித்தி என்று நினைத்ததும் இல்லை. ஆனால் இன்றைக்கு நிலைமை எப்படித் தலைகீழாக மாறியது!

தனிமையில் அந்த ஓட்டு வீட்டில் உள்ள அந்தப் படுக்கை அறையில் படுத்துக் கொண்டு அவன் சிந்தனையிலாழ்ந்திருந்தான்.

எங்கேயோ ஏதோ தப்பு நேர்ந்திருக்கிறது! யாரோ எதையோ சொல்லி அப்பாவின் மனதைக் கலைத்திருக்

கிறார்கள் அல்லது சித்தியின் மனதைக் கலைத்திருக்கிறார்கள். அந்த வக்கீல் கிருபாகரனாக இருக்குமோ! இருக்கலாம்! அந்த ஆள் முழியே சரியில்லை!

விலகி வரும்போது அவன் அதற்காக இன்னொரு காரணமும் வைத்திருந்தான். யாராக இருந்தாலும் தான் இல்லை என்ற தைரியத்தில் குடும்பத்தில் நுழைந்து விளையாடுவார்கள். எப்படியும் சிவஞானம் கண்டு பிடித்து விடுவார். அப்போது விஷயம் பிடிபட்டு விடும் என்று முடிவெடுத்தான். மனம் தெளிவாகியது.

மனம் முப்பது நாட்களுக்கு முந்தைய நிகழ்வுகளில் ஒன்றியது.

எப்போதுமே அப்பா சுறுசுறுப்பாக நடமாடுவார். ஆனால் சமீப காலமாக சுறுசுறுப்பு கொஞ்சம் குறைந்திருந்தது.

ஐம்பத்தெட்டு வாயைத் தாண்டியிருந்தார். சிறு வயதில் இருந்தே கஷ்டப்பட்ட குடும்பமாம். இவர்தான் மூத்த மகன். அதனால் குடும்பப் பொறுப்பில் பங்கேற்று ஒரு சகோதரி, ஒரு சகோதரன் இருவரையும் கரையேற்றி விட்டுத்தான் கல்யாணம் செய்தாராம் முப்பதுக்கு மேல் தான் கல்யாணம். அதற்குப் பிறகு சசிசேகரன் பிறந்தானாம்.

சசிசேகரனுக்கு மூன்று வயது இருக்கும்போது அம்மா இறந்து போனாளாம். என்னவென்றே தெரியவில்லை. எவ்வளவோ வைத்தியம் செய்தும் பிழைக்கவில்லை என்றார்கள். ஆனால் அவனுக்கு நான்கு வயதுக்குள்ளாகவே மங்களம் வந்தார். அவரும் ஒரு தாயாகவே இருந்தார்.

போன மாதத்தில் ஒரு நாள் டாக்டர் சொன்னார். அப்பாவுக்கு நுரையீரலில் ஏதோ பிராப்ளம் என்றார்கள்.



ஒன்றும் சரி செய்ய முடியவில்லை. அவருக்கும் தனது உடல்நிலை தெரிந்திருந்தது போலும் ஓரளவு திட சித்தத்துடன்தான் சாவை எதிர் கொண்டார்.

எப்போதும் மூன்று குழந்தைகளிடமும் ஒரே மாதிரியாகத்தான் இருப்பார். வித்தியாசம் காட்ட மாட்டார்.

அப்பா மறைவுக்குப் பிறகு வக்கீல் கிருபாகரன் சோகமாக வந்து அவனிடத்திலே நின்றார்.

''தம்பி... அப்பா.. உயில் எழுதியிருக்காரு...'' என்றார்.

''உயிலா?'' என்றான் ஆச்சரியமாக.

''ஆமா..!'' என்றார் அவரும் எந்த உணர்வையும் காட்டாமல்.

''சித்தி ஒரு வாரிசு, நாங்க மூணு பேரும் வாரிசுகள். இதுல உயிலுக்கு என்ன அவசியம்?'' என்றான்.

''தெரியலீங்க.. தம்பி! ஆனா எழுதியிருக்காரு..'' என்றார்.

''ம்..'' சரி.. முப்பது நாள் முடியட்டும். பிறகு படிச்சுக்கலாம்..'' என்றான்.

எப்போதும் விளையாட்டுப் பிள்ளை போல நடமாடிக் கொண்டிருப்பான். அந்த முப்பது நாட்களில் முழுமையாகப் பொறுப்பேற்றுக்கொண்டு நடத்தியதைப் பார்த்து எல்லாருமே வியந்து போனார்கள்.

அப்பாவுக்கு உள்ளூரில், வெளியூரிலும் என்று நிறையப் பேர் நண்பர்கள் தமிழகத்தில் பெரும் அரசியல் புள்ளிகள் பழக்கம். அதனால் முப்பது நாட்களும் கூட்டம் வந்த வண்ணமே இருந்தது. அவர்கள் அத்தனை பேரையும் சந்தித்து அவரவர்களுக்குத் தகுந்த மாதிரிப் பேசி என்று எல்லாவற்றையும் நன்றாகவே சமாளித்தான்.

அதிர்ந்து போயிருந்த சித்தியைத் தேற்றி, மாலினியையும், குணசேகரனையும் விதவிதமாகத் தேற்றி என்று எல்லாவற்றையும் அவன் திறம்படவே செய்தான். ஆனால் அத்தனை உழைப்பையும் அர்த்தமற்றதாகச் செய்து விட்டது அந்த உயில்.

"தம்பி! முப்பது நாள் முடிந்ததே" என்றார் கிருபாகரன்.

"சரி..! நாளைக்குப் படிச்சிடுவோம்" என்றான் சசிசேகரன்.

படித்தார்கள்!

குடும்பத்தில் யாருமே எதிர்பாராத வண்ணம் அந்த உயில் அமைந்திருந்தது என்றால் சசிசேகரனின் கௌரவத்தையே சம்மட்டி கொண்டு அடித்தாற் போல் அடித்து விட்டது உயில்.

* * *

"அக்கா! அப்ளிகேஷன் குடுக்கட்டா...?" என்றாள் தங்கை கொடிமலர்.

"குடுடி.. குடுன்னுதானே நானும் சொல்லிகிட்டிருக்கேன்" என்றாள் அக்கா மதுரவாணி.

"ஹைய்யா!" என்று சந்தோஷமாகக் குதித்தாள் தங்கை.

பசுங்குடி கிராமத்தில் உள்ள அந்தப் பள்ளியில் பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் சார்பாக அவளை வேலைக்கு அழைத்திருந்தார்கள்.

நடுநிலைப் பள்ளியாக இருந்த பள்ளிக் கூடத்தை உயர்நிலைப் பள்ளியாக மாற்றுவதற்கு முயற்சி எடுத்துக் கொண்டிருந்தார்கள். கொடிமலர் பி.எஸ்ஸி அறிவியல் படித்திருந்தாள். தபாலில் பி.எட். பட்டப் படிப்பு முடித்திருந்தாள்.



"முதலில் பெற்றோர் ஆசிரியர் கழக வேலையில் நுழைந்து கொண்டு விட்டு அதே பள்ளிக் கூடத்தில் அரசுப் பணியாகவே வாங்கிக் கொள்ளலாம்" என்று ஊர்ப் பெரியவர்கள் எல்லாம் மதுரவாணியிடம் சொல்லியிருந்தார்கள்.

மதுரவாணியும் தங்கையிடம் அதையெல்லாம் சொல்லாமல்.

"அப்ளிகேஷன் போடு" என்று மட்டும் சொல்லியிருந்தாள். கொடிமலருக்கு சந்தேகம்.

"போக்கா! பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் மூலமாக வேலைக்குப் போனா ஆயிரத்தைந்நூறு ரூபாய் தருவாங்க. அது போதுமாக்கும்.." என்று முணங்கினாள்.

மதுரவாணி தங்கையை முறைத்தாள்.

"பார்றி! நாம பாதுகாப்புக்காக இங்கே வந்து தங்கியிருக்கோம். எந்த நேரம் அந்தக் கடங்கார மாமன் கருப்பண்ணன் வந்து நம்மளுக்குத் தொலலை குடுப்பாரோன்னு பயத்துல இருக்கோம். அப்படியிருக்கப்ப.. கிடைக்கிற வேலையில நுழைஞ்சுகிட்டு ஊர்ப் பெரியவங்களோட ஆதரவாவது வாங்கிக்கலாம்.. இல்லே!" என்றாள்.

தங்கை யோசித்தாள்.

"ஆமா! வீட்லயும் போரடிக்குது. நம்ம ரெண்டு பேருக்கு என்ன பெரிய சமையல் வேலை? நீயும் மெடிக்கல் ஷாப்புக்குப் போயிடறே. எனக்கும் டீச்சிங் ரொம்பப் பிடிக்குது" என்றாள் தனக்குத் தானே பேசிக் கொள்வது போலே.

பிறகுதான் ஊர்ப் பெரியவர்கள் தனக்குத் தந்திருக்கிற உறுதி மொழியைப் பற்றிச் சொன்னாள்.

கொடிமலர் உற்சாகமானாள்.

''சரிடி..! நீ புறப்படு! நான் மெடிக்கல் ஷாப் ஓனர் கிட்டே ரெண்டு மணி நேரம் டைம் கேட்டிருக்கேன். உன்னை ஸ்கூல்ல கொண்டு வந்து விட்டுட்டு நடேசன் அய்யாவைப் போய்ப் பாக்கறேன். அவரு ஏற்கனவே சொல்லியிருக்கற விஷயத்தை ஞாபகப் படுத்திட்டு வந்தர்றேன்'' என்றாள்.

''சரிக்கா!'' என்றாள் உற்சாகமாய்.

தங்கையை அழைத்துக் கொண்டு போய் பள்ளித் தலைமையாசிரியரிடம் அறிமுகப்படுத்தினாள்.

''ஆமா...! நடேசன் சார் சொன்னாரு..! கொடிமலர்.. இது வேலைன்னு நினைக்காதே! இந்த ஊரு பொம்பளைப் புள்ளைங்களுக்கு.. செய்யற சர்வீஸ்ன்னு நினைச்சுக்க.. பாரு!'' என்று மைதானத்தில் விளையாடிக் கொண்டிருந்த பெண் குழந்தைகளைக் காட்டினார்.

சுத்தமாக இருந்தாலும் ஏழ்மையான தோற்றம் தெரிந்தது. எளிமை தெரிந்தது மதுரவாணிக்கும், கொடிமலருக்கும் மனம் நெகிழ்ந்தது.

உண்மைதான்! இந்தக் குழந்தைகளுக்குப் படிப்புக் கிடைத்தால் சுயசார்புள்ளவர்களாக மாறி விடுவார்கள்.

பசுங்குடியைப் பொறுத்தவரை இளைஞர்களுக்கு ஊர்ப் பெரியவர்கள் மீது மரியாதை இருந்தது. பயமும் இருந்தது. அதனால் குடித்து விட்டு வந்து மனைவி மார்களை அடிப்பது, கொடுமைப் படுத்துவது போன்ற நிலைமைகள் இல்லை.

''குடித்து விட்டு வந்தாலும் 'கப்'பென்று படுத்துக் கொள்வார்கள். அந்தக் குடிப் பழக்கத்தையும் கூடக் கட்டுப் படுத்துவதற்கான முயற்சிகளை ஊர்ப் பெரியவர்கள் மேற்கொண்டிருந்தார்கள். எனினும் பெரும்பாலானவர்கள்



கூலி வேலைக்குப் போவதால் கைக்கும் சாப்பாட்டுக்கும் சரியாக இருந்தது. ஆனாலும் ஊர்ப் பெரியவர்கள் குழந்தைகளைப் பற்றி அக்கறை எடுத்துக் கொண்டார்கள். பெண் குழந்தைகளைப் பள்ளிக் கூடத்திற்கு அனுப்பி வைத்தார்கள்.

மதுரவாணி தலைமையாசிரியரோடு சற்றுப் பேசிக் கொண்டிருந்து விட்டு நடேசன் அய்யாவைப் பார்ப்பதற்காக அவரது வீட்டுக்குப் போனாள்.

''அம்மா..! அம்மா..!'' என்று அந்த வீட்டுக்குள் எட்டிப் பார்த்தாள்.

நடேசன் மனைவி ராதாமணிக்கு மதுரவாணி, கொடிமலர் இரண்டு பேர் மேலும் மிகவும் பிரியம். தங்கள் மகளை இழந்த சோகத்தில் இருந்தவர்களுக்கு மதுரவாணியும், கொடிமலரும் வந்து சேர்ந்தது மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.

சொல்லப் போனால் தங்கள் வீட்டிலேயே இருந்து கொள்ளுமாறுதான் சொன்னார்கள். ஆனால் மதுரவாணிதான் நாசூக்காக மறுத்து விட்டாள்.

''நாங்க எப்பவும் பக்கத்துலதானே இருக்கோம். எப்பவும் உங்களோட மகள்கள்தான்'' என்றார்கள். அவர்களும் அரைமனதோடு ஒத்துக் கொண்டார்கள்.

நான்கைந்து குடித்தனங்கள் இருந்த இடத்தில் பாதுகாப்பாக அவர்களைக் குடி வைத்தார் நடேசன் ''நடேசன் அய்யாவின் வளர்ப்பு மகள்கள்'' என்பது போலவே ஊர்க்காரர்களும் அவர்களை நடத்தினார்கள். அதனால் பாதுகாப்புக்குக் கவலையில்லை.

மெடிக்கல் ஷாப் முதலாளியும் மதுரவாணியை தன் சொந்த சகோதரி போலத்தான் நடத்தினார். ஆயிரத்தைந்நூறு சம்பளம் கொடுத்தார்.

ஆயிரத்தைந்நூறு சம்பளம் அந்த கிராமத்தில் அவர்களுக்குப் போதுமானதாக இருந்தது. வீட்டு வாடகை வெறும் இருநூறு ரூபாய்தான். நடேசன் அய்யா பார்த்துக் கொள்கிற தோட்டத்திலிருந்து காய்கறிகள் கொடுத்து விடுவார். மற்ற செலவுகள்தான். சமாளித்துக் கொள்வார்கள். சில நேரங்களில் அப்பா இருந்தபோது தங்கள் கையில் ஆயிரக் கணக்காகப் புழங்கிய பணம் பற்றி நினைத்துக் கொள்வாள் மதுரவாணி. ஆனால் உடனே ''இப்போது நிம்மதியாக இருக்கிறோமே; மரியாதையும் மானமும் மிஞ்சியிருக்கிறது. அது போதாதா?'' என்று எண்ணிக் கொள்வாள். இத்தனையும் ராதாமணியம்மா உள்ளேயிருந்து எட்டிப் பார்ப்பதற்குள்ளாக அவள் மனதில் ஓடி மறைந்தது.

''என்னடி பொண்ணே!'' என்று வெளியே வந்தார் ராதாமணி.

''அம்மா.. ஐயாவைப் பாக்கணும்'' என்றாள்.

''ஐயா! சசித் தம்பியைப் பாக்கறதுக்குப் போயிருக்காரு.''

''சசியா?'' அது யாரு...?'' விழித்தாள்.

''ஓ..! உனக்குத் தெரியாதில்லே! நம்ம வெள்ளைய நாயுடு தோட்டத்தை வாங்கியிருக்காரில்லே.. அவரு தான்.. அவரு வந்திருக்காரு. இனிமே இங்கதான் இருக்கப் போறாரு. அதான் பள்ளிக் கூட சம்பந்தமா.. ஏதோ பேசப் போயிருக்காரு...'' என்றார்.

''ஓ..!''

''நீ எப்பவும் போற இடம்தானே! போயிப் பாரேன்..!'' என்றார் ராதாமணி.

''இல்லே! புதுசா.. வந்திருக்கிற முதலாளி..'' என்று அவள் இழுக்க.



''ரொம்ப அருமையான பையன்'' என்று முடித்தார் ராதாமணி.

''சரி..!'' என்று நகர்ந்தாள்.

நிலத்தை வாங்கும்போது யாரோ பெரியவர்தானே வந்தார். மருதமுத்துவோ.. மாரிமுத்துவோ என்னவோ.. முத்து என்பதுதானே சொன்னார்கள். ஆனால் இப்போது வேறு பெயர் அடிபடுகிறது. அதிலும் ராதாமணியம்மா வேறு ''தம்பி'' என்று உரிமையாகச் சொல்கிறார்கள்.

யோசனையுடன் நகர்ந்தாள். ராதாமணியம்மாவுக்குத் தம்பி என்றால் நடுத்தர வயதாக இருக்கும் என்றுதான் எண்ணிக் கொண்டாள். ஆனால் அங்கே போன போதோ..!''

* * *

''நானும் கவனித்தேன்.. மாமா!'' என்ற சசிசேகரன் மேலும் சொன்னான்.

''இவ்வளவு சின்ன ஊர்ல இப்படியொரு பள்ளிக்கூடம் இருக்கிறது.. நல்ல விஷயம் அதிலயும் கேர்ள்ஸ் ஸ்கூல்'' என்றான்.

''ஆமா..! தம்பி! பக்கத்துல இருக்கிற பள்ளியூர்ல ஒரு பெரிய பள்ளிக்கூடம் பசங்களுக்கு இருக்கு. அதுக்கு பண்ணன்டாவது வரைக்கும் இருக்கு.''

''அதையே கோஎஜுகேஷனா மாத்திட வேண்டியது தானே?''

''மாத்தலாம்..! ஆனா இங்கே பெண் குழந்தைங்களை அனுப்ப மாட்டேங்கறாங்க. அதுதான் இந்தப் பள்ளிக் கூடத்தை ஹைஸ்கூலா மாத்தறதுக்கு முயற்சி பண்றோம்..''

''செய்வோம்..!'' என்றான்.

''செய்வோம்'' என்று அவன் தன்னையும் அந்தக் காரியத்தில் உட்படுத்திக் கொண்ட விதம் நடேசனுக்கு மிகவும் பிடித்தது.

''அப்படியா.. தம்பி! நீங்களும் இந்தக் காரியத்துல இறங்கறதுன்னா.. எங்களுக்கு ரொம்ப சந்தோஷம். ஆக்சுவலா இந்த நிலத்தை வித்தாரே வெள்ளைய நாயுடு அவருதான் மூணு ஏக்கர் நிலம் குடுத்தாரு. அவருக்கு அக்கம் பக்கத்துல நிறைய நிலங்கள். ஆனா, அவரோட மக்கள் வந்ததற்குப் பிறகு சும்மா அங்கங்கே நிலத்தை வச்சுகிட்டு என்ன பண்ணப் போறோம் வித்தரலாம்னு வித்திட்டாரு. அவருக்கும் வயசாயிடுச்சு. அதுவுமில்லாம நிர்வாகம் எல்லாம் இப்ப பசங்க கையில. மூணு பேருக்கும் அவங்க சொத்துப் பிரச்சினையைத் தீர்க்கவே நேரத்தைக் காணோம். அதனால பசங்களைக் கேட்க முடியலை'' என்றார்.

''ம்..!''

''நீ மட்டும் அந்தப் பள்ளிக்கூடத்திற்கு செக்ரட்டரியா இருந்து நடத்தறதுன்னா.. வெகு வேலை செய்யலாம்'' என்றார் ஆர்வமாக.

''செய்யலாம்.. மாமா!'' என்றான் சசிசேகரன்.

''அப்ப சரி..! நாளைக்குக் காலையிலேயே ஊர்ப் பெரியவங்ளைக் கூட்டியாறேன்..! உட்கார்ந்து பேசிடுவோம்..'' என்றார் ஆர்வமாக.

''சரி..!'' என்றான் சிம்பிளாய்.

இரண்டு பேரும் அந்த ஓட்டு வீட்டின் முன்பாக இருந்த இடத்தில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். ஆளுக்கொரு கூடைச் சேரில் அமர்ந்து கொண்டிருந்தார்கள்.

சசிசேகரன் விட்டத்தை பார்த்த வண்ணம் அமர்ந்து கொண்டிருந்தான். நேற்றிலிருந்தே அந்தப் பள்ளிக் கூடம் அவன் ஆர்வத்தைத் தூண்டிக் கொண்டிருந்தது. அதனால் தான் நடேசன் கேட்டவுடனே அவன் சற்றும் யோசிக்காமல் ஒத்துக் கொண்டான்.



பேசிக் கொண்டே அவன் திரும்பினான் எழுந்த போதுதான் அவன் கண்ணில் பட்டது அந்தக் காட்சி.

மிகவும் இளைய வயதினளாய் பின்னல் அசைய எளிய கைத்தறிப் புடவையில் ஆனால் முகத்தில் ஏதோ பெரிய குடும்பத்துப் பெண்ணைப் போன்ற தோற்றம் மின்ன அந்தப் பெண் வந்து கொண்டிருந்தாள்.

திறமை வாய்ந்த ஒரு ஓவியன் வரைந்த ஓவியம் ஒன்று நடந்து வந்தாற் போல அவள் வந்து கொண்டிருந்தாள்.

நிஜமா பொய்யா என்று அவன் பார்த்துக் கொண்டிருக்க அந்த நிலா ஓவியம் அருகில் வந்தவுடன் நடேசன் ஐயாவைப் பார்த்து,

''வணக்கங்க ஐயா!'' என்று கைகூப்பியது. அது மட்டுமில்லாமல் அவர் கண் பார்வையின் ஜாடை புரிந்து,

''வணக்கம் சார்!'' என்று இன்னிசை பாடியது.

இனிய சங்கீதம் ஒன்று புலன்கள் தாண்டி நெஞ்சுக்குள் நுழைந்தாற் போல ஒருவித மலைப்புடன் பார்த்துக் கொண்டிருந்தான் சசிசேகரன்.



## 4

கிருபாகரன் உயிலைப் படித்து முடித்தார்.

மொத்தக் குடும்பமும் திகைத்துப் போய் அமர்ந்து விட்டது!

சசிசேகரன் முகத்தில் வியர்வை முத்துக்கள் அரும்பின. கைக்குட்டையால் முகத்தை அழுந்தத் துடைத்துக் கொண்டான்.

அப்பா!

தன் மேல் உயிரையே வைத்திருந்த அப்பா! இப்படிச் செய்வதா!

தான் இளைஞனாய் வளர்ந்த பிறகு ஒரு நாள் அப்பா மனம் விட்டுப் பேசியது நினைவுக்கு வந்தது!

"சசி! உங்கம்மா போனப்புறம் நான் மறுகல்யாணம் பண்ணிக்க வேண்டாம்னுதான் இருந்தேன். அப்ப உங்கம்மாவோட அப்பாதான் வற்புறுத்தினாரு."

"மாப்பிளே! என் மக போயிட்டா.. நான் இல்லேன்னு சொல்லலே! எனக்கும் வருத்தம்தான். ஆனா.. பையன் இருக்கான். நீங்களும் இளம் வயசு. அதனால ரெண்டாம் கல்யாணம் பண்ணிக்குங்க" என்றார்.

மருதமுத்து ஒன்றும் பேசவில்லை!

"ஆமா.. மாப்பிளே! நானே ஒரு பொண்ணு பாத்து வச்சிருக்கேன். வசதியில்லாத பொண்ணு. குணவதி. அப்பா இல்லே. அம்மா மட்டும்தான். பொண்ணுக்குக் கல்யாணம் பண்ணிக் குடுத்தாப் போதும்னு படாத பாடு படறா. புள்ளைக்கு வயசு இருபத்தைஞ்சு இருக்கும். நான் சொல்றேன் கேளுங்க" என்று வற்புறுத்தினார்.

"இல்ல மாமா! சித்தி கொடுமை அப்படி இப்படின்னு எதுவும் வந்தா.. என்னால தாங்க முடியாது" என்றார் மருதமுத்து.

"நாமதான் நம்ம கட்டுப்பாட்டுல இருக்கற பொண்ணைத் தானே பண்ணிக்கறோம். பொண்ணோட அம்மாவுக்கும் நம்மகிட்டே பயமிருக்கு. நம்ம சசிக்கு அவன் அம்மாவோட வழிச் சொத்திருக்கு. நீங்க ஏன் கவலைப்படணும்" என்று விதவிதமாகப் பேசி சம்மதிக்கச் செய்தார்.

மங்களமும் அதற்கேற்றாற்போல் அமைதியான சுபாவம்.

முதலில் குழந்தை வேண்டாம் என்று நினைத்துக் கொண்டிருந்த அப்பா மங்களத்தின் சுபாவம் பார்த்துத் தன் மனதை மாற்றிக் கொண்டார்.



சசிசேகரன் ஒரு நாள் தன் சிற்றன்னையிடம் கேட்டான்.

"அம்மா! எல்லா வீட்லயும் தங்கச்சிப் பாப்பா இருக்கு! நம்ம வீட்ல இந்த குணசேகரன் கூட சண்டை போட்டு எனக்குப் போரடிச்சுப் போச்சு.. தங்கச்சிப் பாப்பா இருந்தா தலை சீவி விடுவேன். நல்லாப் பாத்துக்குவேன்" என்றான்.

சிற்றன்னையும், தந்தையும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். அன்று அவனுக்குப் புரியவில்லை. ஆனால் மாலினியை உண்மையாகவே நேசித்தான்.

மாலினியும் தனக்கு எது வேண்டுமானாலும் சசிசேகரனிடம்தான் கேட்பாள்.

சசிசேகரனுக்கு அம்மா வழிச் சொத்துக்கள் நிறைய இருந்தன. அவையெல்லாம் இப்போதும் கிராமத்தில் தாய்மாமன் பொறுப்பில் இருந்தது. எப்போது போய்க் கேட்டாலும் கொடுத்து விடுவார்கள். அவனுக்குண்டான சொத்துக்கள் அவன் பெயரில்தான் இருந்தன. ஆனால் அப்பாவின் உயில் அவன் மனத்தில் ஏற்றியிருந்த பாரத்தை அவனால் ஜீரணிக்க முடியவில்லை.

சொத்துக்கள் எல்லாவற்றையும் மங்களம்தான் பேரில் எழுதி வைத்திருந்தார். மங்களத்துக்குப் பின் அவர் விருப்பப்படுகிற விதத்தில் குழந்தைகளுக்குக் கொடுக்கலாம் என்றிருந்தது.

இரண்டு விதமாக அப்பா தனக்கு அநியாயம் செய்து விட்டார் என்று கருதினான்.

முதலாவது தன்னை நம்பாமல் சொத்துக்களை எல்லாம் சித்தியின் பொறுப்பில் விட்டது. இரண்டாவது அவரது காலத்திற்குப் பிறகு அவர் பார்த்துத் தனக்கு எவ்வளவு கொடுக்கிறாரோ அதை வாங்கிக் கொள்ள வேண்டுமென்ற நிலையில் வைத்தது. ஆனால் அதில் அவனுக்கு

ஒரு ஆச்சரியமான விஷயம் என்னவென்றால் பசுங்குடி கிராமத்தில் அவர் வாங்கியிருக்கிற சொத்து பற்றி எதுவும் உயிலில் குறிப்பிடப்படவில்லை என்பதுதான்.

சிந்தனையில் ஆழ்ந்தபடி புரண்டு புரண்டு படுத்துக் கொண்டிருந்தான்.

திடீரென்று மின்வெட்டுப் போல அந்தப் பெண்ணின் முகம் மின்னி மறைந்தது.

பாந்தமாக உடையணிந்திருந்தாள்!

கழுத்தில் ஏதோ மணிமாலை! எளிமையான உடையில் இருந்தாலும் முகத்தில் நல்ல வாழ்க்கை வாழ்ந்தவள் போன்று வடிவக்களை!

''வணக்கம்!'' என்று வந்து நின்றாள்!

நடேசன் அவளைப் பார்த்தவுடனே முகம் மலர்ந்து.

''வாம்மா.. வாம்மா!'' என்று வரவேற்றார்.

''அய்யா! வீட்டுக்குப் போயிருந்தேன். அம்மா நீங்க இந்தத் தோட்டத்துல இருக்கறதாய் சொன்னாங்க'' என்றாள்.

தெளிவான உச்சரிப்பு! திருத்தமான பேச்சு!

''என்னம்மா விஷயம்?'' என்றார்.

''அய்யா! போன வாரம் சொன்னனுங்களே! என் தங்கச்சி வேலை விஷயமா!''

''ஆமா.. மா!'' என்றார் நினைவு வந்தவராக.

''அதான்.. இன்னைக்குப் பள்ளிக்கூடத்துல அப்ளிகேஷன் குடுக்கச் சொல்லியிருக்கேன்'' என்றாள்.

''நல்லதும்மா!'' முதல்லே பெற்றோர் ஆசிரியர் கழகத்து சார்பா சேர்ந்துக்கட்டும். இன்னும் அந்தப் போஸ்ட்டுக்கு அரசாங்கத்துகிட்ட அனுமதி வாங்கலே. அனுமதி வாங்கினதுக்கப்புறம்.. என்ன செய்யறதுன்னு.. பாக்கலாம்..'' என்றார் நடேசன்.



''சரிங்கய்யா! அவ செய்யற வேலை புடிச்சிருந்து அதுக்கப்புறம் வேலை குடுத்தாப் போதும்.'' என்றாள்.

''அதற்குப் பிறகுதான் நடேசன் அவனிடம் திரும்பி அறிமுகப்படுத்தினார்.

''அம்மா.. இவருதான்.. சசிசேகரன் அய்யா இந்தத் தோட்டத்தை வாங்கியிருக்காரு. இனிமே இங்கயேதான் இருப்பாரு. நம்ம பள்ளிக்கூடத்தை நல்லாக் கொண்டு வரணும்னு ரொம்ப ஆர்வமா இருக்காரு'' என்றார்.

அவள் தாமரை மொட்டுப் போலக் கைகளைக் குவித்து வணக்கம் சொன்னாள்.

''தம்பி! இந்தப் பொண்ணும் நமக்கு வேண்டிய பொண்ணுதான். பேரு.. மதுரவாணி. இந்தப் பொண்ணுக்கும், இதோட தங்கச்சிக்கும் நான்தான் கார்டியன்'' என்றார்.

அவனும் அதைக் காதில் வாங்கியபடியே வணக்கம் சொன்னான்.

''சார்! இந்தப் பள்ளிக்கூடத்துல முன்னூறு பொண் குழந்தைங்க படிக்கறாங்க.. இப்ப எட்டாவது வகுப்பில ஐம்பது பெண் குழந்தைங்க இருக்காங்க. எப்படியாவது ஹைஸ்கூல் கொண்டு வந்திட்டா.. அந்த ஐம்பது குழந்தைகளுக்கும் வாழ்க்கை நல்லா இருக்கும்'' என்றாள்.

அவன் புன்னகைத்தான்!

''பாக்கலாம்..! முடிஞ்ச வரையில் முயற்சி செய்யலாம்'' என்றான்.

மதுரவாணி ஒன்றிரண்டு வார்த்தைகள் பேசுமுன்னே அவன் கேட்டான்.

''என்ன படிச்சிருக்கீங்க?'' என்று.

''எம்.ஏ. தமிழ் இலக்கியம்!'' என்றாள்.

அவன் புருவங்கள் சற்றே மேலே ஏறி இறங்கின.

''எம்.ஏ. ஆங்கில இலக்கியம்'' என்றாள். மறுபடியும்.

''ஏதாவது ஒண்ணு சொல்லுங்க'' என்று சொல்லவும் அவள் லேசான முகச் சிவப்புடன் சொன்னாள்.

''ரெண்டும் படிச்சிருக்கேன்..'' என்று.

அவன் கண்கள் மலர்ந்தன.

''டபுள் எம்.ஏ.ன்னு சொல்லுங்க'' என்றான். அவள் லேசாகப் புன்னகைத்தாள்.

சற்று நேரம் பேசிவிட்டு விடை பெற்றுக் கொண்டு போனாள்.

''நடேசன்.. மாமா! இந்தக் கிராமத்துல இப்படி ரெண்டு படிச்ச பொண்ணுங்களா?''

''நீங்க வேற தம்பி! ரெண்டும் வெளியூர்காரப் பொண்ணுங்க.. மொடக்குறிச்சிக்குப் பக்கத்துல ஒரு குக்கிராமம் அது. ஒரு பெரிய கதை!'' என்று இழுத்தார்.

''உங்களைச் சுத்தி நிறைய கதை இருக்கும் போல இருக்கு'' என்று சிரித்தான் சசிசேகரன்.

''ஆமாங்க.. தம்பி! அப்படித்தான் ஆகிப் போச்சு..'' என்று அவரும் சிரித்தார்.

அவன் உடனே செயலில் இறங்கினான்.

''மாமா! நாளைக்கே.. ஊர்ப் பெரியவங்களைப் பார்த்துப் பேசிடுவோம். இந்தப் பள்ளிக் கூடத்தை ஹைஸ்கூலா உயர்த்தணுன்னா நாம ஒரு தொகை அரசாங்கத்துக்கு கட்டணும்னு நினைக்கிறேன். அஞ்சு ஏக்கர் நிலம் பள்ளிக் கூடத்துக்குன்னு இருக்கணும். மற்ற ஃபார்மாலிட்டீஸ் எல்லாத்தையும் விசாரிங்க! ஸ்கூல் கமிட்டியில யார் யார் இருக்காங்கன்னு சொல்லுங்க'' என்றான்.



''அது என்ன தம்பி! நான் வற்புறுத்தி ரெண்டு மூணு பேரைப் போட்டு வச்சிருக்கேன். எல்லாரும் வேற யாராவது நல்லாப் பொறுப்பானவங்களா போடுங்கன்னு சொல்றாங்க'' என்றார்.

''சரி..! எல்லாத்தையும் முறைப்படி செஞ்சுடுவோம்'' என்றான்.

அன்றைக்கே!

பத்து மணிக்குப் பள்ளி வளாகத்துக்குப் போய்ப் பார்த்தான்.

பத்தாம் வகுப்பு வரை உயர்த்தினால் கூட வகுப் பறைகள் இருந்தன. மற்ற அடிப்படை வசதிகள் இருக்கவில்லை.

பள்ளித் தலைமையாசிரியரிடம் பேசினான். விளையாட்டு மைதானம் இருந்தது. ஆனால் தளவாடங்கள் இருக்கவில்லை.

வகுப்பறைகள் இருந்தன! ஆனால் வசதிகள் இருக்கவில்லை. ஆனால் அக்கம் பக்கத்தில் உள்ள கிராமங்களில் இருந்து பெண் குழந்தைகள் படிக்க வந்தார்கள்.

''சார்! இப்போதைக்கு இது மிடில் ஸ்கூல் இருக்கு..'' நானும் அடுத்த வருஷம் ரிடையராகறேன். என்னோட காலத்துக்குள்ள அட்லீஸ்ட் ஹைஸ்கூலாவாவது பண்ணிடணும்னு ஒரு ஆசை! அதுக்கு ரெடி பண்ற அளவுக்கு இப்ப ஊர்க்காரங்க யாருகிட்டயும் பணம் இல்லே!''

''எவ்வளவு செலவாகும்?''

''சார் ஒரு லட்சமோ ரெண்டு லட்சமோ நம்ம பி.டி.ஏ. வில இருந்தோ, மேனேஜ்மெண்ட்ல இருந்தோ கிளாஸ் ரூம்ஸ் பொறுத்தவரைக்கும் போதுங்க. ஆனா, ஹைஸ்கூல் பண்ணினா குவாலிஃபைடா டீச்சர்ஸ் போடணும்'' என்றார்.

''ம்..!''

''பெஞ்ச்.. டெஸ்க்கெல்லாம் போதுமானதா இருக்கா?''

''இப்பத்திக்குப் போதும்! ஆனா.. ஹைஸ்கூல் பண்ணினா தேவையிருக்கு.''

''அவன் புன்னகைத்தான்.

தலைமையாசிரியர் உண்மையான ஆர்வத்துடன் சொன்னார்.

''சார்! காந்திஜி சொல்றாரு! விடுதலைப் போராட்டத்துல ஒரு ஆண் கலந்துகிட்டா அவன் மட்டும்தான் கலந்துக்கறான். ஆனா, ஒரு பெண் கலந்துகிட்டா ஒரு குடும்பமே கலந்துக்கற மாதிரின்னு அது எஜுகேஷனுக்கும் பொருந்தும்ங்க! ஒரு பெண் படிச்சா.. அது குடும்பத்துல ஒரு இம்பாக்கட்டை ஏற்படுத்தும்ங்க..! குழந்தை வளர்ப்புல இருந்து குடும்பம் நடத்தறதுல இருந்து எல்லாத்திலயும் ஒரு வித்தியாசம் இருக்குங்க'' என்றார்.

''தட்ஸ் ட்ரூ!'' என்றான். மேலும் சொன்னான். ''சார்! நான் இந்த கிராமத்துல வந்து செட்டில் ஆவேன்னு நான் நினைச்சுக் கூடப் பார்க்கலை! ஆகியிருக்கேன். இனிமே இந்தப் பள்ளிக்கூடத்துக்கு ஒரு கேர் டேக்கர் வந்தாச்சுன்னு வச்சுக்குங்க. இப்போதைக்கு என்ன வேணும்னு சொல்லுங்க'' என்றான் சசிசேகரன்.

''சார்! இம்மிடியட்டா பிளாக்போர்ட்ஸ் கொஞ்சம் பெயிண்ட் அடிக்கணும்ங்க. டாய்லெட் தேவையிருக்கு. ஆனா, அது இம்மீடியட்டா ஆகாதுங்க..! இருக்கற டாய்லெட்டைக் கொஞ்சம் சுத்தம் செஞ்சு வெள்ளையடிக்கலாம்ங்க. விளையாடறதுக்குத் தேவையான மைதானம் இருக்கு. ஆனா பொருட்கள் இல்லை'' என்றார் தலைமையாசிரியர் தங்கசாமி.



''ஓ.கே.! டன்!'' என்றான்.

நடேசன் திரும்பினார்.

''மாமா! பெற்றோர் ஆசிரியர் கழகத்துக்காரங்களைக் கூப்பிட்டு ஒரு மீட்டிங் போட்ரலாம். எல்லாத்தையும் டிஸ்கஸ் பண்ணிரலாம்'' என்றான்.

தலைமையாசிரியரிடம் திரும்பி ''அதுக்கு எத்தனை நாள் டைம் குடுக்கணும்?'' என்றான்.

அஃபீசியலாக் கூட்டணும்னா ஒரு வாரமாவது ஆகுமுங்க. உடனடியா அன்அஃபீசியலா வேண்ணாக் கூட்டலாங்க'' என்றார்.

''சரி... செய்ங்க!'' என்றான்.

நடேசனிடம் சொன்னான். ''மாமா! கேர்ள்ஸ்க்குத் தேவையான விளையாட்டுச் சாதனங்களுக்கு கொட்டேஷன் வாங்குங்க'' என்றான்.

தலைமையாசிரியரிடம் திரும்பி ''என்னென்ன கேம்ஸ் பிளான் பண்ணலாம்?'' என்றான்.

''சார்! வாலிபால். த்ரோபால் பாஸ்கெட் பால், டென்னிகாயிட் எது வேண்ணாலும்'' என்றார்.

''எல்லாத்துக்கும் தேவையான பொருட்களை ஆர்டர் பண்ணிடுங்க ஆனா எல்லாப் பொருட்களும் நல்ல குவாலிட்டியா இருக்கணும்'' என்றான்.

தலைமையாசிரியர் மகிழ்ந்து போனார்.

''சரிங்க சார்! சரிங்க சார்!'' என்றார்.

தேநீர் வரவழைத்தார்!

சாப்பிடும்போது சொன்னார்..

''சார் எனக்கு இந்தப் பள்ளிக்கூடத்துக்கு நிறைய செலவு செய்யணும்னு ஆசை! ஆனா என்னோட பசங்க

ரெண்டு பேரு பட்டணத்துல படிக்கறாங்க. அந்த செலவே எனக்குப் பெருசா இருக்கு! இருந்தாலும் என்னால முடிஞ்சதைச் செய்யறேன்! உங்களை மாதிரி ஒருத்தர் கிடைச்சது ரொம்ப சந்தோஷம்'' என்று சொல்லிச் சொல்லி மாய்ந்து போனார்.

''உங்க ஆர்வம் எனக்குப் பிடிச்சிருக்கு'' என்று பாராட்டினான்.

''சார்! நான் பாஸ்கெட் பால்ல ஸ்டேட் பிளேயர். நல்ல பள்ளிக்கூடத்துல படிச்சேன். நல்லா என்கரேஜ் பண்ணினாங்க! அது மாதிரி நாமளும் மத்தவங்களுக்கு வாய்ப்புக் குடுக்கணுமில்லே!'' என்றான்.

அன்றைக்குத் தன் வீட்டுக்கு வந்தபோது மனம் நிறைவாக இருந்தது!

அப்பாவின் துரோகம் உள்ளே அவனை அரித்துக் கொண்டே இருந்தது. ஆனால் இங்கே வந்தவுடனே தன் வேலையை மறக்கவும். நல்ல விதமாகச் செய்வதற்கும் ஏதோ இருக்கிறதே என்ற சந்தோஷம் மனதில் ஒரு நிறைவை ஏற்படுத்தியது.

ஏழு மணிக்கு மேல் காலார நடந்து விட்டு வந்தான்.

சமையற்காரர் செய்து வைத்திருந்த டிபனைச் சாப்பிட்டு விட்டுத் தன் வீட்டுத் திண்ணையில் சேரைப் போட்டுக் கொண்டு அமர்ந்தான்.

தங்கசாமி உற்சாக மிகுதியில் பள்ளி வளர்ச்சியில் அவனது ஆர்வம் பற்றி ஊர்க்காரர்களிடம் - சொல்லி விட்டார் போலும்.

வரிசையாக ஆட்கள் அவனைப் பார்க்க வந்து கொண்டிருந்தார்கள். தொடர்ந்து ஆலோசனைகள் நிகழ்ந்தன..



எல்லாரும் கிளம்பிச் செல்வதற்குப் பத்து மணிக்கு மேலாகிவிட்டது.

படுக்கலாம் என்று அறைக்குப் போனான்.

போன் ஒலித்தது!

அந்தப் புறம்! மாலினி!

குரலில் அழுகையும், தேம்பலுமாக அவள் பேசப் பேச அவன் முகம் இறுகியது. நெற்றியில் முடிச்சுக்கள் விழுந்தன!

## 5



''என்னம்மா!'' என்றான் வாஞ்சையாக.

''அண்ணா! நீ எங்க இருக்கே? ஏன் இப்படிப் பண்றே..? நீயில்லாம நல்லாவே இல்லண்ணா.. இந்தச் சொத்து சனியனே வேண்டாம். நீ இருக்கற இடம் சொல்லு! நாங்க அங்க வர்றோம்'' என்றாள். படபடவென்று பொரிந்தாள்.

அப்பாவின் செயலால் காயம் பட்டிருந்த மனத்துக்கு மாலினியின் பாசம் மிகவும் இதமாக இருந்தது.

''வர்லாம்டா! உங்களையெல்லாம் விட்டுட்டு நான் எங்க போயிடுவேன். இன்னும் ரெண்டு மூணு நாள்ல வர்றேன்'' என்றான்.

''சரி.. சரி!'' என்றாள் உற்சாகமாக. ''வந்தா அதுக்கப்புறம். எப்பவும் இங்கதானே இருப்பே!'' என்றாள்.

''இல்லடா! இங்க.. பசுங்குடியில ஒரு இருபது ஏக்கர் குத்தகைக்குப் பிடிச்சிருக்கேன். இனிமே அந்த இடத்தைப் பார்க்கலாம்னு...'' என்றான்.

''அண்ணா! உனக்கு அம்மா மேல கோபம். அண்ணா.. நான் சொல்றேன்னு நினைக்காதே. எனக்கென்னமோ

இதெல்லாம் அம்மாவோட வேலை மாதிரித் தெரியலே. அம்மா எப்பவுமே உன்னைத் தன்னோட மூத்த மகனாத் தான் நினைக்கறாங்க! அவுங்க உனக்குத் துரோகம் செய்ய மாட்டாங்க அண்ணா! எல்லாம் அந்த லாயர் தடியனோட வேலைன்னு நினைக்கறேன்'' என்றாள்.

''ஏய்! அப்படியெல்லாம் மரியாதை இல்லாமப் பேசக் கூடாது.''

''போண்ணா! அவன் முழியே சரியில்லை. தினம் வந்தர்றான். என்னமோ சொந்த வீட்டுக்கு வர்ற மாதிரி வந்தர்றான். அம்மா வேற தினம் சாப்பிட உட்கார்ந்தா உன் நினைப்பு வந்து அழறாங்க. இவன் அப்பப்ப வர்றவன் என்ன சொல்லணும்? கவலைப்படாதீங்கம்மா. உங்க மகன் எங்க இருந்தாலும் கூட்டிட்டு வர்றேன்னுதானே சொல்லணும். அதை விட்டுட்டு எல்லாரும் அவங்கவங்க வாழ்க்கையைப் பாத்துக்கறாங்க. நீங்களும் உங்க வாழ்க்கையைப் பாத்துக்க தயாராகிக்குங்கன்னே சொல்றான். ஒரு பொறுப்பான பெரிய மனுஷன் பேசற பேச்சா... இது?'' என்று மறுபடியும் பொரிந்தாள்.

சசிசேகரன் சிரித்தான்.

''என்னண்ணா... சிரிக்கறே?'' என்றாள் தங்கை ஆதங்கத்துடன்.

''இல்லடா! அந்த ஆள் பெரிய மனுஷரோ இல்லையோ... நீ ரொம்பப் பெரிய மனுஷி ஆயிட்டே! ரொம்ப யோசிக்க ஆரம்பிச்சிருக்கே!'' என்றான்.

''என்ன செய்ய! நாங்க உன்னையே ஆதரவுன்னு நம்பிகிட்டிருந்தோம். நீ இப்ப வெளிநடப்புப் பண்ணிட லையா? அண்ணா... அம்மாவுக்கு அது பெரிய ஷாக்ண்ணா.. எனக்கும் பெரிய அடி! கேவலம் இந்த



சொத்துக்காகத்தானே நீ கோபிச்சுட்டுப் போனே..?'' என்றாள் மறுபடியும்.

''டேய்! மாலு..! புரிஞ்சுக்கோ! உனக்கு எந்த விதமான காயமோ அதே மாதிரித்தான் எனக்கும் காயம்! எனக்கு உங்க மேல யார் மேலயும் கோபம் இல்லடா! அப்பா எப்படி இப்படிச் செய்யலாம். அதுதான்டா எனக்கு வருத்தம். அந்த உயிலைப் படிச்சதுக்கப்புறம் அது என் வீடு மாதிரியே தெரியலியே!'' என்றான்.

தங்கை பெருமூச்சு விட்டாள்.

''புரியுதுண்ணா!'' என்றாள். ''அண்ணா! நாம பேசித் தீர்த்துக்கக் கூடாதா? நீ எங்களை விட்டுட்டு மட்டும் போயிடாதண்ணா..!'' என்று கெஞ்சினாள்.

தேம்பித் தேம்பி அழுதாள்!

''கண்டிப்பா.. உங்களை விட்டுட்டு எங்க போகப் போறேன். வருவன்டா..! அப்பப்ப வருவேன்..! அது மட்டுமில்ல.. உங்களுக்கும் பாதுகாப்புக்காகவும், என்னோட பார்வையில இருக்கணும்கறதுக்காகத்தான் சிவஞானம் அய்யாவைக் கொண்டு வந்து வச்சிருக்கேன் போதுமா!'' என்றான்.

மாலினி சற்றே தெளிந்தாள்.

''ஆமாண்ணா! சிவஞானம் அய்யா மட்டும் இல்லேண்ணா.. நேரா வீட்டுக்குள்ளேயே வந்து டேரா போட்டுக்குவான் போல இருக்கு..''

''ம்..!'' என்று முகவாய்க்கட்டையை நீவிக் கொண்டு சிந்தனையில் ஆழ்ந்தான் சசிசேகரன்.

''அண்ணா.. அம்மா.. பேசணுமாம்!'' என்றாள்.

''குடு..!'' என்றான். ''சித்தி எப்படி இருக்கே?'' என்றான்.

அந்தப் பக்கம் விசும்பல் சத்தம் மட்டுமே கேட்டது.

''சித்தி..! எதுக்கு இப்படி அழுது என் மனசைச் சங்கடப் படுத்தறே..'' என்றான்.

''நீ எப்படி வெளியே போலாம்? இப்படி எங்களை அம்போன்னு விட்டுட்டு..'' என்று அவரும் தன் பங்குக்குப் பொரிந்தார்.

''விடு.. சித்தி! என் மனசில ஏதோ சங்கடம்.. கொஞ்சம் மனசு ஆறட்டும். நானே வர்றேன். சரியா?'' என்றான்.

''நீ எங்க இருக்கேன்னு சொல்லு. நாங்க அங்க வந்தர்றோம்'' என்றாள்.

''வரலாம்.. வர்லாம்! சித்தி.. அந்த லாயர் உயில் குடுத்துட்டாரா!''

''இல்ல தம்பி! இன்னும் குடுக்கலை!''

''முதல்ல.. நீ அதை வாங்கு'' என்றான்.

''தம்பி! அந்த ஆள் அடிக்கடி ஏதோ என்கிட்டே பேசணும், பேசணும்கறாரு. இதுவரைக்கும் எந்த விஷயத்துல நான் தலையிட்டிருக்கேன். அவரு அதையும் இதையும் கேட்டா.. நாங்க என்ன சொல்ல?''

''என்ன பேசணுமாம்?''

''தெரியலை தம்பி! அவரு, ஜாடை மாடையா ஒரு விஷயம் மட்டும் திரும்பத் திரும்ப சொல்றாரு. நான் ஏமாந்த கொள்ளியாம். பைத்தியக்காரத்தனமா இருக்கேணாம். அவர் சொல்றபடி கேட்டா.. நல்லா இருக்கலாமாம்.''

''ஓ..!''

''தம்பி.. இதெல்லாம்.. எனக்கும் புடிக்கலே'' என்றார்.

மெதுவாக அவன் உள்ளத்தில் சித்தியின் மேல் நம்பிக்கை துளிர்த்தது.



''சித்தி..! நான் சொல்றதைக் கேளு!'' என்று மேலும் சில விவரங்கள் சொன்னான்.

''தம்பி!'' என்று சித்தி அதிர்ந்து போனார். ''ஆமா.. சித்தி..!'' என்றான். தங்கையிடம் மறுபடியும் பேசினான்.

''இப்போதைக்கு அந்த லாயர் பொறுப்பிலதான் எல்லாம் இருக்கு..! அவருகிட்டே சண்டை போடாதே என்ன?'' என்றான் தங்கையிடம்.

''போண்ணா! நீ என்ன இப்படிச் சொல்றே?'' என்று சிணுங்கிய தங்கையிடம்,

''எல்லாம் காரணமாத்தான்டா!'' என்றான்.

மேலும் சற்று நேரம் பேசிவிட்டு போனை வைக்கையில்.

''அண்ணா அந்த லாயரை நம்பாதே! அவன் கிருபாகரன் இல்லே கிரிமினல்'' என்று தங்கை சொன்னது அவன் மனத்தில் சிந்தனை ஏற்படுத்தியது.

மாலினிக்கு அண்ணனின் விலகல் பெரிய வருத்தத்தை ஏற்படுத்தியது என்றால் அடுத்து வந்து நிகழ்வுகளில் எல்லாரும் மாறி மாறிப் போன விதம் பார்த்து அதிர்ந்தே போனாள்.

* * *

மெல்லப் புரண்டு படுத்தான் சசிசேகரன்!

பொழுது ரம்மியமாக விடிந்து கொண்டிருந்தது.

எழுந்து வெளியே வந்தான்!

பம்பு செட்டுப் பக்கம் நடேசன் வந்து நின்று கொண்டிருந்தார்.

ஆச்சரியமாக இருந்தது!

தண்ணீர் திறந்து விடத் தொட்டிக்குள் தண்ணீர் பாய்ந்து கொண்டிருந்தது.

நகரத்தில் பங்களாவில் வாழ்ந்த வாழ்க்கைக்கு நேர் மாறாக இருந்தது இங்கே!

பிரஷ்ஷில் பேஸ்ட்டை வைத்துக் கொண்டு டர்க்கி டவல் ஒன்றைத் தோளில் போட்டுக் கொண்டு லுங்கியை மடித்துக் கட்டிக் கொண்டு மாமாவை நோக்கிப் போனான்.

''மாமா! காலம் காத்தாலேயே வேலை ஆரம்பிச்சுடுச்சா!'' என்றான்.

''ஆமா! தம்பி! தண்ணி திறந்து விட்டாச்சு..! இனி கொஞ்ச நேரத்துல ஆளுக வந்துடுவாங்க..! வேலை பிரிச்சுக் குடுக்கோணும். பேசாம ஒரு ரெண்டு ஏக்கருக்குக் கருவேப்பிலை வச்சர்லாம்னு பாக்கறேன்'' என்றான்.

''செய்ங்க.. மாமா!'' என்றான். ''மாமா! இது நமக்கு பிடி படாத ஃபீல்ட். ஆனா, ஒரே வருஷம்தான் அப்புறம்.. நான் உங்களுக்கு ஆலோசனை சொல்லுவேன்.'' என்றான்.

''தம்பி.. நீங்க அப்படி ஆனா.. என்னை விடச் சந் தோஷப் படறவங்க யாரும் இருக்க மாட்டாங்க'' என்றார்.

''அஞ்சு ஏக்கர் முழுக்க தோப்பு தம்பி! மத்த இடத்துல.. என்ன போடலாம்ன்னு நீங்கதான் சொல்லணும்.''

அவன் பல் தேய்த்துக் கொண்டே தண்ணீரில் கால்கள் பதிய நின்றான் சுகமாக இருந்தது.

''மாமா! பள்ளிக்கூடத்துக்கு ஒரு ஃபக்கர் குடுத்தர்றேன். நேத்து வந்தவங்களிடம் சொன்னேன்.''

''சொன்னாங்க.. தம்பி! அது மட்டுமல்ல.. பள்ளிக் கூடத்துக்கு அந்தப் பக்கம் இருக்கிற ஒரு ஏக்கரை நல்ல தம்பி குடுக்கறேனு சொல்லிட்டாரு. அவரு ஆனா மெதுவா பணம் குடுங்கன்னு சொல்றாரு'' என்றார்.

''அதனால இம்மிடியட்டா.. நாம பள்ளிக் கூடத்தை ஹைஸ்கூல் பண்ற ஏற்பாடுகள்ல இறங்கிடலாம்..'' என்றான்.



''தம்பி! இது முழுக்க முழுக்க அரசுப் பள்ளியில்லே! உதவி பெறும் பள்ளி. அதனால நீ செக்ரட்டரியானா நிர்வாகம் பூரா உனக்கு வந்துடும். நாங்க எல்லாரும் அதைத்தான் விரும்பறோம்'' என்றார்.

''செய்யலாம்.. மாமா! ஆனா, எனக்கு இந்த ஃபீல்டு யெல்லாம் எதுவும் தெரியாதே'' என்றான்.

''ஒண்ணும் யோசிக்க வேண்டாம் தம்பி. நம்ம தங்க சாமி சார்! ரொம்ப நல்லவரு.. பணம்தான் இல்ல.. பாவம்! நல்ல மனசு இருக்கு. நல்லவரா ஒருத்தர் கிடைச்சிருக் காரு..! அவரால இந்தப் பள்ளிக் கூடத்தை மேல கொண்டு வரணும்னு உன்னைப் பத்தி ரொம்ப ஆசையா நேத்தைக் கிருந்தே எல்லாருகிட்டயும் சொல்ல ஆரம்பிச்சுட்டாரு.''

அவன் ஆமோதிப்பது போல கேட்டுக் கொண்டான். பிறகு சொன்னான்.

''மாமா! நேத்திக்கு மாலினி பேசுச்சு'' என்றான்.

''ம்..!'' என்றார் நடேசன் உற்சாகமாக.

மாலினி தன்னிடம் பொரிந்து தள்ளியதைக் கூறிய வுடன் அவரும் கலகலவென்று சிரித்தார்.

''ஆமா.. தம்பி! புள்ளை பாசமான புள்ளைதான்'' என்றார்.

''அது மட்டுமில்ல.. மாமா! ரொம்ப யோசிக்குது'' என்றான் சசிசேகரன் பெருமையாக.

''ஆமா! இல்லேன்னா.. இப்படி உரிமையா உங்க கிட்டே சண்டை போடுமா?'' என்றவர் தொடர்ந்து தீவிர மான குரலில் சொன்னார்.

''ஏன் தம்பி! இப்பவும் உங்களுக்கு மங்களத்து மேல கோபம் இருக்கா?''

அவன் நீண்டதொரு பெருமூச்சு விட்டான்.

''தெரியலை மாமா! ஒரு பக்கம் சித்தி அழறதைப் பார்த்தா தப்பு அவங்க மேல இல்லை மாதிரித் தெரியுது. ஆனா, யாருடைய தூண்டுதலோ இல்லாமல் அப்பா இப்படி எழுதியிருக்க மாட்டார்னும் தோணுது!''

''தம்பி! நான் ஒரு கேள்வி கேக்கறேன்.. சொல்லு..! திடீர்னு அப்பா இந்த சொத்தை வாங்கினாரு. அந்த டீலிங் எதுவும் ஏன் லாயரைக் கூப்பிடலே? இன்னொரு சந்தேகம் என்னன்னா! இந்த சொத்தைப் பத்தி ஏன் அப்பா உயில்ல எழுதவே இல்லை..''

இரண்டு கேள்விகளும் சசிசேகரனின் முகத்தில் மோதி அறைந்து தாக்கின.

''உண்மைதானே!''

கடந்த இரண்டு நாட்களுக்குள்ளாவே தெளிவில்லாமல் அவன் மனதில் ஓடிக் கொண்டிருந்த குழப்பமான எண்ணங்களுக்கு நடேசன் மாமா வடிவம் கொடுத்து விட்டார் என்று தோன்றியது.

இதில் ஏதோ இருக்கிறது! அது எதுவாக இருந்தாலும் அதில் கிருபாகரனின் பங்கு இருக்கிறது என்றும் தோன்றியது.

''சிவஞானம் அண்ணா என்ன சொல்றாரு?'' என்றார் நடேசன்.

''இப்போதைக்கு எதையும் சொல்ல வேண்டாம். ஜஸ்ட் அப்சர்வ் பண்ணிட்டு மட்டும் இருங்கன்னு சொல்லியிருக்கேன்.. முக்கியமான பாதுகாப்பு இருக்கணும்கறதுக்காகத்தான் அவரை அங்க இங்க வச்சிருக்கேன்'' என்றான்.



''நல்லது தம்பி! எப்படியோ எல்லாத்துக்கும் ஒரு கணக்கு இருக்கும்போல இருக்கு. ஏதோ காரணத்துக்காகத்தான் கடவுள் உங்களைக் கொண்டு வந்து இங்க சேர்த்திருக்காரு. இந்தப் பள்ளிக்கூடம் உங்களால உருப்படியாகணும்னு இருக்கு! எத்தனை தலைமுறை உங்க பேரைச் சொல்லிட்டு இருக்கப் போறாங்களே!'' என்றவர் திடீரென்று நினைவு வந்தவர் போல,

''தம்பி! இந்தத் திங்கட்கிழமை பள்ளிக்கூடத்துல கொடியேத்திக் குழந்தைங்ககிட்டே பேசறதுக்கு உங்களைக் கூப்பிடணும்னு தங்கசாமி சார் சொல்லிகிட்டிருந்தாரு...'' என்றார்.

''செய்தாப் போச்சு!'' என்றான்.

மேலும் சற்று நேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டு அவர் விவசாய வேலைகளைக் கவனிக்க உள்ளே போனார்.

அவனும் குளித்து முடித்து டிபன் சாப்பிட்டு வந்து அமர்ந்தபோது கணக்கு வழக்கு சம்பந்தமான ஏதோ ஒரு நோட்டைக் கொண்டு வந்து வைத்திருந்தார் நடேசன்.

கணக்கு வழக்குகளை ஆழ்ந்து பார்த்துக் கொண்டிருக்கையில் எதேச்சையாக நிமிர்ந்தான். சற்று தூரத்தில் மதுரவாணி நடந்து கொண்டிருந்தாள்.

சற்று தூரம் வந்ததுமே நடேசன் குறுக்கே வர நின்று அவரிடம் பேசி விட்டு அவர் ஏதோ கையில் கொடுக்க வாங்கிக் கொண்டு நகர்ந்தாள்.

மெல்ல அசைந்து நடக்கையில் அதற்கேற்றாற்போல் அவள் பின்னலும் நர்த்தனமாடியது. தன்னை மறந்து சற்று நேரம் பார்த்துக் கொண்டிருந்த சசிசேகரனுக்குத் தோன்றியது. ''காலம் தன்னை இங்கே அழைத்து வந்ததற்கான காரணங்களில் இந்தப் பெண்ணும் ஒருத்தியோ!'' என்று.



## 6

கிருபாகரன் சுற்று முற்றும் பார்த்த படி உள்ளே நுழைந்தார்.

முன்னாலே இருந்த அலுவலக அறையில் சிவஞானம் இருந்தார். அவரைப் பார்த்தவுடன் கிருபாகரன் கொஞ்சம் கடுப்பாகிவிட்டார். ஆனால் உடனே முகபாவத்தை மாற்றிக் கொண்டு.

"வணக்கண்ணா!" என்றார்.

சிவஞானம் அவர் வருவதையறிந்திருந்தாலும் தெரியாதவர் போல அமர்ந்திருந்தார். இப்போது யதேச்சையாக திரும்புவது போலத் திரும்பி.

"வாங்க.. வாங்க.. லாயர் சார்!" என்று வரவேற்றார். "என்ன இன்னைக்குக் கோர்ட்டில கேஸ் எதுவும் இல்லையோ.." என்றார்.

"முடிஞ்சுது. முடிஞ்சுது. ரெண்டு கேஸ் ஹியரிங்குக்கு வருது. அப்புறம் நம்ம கேஸ் இன்னும் ரெண்டு நாள் கழிச்சுத்தான்" என்றார்.

சிவஞானத்துக்கு உள்ளூர ஒரு சந்தேகம் ஓடிக் கொண்டேயிருந்தது.

"எங்கேயிருந்தான் மருதமுத்து மாமா இந்த லாயரைப் பிடிச்சாரோ" என்று.

அதற்கு மங்களம்தான் விளக்கம் சொன்னார். கிருபாகரனின் அப்பாவும் பெரிய லாயராம். அந்தக் காலத்தில் போன தலைமுறையில் இருந்து இவங்க குடும்பத்துக்கு அவங்கப்பாதான் லாயராம். அந்த தொடர்புக்காக கிருபாகரனை குடும்ப லாயராக வைத்துக் கொண்டிருந்தாராம் மருதமுத்து.



கிருபாகரன் அப்படி ஒன்றும் கெட்டிக்கார லாயர் இல்லையென்றும் அவருக்குப் பெரிய அளவில் வழக்குகள் இல்லையென்றும் அவருக்குப் புரிந்திருந்தது.

"உட்காருங்க! காபி குடிச்சுட்டுப் பேசலாம்!" என்று உபசரித்தார்.

"ஒண்ணுமில்லே! மங்களம் மேடம் கிட்டே கொஞ்சம் தனியாப் பேசணும்" என்றார்.

சிவஞானம் உள்ளுக்குள் சிரித்துக் கொண்டார். "நல்லாப் பேசலாமே!" என்றார்.

"இருங்க! நீங்க அவங்ககிட்டே பேசிகிட்டிருங்க.. நான் சாப்பிட்டுட்டு வந்தர்றேன்" என்றார்.

சிவஞானம் வருவதற்கு முன்பு சசிசேகரன் கோபித்துக் கொண்டு வெளியே போய்விட்டான் என்ற செய்தி கேட்டவுடனே கிருபாகரன் மனம் குளிர்ந்து போயிருந்தார். ஆனால் சிவஞானம் வந்து சேர்ந்தவுடனே சசிசேகரன் ஒன்றும் தான் நினைத்த அளவுக்கு ஏமாந்தவன் அல்ல என்று புரிந்தது.

மெது மெதுவாக ஒவ்வொரு காயாக நகர்த்த வேண்டும் என்று நினைத்துக் கொண்டார்.

மங்களம் வந்தார்!

கடந்த நாட்களில் தன்னைச் சந்திக்க வரும்போதெல்லாம் ஏதோ கஷாயம் குடித்தாற்போல முகத்தை வைத்துக் கொண்டு வருகிற மங்களம் இன்று மலர்ந்த முகத்துடன் வருவதைப் பார்த்தவுடனே அவரும் ஆச்சரியமாகப் போயிற்று.

"வாங்க.. வாங்க! என்னவோ பேசணும்னு சொன்னீங்களாம்" என்று கை கூப்பினார் மங்களம்.

"ஹி.. ஹி.. ஆமாம்.. மேடம்!"

"வாங்க.. அந்த ரூமுக்குப் போயிரலாமா?" என்றார் மங்களம்.

போனார்கள்.

எதிர் சோபாவில் அமரச் செய்தார். மங்களம் தானும் அமர்ந்தார்.

கிருபாகரன் பேச ஆரம்பித்தார்.

"அம்மா! நம்ம ஊருல இன்னமும் பெண்களுக்குக் கொடுக்க வேண்டிய இடத்தை நாம கொடுக்கறதில்லே. நம்ம ஐயா கூட எல்லாச் சொத்தையும் சசிசேகரன் பேர்ல தான் எழுதறேன்னு சொல்லிகிட்டிருந்தார். நாந்தான் வாழ்க்கையையே நம்மளை நம்பி ஒப்படைக்கற பெண் களுக்கும் நாம மரியாதை கொடுக்கணும்னு சொன்னேன். அடிக்கடி அப்படி சொல்லிச் சொல்லித்தான் அவரு கடைசியில சொத்தையெல்லாம் உங்க பேருக்கே எழுதி வச்சுட்டாரு."

"ரொம்பத் தாங்க்ஸ்... சார்!" என்றார் மங்களம் மேலும் சொன்னார்.

"உங்களை மாதிரி நல்லவங்க நாலு பேரு இருக் கறதுனாலதான் உலகத்துல மழையே பெய்யுது" என்றார்.

கிருபாகரன் குனிந்து போனார்.

மனதுக்குள்ளே ஒரு பெரிய சதுரங்கப் பலகை படமாக விரிந்தது. அதில் நேராகச் சென்று ராஜாவையே அடித்து வீழ்த்தி விட்டாற் போன்ற காட்சி உள்ளே ஓடியது. எதற்கும் எச்சரிக்கையாகவே பேசினார்.

"மேடம்! என்னோட காதை என்னாலயே நம்ப முடியலை" என்று பல்லைக் காட்டினார்.



மங்களம் பெருமூச்சு விட்டார். "என்ன செய்றது? எல்லாம் காலத்தின் கோலம்தான். என்ன சொன்னாலும் சசிசேகரன் நம்ப மாட்டேங்கறான். அப்புறமும் எதுக்குக் கெஞ்சிகிட்டுக் கிடக்கணும். அவரே நம்மளை நம்பி எல்லா சொத்தையும் எழுதி வச்சிட்டுப் போயிருக்காரு. வரமாட்டேன்.. வரமாட்டேன்னுட்டுப் போறவனை எத்தனை நாளைக்குத் தாங்கறது?" என்றார்.

மங்களத்துக்குத் தனது மூத்த மகன் நேற்று பேசிய பேச்சிலிருந்துதான் இந்த மாற்றம் ஏற்பட்டிருந்தது.

மனதில் வருத்தமும். ஒருவிதமான சந்தேகமும் ஏற் பட்டிருந்தது. எதற்காக சசிசேகரனைக் கெஞ்ச வேண்டும். நாமே எல்லாவற்றையும் கவனித்துக் கொள்ள வேண்டும். அவன் தானாகத் தேடி வர வேண்டும் வராவிட்டாலும் நல்லதுதான். அவனுக்கென்ன ஆண் பிள்ளை! பாரேன்.. போன ஒரே நாளைக்குள் இருபது ஏக்கர் குத்தகைக்கு பிடித்து விட்டானாம். அதெல்லாம் பிழைத்துக் கொள் வான். நம்ம பிழைப்பைத்தான் நாம பாத்துக் கொள்ளணும்" என்று முடிவுக்கு வந்து விட்டார்.

யோசித்தார்!

என்ன இருந்தாலும் சிவஞானம் சசிசேகரனின் ஆள்! அவரை நம்புவதற்கு இந்தக் கிருபாகரனையே நம்பலாம் என்று தோன்றியது.

நம்புவதென்று முழுமையாக முடிவெடுத்தார்.

"நீங்க சொல்றதெல்லாம் சரிதான்! எல்லா நிர்வாகத் துக்கும் நான் இருக்கேன். நீங்க ஏன் கவலைப்படறீங்க!" என்றார்.

"ரொம்ப சந்தோஷம். சார்!" என்று மாய்ந்து மாய்ந்து சொன்னார்.

பிறகு கிருபாகரன் மெதுவாகக் கேட்டார்.

''ஏம்மா! உங்களுக்குச் சொத்துக்கள் எங்கெங்கே இருக்குன்னு தெரியுமா?'' என்றார்.

''அதெல்லாம் தெரியும்! நிர்வாகத்துலதான் அவரு என்னைக் கூப்பிட்டதில்லையே தவிர சொத்து எங்கே இருக்கறதெல்லாம் தெரியும்'' என்றார்.

''நல்லதாப் போச்சு!'' என்றவர் அதற்குப் பிறகு சொத்துக்கள் பற்றிய விவரங்களை விரிவாகக் கூறினார்.

மங்களம் ஆர்வமாகக் கேட்டார். கிருபாகரன் கடைசியில் ரொம்பவும் உற்சாகமாகச் சொன்னார்.

''அம்மா! இவ்வளவுதான் விஷயம். எல்லா நிர்வாகத்தையும் நான் பாத்துக்கறேன். நீங்க இந்த இடத்துல இருந்து மேற்பார்வை பார்த்தால் போதும்'' என்றார்.

''இல்லயே! அவரு நேரடியா எல்லா இடத்துக்கும் போய் இல்ல.. பாப்பாரு!'' என்றார் மங்களம் யதார்த்தமாக.

கிருபாகரனின் முகம் ஒரு கணம் கூம்பியது. பிறகு சொன்னார்.

''அது ஆம்பளைங்களுக்குச் சரிப்படும். அலைவாங்க. ஆனா, பொம்பளைங்க அப்படி இருக்க முடியாதில்லே! அதுவும் இப்பத்தான் வீட்டுக்காரர் போயி..'' என்று அவர் முடிக்கு முன்னே,

மங்களத்தின் கண்களில் பொலபொலவென்று கண்ணீர் பெருக்கெடுத்தது. உடனே கிருபாகரன் பதட்டமாகச் சொன்னார்.

''ஐயோ.. அம்மா! உங்களைக் கஷ்டப்படுத்தணும் கறதுக்கு சொல்லலை. இருக்கற நிலைமையைச் சொன்னேன்.

மங்களம் முந்தானையில் முகத்தைத் துடைத்துக் கொண்டார். பிறகு சொன்னார்.



''அவரு இருந்திருந்தா இந்தப் பிரச்சினையை எல்லாம் அவரே பாத்துகிட்டிருப்பாரு. போனவர்தான் போனாரு. எல்லாத்தையும் சசிசேகரன் பேர்ல எழுதியிருந்தா எனக்காவது பிரச்சினை இல்லாம இருந்திருக்கும்.''

கிருபாகரன் ஒரு கணம் திகைத்துப் போனார்.

''என்னம்மா..! இவ்வளவு நேரம் விவரம் சொல்லியும் மறுபடியும் அதே பாயிண்ட்ல நிக்கறீங்க..'' என்றார் இறங்கிய குரலில்.

''அதானே! அவனே அம்போன்னு விட்டுட்டுப் போயிட்டான். அவனைப் பத்திப் பேசி என்னத்துக்கு ஆகுது..'' என்றார்.

''மறுபடியும் கிருபாகரனைப் பார்த்தார்.

''சரி... அவ்வளவுதானா?'' என்றார்.

''ஆமாங்கம்மா..!'' என்று கிருபாகரன் பவ்யமாக எழுந்தார்.

''என்ன இழவோ... நான் இதையெல்லாம் எப்படி சமாளிக்கப் போறேனோ'' என்று புலம்பியபடியே அலுவலகம் நோக்கி நடந்தார்.

சிவஞானத்திடம் போய் நின்றார்.

''அண்ணா! இந்த லாயர் சொல்றாரு. நானே எல்லாத்தையும் நிர்வகிக்க முடியுமாம். நீங்க என்ன சொல்றீங்க?'' என்றார்.

சிவஞானத்துக்கு சிரிப்பு வந்தது. இத்தனை நேரம் தனியாக அழைப்பதாய் போய் லாயர் அடித்த வேப்பிலையெல்லாம் வீணாகப் போய் விட்டது. மங்களத்தம்மா நேரடியாகத் தன்னிடம் வந்து விஷயங்களை இப்படி ஒப்பிக்கிறாரே என்றிருந்தது.

கிருபாகரனும் பேந்தப் பேந்த விழித்துக் கொண்டு நின்றார்.

சிவஞானம் முகத்தில் எதையும் காட்டிக் கொள்ளாமல் சொன்னார்.

''அம்மா! லாயர் தப்பாவா சொல்லுவாரு! தம்பியும் வெளியூர்ல போய் உட்காந்துகிச்சு. அப்புறம் நீங்கதானே சமாளிச்சுக்கணும். செய்யலாம்மா.. தப்பில்லே!'' என்றார்.

திரும்பி லாயரை மலர்ச்சியாகப் பார்த்தார்.

''அப்புறம்.. என்னங்க.. லாயர் சார்! அண்ணனே சரின்னு சொல்லிட்டாங்க..'' என்றவர் மறுபடியும் திரும்பி,

''ஏங்க! சிவஞானத்தண்ணே நீங்க எனக்கு ஹெல்ப் பண்ணுவீங்கதானே!'' என்றார்.

கிருபாகரனுக்கு 'கருக்'கென்றது.

''பின்னே! நான் வேற எதுக்குத்தான் இருக்கேன்'' என்றார் சிவஞானம்.

''ஆமா! அவருதான் என்னை இப்படி நட்டாத்துல விட்டுட்டுப் போயிட்டாருன்னா இந்த சசிசேகரனும் கழட்டி விட்டுட்டுப் போயிட்டான். நான் வேற எல்லா இடத்துக்குப் போய்ப் பார்க்க முடியாது. அப்படிப் போனா நல்லா இருக்காது இல்லே! அதனால எனக்குப் பதிலா நீங்க லாயர் கூடப் போங்க!'' என்றார் மறுபடியும் யதார்த்த மாக.

மறுபடியும் லாயருக்குக் கடுப்பாகியது.

''கட்டுச் சோத்துக்குள் எலியை வைத்துக் கொண்டு கட்டிய மாதிரி இந்தாளை எதுக்கு அழைச்சுகிட்டுப் போகணும்?'' என்று எண்ணினார். ஆனால் எதையும் காட்டிக் கொள்ளவில்லை.



இப்போதுதான் சசிசேகரன் போனால் போகிறான் என்ற மனப்பான்மைக்கு வந்திருக்கிறார் மங்களம். அடி மேல் அடி வைத்தால் அம்மியும் நகருமாமே! அப்புறம் இந் தம்மா எந்த மூலைக்கு!

முடிந்தால் இந்த சிவஞானத்தையும் வளைத்துப் போட வேண்டும். அந்த மாலினிப் பெண் புத்திசாலியாக இருக்கிறது. அது மட்டும் தன்னுடைய திட்டத்துக்கு ஒத்து வந்து விட்டால்.. தன்னுடைய எல்லாத் திட்டங் களுக்கும் வெற்றி கிடைத்து விடும்.''

''ஹலோ! ஹலோ! என்ன நீங்க பாட்டுக்குத் திட்டம் போட்டுகிட்டே போயிட்டிருக்கீங்க! சிவஞானம் சசி சேகரனோட ஆளாச்சே!'' என்றது உள்மனது.

''இருக்கட்டுமே! இப்பத்திக்கு சசிசேகரன் ஆளாவே இருக்கட்டும். அவனால சிவஞானத்துக்கு என்ன பெருசாப் பலன் கிடைச்சிடப் போறது. தன்னால நிறையச் செய்ய முடியும்னு காட்ட வேண்டியதுதான்!'' என்று எண்ணிக் கொண்டார்.

சிவஞானம், மங்களம், கிருபாகரன் மூவருமே ஒருவர் மற்றவர் மனதில் உள்ளதை அறியாமல் அவரவர் நோக் கில் திட்டங்கள் போட்டுக் கொண்டிருந்தார்கள் என்றால் காலம் தன் பங்குக்குத் திட்டம் போட்டுக் கொண்டிருந்தது.

* * *

மாலினிக்கு இப்போது கொஞ்சம் மனம் தெளிவாகி இருந்தது.

போன அண்ணன் சுத்தமாக மறந்தே விட்டாரோ என்று பயம் ஏற்பட்டு விட்டது. சகோதரனின் பாசம் களங்கமில்லாதது.. என்று அவளுக்குத் தெரியும்.

மாலினிக்கும் கூட அப்பாவின் மேல் கோபம். அப்பா எந்தவிதத்திலும் அண்ணனுக்கு நியாயம் செய்யவில்லை யென்று தோன்றியது. அம்மா மட்டும் நியாயமானவராக இருந்தால் அண்ணனிடத்திலேயே திரும்ப அந்த சொத்தை ஒப்படைக்க வேண்டும். உள்ளே இன்னொரு மனது சொன்னது. சிக்கலான நேரங்களில்தான் மனிதனின் உண்மையான குணங்கள் வெளியாகுமாம்.

''பார்க்கலாம்! அம்மா.. இந்த நேரத்தில் எப்படி நடந்து கொள்கிறார் என்று'' என்று எண்ணிக் கொண்டாள்.

மாலினிக்கு ஏனோ இப்படியும் தோன்றியது. தங் களைப் பிரிந்த வருத்தம் இருந்தாலும் அண்ணன் வேறு ஏதோ விதத்தில் மகிழ்ச்சியாக இருக்கிறான் என்று.

''பள்ளிக் கூடத்துக்கு உதவி செய்யப் போகிறானாம். என்ன இருந்தாலும் அண்ணன் திறமைசாலிதான். இரண்டு நாட்களுக்குள்ளாகவே ஒரு பெரிய நிலத்தைக் குத்தகைக்குப் பிடித்து விட்டாரே! நடேச மாமா வேறு உதவி! அதெல்லாம் அண்ணன் எங்கிருந்தாலும் பிழைத் துக் கொள்வான். அம்மாதான் திண்டாடித் தெருவில் நின்றாக வேண்டும் என்று எண்ணிக் கொண்டாள்.

சகோதரனிடம் கோபமாகச் சொன்னாள். ''அண்ணா! இந்தச் சொத்துதான் நம்மளைப் பிரிக்குதுன்னா.. எனக்கு இந்தச் சொத்தே வேண்டாம். நீதான் வேணும்'' என்று.

சசிசேகரன் ஒரு நிமிடம் அந்தப் பக்கம் ஏதும் பேச வில்லை.

''அண்ணா! அண்ணா!'' என்று பதறினாள்.

''இல்லம்மா! நீ சொன்ன வார்த்தைகளோட முழு அர்த்தமும் இப்பத்தான் உள்ளே இறங்கியிருக்கு. இரும்மா! அந்த சந்தோஷத்தை ஒரு நிமிஷம் முழுசா அனுபவிச்



சுக்கறேன்'' என்று சொல்லவும்தான் அவளுக்குள் நிறைவு ஏற்பட்டது.

''போதும்மா! எங்கப்பா.. பத்துப் பைசா கூடக் குடுக்க லேன்னாலும் பரவாயில்லை. உன்னை மாதிரி ஒரு தங்கையைக் குடுத்திருக்காரே.. அது போதும்மா!'' என்று உருகிக் கொண்டான்.

அவளும் நெகிழ்ந்தாள்.

''அண்ணா! இன்னும் ஒரே மாசம். டைம் தரேன். கோபத்தையெல்லாம் விட்டுட்டு நீ இங்க வரணும். இல்லே.. நான் அங்க வந்துடுவேன்'' என்றாள்.

''வாம்மா..!'' என்றான்.

''பாத்தியா?'' என்று சிணுங்கினாள்.

''என்ன?'' என்றான்.

''நீ வரேன்னு சொல்ல மாட்டேங்கறே! என்னத்தானே வரச் சொல்றே'' என்று சிணுங்கினாள்.

''சரிம்மா! வந்தர்றேன்! இப்படி அன்பால என்னைக் கட்டிப் போட்டா.. நான் உங்களை விட்டுட்டு எங்க போக முடியும்?'' என்றான்.

இப்போது அது நினைவுக்கு வர தங்கை நினைத்துக் கொண்டாள்.

''அண்ணா! இந்த அன்புக் கட்டிலிருந்து நான் உன்னை விடுவிக்கவே மாட்டேன்'' என்று.

அதே நேரத்தில்..!

சசிசேகரனின் மனத்திலும் தங்கை தன்னிடம் அன்பு பாராட்டிப் பேசிய விதம்தான் ஓடிக் கொண்டிருந்தது.

''இனிமேல் அவ்வளவு சீக்கிரம் இந்தக் கிராமத்தை விட்டுப் போக முடியுமா என்ற எண்ணம் தோன்றி அதற்

கான காரணங்களாக பள்ளிக்கூடம், நிலம், தென்னந் தோப்பு இவையெல்லாம் தோன்றியது. அதற்குப் பிறகு தண்ணென்ற நிலவொளியைப் போல அந்த இளமை யான முகமும் மனத்துக்குள் மின்னி மறைந்தது.

ஒரு விதமான கிறக்கத்தில் ஆழ்ந்தான்.

## 7



"என்னக்கா.. இப்படிச் சொல்றே?" என்றாள் கொடிமலர் இறங்கிய குரலில்.

"ஏன்.. கொடிமலர்.. அவரு சொல்றது நியாயம்தானே ஒரு போஸ்ட் குடுக்கற துன்னா அதுக்கான தகுதி உனக்கு இருக்கான்னு பாக்கணும்.. இல்லே!"

"ஒரு வேளை என்னை விட பெட்டர் குவாலிபைடா யாரும் வந்துட்டா?"

"அவரு பேசறதெல்லாம்.. பாத்தா.. நியாயமான முறையிலதான் நடந்துக்குவாருன்னு தோணுது. ஒரு வேளை நிலைமை நமக்கு எதிராய் போனாலும் அதுக்கும் நாம தயாராத்தான் இருக்கணும்."

"ம்..!" என்றாள் கொடிமலர் இறங்கிய குரலில்.

"மலரு! புரிஞ்சுக்கோ! பி.டி.ஏ. மூலமாக் கொடுக்கற இந்தப் போஸ்ட்டைக் குடுத்துடுவாங்க. அதுல எந்தச் சந்தேகமும் இல்லே! ஆனா.. ஒரு வேளை ஸ்கூல் அப் கிரேடு ஆனா.. பர்மனன்ட் போஸ்டிங் குடுக்கும்போது தான் தகுதி பாத்துக் குடுப்போம்னு சொன்னாரு" என்றாள் மதுரவாணி ஆறுதலாக.

"அது சரி! அதுக்குள்ள நாங்களும் எங்க திறமையை நிரூபிச்சு யாருன்னு காட்டிடுவோம். இல்லே!" என்றாள் கொடிமலர்.



"அதைச் செய்ன்னுதான் நானும் சொல்றேன்" என்றாள் மதுரவாணி.

"சரி.. சாப்பிடு..!" என்றாள் கொடிமலர்.

"டிபன் செஞ்சுட்டியா! ஏன்.. நான் வந்து செஞ்சிருப் பேன் இல்ல!"

"ஏன்.. நான் இங்க வெட்டி முறிக்கறது என்ன குறைஞ்சு போச்சு? இல்லே! இங்க நாம வகை வகையாய் சாப்பிடறதுதான் என்ன கெட்டுப் போச்சு" என்றாள் கொடிமலர்.

"ஏண்டி.. இப்படிப் பேசறே..! நமக்குக் கடவுள் இந்த அளவுக்குப் படியளக்கறதே பெரிய விஷயம்."

"ஆமா! கடவுளுக்கு வேற பொழப்பே இல்லை.. பாத்தியா? பெரிய படியா வச்சுகிட்டு நம்மளைத்தான் பாத் துக்கிட்டிருக்காரு. அளக்கற வேலையும் வேற சேத்துச் செய்யறாராக்கும். நீங்கள்ளாம் எப்பத்தான் திருந்து வீங்களோ!" என்றாள் கொடிமலர்.

"விடு! நாங்கள்ளாம் திருந்தாத ஜென்மங்களாவே இருந்துட்டுப் போறோம். நீ புரட்சிக்காரியா.. இரு.. என்ன?" என்று அந்தப் பேச்சை விளையாட்டுப் பேச்சாக்கினாள் மதுரவாணி.

"அக்கா! எல்லாரும் பேசிக்கறாங்க! புதுசா வந்திருக் காரே மிஸ்டர். சசிசேகரன்.. சூப்பர் பர்சனாலிட்டியாமே..!"

"ஆமா! நல்லாக் கம்பீரமா இருக்காரு. தெளிவாப் பேசறாரு. நம்ம நடேசன் அய்யா.. அவங்க பேமிலியில ஏதோ பிரச்சினைன்னாரு.. ஆனா.. அந்த மாதிரி வருத்தம் எதையும் அவரு காட்டிக்கவே இல்லை.." என்றாள் மதுரவாணி.

கொடிமலர் மனதுக்குள் நினைத்துக் கொண்டாள்.

''எல்லாம் சரியாக இருந்திருந்தால், அந்தக் கருப்பண்ண மாமா மட்டும் இடையில் வந்து தொலைக்காமல் இருந் திருந்தால் ஒருவேளை அக்காவுக்கு இந்த மாதிரி ஒரு மாப்பிள்ளை பாத்திருக்கலாமோ'' என்று.

மதுரவாணி கையைக் கழுவி விட்டு வந்து தரையில் அந்த சின்ன பந்திப்பாயை போட்டு அமரவும் தன் மனதில் பழைய நினைவுகள் ஓட அக்காவுக்குத் தான் செய்து வைத்திருந்த உப்புமாவைப் பரிமாறினாள்.

''நிஜம்மாவே நல்லா இருக்குடி..'' என்று தன்னை உற்சாகப்படுத்துகிற அக்காவை வாஞ்சையாகப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

* * *

''அழகேசா!'' என்று அழைத்தார் கிருபாகரன்.

வெளியே கிளம்பிக் கொண்டிருந்த அழகேசன் திரும்பி அப்பாவின் அலுவலக அறைக்கு வந்தான்.

''என்னப்பா?'' என்றான்.

''உட்காரு!''

''அப்பா! ஒரு இலக்கியக் கூட்டம் இருக்கே! போகணுமே!''

கிருபாகரனுக்குக் கடுப்பாகியது.

''இலக்கியக் கூட்டமா? அதை உக்காந்து கேட்டு என்ன பண்றது? சோத்துக்காகுமா? சாத்துக்காகுமா?'' என்று உள்ளே கோபம் கிளம்பியது.

சொன்னால் கண்டு கொள்ள மாட்டான். சிரிப்பான். அவர்தான் டென்ஷனாக வேண்டும்.

கிருபாகரனின் தந்தை பெரிய லாயர் அந்த வழியில் தான் அவரும் லாயரானார். ஆனால் கிருபாகரனால்



தந்தையைப் போலப் பெயரெடுக்க முடியவில்லை. பெரி தாகச் சம்பாதிக்கவும் முடியவில்லை. எல்லாம் அப்பா சொத்து. வந்த வருமானத்தை அனுபவிக்க மட்டுமே முடிந்தது. அதிலும் கொஞ்சம் கரைந்து போனது.

மனைவியின் ஆடம்பரச் செலவு ஒரு பக்கம் படித்த பெண் என்று அந்தக் காலத்தில் ஒத்துக் கொண்டு திரு மணம் செய்து கொண்டார். ஆனால் பெரிய பணக்காரக் குடும்பத்திலிருந்து வந்தவராதலால் மேல் மட்டப் பண பாடுகள் இருந்ததோ இல்லையோ பலவீனங்கள் இருந்தன.

இரண்டு மூன்று கிளப்புகளில் மெம்பர். கிருபாகர னுக்கு எதுவும் கேட்க வழியிருக்காது. தேவையற்ற அவரது ஆடம்பர வாழ்க்கையில் கொஞ்சம் சொத்துக்கள் கரைந்து போயின.

இப்போதைக்கு ஓரளவு சொத்துக்கள்தான் இருந்தன. அதுவும் தாத்தா வழிச் சொத்து கிருபாகரனால் விற்க முடியாது என்பது மாதிரி. அவரது அப்பா திட்டம் செய்து வைத்து விட்டுப் போயிருந்தார் என்பதால் கிருபாகரனால் அதில் கை வைக்க முடியவில்லை.

மகன் புத்திசாலி.

''சட்டம் படிக்கிறியாடா?'' என்றார்.

அவன் மென்மையாகச் சிரித்துக் கொண்டு சொன் னான்.

''தாத்தா திறமையாய் பொய் சொல்லிச் சம்பாதிச்ச சொத்தையெல்லாம் திறமையாய் பொய் சொல்லி உன்னால் காப்பாத்த முடியலே. எனக்கு சுத்தமாப் பொய் பேச வராது. எனக்கு வேண்டாம்'' என்றான்.

''சரி.. என்னதான் செய்யப் போறே!'' என்றார் கிருபாகரன் கவலையுடன்.

''அப்பா! கவலைப்படாதே! இந்த வீட்டில் பொறந்து வளந்ததுல எது கிடைச்சதோ இல்லையோ ஞானம் கிடைச்சது. அம்மாவும், நீயும் போட்டி போட்டுகிட்டு எதைத் துரத்திட்டு ஓடறீங்கன்னே தெரியலை. அதையெல்லாம் யோசிக்கப் போய் எனக்குத் தெளிவு வந்திருச்சுன்னு... வையேன். என் தேவைகளுக்கு சம்பாதிச்சுக்க எனக்கு முடியும்! நான் பாத்துக்கறேன்'' என்று சொல்லி விட்டான்.

கிருபாகரனுக்கு என்ன பேசுவது என்றே தெரியவில்லை. சில நேரங்களில் தன் மனைவியின் நடத்தையைப் பாத்து அவரே அப்படித்தான் நொந்து போனார்.

''சரி.. என்ன வேலைக்குத்தான் போகப் போறே?'' என்றார்.

''வாத்தியார் வேலைக்கு?'' என்றான்.

''என்னமோ.. செய்!'' என்றார் அப்பா.

''ஆமப்பா! பெருசா வளந்துட்டேன். இனிப் போய் உடம்பு வளைஞ்சு என்னால எந்த ஃபிஸிகல் வொர்க்கும் பண்ண முடியாது. எனக்கேத்த வேலை மூளை வேலைதான்'' என்றான்.

''என்னவோ.. செய்!'' என்றார் அப்பா.

பி.எஸ்ஸி முடித்து அதற்குப் பிறகு ஆசிரியப் பயிற்சியும் முடித்து இப்போது ஒரு பள்ளிக்கு வேலைக்குப் போய்க் கொண்டிருந்தான்.

''மகனை ஒரு நிமிடம் ஆழ்ந்து பார்ப்பதற்குள்ளாகவே இத்தனையும் நினைத்து முடித்து விட்டார் கிருபாகரன்.

''டேய்! அழகேசா! நம்ம மருதமுத்து இறந்து போனார் இல்லே! அவரு எழுதி வச்ச உயில்ன்னாலே கோபிச்சுகிட்டு... மகன் வீட்டை விட்டுப் போயிட்டான். சொந்தக்



காரர் ஒருத்தரைக் கொண்டு வந்து வச்சிருக்காங்க. இருந்தாலும் சொத்து நிர்வாகம் என்னைப் பாத்துக்கச் சொல்லியிருக்காங்க...!'' என்றார்.

'சொத்து நிர்வாகம்? உங்களையா? விடிஞ்சுது போங்க!' என்று எண்ணிக் கொண்டான் அழகேசன். ஆனால் சொல்லவில்லை.

''நீயும் கொஞ்சம் அப்பப்ப அவங்க வீட்டுக்கு வந்துட்டுப் போனீன்னா.. ஒரு ஆறுதலா இருக்கும்..?'' என்றார்.

'பரவாயில்லையே! அப்பா இப்படியெல்லாம் யோசிக்கிறாரே?' என்று எண்ணிக் கொண்டான் அழகேசன்.

''ஆகட்டும்ப்பா! யாரெல்லாம் அந்தக் குடும்பத்துல இருக்காங்க'' என்று விசாரித்தான்.

''மங்களத்தம்மா! அவங்க பொண்ணு மாலினி. மகன் குணசேகரன் அப்புறம். அந்தப் பெரியவர் சிவஞானம்'' என்றார்.

அழகேசன் சற்று யோசித்தான்.

''எல்லாத்தைப் பத்தியும் சொல்லுங்க'' என்றான்.

சொன்னார். சொல்லும்போது மாலினியைப் பத்தி சற்றுக் கூடுதலாகவே சொன்னார்.

விஷயம் லேசாகப் புரிந்தது அழகேசனுக்கு. 'அப்பா வேறு எதற்கோ அடிப் போடுகிறார்' என்று தெரிந்தது. ஆனால் கேட்டால் இல்லவே.. இல்லை என்று சாதிப்பார்.

'சரி.. எவ்வளவு தூரம்தான் போகிறார்' என்று பார்க்கலாம் என்று எண்ணிக் கொண்டான் ஆர்வமாகக் கேட்பது போலக் கேட்டான்.

கிருபாகரனுக்கு ஒரே சந்தோஷம். தான் நினைப்பது மட்டும் நடந்து விட்டால் 'அந்தக் குடும்பத்தின் குடுமியே

நம்ம கையில் இருக்கற மாதிரித்தான்' என்று எண்ணிக் கொண்டார்.

"ஏம்ப்பா! எல்லாரும் ரொம்ப நல்லவங்களாத் தெரிய றாங்க! அப்புறம் ஏன்.. சசிசேகரன் கோபிச்சுகிட்டுப் போனாரு?"

"அதையேன் கேட்கறே! கொழுப்புத்தான். அவங்கப்பா.. உயில் எழுதி வச்ச விதம் பிடிக்கலயாம்."

"ம்ஹூம்! உயில்ல என்னன்னு எழுதியிருக்காரு."

"அதான்ப்பா! சொத்தெல்லாத்தும் மங்களத்தம்மாதான் பொறுப்புன்னு.. எழுதியிருக்காரு."

"ஓ!" என்றான் அழகேசன். அப்பாவின் முகத்தைக் கூர்ந்து பார்த்தபடி கேட்டான்.

"ஏம்ப்பா! எந்த அப்பனாவது தன் சொந்த மகனுக்கு சொத்தில்லேன்னு எழுதி வப்பாங்களா? எங்கயோ இடிக்குதே" என்றான்.

கிருபாகரன் இப்படியொரு விமர்சனத்தை எதிர்பார்க்க வில்லை.

"அது.. என்ன காரணம்னு தெரியலே! ஆனா அப்படி எழுதி வச்சிருக்காரு.." என்றார்.

"சரிப்பா! அது அவங்க குடும்ப விவகாரம். இருந் தாலும் நீங்கதானே பாமிலி லாயர். உங்களுக்குத் தெரிஞ் சிருக்கலாமோன்னு நினைச்சேன்.. சரிப்பா! அந்தக் குடும் பத்தைப் பொறுத்தவரை நான் என்ன ஹெல்ப் பண்ண னுமோ பண்றேன்" என்றான்.

புறப்பட்டான்.

மகன் இந்த அளவுக்கு அமர்ந்து பேசியதே கிருபாகர னுக்கு மகிழ்ச்சியாக இருந்தது.



மகன் வெளியே கிளம்பும்போது தாய் அமுதாவும் வெளியே கிளம்பிக் கொண்டிருந்தார்.

மிகையான மேக்கப்பும், மெல்லிய சேலையுமாகத் தன்னுடைய வயதைக் குறைத்துக் காண்பிப்பதற்காக அவர் எடுத்துக் கொண்டிருந்த முயற்சிகளைப் பார்த்து அவனுக்கு பரிதாபமாக இருந்தது.

"ஹாய்! அழகு..! வர்றியா.. ஸ்கூல்ல டிராப் பண்றேன்" என்றார்.

"வேண்டாம்மா! நான் பைக்ல போறேன்" என்றான் அழகேசன்.

"நான் கிளப்புக்குத்தான்டா.. போறேன்! வா.."

"இல்லம்மா!" என்று நழுவிக் கொண்டான். அம்மா வின் அந்த மாருதிக் கார் புறப்பட அதற்குப் பிறகு வந்த அப்பா போன காரை ஒரு நிமிடம் பார்த்தார்.

"என்னப்பா உங்கம்மா! திருவீதி உலா கிளம்பிட் டாளா? அந்தக் கிளப்புக்குப் போய் வெட்டி முறிக்கப் போறாளாக்கும்" என்றார் முணுமுணுப்பாக.

"என்னைக் கேட்டா.. எனக்கென்ன தெரியும்?" என்று முணுமுணுத்துக் கொண்ட அழகேசன் தன் சம்பளத்தில் வாங்கியிருந்த அந்த செகண்ட் ஹாண்ட் பைக்கில் ஏறி உதைத்து ஸ்டார்ட் செய்தான்.

போகும்போதே சிந்தனையிலாழ்ந்தான்.

'அப்பா ஏனோ உயில் பத்திப் பேசும் போது மட்டும் நேரடியாகத் தன் முகத்தைப் பார்த்துப் பேசவில்லை.. ஏதோ.. இருக்கு..' என்று உள்மனது சொன்னது.

அப்பாவின் நேர்மையின்மை அவனுக்குப் பிடிக்காத விஷயம்!

கெட்டிக்காரத் தனம் செய்வதாக எண்ணிக் கொண்டு எதிர்க்கட்சி வழக்கறிஞரிடம் பேரம் பேசுவார். இதனால் கண்ட பலன் என்னவென்றால் அவரது நாணயத்தை அவரது சக வழக்கறிஞர்களும், கட்சிக்காரர்களும் நம்பாமல் போனதுதான்.

அரசியலிலும் கொஞ்ச நாள் நுழைந்து பார்த்தார். கட்சிக்குள் இருக்கும் கோஷ்டிப் பூசல்களில் இரண்டு பக்கமும் தட்டி விட்டு விளையாடியதில் இவருடைய வண்டவாளம் அங்கேயும் வெளுத்து விட்டது. இவருடைய மூவ்கள் கெட்டிக்காரத் தனமாகவும் இருக்காது.

ஏதோ பழைய குடும்பங்கள் நான்கைந்து தாத்தாவின் பழக்கவழக்கத்துக்காக தொடர்ந்து வழக்குகள் கொடுத்துக் கொண்டிருந்தார்கள்.

தாத்தா காலத்துச் சொத்துக்களை இழக்க வேண்டி வருகிறதே என்ற வெறி ஒருபுறம். பணத்தின் மீது உள்ள ஆசை ஒருபுறம் என்று எதை வேண்டுமானாலும் செய்யத் தயாராகி விட்டாரோ என்ற கவலை அழகேசனுக்குத் தோன்றியது.

பெரும்பாலும் அவருடைய விவகாரங்களில் அவன் தலையிட மாட்டான். ஆனால் இந்த விவகாரத்தில் மட்டும் அப்பா ஒரு குடும்பத்தையே உடைக்கிறார் என்று அவன் உள்மனது சொன்னது.

'இது நீ தலையிட வேண்டிய விவகாரம்' என்று அவன் ஆழ்மனது திரும்பத் திரும்பச் சொன்னதால்தான் அந்த முடிவை எடுத்தான்.

'அது மட்டுமல்ல. இந்த விவகாரத்தில் அவர் சொல்வதையெல்லாம் ஏற்றுக் கொள்கிறாற் போலவே நடந்து கொள்ள வேண்டும். அப்போதுதான் முழு உண்மையை



யும் வெளியே கொண்டு வர முடியும்' என்றும் முடிவெடுத்துக் கொண்டான்.

அதற்குப் பிறகுதான் மனம் நிம்மதியடைந்தது. உள்ளே நுழைந்து பிரின்சிபாலுக்கு வணக்கம் சொன்னான்.

''மணி ஒன்பதாச்சே! எங்கே நம்ம அழகேசனைக் காணோமேன்னு இப்பத்தான் நினைச்சேன். வந்துட்டே!'' என்று சிரித்தார் பிரின்சிபால்.

எப்போதும் போல் சுற்றுப் புறத்தைப் பற்றிக் கவலைப் படாமல் தன் கடமையில் கண்ணானான் அழகேசன்.

## 8



''தாயின் மணிக்கொடி பாரீர் - அதைத்
தாழ்ந்து பணிந்து உயர்ந்திட வாரீர்''

என்று இரண்டு பெண் குழந்தைகள் அழகாகப் பாடினார்கள்.

கொடியேற்றி விட்டு கொடி வணக்கம் செய்து கொடி வணக்கப் பாடலுக்காக அந்த மேடையில் நின்று கொண்டிருந்தான் சசிசேகரன்.

தலைமையாசிரியர் தங்கசாமிக்கு பெருத்த மகிழ்ச்சி. கொடி வணக்கப் பாடல் முடிந்தவுடன் பேசினார்.

''அய்யா அவர்கள் புதிதாக நம்ம பள்ளிக் கூடத்துக்குப் பக்கத்தில இருக்கிற நிலத்துக்கு சொந்தக்காரர். நம்ம பள்ளிக் கூடத்துல 300 பெண் குழந்தைகள் படிக்கிறார்கள் என்று தெரிந்தவுடனே ரொம்ப சந்தோஷப்பட்டார். முந்நூறு குழந்தைகள் படித்து நல்ல நிலைமைக்கு வந்தா முந்நூறு குடும்பங்கள் உயருமே என்று மிகவும் சந்தோஷப்பட்டார். நமது பள்ளிக் கூடத்து குழந்தைகளுக்

காக விளையாட்டுக்குத் தேவையான தளவாடங்கள் வாங்கிக் கொடுத்திருக்கிறார்'' என்று சொல்லவும் குழந்தைகள் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு படபட வென்று கை தட்டினார்கள்.

ஒரு நிமிடம் அனுமதித்த தலைமையாசிரியர் பிறகு கையமர்த்தினார்.

''அது மட்டுமல்லாமல் நமது பள்ளிக்கு என்னென்ன வசதிகள் தேவையோ அதையெல்லாம் செய்து தருவதற்குத் தயாராக இருக்கிறார். மேலும் என்னுடைய நீண்ட நாள் ஆசையாக இருந்த எண்ணம். அதாவது இந்தப் பள்ளிக்கூடத்தை உயர்நிலைப் பள்ளியாக மாற்ற வேண்டும் என்ற தணியாத ஆசையையும் அவரிடம் கூறினேன்.

''கவலைப்படாதீர்கள்! அரசாங்கத்துக்குக் கட்ட வேண்டிய தொகைக்கு ஏற்பாடு செய்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்'' என்றவுடனே மறுபடியும் கைதட்டல் விண்ணைப் பிளந்தது.

மேலும் சற்று நேரம் பாராட்டிப் பேசினார்.

''போதும் சார்!'' என்று அவன் தடுக்கவும்தான் நிறுத்தினார். அதற்குப் பிறகு அவனைப் பேசச் சொன்னார். அவனுக்கும் பழக்கமில்லை என்ற போதும் தெளிவாகவே பேசினான்.

''அன்பார்ந்த குழந்தைகளே! மற்ற எல்லாச் செல்வங்களும் வரும் போகும். ஆனால் கல்வி ஒன்றுதான் வாழ்க்கை முழுக்கக் கூட வரும். கல்வி இருந்தால் சொந்தக் காலில் நிற்கலாம். நாலு பேருக்கு உதவியாக இருக்கலாம். யாராவது நமக்குத் தீங்கிழைத்தாலும் கூட எதிர்த்து நிற்கலாம். சுயமாக சம்பாதிக்கலாம். எல்லாவற்றைக் காட்டிலும் அறிவார்ந்த குழந்தைகளாக இருக்கலாம். அதனால்தான்.



''கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே''

என்று நம்முடைய பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதனால் நீங்களெல்லாம் நல்ல முறையில் கல்வி கற்க வேண்டும். அதிலும் பெண் குழந்தைகள் படிப்பது ரொம்பவும் அவசியம்'' என்று சுருக்கமாகப் பேசினான்.

''இந்தப் பள்ளிக் கூடத்தில் 300 பெண் குழந்தைகள் படிக்கிறார்கள் என்றவுடனேயே எனக்கு மிகவும் மகிழ்ச்சி. அதனால்தான் இந்தப் பள்ளிக்கு என்னென்ன வசதிகள் வேண்டுமோ அதையெல்லாம் செய்ய உத்தேசித்திருக்கிறேன்'' என்று உறுதியளித்தான்.

முன்னூறு குழந்தைகளுக்கும் இனிப்புகள் வழங்க ஏற்பாடு செய்திருந்தான். குழந்தைகள் மகிழ்ச்சியுடன் போட்டி போட்டுக் கொண்டு வாங்கிக் கொள்வதை ஆசையுடன் பார்த்தபடி நின்றான்.

கள்ளமற்ற முகங்களில் தெரிந்த கலப்படமற்ற மகிழ்ச்சி மனதுக்கு மிகவும் இதமாக இருந்தது.

கடந்த நாட்களில் மனதில் ஏற்பட்ட வேதனைகளுக்கெல்லாம் வடிகாலாக இருந்தது. பள்ளிக் கட்டிடத்தை ஒரு சுற்று சுற்றி வந்தான்.

கட்டிடம் போதுமானதாக இருந்தது. பெஞ்ச், டெஸ்க்குகள் தேவை என்று புரிந்தது. தலைமையாசிரியரிடம் ஒரு குறிப்புப் புத்தகத்தில் தேவையான விஷயங்களைக் குறித்துக் கொள்ளச் சொன்னான்.

சத்துணவுக் கூடம் சென்று பார்த்தான். பாத்திரங்கள் தேவையிருக்கும் போலத் தோன்றியது. உடனடியாக வாங்கிக் கொள்ளுமாறு சொன்னான்.

மாலையில் போய் விளையாட்டு உபகரணங்கள் என்னென்ன வந்து இறங்குகிறது என்று பார்க்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டான்.

பள்ளியிலிருந்து புறப்படும்போது ''செயலருக்கு'' என்று ஒரு அறை தயாராக வைக்குமாறு சொன்னான்.

விடைபெற்றுக் கொள்ளும்போது மணி பத்தரையாகி யிருந்தது. பல விஷயங்களைக் கவனித்து அது தொடர் பான திட்டங்களைப் பற்றிப் பேசி விட்டுக் கிளம்பும் போது மனம் நிறைவாக இருந்தது.

* * *

பள்ளி வளாகத்தை விட்டு அவன் வெளியே வந்து தங்கள் நிலத்துக்குள் நுழையும் போது நிலத்தின் ஓரமாக இருந்த அந்த ஒற்றையடிப் பாதையில் மதுரவாணி ஒரு பையைத் தூக்கிக் கொண்டு வந்து கொண்டிருந்தாள்.

அவனைப் பார்த்தவுடன் அவள் அவசரமாக பையை இடது கைக்கு மாற்றிக் கொண்டு வணக்கம் சொன்னாள்.

அவன் முகம் மலரப் புன்னகைத்தான்.

''வணக்கம்!'' என்றான். அவனையறியாமல் பார்வை பையின் பக்கம் சென்றது. பையில் நிறையக் காய்கறிகள் இருந்தன.

அவன் ஏதும் கேட்பதற்கு முன்பாக அவளே விளக்கம் சொன்னாள்.

''இங்க ரெண்டு மூணு தோட்டத்துக்காரங்க காய்கறிங்க இலவசமாக் கொடுப்பாங்க. மெடிக்கல் ஷாப்ல அரை மணி நேரம் பர்மிஷன் போட்டுட்டு அந்தக் காய்கறியெல் லாம் கலெக்ட் பண்ணிக் கொண்டு போய் பள்ளிக் கூடத்து சத்துணவுக் கூடத்துல குடுப்பேன். வசதியில்லாத குழந்தை



களுக்கு நம்மால முடிஞ்ச உதவி. நல்ல காய்கறியோட சாப்பிடட்டுமேன்னு ஒரு எண்ணம்'' என்றாள் தயக்கத்துடன்.

அவன் அன்புடன் புன்னகைத்தான்.

''நல்ல விஷயமாச்சே! அதுக்கு ஏன் தயங்கறீங்க! இனிமே தினமும் நம்ம தோட்டத்துக்கும் வந்து தேங்காய் காய்ன்னு எது அவெய்லபிளோ அதை எடுத்துக்குங்க..! என்றான்.

அவள் முகமும் வெகுவாக மலர்ந்தது.

''ரொம்பத் தேங்க்ஸ்.. சார்!'' என்றாள்.

அவன் லேசாகத் தலையசைத்துவிட்டு நகர்ந்தான்.

சற்றுத் தொலைவு சென்று திரும்பிப் பார்க்க வேண்டு மென்ற ஆவல் தோன்றியது. ஆனால் கட்டுப்படுத்திக் கொண்டான்.

அவன் உள்மனம் அவனிடம் கேள்வி கேட்டது.

''ம்..! எப்படியோ அம்மிணியைத் தினமும் பாக்கற துக்கு வழி பண்ணிகிட்டே..!'' என்று.

மெல்லச் சிரித்துக் கொண்டான்.

அந்தப் பெண்ணைப் பார்த்தாலே மனம் ஏன் துள்ளு கிறது? கடந்து போன நாட்களில் பட்ட வேதனைகள் எல்லாம் பின்னடைந்து போய் ஒருவித மகிழ்ச்சியும் பரவச உணர்வும் தோன்றுகிறதே. அதிலும் இலக்கியம் படித்த பெண் என்றவுடனே மனத்துக்கு இன்னும் சந்தோஷம். உடனே இன்னொரு மனது சொன்னது.

''இந்த ஊரில் எல்லாரும் உன்னைப் பெரிய மனிதன் என்று மதிக்கிறார்கள். பெண்கள் விவகாரத்தால் வீழ்ந்த பெரிய மனிதர்களின் கதை எவ்வளவோ இருக்கிறது. பார்த்து நடந்துக்க. பேரைக் கெடுத்துக் கொள்ளாதே'' என்றது.

''சரி.. சரி.. இப்படியெல்லாம் யோசிப்பதற்கு என்ன இருக்கிறது? இப்போதே என்னவோ அந்தப் பெண் சம்மதம் சொல்லிவிட்டாற்போலவும் நாளைக்கே திருமணம் நடக்கப் போகிறாற் போலவும்.. இந்த நினைப்பெல்லாம் இப்போதைக்கு மூட்டை கட்டி வை'' என்று எண்ணிக் கொண்டு வீடு போய்ச் சேர்ந்தான்.

நடேசன் அவனுக்காகக் காத்திருந்தார். சற்று நேரம் அவரிடம் பேசிக் கொண்டே நிலத்தைப் பார்க்கப் புறப்பட்டான்.

காலார நடக்கையில் செல்போன் ஒலித்தது. காது கொடுத்தான்.

அந்தப் புறம் சிவஞானம் பேசினார். சற்றே கவலையுடன் பேசினார்.

சிந்தனையில் ஆழ்ந்தான்!

* * *

''அம்மா! நான் நிலத்துக்குப் போயிட்டு வரேன்'' என்றார் கிருபாகரன்.

''அப்படியா? ரொம்ப சந்தோஷம். நீங்க போறதா சொல்லியிருந்தா நான் பண்ணை மேனேஜருக்கு போன் பண்ணிச் சொல்லியிருப்பேனே'' என்றார் மங்களத்தம்மாள்.

''இல்லம்மா..! இனிமேத்தான் போகப் போறேன்.'' ''அப்படியா? அண்ணா.. அண்ணா..!'' என்று அழைத்தபடி அலுவலகத்துக்குப் போனார் மங்களம்.

''என்னம்மா!'' என்றார் சிவஞானம் இருக்கையில் அமர்ந்தபடியே.

கிருபாகரன் ஒரு விதக் குரோதத்துடன் பார்ப்பது தெரிந்தும் அவர் அலட்டிக் கொள்ளவில்லை.



''அண்ணா! நம்ம பண்ணை மேனேஜருக்கு போன் பண்ணிச் சொல்லுங்க! கிருபாகரன் சார் இனிமே அடிக்கடி அங்கே வருவாங்க! அவரோட ஆலோசனையையும் கேட்டுக்கணும்னு'' என்றார்.

''சரிம்மா!'' என்றார் சிவஞானம்.

''அம்மா! நீங்களும் கூட வந்தா.. நல்லா இருக்கும்.''

''இல்லல்லே! நான் இப்ப வெளியவே வரக்கூடாது. அவரு போன அதிர்ச்சியே எனக்குத் தாங்கலை'' குறைந்தது ஆறு மாசமாவது நான் வெளியே வர்லை. எங்க போனாலும் அவரு கூடப் போயிருந்த ஞாபகமே வரும். இங்கயே எல்லா இடத்துலயும் அவரு நிக்கற மாதிரியே இருக்கு! ''இந்தா.. மங்களம்னு'' கூப்பிடற மாதிரியே இருக்கு'' என்றார்.

ஒரு நிமிடம் மௌனமாகி விட்டார். தொண்டைக் குழியில் பொங்கி வருகிற அழுகையை அவரால் அடக்க முடியவில்லை. ஆனாலும் கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டார். பிறகு மெல்லியதொரு புன்னகையை முகத்தில் படர விட்டார்.

''பரவால்லே! நான் போனா என்ன! நீங்க போனா என்ன? எல்லாம் ஒண்ணுதான். போயிட்டு வாங்க'' என்றார்.

கிருபாகரன் புறப்படும்போது வாயில் வரை சென்று அனுப்புவதற்காக நின்றார்.

கிருபாகரன் திரும்பி மங்களத்தின் முகத்தைப் பார்த்தார். பிறகு மெல்லிய குரலில் சொன்னார்.

''அம்மா! சொல்றேன்னு தப்பா.. நினைக்காதீங்க! ஆட்காரங்களை எங்க வக்கணுமோ.. அங்கதான்.. வைக்கணும்! பாருங்க! நீங்க அண்ணா.. அண்ணான்னு

கூப்பிட்டுகிட்டே போறீங்க! அந்த மரியாதையை அவரு காப்பாத்திக்கணும்.. இல்லே! என்னமோ கூடப் பொறந்த அண்ணனாட்டமா.. காலாட்டிகிட்டு உட்காந்துகிட்டிருக்காரு.''

''ஐயய்யோ! அவரை அப்படியெல்லாம் நினைக்கவே கூடாது.. பெரியவங்க..'' என்றார் மங்களம் பதைபதைப்பாக.

கிருபாகரனுக்கு மனதில் ஏமாற்றம் பொங்கியது. ''பரவாயில்லை! முதல் முயற்சிதானே! மெது மெதுவாகப் பார்த்துக் கொள்ளலாம். இப்போதைய நிலைமையே பெரிய வெற்றி மாதிரித்தான் தெரிகிறது. சசிசேகரன் போனால் போகட்டும் என்ற மனநிலைக்கு வந்திருக்காங்களே! அதுவே பெரிய விஷயம்தான்'' என்று தேற்றிக் கொண்டார்.

திரும்பி வீட்டுக்குள் நுழைந்தவுடன்தான் கவனித்தார். சிவஞானம் அலுவலக அறை வாயிலில் வந்து நின்று கொண்டிருந்தார்.

''என்னண்ணா!'' என்றார்.

''ஏம்மா! அவரு லாயரு! அவருக்கென்ன விவசாயத்தைப் பத்தித் தெரியும்! நான் கேள்விப்பட்ட வரைக்கும் வக்கீல் தொழிலையே பெரிய அளவில் பண்ண முடியலே! நான் சொல்றேன்னு தப்பா நினைக்காதம்மா! அந்த ஆள் பார்வையே சரியில்லே! ரொம்ப இடம் குடுக்காதே'' என்றார்.

மங்களம் வெகுளியாகப் புன்னகைத்தார்!

''ஏண்ணா அப்படி நினைக்கறீங்க! அவரு படிச்சவரு! நல்லவரா இல்லினா அவுங்க இத்தனை நாள் லாயரா வச்சிருந்திருப்பாக!''



''நீ வேறம்மா! அவங்கப்பா காலத்துல இருந்து லாயரா இருக்காங்களேன்னுதான் வச்சிருந்தாரு...'' என்றார் சிவஞானம். கொஞ்சம் மனத்தாங்கலுடன்தான் சொன்ன மாதிரி இருந்தது.

''பரவால்லைங்கண்ணா! மனுஷங்களை நம்பித்தானே ஆகணும்'' என்றார் மங்களம்.

அழகாகப் புன்னகைத்தார்! உள்ளே போய் விட்டார்!

சசிசேகரனும் இல்லாத நேரத்தில் இந்தப் பெண் ஏதாவது சிக்கலில் சிக்கிக் கொள்ளுமா என்ற பயம் தோன்றியது. அதனால்தான் சசிசேகரனுக்கு போன் செய்தார்.

கேட்ட சசிசேகரன் சும்மாயிருக்கவில்லை. உடனே பண்ணை மேனேஜருக்கு போனை செய்து ஏதோ சொன்னான்.

''சரிங்க.. சார்! சரிங்க சார்!'' என்று கேட்டுக் கொண்டான்.

கிருபாகரன் அந்தப் பண்ணைக்குள் நுழைந்தார். அதிகாரமாக மேனேஜரை அழைத்தார்.

''நான்தான் இனிமே பண்ணையை மேற்பார்வை பார்க்கறதுக்கு வருவேன். நிலத்தை சுத்திப் பாக்கணும்.''

''அய்யா! மெதுவாய் பொறுமையா சுத்திப் பாக்கணும்னா.. இரண்டு மணி நேரமாகும்.. அதுவுமில்லாம.. இங்க பாம்பு பயம் வேறு ஜாஸ்தி..'' என்றார்.

கிருபாகரனுக்கு கொஞ்சம் ''கருக்''கென்றிருந்தது.

''இல்லே! நாங்கன்னா.. எப்படி நகர்ந்து வழி விடறதுன்னு எங்களுக்கும் பழக்கம். திடீர்னு கொம்பேறி மூக்கன் மரத்துல தொங்கும். பச்சைப் பாம்பு குறுக்கால ஓடும். நீங்க பயந்துடுவீங்களே'' என்றார் மேனேஜர் உள்ளுக்குள் சிரித்துக் கொண்டு.

கிருபாகரனுக்கு முகம் விழுந்தே போனது. ''சரி.. போகட்டும், என்னென்ன போட்டிருக்குன்னு விவரம் சொல்லுங்க'' கணக்கு வழக்குப் புத்தகங்களை காட்டுங்க'' என்றார்.

''அடடா! நேத்துத்தானே எல்லா நோட்டுப் புத்தகத்தையும் சிவஞானம் அய்யாகிட்டே குடுத்தேன். நீங்க அவருகிட்டே வாங்கிக்கறீங்களா?'' என்றார் பண்ணை மேனேஜர்.

கிருபாகரனுக்கு மறுபடியும் முகம் தொங்கிப் போனது.

''கணக்கென்னங்க.. கணக்கு! ஏதாவது வேணுன்னா.. போன் பண்ணிச் சொல்வோம். பத்து மைல்தானுங்களே! அங்கயிருந்து யாராவது வாங்கிக் குடுத்துடுவாங்க..! மத்தபடி செலவுக்கு ஏதாவது வேணும்னா.. அங்க போய்த்தான் வாங்கிக்குவோம். அப்பவே பில்லை குடுத்துட்டு வந்துடுவோம். வேற என்னங்க.. பெரிய கணக்கு!'' என்றான்.

கிருபாகரன் சமாதானமாகிக் கொண்டாலும் திரும்ப வரும்போது ஒரு விஷயம் நன்றாகப் புரிந்தது.

''எல்லாருக்குமே தன்னை ஏற்றுக் கொள்வதில் ஒரு மறுப்பு இருக்கிறது. அதை மிகவும் நாசூக்காக வெளிப்படுத்துகிறார்கள்.''

அதே நேரம் பண்ணை மானேஜர் சசிதரனுக்கு போன் செய்து கிண்டலும், கேலியும் கிருபாகரன் வருகையைப் பற்றி விவரித்துக் கொண்டிருந்தார்.

''அப்ப நீங்க மட்டும் எதிரில் இருந்தீங்கன்னா அந்தாளு பேந்தப் பேந்த முழிச்சதை அப்படியே நடிச்சுக் காட்டியிருப்பனுங்க..!'' என்று சிரிக்க சசிசேகரனும் மென்மையாகப் புன்னகைத்துக் கொண்டான்.



## 9



அன்று ஞாயிற்றுக் கிழமை!

அம்மாவிடம் அனுமதி வாங்கிக் கொண்டு சிவஞானம் அய்யாவையும் அழைத்துக் கொண்டு அண்ணன் இருக்கிற கிராமத்துக்குப் போய் வரலாமா என்ற யோசனையில் இருந்தாள் மாலினி.

நேற்றிரவே பேசியிருக்க வேண்டும்!

''நேற்று அந்தக் கொள்ளிக் கண்ணன் கிருபாகரன் வந்து விட்டார். லாயராம் லாயர், அப்பா எப்படித்தான் இந்த மாதிரி ஆளைக் குடும்ப லாயராகப் பிடித்தாரோ'' என்று கோபம்தான் வந்தது.

மாலினிக்கு இப்போது தோன்றியது.

உயிலைப் படிக்கும்போதும் சரி.. ''அண்ணன் வீட்டை விட்டு வெளியில் போகும் போதும் சரி.. அந்த ஆள் முகத்தில் அளவுக்கதிகமான சந்தோஷம் தெரிந்தாற் போல இருந்தது.

அந்த உயிலில் அம்மாவின் பங்கு இருக்கிறதோ இல்லையோ அந்த ஆளின் கைவரிசை இருக்கிறது. கோபம் கோபமாக வந்தது.

'கண்டிப்பாக அண்ணனைப் பார்த்தே ஆக வேண்டும்' என்று முடிவெடுத்துக் கொண்டாள்.

அரக்கப் பரக்கப் புறப்பட்டாள்!

ஒன்பது மணிக்குக் கிளம்பினால் கூட பதினோரு மணிக்குள் போய் விடலாம் என்று திட்டங்கள் கூடப் போட்டுக் கொண்டாள். ஆனால் எந்தத் திட்டமும் செயலாகவில்லை.

ஒன்பது மணிக்கெல்லாம் கீழே அந்தக் கிருபாகரனின் குரல் கேட்டது!

''காலங் காத்தாலேயே வந்து விட்டாரே! என்று எண்ணிக் கொண்டிருக்கும்போதே அம்மாவின் குரல் கீழேயிருந்து கேட்டது.

''மாலினி! கீழே கொஞ்சம் வர்றியா?'' என்றார்.

''வரேம்மா!'' என்று பதில் குரல் கொடுத்தாள். நன்றாகக் கஞ்சி மடிப்பில் இந்த கைத்தறிப் புடவையைக் கட்டிக் கொண்டு மாடியில் இருந்து அவள் இறங்கி வந்தபோது பார்ப்பதற்கு கன கம்பீரமாக இருந்தாள்.

ஹாலில் இருந்த சோபாவில் கிருபாகரன் அமர்ந்திருந்தார். அருகில் யாரோ ஒரு இளைஞன் அமர்ந்திருந்தான்.

அப்பா இருக்கும் வரைக்கும் அவரைப் பார்க்க வருகிறவர்களை அலுவலக அறையில் வைத்துப் பார்ப்பார். மற்றவர்களைப் பார்க்க வருபவர்களை முன்னாலே இருந்த பெரிய ஹாலில் வைத்துப் பார்ப்பார்கள்.

உள்ளே இருக்கிற டிராயிங் ரூமில் வைத்து யாரையும் பார்ப்பது இல்லை. குடும்பத்தவர்கள்தான் இந்த ஹாலில் அமர்வது.

சமீப காலமாக கிருபாகரன் இந்த ஹால் சோபாவில் அமர்ந்து கொள்வது மாலினிக்கு சுத்தமாகப் பிடிக்கவில்லை.

லேசான முகச் சுளிப்போடுதான் இறங்கினாள்.

''வாம்மா! கிருபா அங்கிள் வந்திருக்காரு பாரு'' என்றார் மங்களம்.

''கிருபா அங்கிள்'' என்ன சொற்கள் காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றினாற் போல இருந்தது. ஆனாலும் முகத்தில் எதுவும் தெரிந்து விடாமல் கஷ்டப்பட்டு மறைத்துக் கொண்டாள்.



''ஹி.. ஹி.. வாங்க சார்!'' என்றாள்.

''அங்கிள்.. மாமா..! என்று எந்த விதத்திலும் அழைக்க மாட்டேன் என்ற மறுப்பு அதில் இருந்தது.'' மங்களம் அதைக் கண்டு கொள்ளவில்லை.

''வாம்மா! காலையில டிஸ்டர்ப் பண்றமோ..!'' என்றார் கிருபாகரன்.

''ஆமான்னு சொன்னா... என்ன செய்வீங்க?'' என்றாள் சிரித்தபடி.

கிருபாகரன் முகம் ஒரு கணம் சுருங்கியது. அவரும் சமாளித்துக் கொண்டு சொன்னார்.

''என்னம்மா.. பண்றது? இந்தக் குடும்பத்தைப் பராமரிக்கிற பொறுப்பை அப்பா என் தலையில் சுமத்திட்டுப் போயிட்டாரே! உங்க அண்ணன் மாதிரி என்னால எடுத்தேன் கவுத்தேன்னு வெளிய போக முடியலியே'' என்றார் மிக உருக்கமாக.

மாலினியின் கண்களில் அவநம்பிக்கை தெரிந்தது. ஆனால் முகத்தில் புன்னகை தவழ்ந்தது.

''பரவால்லை! சார்! உங்களுக்கு ரொம்ப சிரமமா இருந்தா விட்டுடுங்க! நாங்க சிவஞானம் மாமாவை வந்து சமாளிச்சுக்கறோம்'' என்று சொன்னவள் ரொம்பவும் மட்டம் தட்டுகிறோமோ என்று தோன்ற.

''ஆனா.. பாவம்..! உங்களுக்கு அப்படியெல்லாம் விட மனசு கேக்காது!'' என்றாள்.

''எப்படியோ புரிஞ்சாச் சரி!'' என்றார் கிருபாகரன்.

சொற்களினால் நடைபெறுகிற இந்த யுத்தத்தை அந்த இளைஞன் மிகவும் சுவாரசிபமாகக் கவனிக்கிறாற் போலத் தோன்றியது.

கண்களில் சிரிப்பும், குறும்பும் மாறி மாறி மின்னின. மாலினியை மிகவும் ஆர்வமாகக் கவனித்துக் கொண் டிருந்தான்.

மாலினிக்குத் திடீரென்று அது உறைக்க கிருபாக ரனைக் கேள்வியாகப் பார்த்தாள்.

உடனே கிருபாகரன் அதைப் புரிந்து கொண்டவராக,

"ம்.. சொல்ல மறந்துட்டனே.. அம்மா! இது என் மகன் அழகேசன்" என்று அறிமுகப்படுத்தினார்.

"அழகேசன்.." அமர்த்தலாகக் கை குவித்தான்.

"பி.எஸ்ஸி மேத்ஸ் படிச்சிருக்கான். என்னோட சொத்துக்களை நிர்வாகம் பண்ணுப்பான்னேன். ஆனா வாத்தியார் வேலைக்குப் படிச்சிருக்கிறான். ஒரு மெட்ரிக் குலேஷன் ஸ்கூலுக்கு வேலைக்குப் போறான்" என்றார்.

குரலில் தெரிந்த ஆற்றாமையைக் கவனித்து அழ கேசன் உள்ளுக்குள் சிரித்துக் கொண்டான் என்றால் மாலி னிக்கு ஏனோ அவனைப் பார்த்ததுமே பிடித்துப் போனது.

கிருபாகரனுக்கு நேர் எதிர் மாறான குணம் தெரிந்தது. முகத்தில் ஒரு நம்பகத் தன்மை இருந்தது.

"எதற்காக இந்த ஆளைக் கொண்டு வந்து தங்கள் வீட்டில் நுழைக்கிறார்" என்ற எண்ணம் இருந்த போதும் மாலினி முகம் மலர வணக்கம் சொன்னாள்.

அழகேசனும் வணக்கம் சொன்னான். அப்பாவோட சொத்தைப் பராமரிக்கிற வேலை வேண்டாம்னு சொல் லிட்டு சொந்தமா முடிவெடுத்து வேலைக்குப் போறா ராமே என்ற எண்ணமே அவளுக்குப் பிடித்தது.

"சார்! மெட்ரிக்குலேஷன் ஸ்கூல்ல குடுக்கற சம்பளம் உங்க ஸ்டேட்டஸுக்கு குறைவா இருக்குமே." என்றாள் மாலினி.



"என்ன செய்யறது தனியார் பள்ளிக் கூடங்கள்ல இப்ப குறைவாத்தான் தர்றாங்க..! ஆனா, எனக்குன்னு தனியா ஸ்டேட்டஸ் எல்லாம் கிடையாது. அம்மா அப்பா சம்பாதிச்சு வச்ச சொத்துல ஸ்டேட்டஸ் பாக்கிறதுக்கு நாம யாரு! இப்ப என்னோட ஸ்டேட்டஸ் பிலோ மிடில் கிளாஸ். நான் வாங்கற சம்பளம் என்னோட தேவை களுக்குப் போதுமானதா இருக்கு.. வீட்டுக்கும் என்னோட பணம்ன்னு கொஞ்சம் தர்றேன். வேற என்ன வேணும்!" என்றான்.

மாலினி கண்களை படபடவென்று அடித்துக் கொண்டாள்.

"லாயர் சார்! என்ன இது இப்படி நெத்தியடி அடிக்கறாரு. உங்க புள்ளே!" என்றாள் குறும்பாகச் சிரித்தபடி.

"அவன் கிடக்கிறாம்மா! இப்படித்தான் பேசுவான். பொழைக்கத் தெரியாத பய" என்றார்.

"மேடம்! பொழைக்கறதுன்னு வேற.. வாழறதுங்கறது வேற.." என்றான்.

"அப்படிப் போடு!" என்று சிரித்தாள் மாலினி. பிறகு சொன்னாள்.

"சார்! நீங்கள்ளாம் ஈஸியா இப்படிப் பேசிக்கலாம். நாங்கள்ளாம் அப்படிப் பேச முடியாதே" என்றாள்.

"சரி.. நீங்க பேசிகிட்டிருங்க! நாங்க ஆபீஸ்ல இருக் கோம்" என்று நகர்ந்தார் கிருபாகரன்.

"நாங்க" என்று சொன்னதனால் மங்களமும் ஆபீ ஸுக்குப் போனார்.

"சார்!" என்று மாலினி ஏதோ சொல்ல ஆரம்பிக்கு முன்னே அழகேசன் குறுக்கிட்டான்.

''மேடம்! அப்பா எதுக்கு என்னைக் கூட்டிட்டு வந்தார்னு தெரியலே! ஆனா, துக்கம் விசாரிக்கத்தான் வந்தேன். சசி சேகரன் வேற வருத்தத்தோட இருக்காருன்னு கேள்விப்பட்டேன். கிருபாகரன்கற லாயரோட மகனா என்னை நீங்க பாக்காம.. ஒரு நண்பனா நினைக்கலாம். கண்டிப்பா எந்த ஹெல்ப் வேண்ணாலும் செய்வேன்'' என்றான்.

''தாங்க்ஸ்... சார்!'' என்றாள் முகம் வாடிப் போய் விட்டது.

''ஆமா.. சார்! உண்மையில எங்க நிலைமையை நினைச்சா.. எனக்கே கஷ்டமாத்தான் இருக்குது. திடீர்னு அப்பாவோட மறைவு அவர் எழுதி வச்ச அபத்தமான ஒரு உயில். அதனால அண்ணனுக்கு ஏற்பட்ட வருத்தம்..! அண்ணனோட பிரிவு..'' எல்லாமும் என்னை ரொம்பத் தாக்கிடுச்சு'' என்றாள் ஆழ்ந்த வருத்தத்துடன்.

''என்னோட கருத்து என்னன்னா.. உங்க அண்ணன் இப்படி உங்களைக் கைவிட்டுட்டுப் போயிருக்கக் கூடாது'' என்றான் அழகேசன்.

''இல்ல சார்! அப்படியில்லே! அண்ணனோட இடத்துல வேற யாரும் இருந்திருந்தாலும் இப்படி வருத்தப் படத்தான் செஞ்சிருப்பாங்க! ஆனா.. அண்ணன் ரொம்ப நாகரீகமா வெளியேறிட்டாரு. வேற யாராவது இருந்தா கோர்ட்டு கேசுன்னு போயிருப்பாங்க'' என்றாள்.

''நியாயப்படி.. உங்க அண்ணன் அதைத்தான் செய்யணும்'' என்றான் அழகேசன்.

''வேண்டாம்.. சார்! அண்ணன் கோர்ட்டுக்கே போக வேண்டாம். சொத்து எனக்குத்தான்னு ஒரே ஒரு வார்த்தை கேட்டாப் போதும். நாங்க எல்லாரும் கையெழுத்து போட்டுக் குடுக்கத் தயாரா இருக்கோம்..'' என்றாள்.



''அதைச் செய்ங்க!'' என்றான் அழகேசன்.

''இல்ல சார்! அதுக்கும் வழியில்லாம அப்பா செஞ்சுட்டாரே! அம்மாவுக்கு எந்த சொத்தையும் விக்க உரிமையில்லே! ஆனா, சொத்துக்கள்ல வர்ற வருமானத்தை ஆண்டு அனுபவிக்கலாம்னு எழுதிட்டாரே'' என்றாள் மாலினி வருத்தத்துடன்.

அழகேசன் யோசனையில் ஆழ்ந்தான்.

''அப்பா.. ரொம்ப நாளா உடம்பு சரியில்லாம இருந்தாரோ?'' என்றான்.

''இல்ல சார்! ஒரே மாசந்தான் ஆஸ்பத்திரியில இருந்தாரு. அதுவும் தேறி வருவார்னு நாங்க எதிர்பார்த்தோம். ஏதோ நுரையீரல்ல கோளாறுன்னு சொல்லிட்டாங்க.''

''சொத்து பத்தி இப்படித்தான் முடிவெடுத்து வச்சிருக்கேன்னு எதுவும் சொல்லலியா?''

''இல்லையே.. சார்! அதுக்கான அவசியமே வர்லையே..!'' என்றாள்.

''அதானே! ஆனா.. உயில் எழுதி வச்சிருக்காரே'' என்றான்.

''ஆமா!'' என்றாள் சிந்தனையுடன்.

''சாரி.. மேடம்! உயிலைப் பத்தியே பேசறேனேனு நினைக்காதீங்க! உங்க குடும்பத்துல எல்லாரும் ஒருத்தர் ஒருத்தர் மேல ரொம்ப அன்பா இருக்கீங்கன்னு சொல்றப்ப.. எப்படி இப்படி ஒரு சிக்கல் வரலாம்கற கவலைதான். ஒரு வெல் விஷராத்தான் இத்தனையும் கேட்கறேன்'' என்றான்.

அந்தக் கணத்தில் மாலினிக்கு அழகேசனை மிகவும் பிடித்துப் போனது. அவன் குரலில் உண்மையான வருத்தம் தெரிந்ததை அவளால் புரிந்து கொள்ள முடிந்தது.

''தாங்க்ஸ்... சார்! எங்களுக்காக நீங்க இவ்வளவு தூரம் யோசிக்கறீங்களே'' என்று சொன்னாள்.

''அப்புறம்.. காலேஜ் அனுபவமெல்லாம் எப்படி இருக்கு!'' என்றான் அழகேசன்.

எல்லாக் கல்லூரி இளசுகளுக்கும் இருக்கிறாற் போல மாலினிக்கு சொல்வதற்கு நிறைய இருந்தது. வீட்டுக் கதையெல்லாம் தங்களிடம் வந்து சொல்லிக் கொண் டிருக்கிற லெக்சரர் எப்போதும் சீரியஸா இருக்கிற புரபசர் என்று நிறையச் சொன்னாள்.

அவனும் சிரிக்கச் சிரிக்கப் பேசினான். மங்களம் கூட அவர்கள் பேச்சை ஒருவித ரசிப்புடன் பார்த்துக் கொண்டார். கணவரின் மறைவுக்குப் பிறகு இன்றைக்குத்தான் மகள் இப்படி மனம் விட்டுச் சிரிக்கிறாள் என்று தோன் றியது. வெறும் பார்வையாளராக அமர்ந்து கொண்டார்.

சிவஞானத்திடம் சொத்து விவரங்கள் பற்றியெல்லாம் பேசி விட்டு அலுவலக அறையை விட்டு வெளியே வந்த கிருபாகரனுக்கு ஒரே மகிழ்ச்சி..!

'ஆஹா! அதிர்ஷ்டம் கூரையைப் பிளந்து கொண்டு கொட்டப் போகிறது போலிருக்கிறதே. அதிகம் தன்னிடம் வாயைத் திறந்து பேசாத ஊமைக் கோட்டான். இவன் இப்படிக் கலகலப்பாகப் பேசுகிறானே அது ஒரு ஆச்சரியம் என்றால் இன்னொரு பக்கம்.. தன்னைக் கண்டாலே ஏதோ அருவருப்பான ஐந்துவைப் பார்க்கிறாற்போலப் பார்க்கிற இந்தப் பெண்.. இப்படிக் கலகலவென்று சிரிக்கறாளே..! சரி.. சரி..! நாம பட்ட கஷ்டத்துக்கெல்லாம் பலன் கிடைக்கப் போகிறது..' என்று எண்ணிக் கொண்டார்.

''என்ன? ரெண்டு பேரும் பிரண்ட்ஸ் ஆயிட்டீங்க.. போல இருக்கு!'' என்றார் வாயெல்லாம் பல்லாக.



இரண்டு பேரும் சிரிப்புக்கு நடுவே திரும்பிப் பார்த் தார்கள்.

''ஆமா சார்!'' என்றாள் மாலினி. அவரும் சற்று பேச்சிலே கலந்து கொண்டார்.

''சரி.. கிளம்பலாமா?'' என்றார்.

''கிளம்பலாம்ப்பா!'' என்று கிளம்பினான் அழகேசன்.

வாசல் வரை வந்தாள் மாலினி! அங்கே ஒரு பைக் நின்று கொண்டிருந்தது.

அழகேசன் பைக்கருகில் நின்றார். லாயரும் அவன் பின்னால் வந்து நின்றார்.

''என்ன.. சார்! கார்ல வர்லியா?'' என்றார் மாலினி.

''இல்லம்மா! என் கார்ல இவன் ஏறமாட்டான்..! அவனோட சுய சம்பாத்தியமாம்'' என்றார் கிருபாகரன்.

மாலினி மலைத்தே போனாள்.

அப்போது சிவஞானம் ''லாயர்.. சார்!'' என்று வந்தார்.

''என்ன சார்?'' என்று நின்றார் கிருபாகரன்.

''சார்! நேத்து இருபத்தைஞ்சு தேங்காய் வேணும்னு தோட்டத்திலே இருந்து எடுத்தீங்களோ?'' என்றார்.

கிருபாகரன் திடுக்கிட்டுப் போனாற் போல மகனைப் பார்த்தார்.

''அது.. வந்து..!'' என்று திணற அழகேசன் சட்டைப் பையில் கை விட்டு நூத்தைம்பது ரூபாயை எடுத்தான்.

''ஆமா! அப்பா சொல்லிகிட்டிருந்தாங்க..! தேங்காய்க் குப் பணம் குடுக்கணும்னு'' என்றான்.

''ஐயய்யோ! பணத்துக்காக சொல்லலே! மேனேஜர் எல்லா டீடெய்ல்ஸும் என்கிட்டே சொல்லுவாரு..! சரி பார்க்கக் கேட்டேன்'' என்றார் சிவஞானம்.

''ப்ளீஸ்! வாங்கிக்குங்க!'' என்று பிடிவாதமாய் நின்றான் அழகேசன்.

''வாங்குங்க'' என்றாள் மாலினி. சிவஞானம் வாங்கிக் கொண்டார்.

அழகேசன் முகம் இறுகிப் போனவராய் பைக்கை உதைப்பதையும் கிருபாகரன் அசடு வழியப் பின்னால் ஏறி அமர்வதையும் ஒரு குறுகுறுப் பார்வையுடன் பார்த்துக் கொண்டு நின்றாள் மாலினி.

புறப்படுகிற நேரத்தில் அவன் வருவித்துக் கொண்ட புன்னகையுடன் தலையாட்ட அவள் உற்சாகமாகக் கையாட்டி விடை கொடுப்பதை சிவஞானம் சற்றே கவலையோடு பார்த்துக் கொண்டு நின்றார்.



# 10

''மாமா! நீங்க கவலைப்படாதீங்க! அப்பாவுக்கு வேண்டியவங்க நிறையப் பேர் மேலிடத்துல இருக்காங்க..! நான் மேல பேசறேன். ஹைஸ்கூல் பண்றதுக்கு பர்மிஷன் வாங்கிடலாம்..'' என்றான் சசிசேகரன் உற்சாகமாக.

கிராமத்துக்கு வந்து இரண்டு மாதங்கள் ஓடியிருந்தது. பெற்றோர் ஆசிரியர் கழகமும், ஊர்ப் பெரியவர்களுமாகச் சேர்ந்து சசிசேகரனைப் பள்ளிச் செயலராகத் தேர்ந்தெடுத்து விட்டார்கள்.

அதற்கு ஊர்ப் பெரியவர்கள் ஒன்று போலச் சொன்னார்கள். அந்தப் பள்ளிக் கூடத்துக்கு இடம் கொடுத்தது, கட்டிடத்துக்குப் பெருமளவு நிதி கொடுத்தது எல்லாமே வெள்ளைய நாயுடுதான். நியாயப்படி அதுக்கு சசிசேகரன் தான் செயலராக இருக்கணும்'' என்று.

சசிசேகரன் மறுக்கவில்லை! ஏற்றுக் கொண்டான்.



உண்மையில் அந்தப் பள்ளிக்காக உழைப்பது அவனுக்குப் பிடித்திருந்தது. அப்பா காலத்திலேயே அப்பாவை அரசியலில் இழுப்பதற்கு நிறையப் பேர் முயற்சித்தார்கள். ஆனால் அப்பா சிக்கிக் கொள்ளவில்லை. அவனும் இலக்கியத்தில் ஆர்வத்தோடு இருப்பது மட்டுமல்ல நன்றாகப் பேசவும் செய்வான் என்பதால் அவனையும் இழுக்க முயற்சி செய்தார்கள். அப்பாவிடம் தெளிவாகச் சொல்லி விட்டான்.

''அப்பா! சொந்தக் காரணங்களுக்காகவோ சுய லாபங்களுக்காகவோ அரசியலில் நுழைகிறவர்கள்தான் இன்று அரசியலில் இருக்கிறார்கள். அரசியலில் நுழைஞ்சா.. சுதந்திரமும் இருக்காது. கட்சித் தலைமை என்ன சொல்லுதோ அதத்தான் செஞ்சாகணும். வேண்டாம்ப்பா! எனக்கு அந்த மாதிரித் தேவைகளும் இல்லை! ஆர்வமும் இல்லை!'' என்று.

அப்பாவிடம் ''மகனையாவது எங்க கட்சியில சேருங்க'' என்று வந்தவர்களிடம் அப்பா சிரித்துக் கொண்டே சொன்னார்.

''வேண்டாம்யா! அவன் கிறுக்குப் பய..! அரசியலுக்கெல்லாம் லாயக்கில்லாதவன்..'' என்று. ஆனால் அவனுக்கு சமுதாயத்துக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்கிற ஆர்வம் இருந்தது.

எப்படிச் செய்வது எங்கிருந்து தொடங்குவது என்ற சிந்தனை உள்ளுக்குள்ளேயே இருக்கத்தான் செய்தது. ஆனால் திடீரென்று நிகழ்ந்த அப்பாவின் மறைவும். அ:தனால ஏற்பட்ட குழப்பங்களும் எல்லா சிந்தனைகளையும் பின்னுக்குத் தள்ளி விட்டது. ஆனால் வந்த இடத்தில் தெய்வாதீனமாக ஒரு பள்ளிக்கூடம் அவன் பொறுப்பில் வரும் என்று அவன் நினைக்கவேயில்லை.

மிகவும் ஆர்வமாக இந்த விஷயத்தைக் கையில் எடுத்துக் கொண்டான்.

பெற்றோர் ஆசிரியர் கழகக் கூட்டத்தில் சொன்னான்.

"நாம எல்லாரும் இனிமே ஒரு சின்ன முயற்சி செய்ய லாம். நம்ம வீடுகள்ல எத்தனையோ விசேஷங்கள் வருது. நம்ம பிறந்த நாள், குழந்தைங்க பிறந்த நாள்.. அப்ப டீன்னு! அந்த நாட்கள்ல நம்ம சந்தோஷத்தை பள்ளிக் கூடத்துக் குழந்தைங்களோட நாம பரிமாறிக்கலாம். அந்தக் குழந்தைங்களுக்கும் கேசரி, லட்டு மாதிரி ஏதாவது ஒரு இனிப்பு வாங்கிக் கொடுத்தா.. சத்துணவு ஸ்கீம்ல சாப்பிடற ஏழைக் குழந்தைங்க ரொம்ப சந்தோஷப்படு வாங்க..! நமக்கும் மனசு நிறைவாகும்.." என்று.

பலரும் அதை ஏற்றுக் கொண்டார்கள்.

குழந்தைகள் எல்லாரும் அவனை "அண்ணா!" என்று அழைத்தார்கள்.

தினமும் ஒரு மணி நேரமாவது பள்ளியில் அலுவல கத்தில் இருக்கிறாற்போலத் திட்டமிட்டுக் கொண்டான்.

எந்தக் குழந்தையைப் பார்த்தாலும் பெயரென்ன?

"எந்தக் கிளாஸ் படிக்கறம்மா!"

"என்ன மார்க் வாங்கற..!" என்று கேட்டு உற்சாகப் படுத்துவான்.

மாணவிகள் மகிழ்ச்சியோடு அவனிடம் பேசிவிட் டோம் என்ற பெருமையோடு துள்ளிக் குதித்து ஓடுவதை அவன் வாஞ்சையாகப் பார்ப்பான்.

மனம் நலிவடைந்து போகாமல் தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்கு அந்தச் சேவை ஒரு பெரிய ஆதாரமாக அமைந்தது என்றுதான் எண்ணிக் கொண்டான்.



"என்ன முடியுமோ.. அதைச் செஞ்சீங்கன்னா.. இந்தப் பள்ளிக்கூடத்தை நல்லாக் கொண்டு வரலாம்னு நீங்க சொன்ன கருத்து.. எல்லாருக்கும் ரொம்பப் பிடிச்சுப் போச்சு" என்று பாராட்டினார் நடேசன்.

"மாமா! இதுக்கு.. நீங்க.. ஆக்சுவலா.. மதுரவாணிக்குத் தான் தேங்க்ஸ் சொல்லணும்" என்றான் சசிசேகரன்.

நடேசன் ஆச்சரியமாகப் பார்த்தார்! "ஆமாம்.. மாமா! தினமும் பத்து மணிக்கு மெடிக்கல் ஷாப்பில பர்மிஷன் வாங்கிட்டு இரண்டு மூன்று தோட்டங்களுக்குப் போயி காய்கறி சேகரிச்சுக் கொண்டு போயி சத்துணவுக் கூடத் துல கொடுக்குது. நான் கேட்டேன்.. என்ன மேடம்.. சோஷியல் சர்வீஸான்னு!"

"சார்! படிப்பிருக்கவும்தான் நானும் என் சிஸ்டரும் ஏதோ கௌரவமாக நடமாடறோம். அதனால பள்ளிக் கூடத்துக்கு ஏதாவது செய்யணும்னு நினைச்சேன். என் னால பெருசா எதுவும் செய்ய முடியாது. அதனால ஊர்ப் பெரியவங்ககிட்டே சொல்லி ரெண்டு மூன்று தோட் டத்துல காய்கறி கலெக்ட் பண்ணிக் கொண்டு போய்க் குடுக்கறேன். உங்க தோட்டத்துல மட்டும் தினமும் எடுத்துக்கச் சொல்லி அய்யா பர்மிஷன் குடுத்தாரு. ஏதோ அவங்க வக்கிற குழம்புல நாலு காய்கறி போட்டா.. குழந்தைங்க.. நல்லாச் சாப்பிடுமில்ல.."

"அது சரி..! மெடிக்கல் ஷாப் ஓனர் தினமும் பர்மிட் பண்றாரான்னு கேட்டேன்."

"ப'ண்றாரு.. சார்! நான் முத முதல்ல பர்மிஷன் கேட் கும்போது சார்.. நான் வேண்ணா கூட அரை மணி நேரம் மெடிக்கல் ஷாப்புல இருக்கேன்னு கேட்டேன். அதுக்கு அவரு "ஏம்மா! நீ வெளியூர்க்காரி..! நீ இங்க வந்து எங்க

ஊர்ப் புள்ளைங்களை நல்லாக் கொண்டு வரணும்னு நினைக்கற.. நான் அதுக்கு உதவி செய்ய மாட்டேனான்னு கேட்டாரு. அதனால ஹாஃப் அன் அவர்ல இந்த வேலையை முடிச்சுட்டு.. போயிடுவேன்னு சொல்லுச்சு.." என்றான் சசிசேகரன்.

நடேசன் ஒரு நெகிழ்ச்சியோடு கேட்டுக் கொண்டார். பிறகு பெருமூச்சோடு சொன்னார்.

"தம்பி! ஆண்டவன் நல்லவங்களைத்தான் ரொம்ப சோதிக்கறார்" என்றார்.

பெருமூச்சு விட்டார்!

"ஏன்.. அப்படி நினைக்கறீங்க!" என்றான்.

"தம்பி அந்தப் பொண்ணுக ரெண்டு பேரும்.. நல்ல வசதியான குடும்பத்துல பொறந்தவங்க! நீங்க எப்படி சூழ்நிலையினால வருத்தப்பட்டு வந்தீங்களோ.. அதே மாதிரித்தான் அவங்களும் வந்தாங்க! ஆனா.. பொம்பளைப் புள்ளைங்க.. தனியாப் பொழைக்க முடியும்களா? அதான்.. இங்க வரச் சொன்னேன். இங்க நம்ம பாதுகாப்புங்கறதுனால யாரும் நெருங்கறதில்லே! நமக்கே வருமானம் இருக்கு..! ரெண்டு பேரும் எங்க வீட்லயே இருங்கண்ணேன். சுய மரியாதை உள்ள புள்ளை! இருக்கட்டும் அய்யா! உங்க ஆதரவு இருந்தாலே போதும். எங்க தேவைகள் ரொம்பக் குறைவு! நாங்களே சம்பாதிச்சுக்கறோம். வேலை மட்டும் வாங்கி குடுங்கன்னுச்சு..! இங்க எங்க போய் வேலை வாங்கறது. வேணுகிட்ட சொன்னேன். வேலை போட்டுக் குடுத்தார். மெடிக்கல் ஷாப் ஆயிரத்தைந்நூறு ரூபாய் சம்பளம்! ரெண்டு பேரும் கௌரவமாய் பொழைக்கறாங்க!" என்றார் நடேசன்.

மனம் உருகக் கேட்டுக் கொண்டிருந்தான் சசிசேகரன்.



"ஆனா.. ரொம்ப வைராக்கியம் பிடிச்ச பொண்ணு! ஒரு நாள் கூட நாங்க அப்படி இருந்தவங்க இப்படி இருந்தவங்கன்னு பெருமை பேசியோ இன்னைக்கு இப்படிக் கஷ்டப்படறமேன்னு வருத்தப்பட்டோ பாத்ததில்லை. என்னமோ ரொம்ப நாளா இப்ப இருக்கற வாழ்க்கை முறைக்கு பழக்கப்பட்ட மாதிரி நடந்துக்குவாங்க" என்றார்.

ஆழ்ந்த மௌனம் சாதித்தபடி கேட்டுக் கொண்டிருந்தான் சசிசேகரன்.

"நாந்தான் ஒரு பொண்ணைப் பறி கொடுத்தவனாச்சே! ஒண்ணுக்கு ரெண்டா பொண்ணுங்க நமக்குக் கிடைச்சிருக்காங்கன்னு சந்தோஷமா இருக்கேன். நேரடியா உதவி குடுத்தா வாங்கிக்காது மதுரவாணி. அதனால நான்தான் எங்க வீட்ல சும்மா கிடக்குதும்மா காஸ் ஸ்டவ்ன்னு சொல்லி ஒரு ஸ்டவ் குடுத்தேன். நம்மகிட்டே மட்டும் கொஞ்சம் உதவி வாங்கிக்குவாப்ல. ஆனா, அதுக்கு நம்ம சம்சாரத்தை ரொம்பப் பிடிக்கும். வேலை நேரம் போக மத்த நேரத்துல நம்ம வூட்லதான் கிடக்கும்.." என்றார்.

"நினைச்சேன்.. மாமா! அந்தப் பொண்ணு கிட்டே ஒரு காலிபர் இருக்குன்னு.."

"அப்படீன்னா?" என்றார் நடேசன்.

"அப்படீன்னா.." என்று ஒரு நிமிடம் யோசித்தவன் "பெருந்தரம்ன்னு சொல்லுவமில்லே.. அது மாதிரி" என்றான்.

"அது நிஜம்தான்.." என்றார் அவரும்.

மேலும் சற்று நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டுப் போனார் நடேசன்.

சமையல்காரர் வந்து "ஐயா.. டிபன் ரெடிங்க" என்றார்.

மணி பார்த்தான்!

இரவு எட்டு மணியாகி இருந்தது!

சாப்பிட்டான்! சாப்பிடும்போதே மதுரவாணியின் முகமே அவன் மனத்தை ஆக்கிரமித்தது.

''ஐயா! குருமா.. எப்படியிருக்குங்க!'' என்றார் சமையற்காரர்.

''ம்..!'' என்று நிலவுலகிற்கு வந்தான். ''குருமா.. குருமா.. நல்லா இருக்கு!'' என்றான் தடுமாற்றமாக.

''அய்யா! நானும் ஒரு வாரமாப் பாக்கறேன். இந்தப் பள்ளிக் கூடத்து வேலையில இறங்கினாலும் இறங்கி னீங்க! சோற தண்ணி ஞாபகம் இருக்கிறதில்லே!'' என்றார் மாதையன் புகார் சொல்வது போலே.

''இல்லையே! அப்படியெல்லாம்.. இல்லை'' என்று சமாதானம் சொன்னான்.

மங்களம் சித்தியின் நினைவு வந்தது. இப்படித்தான் பக்கத்திலே நின்றபடி கவனிப்பார்.

சாப்பிட்டு முடித்து விட்டு வழக்கம் போல் வெராண் டாவில் சேரைப் போட்டுக் கொண்டு அமர்ந்தான்.

விவசாயமும் அவனுக்குப் பிடிக்க ஆரம்பித்திருந்தது. மெதுவாக அது தொடர்பான விஷயங்களைக் கற்றுக் கொள்ள ஆரம்பித்திருந்தான்.

ஊரில் அவர்களுக்கு நிலம் இருந்தது. ஆனால் மேனேஜர் இருந்ததாலோ என்னவோ அவன் அதையெல்லாம் கண்டு கொள்ளவில்லை.

விடுமுறையை அனுபவிக்க மட்டும் தோட்டத்துக்குப் போய் விட்டு வருவான். அவ்வளவுதான்!

இப்போது தானே விவசாயம் பார்க்க நேரும்போது நிறையத் தெரிந்து கொள்ள வேண்டி இருந்தது.



''நஞ்சை நிலம். புஞ்சை நிலம்'' என்று குறிப்பிடப் படுகிற வித்தியாசத்தைக் கூட அவன் தெரிந்து கொள்ள முற்பட்டதில்லை. ஆனால் கிராமத்தில் மிக எளிமையாக நன்செய் நிலத்தை 'தோட்டம்' என்று புன்செய் நிலத்தைக் 'காடு' என்றும் குறிப்பிடுகிறார்கள்.

இன்றைக்கும் பம்புசெட்டில் ஏதோ கோளாறு என்றார்கள். அதற்காக ஆளை வரவழைத்து ரிப்பேர் என்று காலை நேரம் முழுதும் அதற்கு ஓடியது.

பிற்பகலில்தான் பள்ளிக்குப் போனான். இரு நாட்களாக நேரத்தைச் சரியாகப் பின்பற்ற முடியவில்லை. மதுரவாணியும் கண்ணில் படவில்லை!

இன்னைக்கு நடேசன் மாமாவின் மூலமாக மதுரவாணி பற்றிய இன்னொரு பக்கம் அறிந்து கொண்டான். இத் தனைக்கும் நடேசன் மாமா முழுமையாக எதுவும் சொல்ல வில்லை.

கொஞ்சமாகக் கோடி காட்டி விட்டுப் போனார். தன்னைப் போலவே ஏதோ ஒரு பாதிப்பில் அவளும் சிக்கியிருக் கிறாள் என்றவுடனே அவனுக்கு உள்ளம் உருகி விட்டது.

''தனக்கென்ன ஆண் பிள்ளை! துண்டை விரித்துத் தோளில் போட்டுக் கொண்டு எந்தத் திண்ணையிலும் படுக்கலாம். ஆனால் பெண்கள் அப்படியா? அதிலும் தங்கையைப் பார்த்துக் கொள்கிற பொறுப்பு வேறு!'' என்று எண்ணிக் கொண்டவுடன் உள்ளம் உருகியே போய் விட்டது.

திடீரென்று அவன் மனம் மக்கர் செய்தது! இப்போதே பார்க்க வேண்டும் என்று சண்டை போட்டது.

சசிசேகரன் கொஞ்சம் திணறித்தான் போனான்.

அதே நேரம்!

சமையற்காரர் வேறு புலம்பினார். ''அய்யா நடேசன்.. அய்யாவும் சாப்பிடுவார்ன்னு ஒரு பாத்திரம் நிறைய குருமா வச்சனுங்க..! இப்ப அத்தனையும் வேஸ்டாப் போகும்'' என்று.

சசிசேகரன் பாயிண்டைப் பிடித்தான்.

''அய்யா! அந்த குருமாவை ஒரு எவர்சில்வர் தூக்குப் பாத்திரத்தில் ஊத்துங்க! நானே கொண்டு போய்க் குடுத்துட்டு வரேன்'' என்றான்.

சமையற்காரர் ஆச்சரியத்தால் வாயைப் பிளந்தார்.

''அய்யா! நீங்களா!''

''ஆமா! நம்ம நடேச மாமாவுக்கு நான் கொண்டு போனா என்ன? அவருக்குத்தான் வேற யாரு இருக்காங்க? அதுவுமில்லாம.. நான் அடிக்கடி அவக வீட்டுக்கு வரதில்லைன்னு அவருக்கு ஒரு வருத்தம் இருக்கு..! என்னத்துக்கு சும்மா.. போறது.. இப்ப ஒரு நல்ல சாக்கு கிடைச்சுதில்ல'' என்றான்.

சமையற்கார மாதையன் வாயெல்லாம் பல்லாக ஒரு தூக்குப் பாத்திரத்தில் குருமாவை ஊற்றிக் கொடுத்தார். தூக்கிப் பார்த்தான்!

''கொட்டாதில்லே!'' என்றான்.

''ம்ஹூம்! 'கிண்'ன்னு மூடியிருக்கேன்!'' என்றான் மாதையன்.

காரில் போய் இறங்கியபோது மனதில் ஒரு எதிர்பார்ப்பு!

மதுரவாணியும் அவள் சகோதரியும் இருப்பார்களா! என்று.

இருந்தார்கள்!

வாசலை அடைத்தாற்போல் அவன் தூக்குப் பாத்திரத்துடன் நிற்கவும் ஆச்சரியமானார்கள்.



''வாங்க.. தம்பி!'' என்று பரபரப்பாக வரவேற்றார் நடேசனின் மனைவி.

''இருக்கட்டுங்கத்தே!'' என்று சேரில் அமர்ந்தான். மதுரவாணியும், கொடிமலரும் பவ்யமாக நின்றார்கள்.

''இல்லே! குருமா.. ரொம்ப நல்லா இருந்துச்சு.. அதான் கொண்டு வந்தேன்'' என்று தூக்குப் பாத்திரத்தை நீட்டவும் ராதாமணி மலைத்தே போனார்.

''ஐய..! நீங்க எதுக்கு தம்பி சிரமப்பட்டுட்டு...'' என்று தடுமாறினார்.

''இதுல என்ன சிரமம்!'' என்று இயல்பாகச் சிரிப்பது போல மதுரவாணியைப் பார்த்துச் சிரித்தான்.

மதுரவாணி மரியாதை நிமித்தம் சிரிப்பதா, வேண்டாமா என்று திணறுவதை உள்ளூர ரசித்தான்.

அதற்குள்ளாக நடேசனும் வந்தவர் ரொம்பவும் மகிழ்ந்து போனார்.

''மது..! இரு! அந்தா இத்தனை குருமா நாங்க சாப்பிடறோமா? நீங்களும் கொண்டு போங்க!'' என்று கொடுக்கவும் வாங்கிக் கொண்ட மதுரவாணியும் கொடி மலரும் கிளம்பிப் போனார்கள்.

நடேசனுக்கும், ராதாமணிக்கும் அப்படியொரு சந்தோஷம்.

சற்று நேரம் கழித்து விட்டு படுக்கையில் படுத்த போதுதான் சாப்பிட்ட அதே குருமா. தன் வீட்டு குருமாவை இன்று மதுரவாணியும் ருசித்துச் சாப்பிட்டிருப்பாள் என்ற எண்ணமே அவனுக்கு இனிப்பாக இருந்தது!

தன்னைக் குறித்து சிரிப்பாகவும் இருந்தது!

மறுநாள் காலை!

வேறொரு ஆச்சரியம் காத்திருந்தது!

# 11



கார் வருகிற சத்தம் கேட்டது!

மிராசுதார் சுந்தரக் கவுண்டராயிருக்கும் என்று எண்ணிக் கொண்டே பிரஷ்ஷில் பல்லைத் தேய்த்துக் கொண்டே வெளியே வந்தான் சசிசேகரன்.

''அண்ணா!'' என்று துள்ளிக் கொண்டு வந்தாள் மாலினி.

''ஹேய்! மாலு!'' என்று உற்சாகமானான்.

''போ.. அண்ணா! நீ என்கிட்ட பேசாதே!'' என்று கோபித்துக் கொண்டாள் மாலினி.

''ஏன்?'' என்றாள்.

''ரெண்டு மாசம்.. ரெண்டு மாசம்.. எங்களையெல்லாம் பாக்காம இருந்திருக்கியே..!'' என்றாள் உண்மையான கோபத்துடன்.

அவனுக்கே அது ஆச்சரியம்தான்!

கல்லூரியில் படிக்கையில் ஒரே ஒரு வருஷம் மட்டும் ஹாஸ்டலில் இருந்திருக்கிறான். அப்போது கூட அதிக பட்சம் பதினைந்து நாட்கள் இருப்பான். அப்புறம் வீட்டுக்கு வந்து விடுவான். வெள்ளிக்கிழமை லீவு போடுவான். இல்லையென்றால் திங்கட்கிழமை லீவு போடுவான். மூன்று நாட்களாவது அவர்களோடு இருந்து விட்டுத்தான் போவான்.

மாலினி குணசேகரன் இரண்டு பேரும் லீவு போட்டு விடுவார்கள். மூன்று நாட்கள் ஒரே கும்மாளமாகத்தான் இருக்கும். குழந்தைகளுக்கிடையே இருக்கிற ஒற்றுமையை பார்த்து மங்களமும், மருதமுத்துவும் ரசித்துக் கொள்வார்களே தவிர பெரிதாகக் கண்டுகொள்ள மாட்டார்கள்.



ஆனால் இப்போது எப்படி இரண்டு மாதங்கள் இருந்தான் என்பது அவனுக்கே புரியவில்லை.

''இல்லம்மா! இங்க நிறைய வேலைகள்'' என்றான்.

''வேலை இருந்தா.. எங்களை மறந்துடுவியா?'' என்றாள்.

கோபமாக முகத்தை வைத்துக் கொண்டுதான் உள்ளே வந்தாள். ஆனால் உள்ளே வந்தவுடன் மெல்ல மெல்லக் குனிந்தாள்.

''அண்ணா! சமையற்காரர் நல்லாச் சமைப்பாருன்னு சொன்னியே'' என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே மாதையன் வந்தார்.

''அய்யா! இது நம்ம சிஸ்டர்'' என்று தோளோடு சேர்த்துக் கொண்டு சிரித்தான்.

''ஆமா! ஆனா, அதை அடிக்கடி மறந்துடுவாரு'' என்றாள் மறுபடியும்.

''சரி.. சரி.. போதும் கோபம். நான் ஆக்சுவலா இந்த வாரம் வரலாம்னு இருந்தேன்'' என்றான்.

சந்தேகம் போலப் பார்த்தாள்!

''போன வாரமும் இதையேதான் சொன்னே!'' என்றாள்.

''ஆமா..! ஆனா.. அதுக்குள்ள ஸ்கூல் சம்பந்தமான வேலை வந்துடுச்சு..!''

''எப்பப் பாரு.. ஸ்கூலு.. ஸ்கூலுன்னு..! எனக்கு அந்த ஸ்கூல் மேல கோபமா வருது..'' என்றாள்.

''கோபம் வேண்டாம் கண்மணி! இன்னைக்கு ஸ்கூலுக்குப் போய்ப் பார்க்கலாம்..'' என்றான்.

''சரி..! நீ மட்டும் வந்திருக்கே!'' என்றான்.

"குணாவும் வந்திருக்கான். பக்கத்தூர்ல அவனோட பிரண்ட் இருக்கானாம் பாத்துட்டு மத்தியானத்துக்குள்ள வந்தர்றேன்னான்" என்றாள்.

"சரி சரி!" என்று மகிழ்ந்தவன் "அப்புறம்.. நீ ஏண்டா.. இப்படி இளைச்சுப் போயிட்டே" என்றான்.

"எல்லாம் நீ அம்போன்னு விட்டுட்டு வந்துட்டேங்கற கவலைதான்."

"நா எங்கடா.. அம்போன்னு விட்டுட்டு வந்தேன்" என்றவன் திரும்பி மாதையனிடம்,

"ஐயா! டிபன் தயார் செய்ங்க!" என்றான்.

"இதோ..!" என்று போனார் மாதையன்.

தனது பெரிய அறையில் இருந்த சோபாவில் அமர வைத்தான்.

அம்மா, தான், குணசேகரன் சகோதரரோடு நிற்கும் போட்டோ ஒன்று ப்ளோ அப் செய்து மாட்டியிருந்ததைப் பார்த்து மனம் சற்றே குளிர்ந்தாள் சகோதரி.

"பாத்தியா! நீங்கள்ளாம் எப்பவும் என்னோடதான் இருக்கீங்க..." என்றான் சசிசேகரன்.

"சித்தி எப்படி இருக்காங்க!"

"அண்ணா..! அம்மா இப்பல்லாம் ரொம்ப மாறிட்டாங்க..! எவ்வளவு நம்பிக்கை வச்சிருந்தேன். சசி இப்படிப் பண்ணிட்டானே! இனி நீ யாரை நம்பி என்ன!" என்று பேச ஆரம்பிச்சுட்டாங்க! சந்தடி சாக்கில் அந்தக் கிருபாகரன் வக்கீல் பூந்து விளையாடறாப்பல!" என்றாள்.

"ஆமா! எனக்கும் தகவல்கள் வருது!" என்றான் சசிசேகரன்.

"அண்ணா! நீ ரொம்ப முட்டாள்தனம் பண்ணறே!" அப்பா என்னதான் சொன்னாலும் என்ன உயில் எழுதி



வச்சிருந்தாலும் உனக்கு பாத்தியதை உள்ள சொத்து அது! ஃபைட் பண்ணி வாங்கறதை விட்டுட்டு பைத்தியக் காரத்தனமா வெளிய வந்திருக்கறயே" என்றாள் தங்கை.

மாதையன் காபி கொண்டு வந்து கொடுக்க வாங்கிக் கொண்ட சசிசேகரன்.

"மாலுவுக்கும் காபி குடுங்க!" என்றான்.

"ஆமா! எனக்கும் சில நேரங்கள்ல அப்படித் தோணுது. ஆனா.. அப்படி ஃபைட் பண்ணினா.. யாருகிட்டே ஃபைட் பண்ணனும்..! என் சித்திகிட்டே! சிஸ்டர், பிரதர்கிட்டே..! அதான் எதுக்குன்னு விட்டுட்டேன்" என்றான்.

அந்தக் கணத்தில் சகோதரன் மீது அன்பு பொங்கியது மாலினிக்கு.

"அது மட்டுமில்லடா! சொத்து இன்னைக்கு வரும்..! நாளைக்குப் போகும்.. உறவுகள்தாண்டா முக்கியம்..! அதுலயும் நீ மட்டும் இல்லேன்னு வச்சுக்க.. நான் இதை டீல் பண்ணியிருக்கிற விதமே வேறயா இருக்கும். நாம இப்ப சொத்துக்கு அடிச்சுகிட்டா.. நாளைக்கு உனக்கு மாப்பிள்ளை பார்க்கும்போது அது பெரிய டிராபேக்கா ஆயிடும்" என்றான்.

"போண்ணா! நான் மேல படிக்கறதுன்னு இருக்கேன்" என்றாள்.

"படி..! படி! எவ்வளவு படிக்கறயோ படி! மாலு! இங்க எல்லாக் குழந்தைகளும் என்னை அண்ணானுதான் கூப்பிடுதுங்க! ஒவ்வொரு குழந்தையும் அப்படிக் கூப்பிடறப்போ.. என்னவோ.. நீயே என் கூட இருக்கற மாதிரி ஃபீல் பண்றேன்" என்றான்.

பள்ளிக் கூடம் பெரிதும் அண்ணன் மனதில் இடம் பிடித்து விட்டது என்று அவளுக்குப் புரிந்தது.

'சரி! அப்பா செய்த துரோகத்தையே நினைத்துக் கொண்டிருக்காமல் எப்படியாவது அவனது மனம் அமைதி யடைந்தால் சரி..' என்று எண்ணிக் கொண்டாள்.

முக்கியமான ஒரு விஷயத்தைப் பகிர்ந்து கொள்ளத் தான் அவள் இன்றைக்கு வந்திருந்தாள். போன வாரத்தில் நிகழ்ந்த நிகழ்வு அது.

* * *

மாலினி கல்லூரிக்கு சப்மிட் செய்ய வேண்டிய ஒரு அசைன்மென்ட்டில் மும்முரமாக இருந்தாள்.

இரவு ஏழு மணியிருக்கும்!

கிருபாகரனின் குரல் கீழே ஒலிப்பது கேட்டது. பொருட்கள் விற்கும் ஏஜென்சி கடையிலும் சரி, பண்ணையிலும் சரி கிருபாகரன் ஓசியில் ஏதாவது பொருட்களை வாங்கிக் கொண்டு போவது இப்போதெல்லாம் வழக்கமாகிப் போனது.

அம்மாவிடம் சொன்னாள் "அம்மா! ஆத்தோட போற தண்ணியை அப்பா குடி, அம்மா குடின்னு ஆளுக்காளு குடிக்கறாங்க" என்றாள்.

"அது சரிடி! நமக்கும் நம்பிக்கையானவங்க வேணு மில்ல..." என்றார் மங்களம்.

பிறகு ஏதோ தோன்றினாற் போல.

"தேனை குடித்தவன் புறங்கையை நக்காம இருப்பானா இந்த மாதிரிப் பெரிய சொத்துக்களை நிர்வாகம் பண்ற வங்க கொஞ்சம் கையை வக்கத்தான் செய்வாங்க.. நாம கண்டுக்காமத்தான் போகணும்.." என்றார்.

அதிலிருந்து "ஆனது.. ஆகட்டும்!" என்று எண்ணத் தொடங்கி விட்டாள் மாலினி. ஆனாலும் உள்ளூர ஒரு



நம்பிக்கை. ஏதோ ஒரு கட்டத்தில் அண்ணன் திரும்பி வருவான். அப்போது எல்லாவற்றையும் சரி செய்வான் என்று.

கிருபாகரன் எதற்கு இந்த நேரத்தில் வந்திருக்கிறார் என்ற குறுகுறுப்பு தாங்காமல் இறங்கி வந்து அம்மாவும் அந்த ஆளும் என்ன பேசிக் கொள்கிறார்கள் என்று கேட்பதற்காக நின்றாள்.

"அம்மா! அந்த சிவஞானம் இந்த நேரத்துல கோயிலுக்குப் போயிருப்பாரு! நிம்மதியாப் பேசலாம்னுதான் வந்தேன்" என்றார்.

"சொல்லுங்க!" என்றார் மங்களம்.

"அது ஒண்ணுமில்லிங்க! நம்ம மாலினிக்கு இந்த வருஷம் படிப்பு முடிச்சவுடனே கல்யாணம் பண்ணிட லாம்ங்க! எனக்கு ஒரு யோசனை என்னன்னா... பேசாம நம்ம அழகேசனுக்கே பண்ணிடலாம்ங்க..!" என்றார்.

மங்களம் ஒரு பெருமூச்சு விட்டார். பிறகு சொன்னார்.

"எப்படியும் மாலினிக்குக் கல்யாணம் பண்ணத்தான் வேணும்! பாக்கலாம் கடவுள் அப்படி ஒரு முடிச்சுப் போட்டிருந்தா.. நடக்காமயா போயிடும்! எதுக்கும் புள்ளையையும், பையனையும் கேட்போம்! படிப்பு முடியட்டும்" என்றார்.

"அது செஞ்சுக்கலாம்!" என்ற கிருபாகரன் பல்லைக் காட்டிக் கொண்டே சொன்னார்.

"இல்ல.. முதல்ல.. உங்களுக்கு எதுவும் மறுப்பு இருக் கான்னு தெரிஞ்சுக்கத்தான்.. கேட்டேன்.."

"எனக்கு பெரிய கருத்தும் இல்லே! மறுப்பும் இல்லே! நீங்களும் நானும் திட்டம் போடறது இருக்கட்டும்! குழந்தைங்க மனசுல என்ன இருக்குன்னு கேட்டுக்

கோனும். ஏன்னா.. இப்பல்லாம் குழந்தைங்களும் அவுங் களுக்குன்னு சில கருத்துக்கள் வச்சுக்கறாங்க'' என்றார்.

மாலினி அம்மாவின் பதிலில் சற்றுத் தெளிந்தாள். ஆனால் உடனே தோன்றியது.

''இந்த மாதிரி ஏதோ ஐடியாவோடுதான் இவரு மகனை அழைத்து வந்து அறிமுகப் படுத்தியிருக்காரு'' என்று. கூடவே இன்னொன்றும் தோன்றியது.

''மகன் நல்லவராத்தான் தெரியறாரு'' என்று.

உடனடியாக அதே வாரத்தில் முடிவெடுத்து இந்த வார முடிவில் வந்திருந்தாள்.

அண்ணாவிடம் நடந்ததைப் பகிர்ந்து கொண்டாள். சகோதரி சொன்னதைக் கேட்டுக் கொண்டான் சசிசேகரன். பிறகு ஒரு கேள்வி கேட்டான்.

மாலினி ஒரு நிமிடம் சிந்தனையிலாழ்ந்தாள். பிறகு ஒரு பதில் சொன்னாள்.

சசிசேகரன் தொடர்ந்து சொன்னான்.

''சரி.. அப்ப அவங்க ஏற்பாடுகள் நடக்கட்டும்'' என்று.

பத்து மணி வாக்கில் பள்ளிக்கூடத்துக்கு அழைத்துப் போனான்.

பெண் குழந்தைகள் எல்லாரும் ஓடி வந்து அவனிடம் வணக்கம் சொல்லுவதும்,

''அண்ணா! அண்ணா!'' என்று பிரியமாகப் பேசுவதும் அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது.

தலைமையாசிரியர் தங்கசாமி சகோதரனிடம் பவ்யமாக நடந்து கொள்வதையும் சகோதரனின் கம்பீரமான நட வடிக்கைகளையும் ரசித்துப் பார்த்தாள்.



''சார்! ரெண்டு மூன்று கம்ப்யூட்டருக்கு ஏற்பாடு செஞ்சிட்டேன். ஈவ்னிங் அந்தக் குழந்தைகளுக்கு அதுல கொஞ்சம் பயிற்சி குடுக்கலாம'' என்றான்.

''தாராளமா!'' என்றார் கந்தசாமி. மாலினியிடம் சொன்னான்.

''அம்மா! பாத்துப் பாத்து இழைக்கிற ஒரு நகை மாதிரி உங்கண்ணன் இந்தப் பள்ளிக் கூடத்தோட தலை யெழுத்தையே மாத்தணும்னு முயற்சி பண்ணிகிட் டிருக்காரு... ஊர்ல இருந்தா.. உங்க ஒரு குடும்பத்தை மட்டும்தான் பாத்துகிட்டிருப்பாரு! ஆனா.. இப்ப எத்தனை எதிர்காலக் குடும்பங்களுக்கு வழி காட்டறாரு.. தெரியுமா..'' என்றார்.

மாலினிக்குப் பெருமையாக இருந்தது.

ஒரு மணி நேரத்துக்கு மேல் அங்கே செலவழித்து விட்டுத் திரும்ப வருகிற வழியில் அண்ணனிடம் சொல்லிக் கொண்டு வந்தாள்.

''அண்ணா! ரொம்பப் பெருமையா இருக்கிறது!'' என்று.

அவன் சகோதரியைப் பார்த்து வாஞ்சையாகச் சிரித்து விட்டுத் திரும்புகையில் எதிரே மதுரவாணி வந்து கொண்டிருந்தாள்.

''ஹல்லோ! மதுரா..!'' என்றான் சசிசேகரன். வழக்கம் போல் காய்கறிப் பையை வலது கையில் தூக்கிக் கொண்டு இடது கையைத் தூக்கி,

''வணக்கம் சார்!'' என்றாள்.

''நான்தான் இப்படி சிரமப்பட்டு சைகையில வணக்கம் சொல்ல வேண்டாம்னு சொல்லியிருக்கேனே'' என்றான்.

சற்று நேரம் பார்த்த மாலினி,

''நீங்க.. கொடி மலரக்காவோட சிஸ்டர் தானே'' என்றாள்.

''ஆமா..!'' என்றாள் மதுரவாணி.

''உனக்குத் தெரியுமா!'' என்றான் சசிசேகரன்.

''ம்.. தெரியும்! கொடிமலர் எங்களோட சீனியர்'' என்றாள் மாலினி.

''இவங்க.. சோஷியல் சர்வீஸ் பாத்தியா?'' என்று மதுரவாணி காய்கறி கொண்டு வந்து கொடுப்பதைச் சொன்னான் சசிசேகரன்.

மாலினி ஆர்வமாகக் கேட்டுக் கொண்டாள். பிறகு மதுரவாணி சற்றே கூச்சத்துடன் நெளிந்தபடி.

''அப்படியெல்லாம் ஒண்ணும் பெரிய சர்வீஸ் இல்லே!'' என்றபடி விடை பெற்றுக் கொண்டாள்.

அவள் போகும்போது தன் சகோதரனின் பார்வை அந்தப் பெண்ணைத் தொடர்கிற விதம் பார்த்த மாலினி சிந்தனையில் ஆழ்ந்தாள்.

மதுரவாணி பற்றித் தொடர்ந்து விசாரித்தாள். பிறகு சொன்னாள்.

''அண்ணா! என் பிரண்ட் கங்கா தெரியும் இல்லே! அவங்க ஊருதான் இவங்க! அங்கே இவுங்களுக்குக் கடல் மாதிரி பெரிய வீடு இருக்கு..! இங்க வந்து மெடிக்கல் ஷாப்புல வேலை பார்க்கறாங்களா!'' என்றாள் சிந்தனையுடன்.

''யாருக்குத் தெரியும்? நம்மளை மாதிரி அவுங்களையும் யாரோ துரத்தி அடிச்சுட்டாங்களோ.. என்னமோ?'' என்றான்.

மாலினி சகோதரனை வேதனையுடன் பார்த்தாள்.



''அண்ணா! நாங்க யாரும் உன்னைத் துரத்தலே நீதான் எங்களை விட்டுட்டு வந்துட்டே'' என்றாள்.

''ஏய்! சும்மா சொன்னேன்!'' என்றான். அப்போதுதான் சகோதரியிடம் சொன்னான்.

''மாலு! நீ என்ன நினைச்சாலும் சரி! அந்த உயில் மேல் எனக்கு நம்பிக்கையே வரமாட்டேங்குது..! எங்கயோ இடிக்குது! அது என்னன்னு கண்டு பிடிச்சு.. சரி செய்யற வரைக்கும்.. நான் வெளியே இருந்தாத்தான் சரி வரும்னு என் உள்மனசு அழுத்தமா சொல்லுது'' என்றான்.

காலார தோப்புக்குள் போனார்கள். இதமாக இருந்தது. சகோதரிக்கு இளநீர் கொடுக்கச் சொன்னான்.

பிற்பகலில் குணசேகரன் வந்து சேர்ந்தான். அன்றைக் கெல்லாம் பொழுதை சந்தோஷமாகக் கழித்து விட்டுப் புறப்பட்ட போது மாலினியின் மனதில் அண்ணன் உயிலைப் பற்றி எழுப்பிய சந்தேகம் ஓடிக் கொண்டிருந்த தென்றால் அண்ணன் மனதில் தங்கை மதுரவாணியைப் பற்றிச் சொன்ன விஷயங்களே ஓடிக் கொண்டிருந்தது.

## 12



சொல்லி முடிக்கையில் அந்த முகத்தில் எல்லையற்ற வேதனை தெரிந்தது.

அந்தப் பழைய காட்சிகள் எல்லாம் மனதில் வேகமாக ஓடியது.

''அண்ணா! உன்னை நம்பினதுக்கா.. இப்படியொரு அதிர்ச்சி குடுக்கறே'' என்று அபிராமி தீனமான குரலில் கேட்டார்.

''இதபாரு! அபிராமி! என்னமோ நான் உங்க சொத்தையெல்லாம் வித்துத் தின்னுட்ட மாதிரிப் பேசறே! உங்க

வீட்டுக்காரு அப்படிக் கடன் பண்ணி வச்சிருக்காரு..! என்னை என்ன பண்ணச் சொல்றே!''

அபிராமிக்குத் தெரியும்! கணவர் கடன் ஏதும் வைக்க வில்லை என்று. ஆனால் கணவருக்கு ஒரே பழக்கமான மதுப் பழக்கம்தான் தங்களை இப்படிப் படு குழியில் வீழ்த்தி விட்டது என்று.

கருப்பண்ணன் சொந்த சகோதரன் இல்லையென் றாலும் பெரியம்மா மகன் என்று நம்பினது தான் தவறாகப் போனது.

தங்கள் நம்பிக்கையைத் தவறாகப் பயன்படுத்திக் கொண்டு விட்டார்!

கணவர் அசந்த நேரங்களில் எல்லாம் வெற்றுப் பத்திரங்களில் கையெழுத்து வாங்கிக் கொண்டு விட்டார் போலும். இப்போது அதை வைத்துக் கொண்டு அவ்வளவு கடன் இவ்வளவு கடன் என்று கணக்குக் காட்டுகிறார்.

''சரி! அப்படித்தான் கடன் பண்ணியிருந்தாருன்னு வச்சுக்குங்க..! நாங்க அதை எப்படித் தீர்க்கறதுனு சொல் லுங்க.. தீர்க்கறோம்'' என்றார் அபிராமி.

''அபிராமி! வீட்டை எழுதிக் குடுக்க வேண்டியது தான்! எனக்கு பவர் ஆஃப் அட்டர்னி குடு! நான் எல்லாத் தையும் பாத்துக்கறேன்!''

அபிராமி பெண்கள் இருவரையும் பார்த்தார். மதுர வாணி அம்மாவைத் தனியாக அழைத்துப் போனாள்.

''அம்மா! எதையாவது செய்! சொத்து போனாப் போகுது! இந்த ஆளைத் தீத்து விடு. அப்புறம் இருக்கறதை வச்சுக்கிட்டு நாம நிம்மதியா இருக்கலாம்'' என்றாள்.

அபிராமிக்கும் அது சரியென்றே பட்டது! மறுபடியும் சகோதரனிடம் சொன்னாள்.



''சரிங்கண்ணா!'' என்றாள்.

கருப்பண்ணன் முகத்தை ஒரு மாதிரியாக வைத்துக் கொண்டு சொன்னார்.

''அம்மா! தப்பா நினைக்காதே! நிலத்தையும் குடுக்க வேண்டி வரும்..'' என்று.

ஐந்து ஏக்கர் நிலம் இருந்தது!

''சரி! என்னென்ன வேணுமோ எடுத்துக்குங்க! ஆனா.. பொண்ணுங்க பேர்ல இருக்கற ரெண்டு வீட்டையும் குடுக்க மாட்டேன்!'' என்றாள்.

மதுரவாணி ஏதோ ஒரு துணிச்சலில் அடித்தாள்.

''ஆமா மாமா! ரொம்ப நெருக்கறாங்கன்னா சொல் லுங்க.. ஐ.பி. குடுத்தர்றோம்'' என்று.

கருப்பண்ணன் இதை எதிர்பார்க்கவில்லை!

''சரிம்மா! சரிம்மா.. இந்த வீட்டையும் நிலத்தையும் வச்சு நான் எல்லாக் கடனையும் முடிச்சுக்கறேன்'' என்றார்.

கருப்பண்ணன் போனதற்குப் பிறகு மதுரவாணி சொன்னாள்.

''அம்மா! இந்த ஆளே பினாமி பேர்ல சொத்தை மாத்தி கிட்டு அப்புறம் மறுபடியும் தன் பேர்ல மாத்திக்குவாரு.. பாரு!'' என்றாள்.

''தொலையட்டும்.. போடி!'' என்றார் அம்மா. ஆனால் வீட்டைக் காலி செய்ய வேண்டிய நேரம் வரும்போது அவரால் அதைத் தாங்க முடியவில்லை. அடுத்த வாரத்தில் காலி செய்ய வேண்டும் என்கிற நிலை இருந்தபோது ஒரு நாள் நெஞ்சைப் பிடித்துக் கொண்டு சாய்ந்தவர்தான்.

நடேசனும் தூரத்து உறவினர் என்ற முறையில் துக்கம் விசாரிக்க வந்திருந்தார். அவரை ஏனோ மதுரவாணிக்குப்

பிடிக்கும். அவரிடம் தனிமையில் எல்லா விவரங்களையும் பகிர்ந்து கொண்டாள் மதுரவாணி.

"நிஜம்மாவே உங்க அப்பா கையெழுத்தா இருந்தா.. ஒண்ணும் பண்ண முடியாதும்மா..! ஆனா எப்ப உங்களுக்கு ஏதாவது ஆபத்துன்னாலும் என் வீட்டுக்கு வந்துடுங்க..! நான் பாத்துக்கறேன்.." என்றார்.

"இல்ல மாமா! இனிமே நான் சமாளிச்சுக்குவேன்! என்றாள். ஆனால் சமாளிக்க முடியாத ஒரு சூழ்நிலையும் வரும் என்று ஒரு போதும் எதிர்பார்க்கவில்லை.

* * *

யாரோ கதவைத் தட்டினாற் போல இருந்தது.

கதவைத் திறந்தாள்!

கருப்பண்ணன் நின்று கொண்டிருந்தார்! தாங்கள் இருந்த அந்தப் பெரிய வீட்டைக் காலி செய்து விட்டார்கள்!

ஊருக்குள்ளே ஒரு சின்ன வீட்டில் குடி போனார்கள். தங்கள் பெயரில் இருந்த வீடுகளில் இருந்து வாடகை வந்தது! அதுவும் தங்கள் பாங்குக் கணக்குகளுக்கு நேரே வந்து சேர்கிற மாதிரி ஏற்பாடு செய்து கொண்டாள் மதுரவாணி.

வெளியூரில் வேலை தேடிக் கொண்டு போய் விடலாம் என்றிருந்தார்கள். அதை எப்படியோ மோப்பம் பிடித்துக் கொண்ட கருப்பண்ணன் வந்து நின்றார்.

வேறு வழியில்லாமல் "வாங்க.. மாமா!" என்று வரவேற்றாள்.

"ஏம்மா! நான் ஏதோ உங்களை ஏமாத்திப்போட்ட மாதிரி நினைக்கறீங்க! சத்தியமா இல்லே! சரி.. அதுக்காக ஊரை விட்டுப் போலாம்னு நினைக்கறீங்களா?" என்றார்.



"ஐயய்யோ! அதனால இல்ல மாமா! வெளியூர்னு போனா ஏதோ ஒரு வேலை கிடைக்கும். எங்க பொழப்பும் நிம்மதியா.. ஓடும்.." என்றாள்.

"நீ ஏம்மா! வெளியூர் போகணும். என் மகனுக்கே உன்னைக் கல்யாணம் பண்ணிக்கறேன். என் வீட்டு மகாலட்சுமியா வந்துரு.." என்றார்.

மதுரவாணி திடுக்கிட்டுப் போனாள். கொடிமலரைப் பார்த்தாள்.

கொடிமலர் குறுக்காகத் தலையாட்டினாள். மதுரவாணி இந்த முறை அழுத்தமாகச் சொன்னாள்.

"மாமா! போதும் மாமா! எனக்கு இந்த ஊரே பிடிக்கலே! அதுவும் இல்லாம உங்க மகனோட நேச்சர் வேற! என்னோட நேச்சர் வேற! ஒத்து வராது" என்றாள்.

ஊர்த் திண்ணையில் கண்ட இளைஞர்களுடன் நின்றபடி ஊர்ப் பெண்களை வம்பிழுத்துக் கொண்டு திரிகிற அந்த இளைஞனின் முகம் ஞாபகத்துக்கு வந்தது! அருவெறுப்பாக இருந்தது!

கருப்பண்ணன் முகம் சூம்பிப் போனது!

"சரி.. விடும்மா! உனக்குப் பிடிக்கலேன்னா.. விடு..!" என்று கிளம்பிப் போனார்.

"அக்கா! இந்தக் கருப்பண்ணன்.. பயங்கரமான ஆளு! எல்லாத்தையும் கபளீகரம் பண்ணப் பாக்குது! உன்னைப் புடிச்சுப் போட்டுட்டா இந்த ஆளோட தில்லு முல்லு வெளிய வராதில்ல! கேவலம்.. சொத்துக்காக என்னெல்லாம் பண்றாங்க!" என்றாள்.

"விடு! நாமதான் பதில் சொல்லிட்டமில்லே!" என்றாள் மதுரவாணி. ஆனால் அவள் மனதுக்குள் கருப்பண்ணன்

அப்படியெல்லாம் விட்டுவிட மாட்டார் என்ற கவலை லேசாக இருந்தது.

அதற்கேற்றாற் போலவே நடந்தது!

அவர்கள் குடும்பத்தார்கள் எல்லாம் சேர்ந்து பொங்கல் வைக்கிற விழா என்று இருந்தது.

''இப்பத்தானே வீட்டுல துக்க நிகழ்வு ஆயிருக்கு. பொங்க வைக்க வேண்டாம்! சும்மா வந்து கலந்துக்குங்க!'' என்றார் அவர்கள் ஜாதிக்காரப் பெரியவர்.

பெண்கள் எல்லாம் பொங்கல் வைக்கிற அந்த நேரத்தில் அந்தப் பெரியவரிடம் தன் சந்தேகத்தைப் பகிர்ந்து கொண்டாள் மதுரவாணி.

''ஆமாங்க தாத்தா! எங்கப்பா பெருசாக் கடன்னு வாங்க மாட்டாரு! ஆனா இவரு என்னமோ நிறையக் கடன் பத்திரம் காட்டறாங்க!'' என்றாள்.

''உங்கப்பனுக்கிருந்த குடிப்பழக்கத்தால போதையில கையெழுத்தைப் போட்டுக் குடுத்துட்டானோ!'' என்றார்.

அந்தக் குலதெய்வத்துக் கோயில் காட்டுக்குள்ளே இருந்தது!

பேசிக் கொண்டே இருவரும் ஒரு புதர்ப் பக்கம் வந்த போது கருப்பண்ணன் மகனிடம் சொல்லிக் கொண்டிருந்தார்.

''டேய்! ராயப்பா! நான் சொல்றதை மனசுல வச்சுக்க..! இன்னைக்கு ராத்திரி.. எல்லாரும் வெட்ட வெளியில தான் படுத்துக் கிடப்பாக! கர்ச்சீப்ல மயக்க மருந்து தடவித் தாரேன்! அந்த மதுராவை மட்டும் எங்கனயோ தூக்கிட்டுப் போய் என்னவும் பண்ணு! மானத்துக்கு பயந்து கல்யாணத்துக்கு ஒத்துக்குவா!'' என்றார்.



''அப்பா! என்ன விளையாடறியா? எல்லாரும் பின்னி எடுத்துடுவானுங்க! சினிமாவில வேண்ணா அது மாதிரி.. நடக்கும்..'' என்றான் ராயப்பன்.

''அதெல்லாம்.. ஒண்ணுமில்லே! நிஜத்திலே அதை விடப் பெரிய விஷயமெல்லாம்.. நடக்குது'' என்று மேலும் ஏதோ பேசுகையில் தாண்டவராயன் திரும்பி மதுரவாணியைப் பார்த்தார்!

அதிர்ந்து போய் நிற்கிற அந்தச் சின்னப் பெண்ணைப் பார்த்ததும் அவர் முகத்தில் பரிவு தோன்றியது.

''ஷ்'' என்று சைகை காட்டி சற்று தூரம் அழைத்துப் போனார்!

''அம்மா! கொஞ்ச நாள் ரெண்டு பேரும் எங்கயாவது வெளியூர் போயிடுங்க! அதுக்குள்ளே இவன் தில்லு முல்லுகளை நான் கண்டு பிடிக்கறேன்'' என்றார்.

''எங்கே போவது?'' மதுரவாணி விழித்தாள்.

''ஆமம்மா! எந்நேரமும் யாராவது காவல் இருக்க முடியுமா!'' என்றார் தாண்டவராயன்.

அப்போதுதான் நடேசனின் நினைவு வந்தது.

''சரிங்க தாத்தா!'' என்று சொன்னாள்.

''இப்பவே கிளம்புங்க!'' என்று அனுப்பி வைத்தார்.

அன்றைக்கே வந்து சேர்ந்தவர்கள்தான்! இங்கே நிம்மதியாக இருக்கிறார்கள்.

மதுரவாணியின் வாயாலே இதையெல்லாம் விளக்கிக் கேட்கும்போது சசிசேகரனுக்கு நெஞ்சமெல்லாம் உருகி விட்டது.

ஞாயிற்றுக்கிழமை நாள்! அது!

நடேசன் இருந்தாரா என்று தேடிக் கொண்டு வந்தாள் மதுரவாணி.

இல்லையென்று தெரிந்தவுடனே வெளியே போக முற்பட்டவளை,

''மதுரா!'' என்ற அவன் குரல் ஒலித்தது.

அவன் அப்படி அழைப்பது அவளுக்கு மிகவும் பிடிக்கும். பெரும்பாலும் அவளை 'மது' என்று அழைப்பார்கள்! அல்லது வாணி என்று அழைப்பார்கள். இவன் மட்டும் தான் மதுரா என்று அழைப்பது!

''சார்!'' என்று நின்றாள்.

''இன்றைக்கு லீவுதானே! ஏதாவது ப்ரொகிராம் இருக்கா..!'' என்றான்.

''இல்லே! சும்மாதான் இருக்கேன்!'' என்றாள் அந்த நேரம்! மாதையன் வந்து நின்றார்.

''சார்! ஒரு இழவுச் செய்தி வந்திருக்கு! ஒரு அரை நாள் லீவு வேணும்'' என்று.

''போயிட்டு வாங்க!'' என்றான்.

''நான் நடேசன் சார் வீட்ல சொல்லிட்டுப் போறேன்'' என்றான்.

''வேண்டாம்..! நீங்க போங்க! நான் சொல்லிடறேன்'' என்றாள் மதுரவாணி.

''தேங்க்ஸ்!'' என்று சிரித்தான் சசிசேகரன்.

''சார்! நான் போய் அம்மாகிட்டே சொல்றேன்'' என்று போனாள்.

ஒரு மணியிருக்கும்!

மதுரவாணியே கேரியருடன் வந்து நின்றவளை அவன் கேள்விக்குறியாகப் பார்த்தான்.

''நடேசன் ஐயா! எங்கயோ வெளியூருக்குப் போயிட்டாராம். அம்மா கொஞ்சம் டயர்டா இருந்தாங்க! அவர் வீட்ல நானே சமைச்சுக் கொண்டு வந்துட்டேன்'' என்றாள்.



அவன் மனத்தில் மகிழ்ச்சி நிரம்பியது.

''மதுரவாணியின் கைச்சமையல்'' என்றவுடன் ஆர்வமாக அமர்ந்தான்.

சாம்பார், ஒரு பொரியல் என்று எளிமையாக இருந்தாலும் சுவையாக இருந்தது.

''குட்! நல்லா சமைச்சிருக்கே!'' என்று நன்றாகச் சாப்பிட்டான்.

''இவ்வளவு நல்லா சமைச்சுக் குடுத்திருக்க. உங்களை உபசரிக்க வேண்டாமா?'' என்று எதிரே அமர்த்திக் கொண்டான்.

போக விடவே மனம் வரவில்லை. அதனால் தான் கேட்டான்.

''மதுரா! ஏதோ பிராப்ளத்துனாலதான் உங்க ஊரை விட்டு இங்க வந்திருக்கறதா கேள்விப்பட்டேன். கிட்டத்தட்ட நானும் அப்படித்தான். எப்பவும் பங்கு போட்டுகிட்டா துக்கம் குறையும்பாங்க..! சொல்லலாம்னா.. சொல்லுங்க..'' என்றான்.

சொன்னாள்!

பாதுகாப்புக்காக எப்படி ஊரை விட்டு ஓடி வர நேர்ந்தது என்பதை வேதனையோடு சொன்னாள்.

கேட்டுக் கொண்டே அவன் எழுந்து நிற்பதை அவள் கவனியாமல் தரையைப் பார்த்தபடி சொல்லி முடித்தாள். அந்தக் கணத்தில் அவளை வாரி அணைத்துக் கொண்டு தேற்ற வேண்டுமென மனம் பரபரத்தது. ஆனால் அவளது மனம் அறியாமல்.. எப்படி?

''மதுரா!'' என்றான் கிறக்கமான குரலில்.

''கிரேஸ் ஃபுல் அப்படீம்பாங்க. அது மாதிரி உங்க சோதனையான காலத்திலயும் ரொம்ப க்ரேஸ் ஃபுல்லா வாழறீங்க!'' என்றான்.

அவள் அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

''தேங்க்ஸ்.. சார்!'' என்றாள்.

''மதுரா..!'' என்றான் கிறக்கமான குரலில். அவன் குரலில் இருந்த மாற்றம் லேசாகப் புரிய ஆரம்பித்தது போலும்.

திகைப்புடன் எழுந்து நின்றாள்!

''மதுரா..! உங்களைப் பார்த்த நாள்ல இருந்து என் மனசு டிஸ்டர்ப் ஆகியிருச்சு.. ஒருவேளை உங்க நினைப்புத் தான் என் குடும்பத்தை விட்டு வந்திருக்கிற பிரிவையே தாங்கற சக்தியை எனக்குக் குடுத்துச்சோ.. என்னமோ..'' என்றான்.

அவள் திகைத்துப் போய் நின்றாள்.

முழுமையாக அவளை நோக்கித் திரும்பி நின்றான்.

''மதுரா..! சொத்துக்கள்னால பிரச்சனைகள் என்னன்னு நம்ம ரெண்டு பேருக்குமே தெரியும்! சொத்துக்களை விட உறவும், அன்பும்தான் முக்கியம்னும் நமக்குத் தெரியும். சின்னதா ஒரு குடிசையில இருந்தாக் கூட உங்களோட நான் சந்தோஷமா இருப்பேன்னு நினைக்கறேன்! என் பிரபோஸலை ஏத்துக்குவீங்களா?'' என்றான்.

மதுரவாணிக்கு என்ன பேசுவது என்றே தெரிய வில்லை. அவனை அந்த மாதிரியெல்லாம் அவள் நினைத்ததேயில்லை.

''எனக்கு.. என்ன சொல்றதுன்னே தெரியலை..'' என் றாள்.

கைகள் லேசாக நடுங்கின.

அணைத்துக் கொள்ள வேண்டும் என்ற தன் தவிப்பை அடக்கிக் கொண்டு ''ஒண்ணும் அவசரமில்லை! யோசிச்சுச் சொல்லுங்க'' என்றான்



அவள் கீழே பார்த்துக் கொண்டு தலையை ஆட்டி விட்டு ஓடுவதை ஒரு சுவாரசியத்துடனும், கிறக்கத்துட னும் பார்த்துக் கொண்டு நின்றான்.

## 13



மதுரவாணி புரண்டு புரண்டு படுத் துக் கொண்டிருந்தாள்.

எத்தனையோ வசதிகளுடன் வளர்ந் தவர்கள்தான். ஆனால் அதே வசதிகள் தான் அவர்களது வாழ்க்கைக்கே குந் தகமாகவும் வந்து சேர்ந்தன.

புலிக்குத் தப்பிப் புதைகுழியில் விழுந்த மாதிரி நிலைமை இப்போது ஆகி விடுமோ என்று பயமாக இருந்தது. ஆனால் இன்னொரு மனது சொன்னது கருப் பண்ணன் மகன் ராயப்பனுக்கும் சசிசேகரன் சாருக்கும் வித்தியாசமில்லையா?

வந்த இரண்டே மாதத்தில் பள்ளிக் கூடத்தை எவ் வளவு அழகாக்கியிருக்கிறார். அடுத்த வருஷத்தில் அந்தப் பள்ளிக் கூடத்தில் இடம் கிடைத்தால் போதும். பெண் பிள்ளைகள் உருப்படியாகி விடுவார்கள் என்று அக்கம் பக்கத்தவர்கள் பேசிக் கொள்கிறார்கள்.

ஏதோ சங்கடத்தில்தான் இந்த ஊருக்கு வந்திருப்ப தாகப் பேசிக் கொள்கிறார்கள். ஆனாலும் வந்த இடத் திலும் தன்னுடைய முத்திரையைப் பதித்துக் கொண் டிருக்கிறார்.

விசாரித்தவரை எந்த விதமான மோசமான பழக்கங் களும் இல்லையென்றுதான் பேசிக் கொள்கிறார்கள். நாளைக்கே மனம் மாறி அவர் தன்னுடைய குடும்பத்

தோடு சேர்ந்து கொண்டால் பெரிய இடத்துப் பெண்ணாகப் பார்க்கக் கூடும். இதற்கிடையில் தன்னைப் பார்த்து என்ன பிடித்துப் போனதென்று இப்படிக் கேட்கிறார் என்று மனது கேள்வி கேட்டது.

இன்னொரு மனது சொன்னது "இத பாரு! மதுரவாணி உன்னைப் போலவே இலக்கியத்தில் ஆர்வம் நல்ல கம்பீரம், உயரம்.. மனத்தில் உருவத்தில்.. எல்லாமே! நல்ல குணம்! பொதுநல நோக்கு! வேறென்ன வேண்டும்!"

"நாமதான் டைம் கேட்டிருக்கோமே! கொஞ்சம் யோசிப்போம்" என்று எண்ணிக் கொண்டாள்.

அதற்குப் பிறகுதான் உறக்கம் வந்தது. ஆனால் உறக்கத்தில் கூட சசிசேகரனின் ஆழமான பார்வையும் கிறக்கமான குரலும் தொல்லைப் படுத்தியது!

* * *

முதன்மைக் கல்வி அதிகாரியைப் பார்த்து விட்டு வந்திருந்தான் சசிசேகரன்.

"முயற்சி செய்தால் இந்தக் கல்வி ஆண்டுக்குள்ளாகவே அனுமதி வாங்கிடலாம் போல இருக்கு" என்றார்.

நடேசன் அதற்குள்ளாக "தம்பி! ரெண்டு டீச்சர்ஸ் போஸ்ட் ஃபில்லப் பண்ண வேண்டியிருக்கு. அதற்கான ஏற்பாடுகள் லேட்டாப் போகும் போல இருக்கு. இப்பவே நல்ல ஆட்களா ரெண்டு பேரைப் போட்டுட்டோம்னா பின்னாலே ஹைஸ்கூலா ஆகும்போது முறைப்படி அவங்களையே போட்ரலாம். அது மட்டுமில்ல..! இனிப் போடப் போறவங்கள்ல யாராவது ஒருத்தர்தான் பள்ளிக் கூடத்துல ஹெட் மாஸ்டராக முடியும்! ஏன்னா இப்ப இருக்கறவங்க எல்லாருமே பிளஸ் டூ முடிச்சுட்டு டீச்சர் ட்ரெயினிங் முடிச்சவங்கதான்" என்றார்.



"பரவாயில்லையே! இவ்வளவு தூரம் விவரம் சேகரிச்சுருக்கீங்க.." என்று சிரித்தான் சசிசேகரன்.

"நான் எங்கப்பா சேகரிச்சேன்! எல்லாம் தங்கசாமி.. சார் சொன்னதுதான்" என்றார்.

"நானும் முதன்மைக் கல்வி அலுவலர்கிட்டே எல்லா விவரமும் கேட்டேன். அவரும் அதையேதான் சொன்னாரு..." என்றான்.

"அப்ப சரி..! நம்ம கொடிமலருக்கு அப்பாயின்ட்மென்ட் குடுத்தரலாமா?" என்றார் நடேசன்.

"மாமா! அவசரப்பட வேண்டாம்! இண்டர்வ்யூவுக்கு நாள் குறிங்க! எனக்குத் தெரிந்த ரிடையர்ட் ஹெட் மாஸ்டர்ஸ் ரெண்டு பேர் இருக்காங்க..! அவங்களை வரச் சொல்லி.. இண்டர்வ்யூ வச்சிடுவோம்" என்றான்.

"தம்பி!" என்றார் நடேசன் கேள்விக் குறியாக.

"ஆமாங்க மாமா! பள்ளிக் கூடம் நம்முளுதுதான். சி.யி.ஒ. சொல்றாரு! செக்ரட்டரிக்குத்தான் ஃபுல் பவர்ன்னு! இருந்தாலும் நமக்கு வேண்டியவங்களுக்குக் குடுத்துட்டோம்னு யாரும் நினைக்கக் கூடாதில்லே.." என்றான்.

நடேசன் உண்மையாகவே மலைத்துத்தான் போனார்.

"ஆமா.. தம்பி! அது நல்லதுதான்! நான் இப்படி யோசிக்கவே இல்லை பாருங்க" என்றார்.

சசிசேகரன் உள்ளுக்குள் சிரித்துக் கொண்டான். அடுத்த வாரத்தில் இண்டர்வ்யூ முடிவு செய்தார்கள்!

அன்றைக்கு!

பள்ளிக் கூடத்துக்குப் போய் விட்டு வந்து கொண்டிருந்தான் சசிசேகரன்.

தினமும் பத்து மணி வாக்கில் பள்ளிக்குப் போய் அரை மணி நேரம் இருந்து விட்டு கையெழுத்துப் போட

வேண்டிய விஷயங்களுக்குக் கையெழுத்துப் போட்டுக் கொடுத்து விட்டு முக்கிய விஷயங்கள் ஏதாவது இருந்தால் அது குறித்துப் பேசி விட்டு வருவான்.

கடந்த இரண்டு நாட்களாக மதுரவாணி அவன் கண்ணில் படவில்லை!

வேண்டுமென்றே தான் வருகிற நேரத்தைத் தவிர்க்கிறாளோ என்று தோன்றியது!

மனதுக்குள் சிரித்துக் கொண்டான்.

ஆரம்ப கட்ட அதிர்ச்சி சரியாகட்டும்! யோசிப்பாள்! யோசித்து தனக்கு சாதகமாகத்தான் முடிவெடுப்பாள் என்ற நம்பிக்கை இருந்தது.

இன்றைக்கு சரியாக அவன் வருகிற நேரத்துக்கே வந்தாள்.

வழக்கம் போல் வணக்கம் சொன்னாள்! ஆனால் இன்றைக்கு என்னவோ அவள் முகத்தில் ஒரு தர்ம சங்கடம் நிலவியது.

சசிசேகரன் தான் அப்படியொரு விஷயத்தை அவளிடம் பேசியவன் போலவே இல்லாமல் மிகவும் சாதாரணமாக வணக்கம் சொன்னான்.

''மதுரா! இன்றைக்கு ஏதாவது ஒரு நேரம் கொஞ்சம் என் ஆபீஸுக்கு வர முடியுமா? உங்க சிஸ்டர் விஷயமாக் கொஞ்சம் பேசணும்'' என்றான்.

அவள் மடமடவென்று தலையை உருட்டுவதைப் பார்த்துச் சிரித்துக் கொண்டான்.

வந்தாள்!

பள்ளிக் கூடத்தில் காய்கறிகளைக் கொடுத்து விட்டு வெக்கு வெக்கென்று வந்தாள்.



''உட்காருங்க!'' என்றான்.

ஆட்களிடம் சொல்லி இளநீர் கொண்டு வந்து கொடுக்கச் சொன்னான்.

கொடுத்தார்கள்!

''மதுரா..!'' என்றான் வழக்கம் போல அன்பு தேக்கிய குரலில்.

அவள் முகம் லேசாகச் சிவக்க அவனைப் பார்த்தாள். சசிசேகரன் தொடர்ந்து சொன்னான்.

''மதுரா! கொடிமலர் அப்பாயின்டமென்ட் விஷயமா.. உங்ககிட்டே பேசணும்!'' என்றான்.

''ம்..!'' என்றாள் பவ்யமாக அமர்ந்திருந்தாள்.

''நான் நடேசன் மாமாகிட்டே ஸ்ட்ரிக்ட்டாச் சொல்லிட்டேன்! இண்டர்வ்யூ வச்சுத்தான் செலக்ட் செய்யணும்னு..'' என்றான்.

''நீங்க எது செஞ்சாலும் நியாயமாத்தான் இருக்கும்'' என்றாள்.

ஒரு கணம் அவள் கண்களில் குறும்பு மின்னியது.

''தேங்க்ஸ்! என் மேல நம்பிக்கை வச்சதுக்கு ரொம்பத் தேங்க்ஸ்! அதே மாதிரி கொடி மலரையும் 'தரோ'வா வரச் சொல்லுங்க! ஏன்னா, இது குழந்தைங்களோட வாழ்க்கைப் பிரச்னை! நல்லா பாடம் சொல்லிக் குடுக்கற ஒரு டீச்சரை அவங்க வாழ்நாள் முழுக்க மறக்க மாட்டாங்க! அதே போல மோசமான ஒரு டீச்சரையும் அவங்க மறக்க மாட்டாங்க! ஒவ்வொரு குழந்தையும் ஒரு பொக்கிஷம் மாதிரி! அதுலயும் பெண்கள்! குடும்பத்தை உருவாக்கப் போறவங்க..! அதனால டீச்சர்ஸ் ஆர்வம் உள்ளவங்களா இருக்கணும். அதான்! தெரிஞ்சவங்க. உறவுக்காரங்கனெல்

லாம் போஸ்ட் குடுத்துட்டு நாளைக்கு பள்ளிக் கூடத்தோட 'குவாலிட்டி' போயிரக் கூடாது'' என்றான்.

அவள் அவன் பேசுவதைக் கேட்பதில் ஆழ்ந்து போனாள்.

"ஆமா! வாட் யு ஆர் சேயிங் இஸ் வெரி கரெக்ட்'' என்றாள்.

''அதான்! கொடிமலர் இதை வெறும் வேலையா மட்டும் நினைக்கறாங்களா? இல்லே..!''

"இல்லல்லே.. அவளுக்கு டீச்சிங்ல ரொம்ப ஆர்வம்! இந்தத் தொழில்ல மட்டும்தான் மொட்டு மொட்டா இருக்கற குழந்தைகளோட நாம இருக்கோம். வி ஆர் நாட் டீலிங் வித் லெட்ஜர்ஸ் வி ஆர் டீலிங் வித் ஹ்யூமன் மைண்ட்ஸ். அப்படீம்பா'' என்றாள்.

''தட்ஸ் குட்..! அப்படியொரு ஆட்டிட்யூட்தான் நான் எதிர்பார்க்கறேன்'' என்றான். பிறகு ஒரு நிமிடம் அவள் முகத்தை ஆழ்ந்து பார்த்தான்.

அவன் பார்வையைக் கண்டு அவள் கண்கள் படபடத்துக் கொண்டன. தங்கள் விஷயம் பற்றி ஏதாவது கேட்பானோ என்று நினைத்தாள்! ஆனால் அவன் அதைப் பற்றிப் பேசவில்லை! மேலும் தொடர்ந்து.

''அதான்.. மதுரா..! அதைப் பத்திச் சொல்லத்தான் கூப்பிட்டேன்! கொடிமலர் செலக்ஷன் என் கையில இல்லே! அவங்க கையிலதான் இருக்கு. அவங்க சொல்லப் போற பதில்கள்ல இருக்கு! ஒருவேளை கொடிமலர் செலக்ட் ஆகலேன்னா.. அதுக்கான காரணம்.. அவங்களாத்தான் இருக்கும்.. அதை அதை.. நீ.. நீங்க.. புரிஞ்சுக்கணும்.. ஓ.கே. வா?'' என்றான்.

மதுரவாணி. தலையாட்டினாள். அவன் இப்படி வெளிப்படையாகப் பேசியது அவளுக்குப் பிடித்திருந்தது. அது



மட்டுமல்லாமல் தனக்கு விளக்கம் சொல்வதற்கான காரணமும் புரிந்தது.

''நான்... நான் போகணும்..'' என்றாள்.

''ம்..! மதுரா.. யாரு உங்களுக்கு இந்தப் பேரு செலக்ட் செஞ்சது..'' என்று கேட்டான்.

''எங்க அப்பா!'' என்றாள்.

''மதுரவாணிங்கற பேர்ல.. நாயக்கர்கள் காலத்துல ஒரு பெண் கவிஞர் இருந்துருக்காங்களாம். நான் எதுலயோ.. படிச்சேன்.. நீங்க கவிதை எழுதுவீங்களா?'' என்றான்.

''ம்ஹூம்! ஆனா.. நல்ல கவிதைகளை ரசிப்பேன்'' என்றாள். அவன் முகம் பார்க்காமலேயே!

''ஆமா! கவிதையே கவிதை எழுதணுமா என்ன?'' என்றான். சிரித்தான்.

அவள் குரல் தடுமாறச் சொன்னாள். ''நீங்க நினைக்கற அளவுக்கெல்லாம் பெரிய தகுதியெல்லாம்.. இல்லே..!'' என்றாள்.

அவன் புன்னகைத்தான் ''ம்.. அப்படியா?'' என்றான்.

அவள் ஒரு விதமான படபடப்புடன் எழுந்தாள். ''நான் புறப்படறேன்'' என்றாள்.

''ஆமா! புறப்படுங்க!'' என்றான் ஒரு விதமான குரலில்.

உள்ளறைக்குச் சென்று சன்னலோரமாக நின்று அவள் பார்வையிலிருந்து மறையும் வரை பார்த்துக் கொண்டு நின்றான்.

வயல் வரப்புக்களுக்கிடையே நடக்கையில் அவன் மனதில் ஒரு விஷயம் திரும்பத் திரும்ப ஓடிக் கொண்டே இருந்தது!

உயிலைப் பற்றி மாலினி எழுப்பிய சந்தேகம் நடேசன் எழுப்பிய கேள்விகள் என்று.

இரண்டு மாதங்கள் அமைதியாக இருந்தான்! ஏனென்றால் ''இனிமேல் சசிசேகரன் பெரிதாகத் தலையிட மாட்டான்'' என்ற நினைப்போடு கிருபாகரன் மெதுவாக இயல்புக்கு வருவார். கொஞ்சம் அலட்சியம் கூடத் தென்படும். அந்தக் கால கட்டத்தில் தன் ஆட்டத்தை ஆரம்பிக்க வேண்டும் என்று.

யோசிக்க ஆரம்பித்தான்!

உணவு இடைவேளை நேரத்தில் குணசேகரனை அழைத்தான்.

''டேய்! குணா.. நான் சொல்ற விஷயத்தை நல்லா கவனிச்சுக்க..!'' என்று சில ஆணைகள் இட்டான்.

''சரிண்ணா! சரிண்ணா!'' என்று அண்ணனின் ஆணைகளை சிரமேற் கொண்டு நிறைவேற்ற அவன் தயாரானான்.

அதே போல மாலினியுடனும் பேசினான். அதன் பிறகு சித்தியிடமும் பேசினான். சித்தியும் ஆழமாகக் கேட்டுக் கொண்டார்.

ஆனால் அத்தனை பேச்சுக்கும் நேர் மாறாக அடுத்த வாரத்தில் அந்த நோட்டீஸ் வந்து சேர்ந்தபோது கிருபாகரன் திகைத்துப் போனார்.

''சொத்தில் தனக்கும் பங்கு இருக்கிறது'' என்று வக்கீல் நோட்டீஸ் விட்டிருந்தான் சசிசேகரன்.

தான் நினைத்தது போல சசிசேகரன் அமைதியாக இருந்து விட மாட்டான் என்பது புரிய அடுத்துத் தான் செய்ய வேண்டியது என்ன என்று யோசிக்க ஆரம்பித்தார்.



நேராக மங்களத்திடம் போனார்!

''பாத்தீங்களாம்மா! சொந்த மகனாட்டம் வளர்த்தீங்க! ஆனா.. இன்னைக்கு சொத்துக்காக நோட்டீஸ் விட்டிருக்காரு..'' என்றார்.

''ஆமா.. பாருங்க! நான்தான் சொத்தையெல்லாம் நீயே வச்சுக்க..! நீ பாத்து எங்களுக்குக் குடுக்கறதைக் குடுன்னு.. சொல்லிட்டனே'' என்றார் மங்களத்தம்மாள்.

''அதாம்மா..! பாருங்க..! எவ்வளவு நன்றிகெட்டத் தனம். ஆனா.. என்னைப் பாருங்க! நான் அசலார் அன்னியன், ஆனா உங்களுக்காக உங்களுக்கு இந்த சொத்து கிடைக்கறதுக்காக என்ன பாடு பட்டிருக்கேன்னு உங்களுக்குத் தெரியாது. எவ்வளவு தூரம் அய்யாகிட்டே பேசினேன். என்னென்ன வேலை செஞ்சிருக்கேனு தெரியாது.''

''சொன்னாத்தானே தெரியும்!''

''எல்லாம்.. எதுக்காக! இனிமே அசலா அன்னியமா நாம இருக்க வேண்டாம். எப்படியும் ஒண்ணுக்குள்ள ஒண்ணா ஆயிடுவோம்கற நம்பிக்கைதான். என் நம்பிக்கை வீண் போகலே.''

மங்களம் கேள்விக்குறியாகப் பார்த்தார்.

''என் பையன்... அவ்வளவு சீக்கிரம் யாருகிட்டயும் பழகாதவன்.. உங்க பொண்ணுகிட்ட நல்லாப் பழகறான். ரெண்டு பேருக்கும் பிடிச்சுப் போச்சுன்னா.. என் கனவெல்லாம் நிறைவேறிடும். அந்த நாளைத்தான் நான் எதிர்பார்க்கறேன். அதுக்கப்புறம் சசிசேகரன் என்ன.. எந்தக் கொம்பனாலயும் நம்மளை ஒண்ணும் செய்ய முடியாது'' என்றார்.

மங்களம் அமைதியாகக் கேட்டுக் கொண்டார். பிறகு சொன்னார்.

"இறைவன் சித்தம்.. எப்படியோ.. அப்படி நடக்கும்!" என்று.

"அம்மா! அதெல்லாம்.. சும்மா! இறைவன் எங்க வந்து எல்லாத்தையும் நடத்தறான்! நாம ஏற்பாடு செஞ்சா.. இறைவன் சிக்கலில்லாம நடத்தி வேண்ணாக் குடுப் பாரு..! அவ்வளவுதான்!"

"என்னமோ நம்பினவங்க எல்லாரும் கை விட்டுட் டாங்க! ஆனா எதிர்பாராத இடத்துல இருந்து உதவி வருது" என்றார் மங்களம்.

கிருபாகரன் குளிர்ந்து போனார்.

அன்றிரவு சந்தோஷத்தைக் கொண்டாட கொஞ்சம் அதிகமாகவே மது அருந்தினார். தனது அறைவாசலில் நிழலாட யாரென்று பார்த்தார்!

அழகேசன் நின்று கொண்டிருந்தான்.

"வாடா! வா! நீயென்னவோ லட்சியம் கிட்சியம்னு பேசினாலும் உங்கப்பன் உனக்காக என்னென்ன செஞ் சிருக்கேன்னு தெரியாது. நீ மட்டும் அந்த மாலினிப் பொண்ணைக் கணக்குப் பண்ணிட்டின்னா.. நான் பட்ட பாட்டுக்கெல்லாம் பலனிருக்கும்' என்று குழறலாக உளறவும் அழகேசன் உள்ளே வந்து அமர்ந்தான்.

"அப்படி என்னப்பா.. நீ எனக்காக வெட்டி முறிச்சே!" என்றான்.

"என்னப்பா இப்படிக் கேட்கறே! லட்டு மாதிரி ஒரு பொண்ணும் சொத்தும் கிடைக்கறதுக்கு வழி பண்ணி யிருக்கேன்" என்று கிருபாகரன் மேலும் பேசப் பேச அழகேசன் அதிர்ந்து போனான்.



14



மதுரவாணியின் மனமெல்லாம் பள்ளிக் கூடத்திலேயே இருந்தது!

இன்றைக்கு கொடிமலருக்கு நேர் காணல்!

"அக்கா! நீயும் வாக்கா! நீ வெளியே இருந்தா எனக்குத் தெம்பா இருக்கும்" என்று மிகவும் கெஞ்சினாள் கொடிமலர்.

"வேண்டாம்.. மலரு! நான் அங்க வந்து நின்னுகிட் டிருந்தேன்னா எனக்கு ரொம்ப டென்ஷனாகும். ஏதோ வர்றவங்ககிட்டே சிபாரிசு பிடிக்க நிக்கறதாய் பேசுவாங்க! ஒண்ணு சொல்றேன் தெரிஞ்சுக்கோ சசி சார் கிளியரா சொல்லிட்டார். உங்க சிஸ்டர் கேள்விக்கு பதில் சொல்றதைப் பொறுத்துத்தான்னு. நீ தரோவா போ! நல்லா பதில் சொல்லு! மத்ததெல்லாம் ஆண்டவன் பொறுப் பில..!" என்றாள்.

நீ வரக் கூடாது என்றெல்லாம் சசிசேகரன் சொல்ல வில்லை. ஆனாலும் அவளுக்கு என்னவோ சசிசேகரன் நற்பெயர்தான் முக்கியமாகப் பட்டது.

கொடிமலர் கொஞ்சம் மனத்தாங்கலுடன்தான் புறப் பட்டாள். மதுரவாணி அவள் புறப்படும்போது சாமி படத்துக்கு தீபாராதனை காட்டி நெற்றியில் விபூதி வைத்து ஆசீர்வாதம் செய்தாள்.

மனதை மாற்றிக் கொண்டவள் போல் "வாடி! நான் பள்ளிக்கூடம் வரைக்கும் வரேன். ஆனா விட்டுட்டு உடனே வந்துடுவேன்" என்றாள்.

"சரி!" என்றாள் கொடிமலர்.

பள்ளிக் கூடத்தில் தங்கையை ஹெட்மாஸ்டரின் அறைக்கு முன் உள்ள இடத்தில் சேரில் அமர வைத்து விட்டுப் புறப்பட்டாள்!

மருந்துக் கடைக்கு வந்து விட்டாள். ஆனால் மனமெல்லாம் அங்கேயே இருந்தது.

தங்கை சரியாக பதில் சொல்ல வேண்டுமே என்றிருந்தது.

அதே நேரம்!

கொடிமலர் தெளிவாகவே பதில் சொன்னாள். இரண்டு தலைமையாசிரியர்களும் தங்கள் கேள்விகளை முடித்ததற்குப் பின்பு சசிசேகரனும் பொது அறிவு சம்பந்தமாக சில கேள்விகள் கேட்டான். அதற்கும் சரியாகவே விடை சொன்னாள்.

சற்று நேரம் வெளியே இருக்கச் சொன்னார்கள். அமர்ந்திருந்தாள்.

மீண்டும் அவர்கள் அழைத்தவுடன் போனாள்.

''சரிம்மா! வெள்ளிக்கிழமை நாள் நல்லா இருக்காம்..! சேர்ந்துக்கறீங்களா?'' என்றார் ஒரு தலைமையாசிரியர்.

''சரிங்க.. சார்!'' என்றாள்.

மகிழ்ச்சியுடன் வீட்டுக்குப் புறப்பட்டாள். அந்தப் பள்ளிக் கூடத்தில் சேர்ந்ததற்குப் பின் அவள் சந்திக்க வேண்டிய சோதனைகளைப் பற்றி எதுவும் தெரியாமல்.

* * *

''ஹலோ!'' என்று உற்சாகமாக வரவேற்றாள் மாலினி.

''ஹலோ!'' என்று பதிலுக்கு உற்சாகமானான் அழகேசன்.

இரண்டு பேரும் வாயெல்லாம் பல்லாகப் பேசிக் கொள்வதை ஒருவித வருத்தத்துடன் அறையில் இருந்து பார்த்துக் கொண்டிருந்தார் சிவஞானம்.

அதே நேரம்!



மங்களம் தனது அறையில் இருந்து வெளியே வந்தார். அவரும் இதைப் பார்த்தார். ஆனால் எதுவும் சொல்லவில்லை!

''அம்மா!'' என்று திரும்பினாள் மகள்.

''என்னம்மா!''

''அம்மா! நான் அழகேசனோட கொஞ்சம் வெளியே போயிட்டு வரேன்'' என்றாள்.

''எதுல போறீங்க?'' என்றார் மங்களம்.

''கார்லதான்'' என்றாள் மாலினி.

அதே நேரம்!

கிருபாகரனும் வந்தார். தன்னுடைய காரில் ஏறுவதற்குக் கூட மறுக்கும் மகன் மறுப்பேதும் சொல்லாமல் மாலினியின் காரில் ஏறிப் போவதை ஒருவித பரவசத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார் கிருபாகரன்.

''ஆஹா! நாம் நினைத்த பாதையிலேதான் விஷயங்கள் போய்க் கொண்டிருக்கிறது'' என்ற பூரிப்பு மனதில் நிறைந்திருந்தது.

கார் போகிற பாதையைப் பார்த்தபடி நினறிருந்தவர் திரும்பினார்.

''அம்மா! இன்னைக்குப் பண்ணைப் பக்கம் போலாம்னு இருக்கேன். நீங்க வர்றீங்களா?'' என்றார்.

''நான் வர்லே! சிவஞானம் அண்ணாவைக் கூட்டிட்டுப் போங்க'' என்றார் மங்களம்.

''அம்மா! நான் வரேன்..! நீயும் கூட வாயேன்'' என்றார் சிவஞானம்.

மங்களமும் புறப்பட்டார்!

''அந்த சொத்தை அப்படிச் செய்ய வேண்டும்! இந்த சொத்தை இப்படிச் செய்ய வேண்டும்'' என்று கிருபாகரன்

கற்பனையிலேயே கோட்டை கட்ட மங்களமும், சிவஞான மும் குறுக்கிடாமல் கேட்டுக் கொண்டு வந்தார்கள்.

கொஞ்ச நேரத்திலேயே தான் மட்டும்தான் பேசிக் கொண்டிருக்கிறோம் என்பதை உணர்ந்த கிருபாகரன் அமைதியாகி விட்டார்.

கார் பாதையில் வேகமெடுத்தது!

* * *

''மாலினி'' என்றான் அழகேசன்.

இருவரும் ஒரு ஹோட்டலில் அமர்ந்திருந்தார்கள்.

''ம்..!'' என்றாள் மாலினி.

''என்ன வேணும்?'' என்றான் அழகேசன்.

''அழகேசன்! இன்னைக்கு உங்களுக்கு என்னோட ட்ரீட்!'' என்றாள் மாலினி.

''ஓ.கே.!'' என்றான் அழகேசன். பெரிதாக ஏதும் மறுக்கவில்லை.

இருவருக்கும் தேவையானவற்றை ஆர்டர் செய்து விட்டுத் திரும்பிய மாலினி கேட்டாள்.

''உங்க தாத்தா காலத்துல ரொம்ப வசதியான குடும் பமோ?'' என்று.

''ஆமா! ரொம்ப வசதியான குடும்பம்! எங்க தாத்தா பெரிய வக்கீல் அவர் பாத்து ஒரு கேஸை எடுத்துக்கிட்டா அந்தக் கேஸ் ஜெயிச்சாச்சுன்னு அர்த்தம். எங்க தாத்தா வுக்கும் உங்க தாத்தாவுக்கும் ரொம்பப் பழக்கம். அந்தத் தொடர்புக்குத்தான் உங்கப்பா எங்கப்பாவை லாயரா வச்சுகிட்டது'' என்றான் அழகேசன்.

''அதெல்லாம்.. சரிதான்! ஆனா, எங்க வீட்டு உயில் தான் எனக்குப் புரிபடவே மாட்டேங்குது.''



''அதை விடுங்க மாலினி! எங்கப்பாவுக்கு ஒரு ஆசை! நானும், நீங்களும் வாழ்க்கையில ஒண்ணு சேரணுமாம்'' என்று.

மாலினி அமைதியானாள். ஒரு நிமிடம் ஒன்றும் பேச வில்லை.

பிறகு கேட்டாள்.

''நீங்க என்ன நினைக்கறீங்க'' என்று.

''நான் இப்போதைக்கு ஒண்ணும் நினைக்கலே. நீங்க என்ன சொல்றீங்கங்கறதைப் பொறுத்துத்தான்'' என்றான்.

மாலினி யோசித்தாள்.

''நோன் டெவில் இஸ் பெட்டர் தேன் அன்நோன் டெவில்ன்னு சொல்லுவாங்க! யோசிப்போம்'' என்றாள்.

''நானும் அந்த நிலைமையிலதான் இருக்கேன்..'' என்றான் அழகேசன்.

''பொதுவா.. நீங்க உங்க அப்பாவோட சொத்தை விரும்பறதில்லைன்னு கேள்விப்பட்டேன்.''

''ஆமா! அது வேற விஷயம்! வாழ்க்கைத் துணைங் கறது வேற விஷயம்..! ஒரு முடிவுன்னு எடுக்கற வரைக்கும் நாம ஏன் நண்பர்களா இருக்கக் கூடாது'' என்றான் அழகேசன்.

''தாராளமா! வாழ்க்கைத் துணையாவே ஆகறதைப் பத்திக் கூட யோசிக்கலாம். ஆனா, அதுக்கு சில நிபந்தனை கள் இருக்கு..'' என்றாள்.

''நிபந்தனைகளா?'' என்று சிரித்தான் அழகேசன்.

''நேரம்தான்! ஆம்பளைங்க நிபந்தனைகள் விதிக்கறது போய் லேடீஸ் நிபந்தனைகள் விதிக்க ஆரம்பிச்சுட்டீங்க.. இல்லியா?''

''ஆமா! பின்னே! சொத்தோட வரப்போறேன் இல்லே!'' என்றாள்.

அழகேசன் சிரித்தான்.

''சரி முதல் நிபந்தனையைச் சொல்லுங்க.''

மாலினி சொன்னாள்.

''நான் எங்க கூப்பிட்டாலும் ஏன் எதுக்குன்னு கேட்காம வரணும்! ஃபார் எக்ஸாம்பிள் இப்ப நான் ஒரு இடத்துக்குக் கூட்டிட்டுப் போறேன் வரணும்'' என்றாள்.

''வர்றேன்'' என்றான்.

போனார்கள்!

போன இடத்தில் அவர்களுக்காக ஒருவர் காத்துக் கொண்டிருந்தார். இன்னாரென்று மாலினி அறிமுகம் செய்தவுடன் அழகேசன் கொஞ்சம் திணறித்தான் போனான். ஆனால் வெகு எளிதாக ஒட்டிக் கொண்டான்.

வந்தவர் அழகேசனிடம் விஷயம் கறப்பதை ஒருவித சிரிப்புடன் பார்த்துக் கொண்டிருந்தாள் மாலினி.

* * *

மதுரவாணி தனது வழக்கமான வேக நடையில் வருவதை முன் ஹாலில் இருந்தபடி ஒரு சேரில் அமர்ந்த படி பார்த்துக் கொண்டிருந்தான சசிசேகரன்.

''வணக்கம்.. சார்!'' என்றாள் மதுரவாணி.

''வணக்கம்!'' என்றான் சசிசேகரன்.

''ரொம்பத் தாங்க்ஸ்!'' என்றாள் மதுரவாணி.

''மதுரா..! எனக்கு எதுக்கு தேங்க்ஸ் சொல்றீங்க? நான்தான் முதல்லயே சொன்னேனே.. வேலை கிடைக் கறதும் கிடைக்காமல் போறதும் கொடிமலரோட திறமை அல்லது திறமையின்மையைப் பொறுத்துத்தான்னு.''



''இருக்கலாம்.. சார்! இருந்தாலும் வேலைன்னு ஒண்ணு கொடுத்தீங்களே'' என்றாள்.

''ஓ.. கே! ஓ.கே.! உட்காருங்க'' என்றான்.

''இல்ல சார்! நிக்கறேன்!''

''ஹலோ.. இந்த ஃபார்மாலிட்டீஸ் எல்லாம் எனக்குப் பிடிக்காது.'' எனவும் அமர்ந்தாள்.

''எங்கே.. மாதையனைக் காணோம்'' என்று உள்ளே எழுந்து போனான்.

மாதையனிடம் ஏதோ சொல்லி விட்டு வந்தான். பிறகு மதுரவாணியை பார்த்து சிரித்தான்.

மாதையன் அதற்குள் ஸ்வீட், காரம் என்று கொண்டு வந்து வைத்தார்.

''நியாயத்துக்கு நீங்கதான் ட்ரீட் குடுக்கணும். நாங்க குடுக்கறோம். சாப்பிடுங்க'' என்றான்.

அவள் முகம் சிவந்து போனது.

''கண்டிப்பா.. ஸ்வீட் தரேன்! கொடிமலரும் வரேன்னு சொன்னா. அதுக்குள்ளே நான் நன்றி சொல்லிட்டுப் போலாம்னு..''

''ஓ..கே.! ஓ.கே.! நீங்க ட்ரீட் தரும்போது அது கடையில வாங்கின ஸ்வீட்டா இருக்கக் கூடாது. உங்க கையால ஏதும் செஞ்சு கொண்டு வாங்க'' என்றான்.

''சரிங்க சார்!'' என்றாள். ''சார்! நீங்க செஞ்சிருக்கிறது பெரிய உதவி! அதுக்கு எப்படி நன்றி சொல்றதுன்னே தெரியலே!''

''ஏன்.. நன்றி.. தாராளமா சொல்லலாமே!'' என்று சொல்லும்போதே மாதையன் காபி கொண்டு வந்தார்.

சசிசேகரன் ஒரு குறும்புப் பார்வையுடன் சொன்னான்.

''நான் சொல்லப் போற விதத்துல கூட நன்றி செலுத்தலாம். பாருங்க! மாதையன் வாரத்துல ஒரு நாள் ஞாயிற்றுக்கிழமை லீவு கேட்கறாரு. உங்களுக்கும் லீவுதான். நீங்க அன்னைக்கு மட்டும் சமைச்சுக் கொண்டு வரலாம்'' என்றான்.

மாதையன் விசித்திரமாகப் பார்ப்பதைக் கண்ட சசிசேகரன் கண்ணாலயே எச்சரித்தான்.

''ஏங்க.. மாதையன்!'' என்று கேட்க,

''அ.. ஆமாம்..'' என்றார் அவர்.

''தாராளமா!'' என்றாள் மதுரவாணி பொங்கிய மகிழ்ச்சியுடன்.

மாதையன் திணறலாகப் பார்த்து விட்டுக் கொண்டு வந்த காபியை டீபாயில் வைத்து விட்டு நகர்ந்தார்.

அமைதியாக காபி சாப்பிட்டார்கள். அந்த அமைதி தாளாதவள் போல நிமிர்ந்து அவன் முகம் பார்த்தாள்.

அவன் சட்டென்று பார்வையைத் திருப்பிக் கொண்டான்.

சற்று நேரம் பொதுப்படையாகப் பேசிவிட்டு விடை பெற்றுக் கொண்டான்.

புறப்பட யத்தனித்த அவளை அவன் குரல் ''ஒரு நிமிடம்.. மதுரா..'' என்று தடுத்து நிறுத்தியது.

நின்றாள்.

''அன்றைக்கு நான் கேட்டதுக்கும், கொடிமலர் அப்பாயின்ட்மென்ட்டுக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது. அதே போல கொடிமலர் சரியாச் செய்யலைன்னா வெளிய அனுப்பவும் தயங்க மாட்டோம்'' என்றான்.

''சரிங்க சார்!'' என்றாள்.



சீரான வேகத்தில் அவள் நடப்பதைப் பார்த்துக் கொண்டிருந்தவன் முகத்தில் ஒரு புன்னகை படர்கையில் மாதையன் வந்து.

''அய்யா! ஞாயிற்றுக்கிழமை லீவு வேணும்னு நான் சொல்லலே!'' என்றார்.

''வெளிய, கிளிய போயிட்டு வாங்க! இப்ப என்ன ஒரு நேர சாப்பாடுதானே அவங்க கொண்டு வராங்க! நடேச மாமாவுக்கும் சந்தோஷமா இருக்கும்'' என்றான்.

மாதையன் தலையை ஆட்டிக் கொண்டு உள்ளே போவதை ஆழமாகப் பார்த்தான்.

தன்னைக் குறித்தே சிரிப்பு வந்தது.

''எப்படியோ.. ஞாயிற்றுக்கிழமையும் ஆளைப் பாக்கறதுக்கு வழி பண்ணிகிட்டே!'' என்று மனது கெக்கலி கொட்டியது. ஆனாலும் உள்ளூர ஒரு யோசனையும் ஓடியது.

ஒரு பதிலும் சொல்லாமலே இருக்கறாளே! அழுத்தக்காரியாக இருப்பாளோ என்று. இருக்கட்டுமே! எல்லா அழுத்தத்தையும் மாற்றுவதற்குத் தனக்கும் தெரியும் என்று எண்ணிக் கொண்டான்.

அதே நேரம்!

மனம் நிறைய மகிழ்ச்சியுடன் நடந்து கொண்டிருந்தாள் மதுரவாணி.

''ரொம்பவும் நாகரீகமானவர் சசி சார்! அன்றைக்கு அப்படிக் கேட்டதோடு சரி அதற்குப் பிறகு அதை நினைவு படுத்தவே இல்லை. தானாக பதில் சொல்லட்டும் என்று காத்துக் கொண்டிருக்கிறார். ஆனால் எனக்கோ முடிக்க வேண்டிய விஷயங்கள் நிறைய இருக்கின்றன. அதற்கு முன்னால சம்மதம் சொல்வதில் சிக்கல்கள்

இருக்கின்றன. சொல்லாமல் இருப்பதிலும் சிக்கல்கள் இருக்கின்றன. ஆண்டவன்தான் வழிகாட்ட வேண்டும்'' என்று எண்ணிக் கொண்டாள்.

பெருமூச்சு விட்டபடி வீட்டை அடைந்தாள். வீட்டுக்கு முன்னால் ஒரு ஜோடி பெரிய செருப்புகளும் இருந்தன. நடேச மாமாவின் செருப்பும் இருந்தது.

'யாரோ விருந்தாளி போலும்' என்று இயல்பாக என்றெண்ணிக் கொண்டு உள்ளே நுழைந்தாள்..!

அதிர்ந்து போனாள்!

யாரிடமிருந்து தப்பித்துக் கொண்டு நிம்மதியைத் தேடிக் கொள்ள வேண்டுமென்று இங்கே ஓடி ஒளிந்து கொண்டிருந்தாளோ.. அதே ஆள் விடுவேனா என்று இங்கேயும் வந்து 'திண்' என்று சேரில் அமர்ந்திருந்தார்.

கருப்பண்ணனை வெறித்துப் பார்த்தபடி நிலைக்கருகி லேயே வாயடைத்தாற் போல நின்றாள் மதுரவாணி.

# 15



''ஏம்மா! நான் என்ன அவ்வளவு கொடுமைக்காரனா? நீங்க இப்படி பயந்து கிட்டு ஓடிவா்ற அளவுக்கு என்ன நடந்து போச்சு?'' என்றார் கருப்பண்ணன் தேனொழுக.

மதுரவாணி இப்படியொரு திருப்பத்தை எதிர்பார்க்காத தாலோ என்னவோ என்ன பதில் சொல்வதென்று தெரி யாமல் விழிக்கையில் நடேசன் உதவிக்கு வந்தார்.

''இல்லல்லே! நான்தான் வற்புறுத்திக் கூப்பிட்டேன். ரெண்டு பேரும் அங்க தனியா இருந்து என்ன செய்யறீங்க! எனக்கும் பொண்ணு மேலயே ஞாபகமா இருக்கு.! நீங்க



இங்க வந்தீங்கன்னா நல்லா இருக்கும்னு வற்புறுத்திக் கூப்பிட்டேன். இப்பப் பாருங்க! இவுங்க ரெண்டு பேரும் இங்க வரவும் நம்ம வூட்டம்மா ரொம்ப சந்தோஷமா இருக்காங்க..!'' என்றார்.

கருப்பண்ணனுக்கும் பேசுவதற்கு எதுவும் இருக்க வில்லை.

''சரி.. சரி..! புறப்படுங்க!'' என்றார்.

''எங்கே..!'' என்று விழித்தாள் மதுரவாணி.

''ஊருக்கு வாம்மா.. சொல்றேன்..!'' என்றார்.

''மாமா..! நாங்க இங்க வேலையில இருக்கோம். அப்படி யெல்லாம்.. வேலைய விட்டுப் போட்டு..!'' என்று இழுத் தார்.

''பொல்லாத வேலை! என்னமோ பிரியப்பட்டு சேர்ந் துட்டீங்க! இருந்தாலும் சொத்து விவகாரம் கொஞ்சம் பேசி முடிச்சுக்கலாம்..! புறப்படுங்கம்மா!''

மதுரவாணி நடேசனை பரிதாபமாகப் பார்த்தாள். நடேசன் கண்களாலேயே அபயம் அளித்தார்.

''கருப்பண்ணன் தம்பி! புள்ளைக ரெண்டும் சந் தோஷமாத்தான் இருக்குதுங்க. இப்ப ஊருக்கு வராட்டி என்ன!''

''இல்லல்லே! வரட்டும்..! அவங்க சொத்து எதெ துன்னு இருக்கோ.. அதையெல்லாம் பிரிச்சுக் குடுத்துட்டு நான் நிம்மதியா என் பொழப்பைப் பாப்பேன் இல்ல!''

''என்னடா.. இது.. சாத்தான் வேதம் ஓதுகிறது'' என்றாற் போல் மதுரவாணி பார்த்துக் கொண்டிருக்க.. நடேசன் சொன்னார்.

''சரி.. அப்படியானா..! நானும் புள்ளைங்களுக்குத் துணையா வாரேன்'' என்றார்.

''நல்லா.. வாங்க! பேஷா.. வாங்க..!'' என்றார் கருப்பண்ணன்.

மதுரவாணி அந்த வார்த்தைக்குப் பிறகு கொஞ்சம் நிம்மதியானாள்.

கொடிமலரும், மதுரவாணியும் நடேசனும் புறப்பட்டார்கள்.

* * *

''அம்மிணி! அந்தப் பொன்னப்பன் ஊர்ப் பெரியவங்க கிட்டே எல்லா விவரத்தையும் சொல்லிட்டான்.. உங்கப்பா.. பெரிய அளவுல ஒண்ணும் கடன் வாங்கலையாம். இருபதாயிரமோ.. இருபத்தஞ்சாயிரமோதான் வாங்கியிருந்தாராம். தெரியாத்தனமா பத்திரத்துல கையெழுத்து வாங்கிட்டேன். இப்ப ஊர்க்காரங்க பேசற பேச்சுத் தாங்கலை.. என்று அழுதிருக்கான்! ஊர்ப் பெரியவங்க தாண்டவராயன் அய்யா இருக்காரில்லே! இருபதாயிரம்தானடா.. நான் வாங்கித் தாரேன்.. கூட அஞ்சாயிரம் வட்டியும் வாங்கித் தாரேன்.. சொத்தைத் திருப்பிக் குடுத்துடு.. அப்படீன்னு சொல்லியிருக்காரு..! பாருங்க.. அதான் எழுதியே குடுத்துட்டான்! இனிமேல் கொண்டு இந்த சொத்துக்கும் எனக்கும் ஒரு சம்பந்தமும் இல்லே.. அப்படீன்னு..! என்று அவர்களது அப்பா எழுதிக் கொடுத்திருந்த எல்லாப் பத்திரத்தையும் கருப்பண்ணன் எடுத்து நீட்ட அவற்றை இறுகிய முகத்துடன் வாங்கி சரி பார்த்துக் கொண்டிருந்தான் சசிசேகரன்.

சசிசேகரன்தான்!

மதுரவாணியும், கொடிமலரும் நடேசனும் கருப்பண்ணனும் பஸ்ஸில் புறப்பட்டு வந்து சேர்ந்தார்கள். தங்கள் கிராமத்துக்கு.



பகலுணவு உறவுக்காரர்கள் வீட்டில் சாப்பிடச் செய்தார்!

''பிற்பகலில் பேச்சு வார்த்தை இருக்கிறது'' என்றார்.

பேச்சு வார்த்தையா என்று மதுரவாணி மலைக்கையிலேயே ஒன்று புரிந்தது.

''ஏதோ நடக்கிறது! யாரோ நமக்காக முயற்சிகள் எடுத்துக் கொள்கிறார்கள் என்று. ஆனால் யாரென்று புரியவில்லை. ஒருவேளை தாண்டவராயன் அய்யாவாக இருக்குமோ என்று எண்ணினாள்.

''கருப்பண்ணன், எங்க பக்கத்துக்கு நாங்க ரெண்டு பேரு..! உங்க பக்கத்துக்கு நீங்க யாரையும் கூப்பிடறதுன்னா கூப்பிட்டுக்குங்க..! என்றார் நடேசன்.

''எங்க பக்கத்துக்குன்னு யாரும் வேண்டாமுங்க! புள்ளைகளுக்கு மாமன் நானு! அப்புறம் எதுக்கு உங்க பக்கம் எங்க பக்கம்னு பிரிச்சுப் பேசோணும்.''

''அதுவும் நல்லதுதான்!'' என்றார் நடேசன். மதுரவாணியின் பூர்வீக வீட்டிலேயே வைத்துப் பேச்சு வார்த்தை நடந்தது!

வீட்டுக்குள் நுழைந்ததுமே மதுரவாணியின் உள்ளத்தில் என்னென்னவோ உணர்வுகள் பொங்கின. தொட்டிக் கட்டு வீடு!

இரண்டு கட்டுக்கள் இருந்தன. பின்னாலே சமையற் கட்டு மட்டுமே ஒரு பகுதி! பார்ப்பதற்கே அழகாக இருக்கும் இணைப்புப் பகுதி!

இரண்டு பக்கமும் செடிகொடிகள் என்று எவ்வளவு பராமரித்து வைத்திருந்தார்கள்! அத்தனையையும் கருப்பண்ணன் நியாயமற்ற முறையில் பிடுங்கிக் கொண்டபோது வருத்தமாகத்தான் இருந்தது. ஆனால் எப்படி நிரூபிப்பது!

மனம் நொந்து பாதுகாப்புக்காக பயந்து ஊர் விட்டுச் சென்ற போது மனம் பட்ட வேதனைகள் எல்லாம் இப்போது நினைவுக்கு வந்தது!

உலகத்தில் நியாயம் நீதிக்கே இடம் இல்லை போலி ருக்குது என்று அன்றைய வருத்தத்திற்கெல்லாம் இன் றைக்குப் பலன் இருக்குது போல இருந்தது.

நம்பவே முடியவில்லை அவளால்!

ஏதோ கனவில் இருப்பது போலத்தான் நடமாடிக் கொண் டிருந்தாள்.

சற்று நேரத்தில் தாண்டவராயன் வந்தார்! தாண்டவ ராயரைக் கண்டவுடன் கருப்பண்ணன் பெட்டிப் பாம்பாக அடங்குவதை மதுரவாணி உள்ளூரக் கிளம்பிய ஒரு மகிழ்ச்சியுடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''அய்யா! நான்தான் அன்றைக்கே சொன்னேனே..! நீங்க என்ன சொல்றீங்களோ அதுபடி செஞ்சுரலாம்னு..'' என்றார் பவ்யமாக.

''சரி.. சரி!'' என்று சிரித்துக் கொண்டார் தாண்டவ ராயன்.

சற்றுக் கழித்து!

ஒரு கார் வந்து நின்றது! அவளுக்குப் பழக்கமான கார்! அதிலிருந்து சசிசேகரன் இறங்கிய போது அவளால் நம்பவே முடியவில்லை.

சட்டென்று புரிந்து போனது!

கருப்பண்ணனின் வருகைக்குப் பின்னாலும் இந்த நிகழ்வுகளுக்குப் பின்னாலும் இருப்பது சசிசேகரன் தான் என்று.

''உனக்காக இத்தனை முயற்சிகள் எடுத்துக் கொண்டிருக் கிறேன்.. மதுரா'' என்று ஒரு வார்த்தை கூடச் சொல்ல வில்லை!'' என்று எண்ணிக் கொண்டாள்.



மனமெல்லாம் நிறைவு நிலைத்திருக்க அவன் முழுமை யாக இந்த நடவடிக்கைகளில் இறங்கி பேச்சு வார்த்தை நடத்துவதை அவள் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''ஆமா! அவங்களுக்கு ஆதரவில்லேன்னு நினைச்சு கிட்டு எதுவும் செஞ்சிடக் கூடாது இல்லே! அதான் தம் பியே தானே நேரடியா வந்திருக்குது'' என்றார் நடேசன்.

வீட்டை அவர்கள் வசமே ஒப்புவித்து விட்டார் கருப் பண்ணன்.

பேச்சு வார்த்தை முடிந்து தாண்டவராயன் வீட்டில் வைத்து அவர்களுக்கு மாலைச் சிற்றுண்டி கொடுத் தார்கள்.

''அம்மிணி! இந்தத் தம்பி பயங்கரமான ஆளு!'' என்று சிரித்தார் தாண்டவராயன்.

''எப்படி... எப்படி.. இது நிகழ்ந்தது'' என்ற கேள்விகளுக் கெல்லாம் அவரிடமிருந்து பதில் கிடைத்தது.

''ஒரு நாள் திடீர்னு போன் பண்ணுச்சு'' என்று ஆரம் பித்தார்.

மதுரவாணி தன்னிடம் நடந்து போன விஷயங்களை யெல்லாம் சொல்லி முடித்த போது அவனுக்கும் அள வற்ற வேதனை பிறந்தது.

கேவலம் சொத்துக்களுக்காக அந்த இரண்டு பெண் களின் வாழ்க்கையையும் பந்தாட நினைத்த அந்தக் கருப்பண்ணனின் மீது அளவற்ற கோபம் வந்தது.

சொத்துக்களின் பறிப்பு மட்டுமில்லாமல் உரிமை இழப் புக்களுக்காகவும் போராடிக் கொண்டிருக்கிற அவனுக்கு அந்தப் போராட்டத்தின் பின்னே இருக்கிற வலி புரிந்தது.

களத்தில் இறங்கினான்! வெறும் அனுதாபம் மட்டும் தானா என்று அவன் மனமே கேலி செய்த போதும் சிரித்துக் கொண்டான்.

தாண்டவராயனிடம் பேசினான்.

"அய்யா.. நான்.." என்று தன்னை அறிமுகப் படுத்திக் கொண்டான்.

"மதுரவாணி மேடம் விஷயமெல்லாம் சொன்னாங்க! கருப்பண்ணனும், அவரோட சன்னும் பேசிகிட்டிருந் ததைக் கேட்டதுல நீங்களும் ஒருத்தர்னு சொன்னாங்க.. தேவைப்பட்டா நீங்க சாட்சி சொல்லுவீங்களா?" என்றான்.

"தாராளமா! அந்த ரெண்டு பொண்ணுங்களும் எங்கே போச்சுங்களோன்னு என்ற கவலையிலே இருந்தேன்! போன மாசம்தான் நடேசனை ஒரு விசேஷத்துல பாத் தப்ப விவரம் சொன்னாரு.." என்றார் தாண்டவராயன்.

தானே நேரில் வந்தான் சசிசேகரன். தனியாக இல்லா மல் நடேசனையும் உடன் அழைத்துக் கொண்டு வந்தான்.

"எங்க ஊர்லதான் பொண்ணுக இருக்காங்க! குல தெய்வத்துக் கோயில்ல வச்சு நீங்க மகனுக்கு சொல்லி கிட்டிருந்த அறிவுரையைக் கேட்டவுங்கள்ல.. தாண்டவ ராயரும்.. ஒருத்தரு.." என்றவுடன் கருப்பண்ணன் சொன்னார்.

"என்ன அறிவுரை சொன்னேன்? உருப்படியா இருடா..ன்னு சொன்னேன்" என்று டபாய்த்தார் கருப் பண்ணன்.

தாண்டவராயன் குறுக்கிட்டார். "வேண்டாம்! கருப் பண்ணா..! நீயும் உன் மகன் ராயப்பனும் பேசினதை முழுசாக் கேட்ட தடித் தாண்டவராயன் இதா குத்துக் கல்லாட்டம் இருக்கேன்..! புள்ளையத் தொட்டுப் போடுடா..! அப்புறம் வேற வழியில்லாமல் கல்யாணத்துக்கு ஒத்துக்கு வாங்கன்னு நீ சொல்லலே..!" என்று கேட்டார்.



கருப்பண்ணன் இதை எதிர்பார்க்கவில்லை. விதிர் விதிர்த்துப் போனார்.

தாண்டவராயன் தொடர்ந்தார்!

"கருப்பண்ணன்! தம்பியை யாருன்னு நினைச்சே! டவுன்ல தெரியுமில்ல.. மருதமுத்து அய்யா! அவரு மகன்! நடேசன்கிட்டே புள்ளைங்க ரெண்டும் அடைக் கலமாப் போயி அவரு பாதுகாப்புல இருக்குதுங்க! நடேசன் போயி தம்பிகிட்டே விவரம் சொல்லித் தம்பியே புறப்பட்டு வந்துருச்சு.." என்றார்.

கருப்பண்ணன் அதற்குப் பிறகும் "ம். அது.. இல்லே.. வந்து.." என்று மழுப்ப முயற்சிக்க தாண்டவராயன் மேலும் ஒரு குண்டைத் தூக்கிப் போட்டார்.

"அது மட்டுமில்ல கருப்பண்ணா! பொன்னப்பனுக்குக் குடுக்க வேண்டிய பூசையெல்லாம் குடுத்து அவன் கிட்டயும் பூரா விஷயமும் கறந்துட்டாங்க! அது மட்டு மில்ல.. பொன்னப்பன் எழுதியே குடுத்துட்டான்."

கருப்பண்ணன் பொறியில் மாட்டிக் கொண்ட எலி போல விழித்தார்.

பொன்னப்பன் எழுதிக் கொடுத்திருந்ததையும் காட்டி னார்கள்.

அப்போதுதான் சசிசேகரன் வாயைத் திறந்தான்.

"சொத்துப் பறிப்பு முயற்சி, கற்பழிப்பு முயற்சி ஃபோர்ஜரி பிளாக்மெயில். இப்படி எத்தனையோ காரணங்களுக்காக கம்ப்ளெயின்ட் குடுக்கறதா இருக்கோம். ராயப்பனும், நீங்களும் வெளியே வர முடியாதபடி கொலை முயற்சி, அது இதுனு கேஸ் போடலாம். முடியும். முடிவு செய்ங்க! நியாயமே இல்லாம அடுத்தவங்க சொத்தைப் பிடுங்கி நிம்மதியாக வாழ முடியுமா? விட்டுடுவோமா?" என்றான்.

சசிசேகரனது அழுத்தமான பேச்சிலிருந்தே கருப் பண்ணனுக்கு ஒன்று புரிந்தது. 'ஆசாமி.. அழுத்தமான ஆள் மட்டுமல்ல..! செயலில் செய்து காட்டக் கூடியவனும்' என்று. இந்த அளவுக்குச் செய்திகளைத் திரட்டிக் கொண்டு தன்னிடத்தில் பேச அமர்ந்ததிலிருந்தே என்ன முயன் றாலும் தான் தப்பித்து விட முடியாது என்று புரிந்தது.

பேசாமல் மடங்கிப் போக வேண்டியதுதான் என்று முடிவெடுத்துக் கொண்டார்.

''நான் அப்பவே பொன்னப்பன் கிட்டே சொன்ன னுங்க! அவன் புரிஞ்சுக்கலே'' என்று பிளேட்டைத் திருப்பிப் போட்டான்.

"இத பாருங்க! கருப்பண்ணன் சார்! நீங்க பொன்னப்ப னுக்கு சொன்னீங்களோ! இல்லே.. பொன்னப்பன் உங்களுக்கு சொன்னாரோ அதெல்லாம் எங்களுக்குத் தேவையில்லே! சொத்தைத் திருப்பிக் குடுங்க! அத விட்டுட்டு கையெழுத்து மதுரவாணியோட அப்பாவதுன்னு நிருபிக்க ட்ரை பண்ணினீன்னா தாராளமா நிருபிங்க! ஆனா அதுக்கப்புறம் நீங்க ஊருக்குள்ள நிம்மதியா இருக்க முடியாத அளவுக்கு என்னென்ன செய்யணும்னு எங்களுக்குத் தெரியும்" என்று மிரட்டவும் கருப்பண்ணன் வழிக்கு வந்தார்.

எல்லாவற்றையும் சொல்லி விட்டு தாண்டவராயன் இடி இடியென்று சிரிக்கவும் மதுரவாணி மெல்ல ஓரக் கண்ணால் சசிசேகரனைப் பார்த்தாள்.

ஒரே ஒரு வினாடி அவன் பார்வை அவள் மீது படிந்து மீண்டது!

சிலிர்த்துப் போனாற் போல உணர்ந்தாள்!

சொத்து அவர்களுடையதுதான் என்று உறுதி செய்து விட்டு மீண்டும் மதுரவாணியின் வீட்டுக்கு வந்தார்கள்.



மதுரவாணி கூடத்தில் நின்று வீட்டைத் தன் கண் களால் அளந்தாள்.

கண்களில் கண்ணீர் பொங்கியது! கொடிமலரும் அதே நிலையில்தான் இருந்தாள். இரண்டு பேரும் கூடத்தில் இருந்த வேலைப்பாடுள்ள மரத்தூணைக் கட்டிக் கொண்டு கண்ணீர் விடுகிற காட்சியை சசிசேகரன் ஆழ்ந்த நெகிழ்ச்சி யுடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

நடேசன் கூட கண்ணில் திரண்ட நீரைச் சுண்டி விட்டுக் கொண்டார்!

சசிசேகரன்தான் முதலில் தேறிக் கொண்டான்.

''ஹல்லோ! இவ்வளவு பெரிய வீட்டைத் திமிங்கலத்து வாயில இருந்து எடுத்த மாதிரி மீட்டுக் கொடுத்திருக் கோம். ட்ரீட் கிரீட் கிடையாதா?'' என்றான்.

மதுரவாணி மெல்லத் தேறிக் கொண்டாள். ''கண் டிப்பா! வர்ற ஞாயிற்றுக்கிழமை நாங்க விருந்து சமைச்சு உங்களுக்குப் பரிமாறுறோம்'' என்றாள்.

"தட்ஸ் குட்! மாமா! வந்தர்லாமா?'' என்று நடேசனைப் பார்த்துச் சிரித்தான்.

''பின்னே?'' என்று அவரும் சிரித்தார்.

வீட்டின் பின்கட்டுப் பகுதியில் அவுட் ஹவுஸ் மாதிரி இந்த பகுதியில் மட்டும் ஏழைப்பட்ட குடும்பங்களைக் குடி வைத்து அவர்கள் இருந்த வீட்டையும் பராமரிக்கப் பேசி ஏற்பாடு செய்தார்கள்.

இடையிலே ஒரு முறை!

சசிசேகரன் நின்று தூணைப் பார்த்துக் கொண்டிருப் பதைக் கண்ட மதுரவாணி ,அருகில் வந்து நின்று,

''சார்! அத்தனையும் தேக்கு மரம்'' என்றாள்.

அவன் திரும்பி ஒருவிதமாகப் பார்த்தான்.

''இல்லே! அதுக்குப் பாக்கலே! இந்த தூணுக்குக் கிடைத்த பாக்கியம் நமக்கு எப்பவோன்னு பாக்கறேன்'' என்றான்.

தூணைக் கட்டிக் கொண்டு அழுததைக் குறிப்பிடு கிறான் எனப் புரியவும் அவள் முகம் சிவந்தது.

ஒரு நிமிடம் திணறினாற் போல நின்று விட்டு ஏதோ அவசர வேலை போல நகர்ந்தாள்.

அவன் பார்வை அவளைத் தொடர்ந்தது.

## 16



''ஜெயராம்.. சார்! என்ன மெத்தட் வேண்ணாலும் யூஸ் பண்ணுங்க! என்ன பாயிண்ட் வேண்ணாலும் பயன் படுத் துங்க. ஆனா, நான் நினைச்சது நடக் கணும்'' என்றான் சசிசேகரன்.

ஜெயராம் சசிசேகரன் புதிதாகப் பிடித்திருந்த வழக் கறிஞர்.

மதுரவாணிக்குக் கிடைக்க வேண்டிய சொத்தைப் பெற்றுக் கொடுத்த பிறகு அடுத்த வாரத்தில் அதே வீட்டில் அவனுக்கும், நடேசன் குடும்பத்திற்குமாக மதுர வாணியும், கொடிமலரும் ஒரு விருந்து கொடுத்தார்கள்.

பூட்டியிருந்த ஒரு அறையைத் திறந்து அந்த வீட்டில் முன்னே பயன்படுத்திக் கொண்டிருந்த மரச் சாமான் களையெல்லாம் வெளியே எடுத்து அதற்குள் இடத்தில் போட்டு வைத்திருந்தார்கள். வீடு இப்போது பார்ப்பதற்கு அழகாக இருந்தது.

நல்ல வேளையாகத் தாண்டவராயன் தலையிட்டதால் மதுரவாணியும், கொடிமலரும் இல்லாமல் வீட்டைத்



திறப்பதற்கு பயந்து கொண்டிருந்தார் கருப்பண்ணன். இல்லாவிட்டால் அந்தப் பொருட்களையும் தேடி எடுத்து விற்றிருப்பார்களோ என்னமோ!

அப்பாவின் குடிப்பழக்கத்துக்கு நகைகள் எல்லாம் போய் விட்டன. வீட்டுச் சாமான்கள்தான் மிஞ்சின என் றாள் மதுரவாணி.

''போகட்டும்.. மதுரா! வாழ்க்கையில் எதை வேண் ணாலும் இழக்கலாம். நம்பிக்கை மட்டும் இருந்தால் எல்லாவற்றையும் சம்பாதித்துக் கொள்ளலாம்'' என்றான் சசிசேகரன்.

நடேசன் சசிசேகரன் இந்த மாதிரிப் பேசும்போது ஆச்சரியமாகப் பார்ப்பார்.

''தம்பி! உங்க வயசுக்கு ரொம்ப யோசிக்கறீங்க!''

''சிந்திக்கறதுக்கு வயசென்னங்க மாமா! ஒவ்வொரு நல்ல அனுபவத்திலிருந்தும் சந்தோஷம் கிடைக்கற மாதிரி ஒவ்வொரு கசப்பான அனுபவத்தில் இருந்தும் பாடம் கிடைக்குது. என்னையே எடுத்துக்குங்க நம்ம பொருள்.. நம்மவங்கன்னு நம்பினேன். எதுவும் கை விட்டுப் போகாதுன்னு தெனாவெட்டா இருந்தேன்.. ஆனா.. இப்பப் போராடற நிலைமை வந்துருச்சு இல் லையா?'' என்றான்.

நடேசனுக்கு உள் மனதில் மதுரவாணியை சசிசேகர னுக்குப் பிடிக்கிறது என்ற உண்மை புரியத் தொடங்கி யிருந்தது. ஆனால் சசிசேகரன் தன்னுடைய வாயால் அதைச் சொல்லாமல் முடிவெடுத்து விடக் கூடாது என்ற எண்ணமும் இருந்தது. அதனால் அவர்களுக்குத் தனி யாகப் பேசுகிற சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுத்தார்.

அதுபோல இப்போதும் ஒரு வாய்ப்புக் கொடுத்தார்.

கொடிமலரும், ராதாமணியும் கோயிலுக்குப் போகிறேன் என்று கிளம்பினார்கள்.

''நா வல்லடி! சார் திடீர்ன்னு எதுவும் கேட்டா குடுக்கக் கொள்ள நான் இருக்கணும். நீ போ'' என்று சொல்லி விட்டாள் மதுரவாணி.

நடேசன் கூட இருந்தார். இப்போது திடீரென்று எழுந்து, ''தம்பி! பின்னால என்ன இடம் இருக்குது! ஏதாவது செடி கொடி வைக்க முடியுமான்னு பாத்துட்டு வாரேன்'' என்று எழுந்து போனார்.

''மனசுல ரொம்ப வேதனை இருக்கும் போல இருக்கு!'' என்று கேட்டாள் மதுரவாணி.

அவன் ஒரு நிமிடம் விட்டம் பார்த்தான். பிறகு சொன்னான்.

''சில நேரங்கள்ல.. அப்படி வேதனைப் படறது உண்டு! தனிமையா ஃபீல் பண்றது உண்டு'' என்றான்.

''என்கிட்ட சொல்லலாம்னா.. சொல்லுங்க'' என்றாள் மதுரவாணி.

சொன்னான்!

மிகச் சுருக்கமாகச் சொன்னான்!

மதுரவாணி ஒரு கணம் யோசித்தாள்!

''நீங்க சொல்றதெல்லாம் பாக்கும்போது உங்க சித்தி மேல எந்தத் தப்பும் இருக்காதுன்னுதான் தோணுது. எல்லா வில்லங்கங்களும் அந்த லாயர்கிட்டே இருந்துதான் ஆரம் பிக்குதுன்னு தோணுது'' என்றாள் மதுரவாணி.

''ஆமா! எனக்கும் புரியுது! ஆனா நான் கேஸ் போட் டாலோ, நடவடிக்கை எடுத்தாலோ அதுல முதல் குற்ற வாளியா நான் சித்திகிட்டேதான் போராட வேண்டியிருக்கும்.



என்னை சொந்தத் தாய் போல வளர்த்தாங்க! அவங்களைக் காட்டிலுமா சொத்துப் பெருசுன்னு தோணுது'' என்றான்.

''நியாயமான சிந்தனை'' என்றாள் மதுரவாணி. பிறகு சொன்னாள்.

''நான் மகாபாரதத்துல படிச்சிருக்கேன். பீஷ்மரைக் கொல்ல சிகண்டியை முன்னால நிறுத்தி வீரர்கள் எல்லம் சண்டை போட்டாங்கன்னு. அது மாதிரி உங்க சித்தியை முன்னரடி நிறுத்தி வேலைகளைச் செய்தா உங்க ஆயுதம் வலுவிழந்துரும்னு யோசிச்சு யோசிச்சு யாரோ போட்ட திட்டமாக் கூட இது இருக்கலாம் இல்லையா?'' என்றாள்.

''இருக்கலாம்! ஆனா எங்கே ஆரம்பிக்கிறது!'' என்றான் சசிசேகரன்.

''ஏதோ ஒரு பாயிண்ட்ல ஆரம்பீங்க. அது கண்டிப்பா உண்மையான பாயிண்ட்ல போயி நிக்கும்'' என்றாள் மதுரவாணி.

''ம்..! இது நல்ல ஸ்ட்ராட்டஜிதான்'' என்றான் சசிசேகரன்.

''ரிஸ்க் எடுத்துத்தான் ஆகணும் சசி சார்'' என்றாள்.

''சசி'' என்பதோடு நிறுத்தியிருக்கக் கூடாதா? என்று எண்ணிக் கொண்டான். இன்னமும் ஒரு முடிவெடுப்பதில் அவளுக்கு ஒரு தயக்கம் இருப்பதை அவன் உணர்ந்து கொண்டான்.

இப்போது எதைப் பேசினாலும் செய்த உதவிக்கு கைம்மாறு கேட்கிறாற் போல ஆகிவிடும் என்ற எண்ணத் தாலேயோ என்னவோ அந்த ரீதியிலான பேச்சையே அவள் பேசவில்லை.

''சரி.. பாப்போம்! அதுசரி! எனக்கு ரிஸ்க் எடுங்கன்னு இவ்வளவு தூரம் அட்வைஸ் பண்றே.. நீ ஏன் போரா டலே..!'' என்றான் குறும்புச் சிரிப்புடன்.

அவள் அதை வேடிக்கையாக எடுத்துக் கொள்ள வில்லை. சீரியஸாகவே பதில் சொன்னாள்.

''மை ஹானர் வாஸ் அட் ஸ்டேக். நாம எதை இழந் தாலும் யார்கிட்டே இழக்கிறோம்னு இருக்கில்லே. அதுவும் மலர் வேற என்கூட இருக்கா. அவளைப் பாது காக்கற கடமையும் இருந்தது. இன்னைக்கெல்லாம் பேக் கிரவுண்ட் இல்லாத இளம்பெண்கள் போராடினா எந்தப் பாதுகாப்பும் இல்லே'' என்றாள்.

அவன் அதை ஏற்றுக் கொண்டான். ''சரியோ தவறோ'' ஒரு போராட்டத்துல இறங்கிடுங்க'' என்று சொன்னவள் இன்னொரு வழிமுறை சொன்னாள்.

அதைக் கேட்டவுடன் அவன் கண்கள் மின்னின.

''நானும் இப்படித்தான் யோசனை செஞ்சு வச்சிருக் கேன்'' என்றான்.

பிறகு மெதுவான குரலில் கேட்டான்.

''மதுரா...! நான் உன்கிட்ட ஒரு விஷயம் சொல்லி யிருந்தேன்..''

அவள் அவனைப் பார்த்தாள்! பிறகு சொன்னாள்.

''எனக்கு இன்னும் கொஞ்சம் டைம் குடுங்க'' என்று.

''ம்..!'' என்றான்.

அன்றிரவு!

நடேசன் அவர்கள் திரும்பிக் காரில் வரும்போது கேட்டார்.

''எம்பா.. மதுரவாணி மேட்டரை இவ்வளவு அழகா ஹேண்டில் பண்ணிக் குடுத்திட்டே..! உன் பிரச் சினையை எப்படி தீக்கறது?'' என்று.

''ஆரம்பிச்சிடுவோம்'' என்றான்.



அடுத்த நாளே நகரிலுள்ள நண்பர்களிடம் விசாரித் தான்.

நல்ல லாயர் வேண்டுமென்று அவன் விசாரிக்க வில்லை. மாறாக நகரில் வைத்து யாருக்கு கிருபாகரனை மிகவும் பிடிக்காது என்று விசாரித்தான்.

அதற்குக் கிடைத்த பதில்தான் ஜெயராம். அவரையே தனது வழக்கறிஞராகத் தேர்ந்தெடுத்துக் கொண்டான்.

ஜெயராம் இளைஞராகவும் இருந்து அவனுக்கு இன் னும் வசதியாகப் போயிற்று.

''ஃப்ரீயா எல்லாத்தையும் டிஸ்கஸ் பண்ணிக்கலாம்'' என்று நினைத்தான்.

செய்யவும் செய்தான்.

* * *

''பாத்தீங்களாம்மா..! நான் சொன்னதென்ன..! இப்ப நடக்கறதென்ன! உங்க குடும்ப லாயர் நான் இருக்கேன். என்னை வச்சு பேச்சு வார்த்தைக்கு வந்திருக்கலாம் இல்லே. அதை விட்டுட்டு கேஸ் போடறாரு. அதுவும் யாரை வச்சு! எனக்கு ஜென்ம எதிரி மாதிரி இருக்கற ஜெயராமை வச்சு.. நீங்களே.. பாருங்க!'' என்று புலம்புகிற கிருபாகரனை மங்களத்தம்மாளும் வருத்தத்துடன் பார்த்தார்!

''கொஞ்சம்.. பொறுங்க! மாலினியும், குணசேகரனும் வந்துடட்டும். அப்புறம்.. பேசுவோம்!'' என்று ஆசுவாசப் படுத்தினார்.

மாலினி வந்தாள்!

சற்று நேரத்தில் குணசேகரனும் வந்தான்! அவர் களிடத்தில் கிருபாகரன் மறுபடியும் அதே பாட்டைப் படித்தார்.

மாலினி இரண்டாம் முறையாக வந்திருந்த வக்கீல் நோட்டீஸைப் பார்த்தாள்.

முகம் இறுகியது!

அதே நேரம்! சிவஞானம் அறையிலிருந்து வெளியே வந்தார்!

''என்னம்மா?'' என்றார் மங்களத்தம்மாவிடம். ''நான் சொல்றேன்..!'' என்று கிருபாகரன் மறுபடியும் விளக்கினார்.

சிவஞானம் ஒரு நிமிடம் யோசித்தார்!

கிருபாகரன் ஒருவிதமான எதிர்பார்ப்போடு அவர் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார்!

கடந்த ஒரு மாதமாகவே அடிக்கடி மறைமுகமாக சிவஞானத்திடம் சொல்லிக் கொண்டிருந்தார்!

''சார்! சசிசேகரன் என்ன பெருசா உங்களுக்கு சம்பளம் குடுக்கறாரு? நீங்க மட்டும் என்னைப் புரிஞ்சு நடந்துகிட்டீங்கன்னா.. நான் உங்களைக் கவனிக்கிற விதமே வேறு'' என்று.

சிவஞானம் ஆர்வமாகக் கேட்டுக் கொள்வாரே தவிர வாக்குறுதி எதுவும் தரமாட்டார். இப்போது என்ன பதில் சொல்லப் போகிறாரோ அதைப் பொறுத்துத்தான் சிவஞானத்தின் உள் மனது தெரியும் என்ற ஆவலோடு காத்திருந்தார் கிருபாகரன்.

சிவஞானம் மறுபடியும் நோட்டீஸைப் படித்தார். பிறகு அழுத்தமாகச் சொன்னார்.

''என்ன இருந்தாலும்.. சசித் தம்பிக்கு இது வேண்டாத வேலை.. யார் கேஸ் போட்டாலும் குடும்ப மானம்தானே



பாதிக்கப்படும்..! மங்களம் நீ கவலைப்படாதே..! நான் உனக்குத் துணையா இருக்கேன். தைரியமா இரு'' என்று.

மங்களத்தம்மாள் முகம் மலர்ந்ததைக் காட்டிலும் கிருபாகரன் முகம் வெகுவாக மலர்ந்தது. ஜாக்பாட் அடித்தாற் போல உணரத் தொடங்கி விட்டார்.

குணசேகரன் முகம் பார்த்தார்! அவன் உதட்டைப் பிதுக்கினான்.

''அம்மாவும், சிஸ்டரும் என்ன முடிவெடுத்தாலும் எனக்கு ஓ.கே!'' என்றான்.

கடைசியில் முடிவு மாலினியின் கையில் என்று தெரிய கிருபாகரன் மாலினியின் முகம் பார்த்தார்!

மாலினியின் முகத்தில் அசாதாரணமான ஒரு பாவம் தெரிந்தது.

''ஏண்டா! குணா.. நம்ம உடம்புலயும் அண்ணன் உடம்புல ஓடற அதே ரத்தம்தானே ஓடுது! அவருக்கு இருக்கிற வைராக்கியம் நமக்கு இருக்காதா? கேஸையே எடுத்து நடத்துவோம் லாயர் சார்!'' என்றாள்.

''அப்படிப் போடும்மா!'' என்று உற்சாகமானார் கிருபாகரன்.

இத்தனை பேச்சின் போதும் அழகேசன் கூட இருந்தான். ஆனால் அவன் வாயைத் திறக்கவில்லை. கிருபாகரன் வேண்டுமென்றேதான் அவனை அழைத்து வந்திருந்தார்.

ஒருவேளை மாலினி ஒத்துக் கொள்ளவில்லை யென்றால் அழகேசனிடம் சொல்லி மசியச் செய்யலாம் என்று எண்ணியிருந்தார்.

அழகேசனும், மாலினியும் அடிக்கடி ஒன்றாக வெளியே போனார்கள். ஆனால் தங்களுக்கிடையே உறவு எப்படிப்

பட்டது என்பது பற்றி இருவருமே வெளிப்படையாக எது வும் பேசவில்லை. கிருபாகரனுக்கும் எதுவும் தெரியவில்லை; புரியவில்லை.

இப்போதெல்லாம் ஒரு ஆணும், பெண்ணும் சிரித்துப் பேசினால் அது காதல்தான் என்ற முடிவுக்கு வர முடிய வில்லை. கல்லூரிகளில் இயல்பாக அருகில் அமர்ந்து கொள்கிறார்கள். தொட்டுப் பேசுகிறார்கள். வண்டியில் பெண்கள் அமர்ந்து போகிறார்கள் கேட்டால் கடைசியில் நட்பு என்கிறார்கள்.

ஒவ்வொரு வீட்டுக் கல்யாணத்திலும் பெண்ணின் நண்பர்கள் என்று ஆண்களும், ஆணின் நண்பர்கள் என்று பெண் பிள்ளைகளும் வருவது சகஜமாகிப் போனது. அதனால் வெறும் நட்பாகக் கூட இருக்கலாம். இல் லாமலும் இருக்கலாம். அதைப் பற்றிக் கிளறுவதற்கான காலம் இதுவரை வரவில்லை எனப் புரிந்து வைத்திருந் தார்.

இருப்பினும் அழகேசன் சொன்னால் மாலினி கேட் பாள் என்கிற அளவுக்கு நம்பிக் கொண்டிருந்தார். ஆனால் யாருடைய ஆலோசனையும் தேவையில்லாமல் மாலி னியே இப்படி ஒரு முடிவெடுக்கவும் கிருபாகரன் சுத்த மாகக் குளிர்ந்தே போனார்.

"பாருங்கம்மா! நேரடியா சவால் விட்ட மாதிரித்தான் இது அதனால நாம சந்திப்போம்" என்று வீராவேசமாகப் பேசினார்.

"இந்த சட்டப் பாயிண்ட் இருக்கும்மா..! அந்த சட்டப் பாயிண்ட் இருக்கும்மா?!" என்று ஏதேதோ பாயிண்ட் களெல்லாம் சொல்லிவிட்டுப் புறப்பட்டுப் போனார்.

மௌனமாகவே இருந்த அழகேசன் பொதுப்படை யாகக் கொஞ்ச நேரம் பேசிவிட்டுப் புறப்பட்டான்.



மாலினியும் இந்தக் கேஸ் பற்றி எதுவும் அவனிடம் கேட்கவில்லை.

அன்றிரவு!

அம்மாவின் அறையில் விளக்கெரிவதைக் கண்ட மாலினி உள்ளே எட்டிப் பார்த்தாள்.

சசிசேகரனின் சிறு வயது போட்டோ ஒன்றைக் கையில் வைத்துக் கொண்டு அழுது கொண்டிருந்தார்.

மாலினி கொஞ்சம் நிதைத்துத்தான் போனாள். "அம்மா!" என்றாள் இறங்கிய குரலில்.

மங்களம் திரும்பி மகளின் முகம் பார்த்துக் கேவலைக் கதறினார்.

"என்னடி! நான்தான் எல்லாச் சொத்தையும் குடுக் கறேன்னு சொல்றேனே! அப்புறம் எதுக்குடி உங்கண்ணன் கேஸ் போடறான்" என்றார்.

மாலினி தேறுதல் போலச் சொன்னாள்.

"ஒருவேளை இப்படியிருக்கலாம்மா! உனக்கே அப்பா முழுமையா அதிகாரம் குடுக்கலையே! விக்கவோ வாங்கவோ யார் பேருக்கும் மாத்தித் தரவும் உரிமை இல்லேன்னு சொல்லியிருக்காரே! அதனால கேஸ்னு போயிட்டா கோர்ட் மூலமா எல்லாருக்கும் சாட்ஸ் கிடைக்கும்னு செய்யறாரு போல இருக்கு.." என்றாள்.

அம்மா கண்ணீரைத் துடைத்துக் கொண்டு கேட்டாள்.

"அப்படியும் இருக்குமாடி?"

மாலினி தோளைக் குலுக்கினாள்.

"யாருக்குத் தெரியும்? ஆம்பளைங்க மனசு யாருக்குப் புரியும்? உன் புருஷன் இப்படி உயில் எழுதி வச்சுட்டுப் போவாருன்னு நாம யாராவது நினைச்சோமா? அண்ணன்

பக்கம் நியாயம் இருக்குதுன்னுதான் நான் நினைக்கறேன். அப்படி உனக்கு எண்ணமிருந்தா கோர்ட் மூலமாக பிரிச்சுக் குடுங்கன்னு நீயே சொல்லிடு.''

''கேஸ் நடத்தணும்னு லாயர் சொல்றாரே! அப்பத்தானே அவருக்கு பீஸ் கிடைக்கும்'' என்று சிரித்த மாலினி மேலும் சொன்னாள்.

''கேஸே நடத்துவோம்மா! ஆனா அண்ணன் பக்கம் நியாயமிருக்கும்னு புரிஞ்சுக்குவோம். என்ன?'' என்றாள்.

சசிசேகரன் மீது வைத்து நம்பிக்கைக்கும், அவநம்பிக்கைக்கும் இடையே அவர்கள் மனம் ஊசலாடுவதை முன்னறையிலிருந்து கேட்ட சிவஞானம் மெல்லச் சிரித்துக் கொண்டார்.

## 17



பள்ளிக்கூடத்தை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்துவதற்கான வேலைகள் விரைவாக நடந்து கொண்டிருந்தன.

தன் சொந்தப் பணத்திலேயே பள்ளிக்கூடத்தை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்துவதற்கான தொகையைக் கட்டி விட்டான் சசிசேகரன்.

அரசாங்கத்திலிருந்து ஆணை பெறுவதற்கான முயற்சி செய்து கொண்டிருந்தார்கள்.

மேலும் இரண்டு மாதங்கள் ஓடியிருந்தது. வழக்கு அடுத்த வாரத்தில் விசாரணைக்கு வருகிறது என்றார்கள்.

சசிசேகரன் ஒரு எதிர்பார்ப்போடு காத்துக் கொண்டிருந்தான்.

இடையிலே ஒரு முறை மதுராவிடம் கேட்டான் ''மதுரா..! உங்க ஃப்யூச்சர் பிளான் என்ன? இந்த ஊர்ல



கண்டின்யூ பண்றீங்களா? இல்லே உங்க சொந்த ஊருக்குப் போயிடறீங்களா?'' என்று.

''தெரியலே..! சார்! என்ன இருந்தாலும் கருப்பண்ணன் ஏதோ ஒரு வகையில் இடைஞ்சல் செய்வாருன்னு தோணுது...'' என்றாள் மதுரவாணி.

இனிமேல் நீங்க அப்படி பயப்பட வேண்டியதில்லைன்னு நினைக்கறேன்'' என்றான் சசிசேகரன்.

''கொடிமலருக்கு இங்க வேலை வாய்ப்பு எப்படின்னு தெரியலே!'' என்றாள்.

ஒருவேளை தன் வாயைப் பிடுங்கித் தன்னிடமிருந்து வார்த்தை வாங்கிக் கொள்ளலாம் என்று நினைக்கிறாளோ என்று கூர்ந்து பார்த்தான். ஆனால் மதுரவாணியின் முகத்தில் யதார்த்தமான பாவம்தான் இருந்தது.

''மதுரா..! நான் சொல்றதை நல்லா ஞாபகம் வச்சுக்குங்க. கொடிமலருக்குக் கிடைக்காமலும் போகலாம். ஆனா.. இங்கே கிடைக்கலேன்னாலும் வேற எங்கயாவது வாங்கிக் குடுக்க வேண்டியது என்னோட பொறுப்பு'' என்றான்.

''ஏன்.. சார்! நான் கேக்கறேன்னு தப்பா நினைக்காதீங்க! கொடிமலருக்கு இங்க வேலை குடுக்கறதுல உங்களுக்கு சிக்கல் ஏதாவது இருக்கா?'' என்றாள் கவலையோடு.

''எனக்கு சிக்கல்ன்னு இல்லே! அது ஒரு சில விஷயங்கள்ல பொறுத்து இருக்கு! எந்த பதிலானாலும் தயாராயிக்குங்க..'' என்றான்.

அன்றைக்கு ஞாயிற்றுக்கிழமையாதலால் மதுரவாணி சமையல் செய்து கொண்டு வந்திருந்தாள். அப்படி வரும் போது வேலையாட்கள் உள்ளே நடமாடிக் கொண்டுதான் இருப்பார்கள். சில நேரங்களில் ஐந்து நிமிடம் பத்து

நிமிடம் தனிமை கிடைக்கலாம். அப்படிக் கிடைக்கும் இடைவெளிகளில்தான் மதுரவாணி சசிசேகரனிடம் இது மாதிரியெல்லாம் பேச முடியும்!

இன்றைக்கு மதுரவாணியின் மனதில் ஒரு புதுக் குழப்பம் மேலிட்டது.

திரும்ப வீட்டுக்குப் போகும்போது யோசித்துக் கொண்டே நடந்தாள்.

''உன்னுடைய முடிவு என்ன?'' என்று சசிசேகரன் பலவிதங்களில் கேட்பது புரிந்தது. சசிசேகரனைத் தனக்கு மிகவும் பிடிக்கிறது. ஆனால் கூடவே அவர்கள் தகுதிக்குத் தான் சரியாய் இருக்குமா என்ற சந்தேகமும் இருந்தது.

ஏதோ ஒரு காரணத்தினால் தன் மீது ஒரு நாட்டம் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் தனக்கோ தாயும் தந்தையும் இல்லை. பெரிய அளவில் வசதிகளும் இல்லை! நாளைக்கே மீண்டும் அவருடைய குடும்பத்துடன் அவர் சேர்ந்து விட்டால் அவர்களுக்குத் தன்னைப் பிடிக்குமோ பிடிக்காதோ!

கொஞ்ச காலம் கழித்து ஏதோ ஒரு வேகத்தில் தன்னை திருமணம் செய்து கொண்டு விட்டதாக ஒரு எண்ணம் அவருக்கு வந்தால்..!

இந்த பயம் அவளுக்குள் ஓடிக் கொண்டிருந்தது.

இப்போது திடீரென்று ஒரு கேள்வி தோன்றியது. தங்கையின் வேலையை வைத்துக் கொண்டு தன்னிடம் மறைமுகமாக நிபந்தனை விதிக்கிறாரோ என்று தோன்றியது.

''நீ என்னைக் கல்யாணம் செய்து கொண்டால்தான் உன் தங்கைக்கு வேலை'' என்கிறாரோ.



இந்த மாதிரி நிபந்தனைகள் என்னென்ன வருங்காலத்தில் வருமோ! என்ற கவலையும் தோன்றியது.

திரும்பிப் போய் நேரடியாகப் பேசி விடலாமா என்று நினைத்தாள். ஆனால் ஞாயிற்றுக் கிழமை நாட்களில் மட்டும்தான் அவன் பிற்பகல் ஒன்றிரண்டு மணி நேரங்கள் ஓய்வெடுப்பான் என்று தெரியுமாதலால் போய்த் தொல்லை செய்ய விரும்பவில்லை.

தங்கைக்கு வேலையைக் கொடுத்து விட்டு உன் தங்கைக்கு வேண்டுமென்ற பாதுகாப்பை நான் கொடுத்தாயிற்று. இப்போது சம்மதம் சொல்'' என்று சொன்னால் என்ன செய்வது?

என்ன செய்வது?

சம்மதம் சொல்ல வேண்டியதுதான். ஆனால் இப்படி நிபந்தனைகளின் அடிப்படையிலான அன்பு எத்தனை காலத்துக்கு நிற்கும்? இது உதவுமா?

குழம்பிப் போனாள்.

தங்கையிடம் பேசலாமா? ம்ஹூம்..!

தான் சசிசேகரன் சாரிடம் என்ன சொல்லப் போகிறோம் என்று முடிவெடுக்காமல் தங்கையிடம் பேசக் கூடாது.

இந்த வேலைதான் உங்களுக்கிடையே பிரச்சினை என்றால் இந்த வேலையே வேண்டாம் என்பாள். வேண்டாம்.. வேண்டாம்!

என்னதான் இப்போதைக்கு முடிவுகளில் இருந்து தப்பித்துக் கொண்டாலும் அதைப் பற்றிப் பேசுவதற்கான ஒரு நேரம் வரும் என்றும் அப்போது அவள் நினைத்துக் கொண்டிருந்ததற்கு நேர்மாறாக விஷயங்கள் நடக்கும் என்றும் அப்போது அவளுக்குத் தெரியவில்லை.

தெரிந்தபோது...!

* * *

வழக்கறிஞர் ஜெயராம் இளைஞராக இருந்தாலும் மிகவும் சுட்டிப்பாக இருந்தார்.

கேள்விகளை மிகத் தெளிவாக வைத்தார். பதில்களை மிக அழகாக வாங்கினார்.

முதலில் மங்களத்தம்மாவிடம் விசாரித்தார்.

''உங்களுக்கு இந்த உயிலைப் பத்தி ஏற்கனவே தெரியுமா?'

''தெரியாதுங்க! தெரிஞ்சிருந்தா இப்படி ஒரு உயில் தயாரிக்கவே நான் ஒத்துட்டிருக்க மாட்டேன்'' என்றார்.

''ஏன்!'' என்றார்.

''ஏன்னா.. சசிசேகரனுக்கு இந்த உயில் நியாயம் செய்யலேன்னுதான் நினைக்கறேன்.''

சசிசேகரன் ஆழ்ந்த பார்வையோடு பார்த்துக் கொண் டிருந்தான்.

கோர்ட்டுக்கு வந்தபோது எதிரேதான் மாலினி வந்தாள். ஆனால் மாலினி சசிசேகரனிடம் பேசவில்லை.

''அண்ணா!'' என்று பேச வந்த குணசேகரனையும் தடுத்து விட்டாள்.

சசிசேகரன் குணசேகரனைப் பார்த்து புன்முறுவலுடன் தலையாட்டி விட்டுப் போய்விட்டான்.

''அப்ப.. இந்தச் சொத்துக்களை சரியான முறையில் பங்கு போடறதுக்கு ஏன் முயற்சி எடுக்கலே?''

''ஏன்னா.. அதுக்கான உரிமையும் அந்த உயில்ல எனக்குக் குடுக்கலே. உயில் மூலமா எனக்கு வீணான பொல்லாப்புதான் வந்திருக்கு..'' என்றார்.

''அம்மா! உங்க சொந்தக் கருத்துக்களை நாங்க இங்கே கேக்கலே. அதுக்கு பதிலா என் கட்சிக்காரர் சசிசேகர



னுக்கு ஏன் நியாயம் செய்யலேன்னுதான் கேட்கறேன்'' என்றார்.

''எந்த விதமா நியாயம் செய்யணும்னு தெரியலே... கோர்ட்டு பார்த்து என்ன சொல்லுதோ அதைச் செய்யறேன்'' என்றார் மங்களம்.

கிருபாகரன் நொந்து போனார்.

''உயில்படி சொத்துக்கள் எனக்குத்தான் சொந்தம்னு சொல்லுங்க'' என்று கிளிப்பிள்ளைக்குச் சொல்வதை போலச் சொல்லிக் கொடுத்து கூட்டி வந்து இந்தம்மா இப்படி சொதப்பறாங்களே'' என்று நொந்து கொண்டார்.

நீதிபதி கேட்டார்.

''பிரதிவாதி சொத்தைக் கொடுப்பதற்குத் தயாராய் இருக்கும்போது எதற்கு வழக்கு என்றே புரியவில்லை'' என்றார்.

கிருபாகரன் அப்போது 'சட்'டென்று ஒரு பாயிண்டை எடுத்து விட்டார்.

''யுவர் ஹானர்! மற்ற இரண்டு வாரிசுதாரர்களும் உயில் படித்தான் சொத்துக்களின் நிர்வாகம் இருக்கணும்னு நினைக்கிறார்களே...'' என்றார்.

''சரி! மற்ற இரண்டு வாரிசுதாரர்களையும் அடுத்து கோர்ட்டில் ஆஜர்படுத்துங்க!'' என்று வாய்தா கொடுத்து விட்டார்.

கிருபாகரனுக்கு பயம் பிடித்து விட்டது.

அத்தனை வேப்பிலை அடித்ததற்குப் பிறகும் மங்களத் தம்மா தான் எதிர்பார்த்த மாதிரிப் பேசவில்லை.

மாலினி இப்போதைக்குத் தன் அண்ணன் மேல் கோபமாக இருந்தாள் என்று தெரியும்.

இன்றைக்குக் கூட கோர்ட்டில் அண்ணனிடம் பேச வில்லை. பாராமுகமாகத்தான் இருந்தாள்.

குடும்பத்தைக் கோர்ட்டுக்கு இழுத்து விட்டாரே என்று கோபமாகப் பேசிக் கொண்டிருந்ததாகத்தான் அழகேசன் சொன்னான்.

இப்போதெல்லாம் அழகேசன் சொல்வதைக் கொஞ்சம் கேட்கிறாற்போல்தான் தெரிந்தது. ஆனால் கிறுக்குப் பிடித்த பெண்!

திடீரென்று பிடிவாதம் பிடிப்பாள் என்று சொல்லியிருந் தான்.

மாலினியிடம் பேசி விடுவோம் என்று இரண்டு நாள் கழித்துப் போனார்.

மாலினி அப்போது ஹால் சோபாவில் அமர்ந்து ஏதோ புத்தகம் படித்துக் கொண்டிருந்தாள்.

கிருபாகரன் வந்தவுடன் பின்னால் அழகேசன் வருகிறானோ என்று பார்த்தாள்.

அழகேசன் வரவில்லை என்று தெரிந்தது. ஆனால் முகத்திலிருந்து எதையும் கண்டு பிடிக்க முடியவில்லை.

''மாலினி உன்கிட்டேதான் பேசணும்'' என்றார்.

''சொல்லுங்க...! சார்!'' என்றாள்.

''ஏம்மா! அங்கிள்னு கூப்பிடு! லாயர்ன்னு கூப்பிட்டா ஒரு அந்நியத் தன்மை தெரியுதுன்னு எவ்வளவு தடவையா சொல்றேன். கேட்க மாட்டேங்கறியே?'' என்றார் தயவாக.

''இருக்கட்டும்! அதற்கான அவசியம் வரும்போது கண்டிப்பாக கூப்பிடறேன்'' என்றாள். அவள் ஏதோ பொடி வைத்துப் பேசுவது போல நினைத்து கிருபாகரன் மகிழ்ந்து போனார்.



''அப்ப சரிம்மா!'' என்றார் அன்பு வழிய.

''அப்புறம்.. சொல்லுங்க.. சார்!'' என்றாள்.

''இல்லம்மா! எவ்வளவோ தூரம் சொல்லியும்.. அம்மா கடைசியில தெளிவில்லாம பதில் சொல்லிட்டாங்க.''

''அம்மா.. மனசுல இருக்கறதை சொல்லிட்டாங்க..! கேஸ் போட்டவங்கதானே கேஸ் எதுக்குப் போட்டிருக் காங்கன்னு சொல்லணும்'' என்றாள்.

''அது சரிம்மா! அப்புறம் அப்பா எழுதி வச்ச உயிலுக்கு என்ன மதிப்பு?'' என்றார் கிருபாகரன்.

மாலினி மௌனம் சாதித்தாள்.

கிருபாகரனுக்கு அடிவயிற்றில் ஜுரம் கண்டது என்று தான் சொல்ல வேண்டும்.

''அம்மா! இப்படிப் பேசினீங்கன்னா.. இந்தக் கேஸுக்கு பதில் நோட்டீஸ் குடுத்துருக்கவே வேண்டியதில்லே..!'' என்றார்.

மாலினி ஒரு பெருமூச்சு விட்டாள்!

''ஆமா! அதுவும் உண்மைதான்! சரி.. தப்போ ரைட்டோ அண்ணன் கோர்ட்டுக்கு போயிட்டாரு. அப்புறம் அது ப்ரெஸ்டீஜ் இஷ்யூ ஆயிடுதில்லே..! நாமளும் ஸ்டான்ட் பண்ண வேண்டியதுதான்'' என்றாள்.

''என்னன்னு ஸ்டான்ட் பண்ணணும்?'' என்றார் கிருபாகரன்.

''என்னன்னு ஸ்டான்ட் பண்றது? உயில்தான் கரெக்ட். உயில்படிதான் நடக்கணும்னு அப்படீன்னு வாதாட வேண்டியதுதான்'' என்றாள்.

கிருபாகரனின் முகம் மலர்ந்தது. நெஞ்சில் உள்ளங் கையை வைத்து அழுத்திக் கொண்டு சொன்னார்.

''அப்பாடா! இப்பத்தான் நான் பட்ட பாட்டுக்குப் பலன் கிடைக்கிற மாதிரி இருக்கு!''

''அது சரி! எங்கப்பாதானே உயில் எழுதினாரு. அதுல நீங்க என்ன பாடு பட்டீங்க?'' என்றாள் மாலினி.

திடுக்கிட்டுப் போய் மாலினியின் முகத்தைப் பார்த்தார்.

கேள்வியைக் கூர்மையாகப் போட்டு விட்டு அப்பாவியாக அமர்ந்திருந்தாள் மாலினி.

''அம்மா! உனக்குத் தெரியாது! உங்கப்பாகிட்டே மங்களத்தம்மாவுக்குத்தான் முழு உரிமையும்ன்னு சொல்லிச் சொல்லிப் புரிய வக்கறதுக்கு நான் எவ்வளவு பாடுபட்டேன்னு எனக்குத்தானே தெரியும்?'' என்றார்.

''ஆமாமா! ரொம்பக் கஷ்டமான விஷயம்தான்'' என்றாள்.

கிண்டல் செய்கிறாற் போலவும் இருந்தது. சீரியஸாகச் சொல்கிறாற் போலவும் இருந்தது.

''ஏம்மா! அழகேசனை உனக்குப் பிடிக்குதா?'' என்றார்.

''ஏன் கேட்கறீங்க?'' என்றாள் மாலினி.

''சும்மாதான்! அவனுக்கு உன் பிரண்ட்ஷிப் ரொம்பப் பிடிக்குது போல! எப்பப் பாரு... உன் பேச்சுத்தான்'' என்றார்.

''ஆமா! ஹி இஸ் எ நைஸ் மேன்!'' என்றாள் மாலினி.

இப்போதைக்கு இது போதும். இதற்கு மேல் கேள்விகள் கேட்டால் வேறு எதற்கோ அடி போடுகிறார் இந்த வக்கீல் என்று இந்தப் பெண் நினைத்து விடும் என்று புரிந்து கொண்ட கிருபாகரன் அடுத்த பாயிண்டுக்குத் தாவினார்.



''சரிம்மா! நீ ரொம்ப ஸ்ட்ராங்கா இருக்கேன்னு புரிஞ்சுது! ஆனா.. இந்தக் குணசேகரன் என்ன சொல்லப் போறானோ தெரியலியே...'' என்றார்.

அதே சமயம்!

விசிலடித்து ஆடியபடி குணசேகரன் வந்தான்.

''டேய்! எங்கடா போயிட்டு வர்றே'' என்றாள் மாலினி.

''ஹலோ! நீ உன் வேலையைப் பாரு..! என்னைக் கண்ட்ரோல் பண்ற பிக்பிரதர் வேலையெல்லாம் வேண்டாம்'' என்றான்.

''ஓ.கே. ஓ.கே.! பாரு லாயர் சார்! என்னமோ கேட்கறாரு..'' என்றாள்.

கிருபாகரன் விஷயம் சொன்னார்.

''சரிங்க லாயர் சார்! நியாயப்படி எங்கண்ணனுக்கும் சொத்துல பங்கு இருக்கிறதுன்னுதான் சொல்வேன்'' என்றான் குணசேகரன்.

''அட ராகவா!'' என்று தலையில் கை வைத்துக் கொண்டார் கிருபாகரன்.

''சார்! நீங்க ஒண்ணும் வொரி பண்ணிக்காதீங்க. நான் பேசறேன்'' என்று சகோதரனைத் தனியாக அழைத்துப் போய் ஏதோ சொன்னாள்.

குணசேகரன் ஏதோ பதில் கேள்விகள் கேட்பதும் இருவரும் விவாதம் செய்வதும் தெரிந்தது. ஆனால் என்ன பேசினார்கள் என்பது புரியவில்லை. ஆனால் திரும்பி வந்ததும்,

''லாயர் அங்கிள்! கவலையே படாதீங்க! சிஸ்டர் என்ன சொல்றாப்லயோ அதையே நான் கண்டிப்பா.. சொல்றேன். நீங்க தைரியமா ப்ரொசிட் பண்ணுங்க'' என்றான்.

"என்ன திடீர்ன்னு முடிவு மாற்றம்!" என்றார் கிருபாகரன்.

"எல்லாம் சிஸ்டருக்காக அழகேசன் சார் ரொம்ப பிரண்டாமே..!" என்றான் சிரித்தான்.

தன் கனவெல்லாம் நனவாய் போவதாய் கிருபாகரன் சத்தமாக விழுந்தே விட்டார்!

காலம் என்ன வைத்திருக்கப் போகிறது என்று அப்போது அவருக்குத் தெரியவில்லை.

## 18



அடுத்த முறை வழக்கு விசாரணைக்கு வந்தபோதே பெரிய மாற்றம் ஒன்று தென்பட்டது.

ஜெயராம் வேறு விதமாக வாதாடினார்!

மாலினி அழுத்தம் திருத்தமாகச் சொன்னாள்.

"தவறோ.. சரியோ! எங்கப்பா உயில் எழுதி வைத்திருக்கிறார். அதில் எங்க அண்ணனுக்கு வருத்தம் இருந்தாலும் உயிலைத்தான் நடைமுறைப் படுத்தணும். வேணும்னா உயில் எழுதும்போது சாட்சியா யாரெல்லாம் இருந்தாங்களோ அவங்ககிட்டே எங்கப்பா வேற ஏதாவது சொன்னாரான்னு கேளுங்க! அப்புறம் அதன்படி முடிவு எடுங்க" என்றாள்.

வழக்கறிஞர் ஜெயராமின் முகத்தில் ஒரு புன்னகை மலர்ந்தது. குறுகுறுவென்று பார்த்துக் கொண்டிருந்தார்.

கடைசியாக தனது அஸ்திரத்தை எடுத்து வீசினார்.

வழக்கறிஞர் கிருபாகரனையே ஒரு சாட்சியாக விசாரிக்க விரும்புவதாகச் சொன்னார்.

கோர்ட்டாரிடம் அனுமதி வாங்கிக் கொண்டு விசாரித்தார்.



"உயில் எழுதும்போது யார் யார் இருந்தார்கள்?"

"உயில் எழுதும்போது யாரும் உடன் இருப்பதை மருதமுத்து சார் விரும்பலை. நான் மட்டும்தான் இருந்தேன்."

"ஏன்.. அப்படி?"

"மருதமுத்து சார் தன் மகன் பெயரில் சொத்துக்களை எழுத விரும்பலை அதனால்தான்."

"வழக்கறிஞர் என்ற முறையில் இந்தச் செயல் நியாயமற்றது என்று நீங்கள் அவருக்கு எடுத்துச் சொல்லலையா?"

"எந்தச் செயல்? உயில் எழுதுவதா?" என்றவுடன் எல்லாரும் சிரித்தார்கள்.

"தயவு செய்து திசை திருப்ப வேண்டாம். சசிசேகரன் என்ற முதல் தாரத்து மகன் இருக்கிறான். அவருக்கும் சட்டப்படி சொத்துக்களில் உரிமை இருக்கிறது என்று நீங்கள் எடுத்துச் சொல்லவில்லையா?"

"நான் திரும்பத் திரும்பச் சொன்னேன். ஆனால் அவர் கேட்கவில்லை! என் பெயரில் இருக்கிற சொத்துக்களை நான் யார் பெயரில் வேண்டுமானாலும் எழுதி வைப்பேன் என்று பிடிவாதமாக நின்றார்."

"அந்தச் சொத்துக்களின் பட்டியலில் சசிசேகரன் தாத்தா காலத்துச் சொத்துக்களும் அடங்கியிருக்கின்றன என்றும் அவற்றின் மீது சசிசேகரன் என்ற எனது கட்சிக்காரர் உரிமை கோரலாம் என்று தங்களுக்குத் தெரியாதா?"

"தெரியும்! ஆனால் அவர் அது பற்றி என்ன சொன்னாலும் கேட்கவில்லை. அவர் அவன் அப்படியெல்லாம் கேஸ் போடமாட்டான். அவன் என் மகன் அப்படீன்னார்."

''இது அபத்தமாகத் தெரியவில்லையா? ஒருவர் மகன் என்பதற்காகப் போராடி உரிமையை நிரூபிப்பாரா? இல்லை மகன் என்று குடும்பத்துக்காக மகனுக்குள்ள உரிமையை விட்டுக் கொடுப்பாரா?'' என்றார்.

கிருபாகரன் கோர்ட்டாரிடம் திரும்பி, ''கனம் கோர்ட்டார் அவர்களே! இந்த மாதிரிக் கேள்விகளால் எதிர்க்கட்சி வழக்கறிஞர் எந்த கருத்தை நிலை நாட்டப் போகிறார் என்றே புரியவில்லை'' என்றார்.

''கனம் கோர்ட்டார் அவர்களே! திருவாளர் மருதமுத்து அவர்கள் சம்பாதித்த சொத்துக்களில் வேண்டுமானால் சசிசேகரனுக்குப் பங்கில்லை என்று எழுதி வைக்க அவருக்கு உரிமையிருக்கிறது. தாத்தாவின் சொத்துக்களில் பேரனுக்கு உரிமை இருப்பதால் சொத்துக்கள் பற்றி உயிலில் என்ன எழுதி இருக்கிறது என்று அறிந்து கொள்ள எனது கட்சிக்காரர் விரும்புகிறார். எனவே உயிலை எனது கட்சிக்காரர் பார்வைக்கும் வழங்க வேண்டுமாகக் கேட்டுக் கொள்கிறேன்.''

நீதிபதி அடுத்த விசாரணையின் போது சசிசேகரனின் பார்வைக்கு அந்த உயிலை தர வேண்டும் என்று ஆணையிட்டார்.

வழக்கறிஞர் ஜெயராம் அந்த உயிலில் குறிப்பிடப் பட்டுள்ள சொத்துக்களின் விவரங்கள் பற்றியும் கேட்டார்.

இறுதியாக ஒரு கேள்வி கேட்டார்!

''மறுபடியும் கேட்கிறேன். நன்றாக யோசித்துச் சொல்லுங்கள். உயில் எழுதும்போது நீங்கள் மட்டும்தான் இருந்தீர்கள் இல்லையா?''

''ஆமாம்! என் மீது அவ்வளவு நம்பிக்கை.''

''சரி.. அப்படியே இருக்கட்டும். அந்த நம்பிக்கையின் அடிப்படையில் சாட்சிகள் கூட இல்லாமல் உயில் தயாரிக்கப்பட்டது அப்படித்தானே!''



''ஆமாம்!''

அதோடு கிருபாகரனை விசாரிப்பதை முடித்துக் கொண்டார்.

கோர்ட்டுக்கு வரும்போதும், உள்ளே அமர்ந்திருக்கும் போதும் சரி சசிசேகரன் மங்களத்தம்மாள் முகத்தையோ, குணசேகரன் முகத்தையோ, மாலினியின் முகத்தையோ பார்க்கவில்லை! ஆனால் விசாரணைக் கூண்டில் நின்று மாலினி அழுத்தம் திருத்தமாகப் பதில் சொல்வதை ஆழ்ந்த பார்வையுடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

விசாரணை முடித்து வெளியே வரும்போதும் வழக்கறிஞரிடம் மட்டும் ஏதோ சொல்லி விட்டு சரேலென்று வெளியேற்றி விட்டான்.

''நான் அண்ணன்கிட்டே பேசறேன்'' என்று சொல்லி விட்டு அவனைப் பார்க்கப் போன குணசேகரன் காரை எடுத்துக் கொண்டு அண்ணன் போவதை ஒருவித ஏமாற்றத்தோடு பார்த்துக் கொண்டு நின்றான்.

* * *

''என்ன தம்பி! லாயர் ஒரு விதமா வாதாடறாரு!'' என்றார் நடேசன்.

இருவரும் ஹோட்டல் ஒன்றில் சாப்பிட அமர்ந்திருந்தார்கள்.

''ஊருக்குள்ள சொந்த வீடு இருக்கு. நிலைமை பாத்தியா! ஓட்டல்ல சாப்பிடறே..!'' என்று சொல்ல நினைத்தார் நடேசன். ஆனால் உடனே கட்டுப்படுத்திக் கொண்டான்.

பொதுவாகவே புலம்பினால் சசிசேகரனுக்குப் பிடிப்பதில்லையென்று அவருக்கும் புரிந்திருந்தது. ஆனால் சிறிது நேரத்தில் தன்னை மறந்து வாய் விட்டுச் சொல்லி விட்டார்.

''இருக்கலாம்! இருக்கட்டும்! எல்லாம் கொஞ்ச நாள் தான். அப்புறம் நிலைமை மாறிடும்'' என்றான் சசிசேகரன். பிறகு நினைவு வந்தவன் போல் கேட்டான்.

''அப்புறம்.. என்ன சொன்னீங்க?'' என்றான்.

''இல்லே! லாயர் சம்பந்தா சம்பந்தமில்லாம கேள்வி கேக்கறாரு?'' என்றார் நடேசன் சற்றே யோசனையுடன்.

''மாமா! நான் கேள்விப்பட்ட வரைக்கும்.. கிருபாகர னுக்கு ஜெயராம்ன்னா.. சிம்ம சொப்பனமாம். அது மட்டுமில்ல... ஜெயராம் இப்படித்தானாம். இப்படி எல்லா வழக்குகளையும் சம்பந்தமே இல்லாமக் கேள்வி கேக்கற மாதிரித்தான் இருக்குமாம்..! ஆனா.. கடைசியில எல்லாத் தையும் இணைச்சு.. ஃபைனலா வாதம் வைக்கும் போது.. ஜட்ஜே மலைச்சுப் போயிடுவாராம்! யாருமே.. யோசிக் காத கோணத்துல யோசிப்பாராம்!'' என்றான்.

''எப்படியோ.. தம்பி! கேஸ்ங்கற அளவுக்குப் போனதுக் கப்புறம் குடும்பத்துல பிளவு நிலைச்சுப் போயிடும் பாங்க..! எனக்கென்னவோ கவலையா இருக்கு..'' என்றார் உண்மையான கவலையுடன்.

''மாமா! அதெல்லாம் ஒண்ணும் கவலைப்பட வேண் டாம்! எனக்கு சித்தி மேலயோ மாலினி, குணா மேலயோ வருத்தமில்லை! இது என்னோட உரிமைக்கான போராட்டம் அவங்க மேலே உள்ள கோபமில்லே..'' என்றான்.

''என்னவோப்பா! ஒண்ணும் புரியலே!'' என்றார்.

''அது புரியாட்டி கிடக்குது! இந்த ஹோட்டல்ல சாப்பாடு நல்லா இருக்கும்! அதை ஒரு வெட்டு வெட்டப் பாருங்க!'' என்றான்.

சற்று நேரம் அமைதியாகச் சாப்பிட்டார்கள்.

நடேசன் திடீரென்று சொன்னார்.

''தம்பி! கேஸைப் பத்தி வேண்ணா ஒண்ணும் புரியாம இருக்கலாம். ஆனா, வேற ஒரு விஷயம் கொஞ்சம் புரிந்த மாதிரி இருக்கு!'' என்றார்.



என்ன என்பது போலப் பார்த்தான் சசிசேகரன்.

''இல்லே! தம்பிக்கு அந்த மதுரவாணிப் பொண்ணை ரொம்பப் பிடிக்கிறதோன்னு ஒரு எண்ணம்!'' என்றார்.

திடீரென்று இந்த விஷயத்தை அவர் எடுப்பார் என்பதை அவன் எதிர்பாராததால் அவன் முகம் சற்றே சிவந்தது.

மிகுந்த ஆளுமையுடன் அவன் நடமாடுவதைப் பார்த்தவர் என்பதால் அவன் முகத்தில் ஏறிய சிவப்பு அவருக்கு ஆச்சரியத்தைத் தந்தது. எப்பேர்ப்பட்டவர் களும் இந்த விஷயத்தில் எப்படி ஆகி விடுகிறார்கள் என்று எண்ணிச் சிரித்துக் கொண்டார்.

அவன் மௌனமாகவே சாப்பிட்டான்.

''என்ன தம்பி! ஒண்ணும் பேச மாட்டேங்கறீங்க..'' என்றார் மறுபடியும்.

''எத்தனையோ பேரைப் பிடிக்குது.. அதுக்காக..'' என்று அவன் முடிக்குமுன்னே குறுக்கிட்டார்.

''எப்படிப் பிடிக்குது? எந்த அளவுக்குப் பிடிக்குதுன்னு.. ஒண்ணு இருக்கில்லே..'' என்றார்.

''ம்..!'' என்று லேசான பெருமூச்சு விட்ட சசிசேகரன் சொன்னான்.

''மதுரவாணியை எனக்குப் பிடிக்கத்தான் செய்யுது மாமா! அதுக்குக் காரணம் வெறும் தோற்றம் மட்டு மில்லே! ஓரளவுக்கு வசதியா இருந்தவங்க! இருந்தாலும் அதெல்லாம் இல்லாதப்ப கூட அதுக்காகப் புலம்பி கிட்டிருக்காம, கம்பேர் பண்ணி வருத்தப்பட்டுகிட் டிருக்காம கஷ்டமான சூழ்நிலையும் ஏத்துகிட்ட வித மும்..! தான் பெரிய படிப்பு படிச்ச பொண்ணுன்னெல்லாம் நினைக்காமே அந்த மெடிக்கல் ஷாப் வேலையை

சளைக்காம செஞ்ச விதம் இதெல்லாம் எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு..! வறுமையிலும் செம்மைன்னு சொல்லுவாங் களே.. அது மாதிரி..'' என்றான்.

நடேசன் அமைதியாகக் கேட்டார்! அவனே தொடர்ந்து பேசினான்.

''சொத்து விஷயத்தைப் பொறுத்த வரை ரெண்டு பேரும் ஒரே நிலைமையில இருக்குமோ அதனால ஒரு அனுதாபமோன்னு யோசிச்சேன். ஆனா.. அப்படி யில்லேன்னுதான் இப்ப நினைக்கறேன். ஆனா இப் போதைக்கு நான் அந்தப் பொண்ணுகிட்டே வற்புறுத் தலும் செய்ய விரும்பலே! பாக்கலாம்..'' என்றான்.

ஏற்கனவே மதுரவாணியிடம் தான் பேசியிருக்கிறோம் என்பதை ஏன் நடேசன் மாமாவிடம் மறைக்கிறோம் என்று அவனுக்கே புரியவில்லை.

உள்ளே சற்று தன் மீதே ஆச்சரியம் இருந்தது. அதனால் பேச்சை மாற்றி விட்டான்.

''ம்.. லாயர் பத்திக் கேட்டீங்களே! அவருக்கு ஏதோ சந்தேகம் இருக்கற மாதிரி... இருக்கு! எதையோ மனசுல வச்சுக்கிட்டுத்தான்.. இந்த மாதிரிக் கொண்டு போறார்ன்னு நினைக்கறேன்'' என்றான்.

அவன் வெட்கம் புரிந்து அவரும் பேச்சை மாற்றி விட்டார்.

திரும்பக் காரை ஓட்டிக் கொண்டு வரும்போது கிருபாகரன் அழுத்தந் திருத்தமாக உயில் எழுதும்போது நான் மட்டும்தான் இருந்தேன் என்று பெருமையாகச் சொன்னது நினைவுக்கு வந்தது.

''அப்பா.. இப்படியும் செய்வாரா? நல்லவங்களா நாலு பேர்.. இல்லைன்னா.. ரெண்டு பேராவது கூட வச்சுக்க மாட்டாரா..!'' என்ற எண்ணம் தோன்றியது.



லாயர் ஏன் திரும்பத் திரும்ப அதையே கேட்கிறார் என்ற எண்ணமும் எழுந்தது. வீட்டுக்கு வந்தார்கள்.

நடேசன் விடைபெற்றுச் சென்றதற்குப் பிறகு விச்ராந் தியாக முன் ஹாலில் அமர்ந்தான் அந்த நேரம்!

மதுரவாணி வருவதை ஆச்சரியமாகப் பார்த்தான். கையில் ஏதோ தூக்குப் பாத்திரத்தை எடுத்துக் கொண்டு வந்தாள்.

''ராதாமணி அம்மா என்னவோ இனிப்புப் பணியாரமும், வெள்ளைப் பணியாரமும் செஞ்சு குடுத்தனுப்பிச்சாங்க'' என்றாள்.

''ஆஹா..! மாலைச் சிற்றுண்டி வந்துடுச்சா! பேஷ்.. பேஷ்..'' என்றான் சசிசேகரன்.

மதுரவாணி புன்னகைத்தாள்!

அவன் முகம் பார்த்து ஏதோ கேட்க வேண்டுமென்று பிரியப்பட்டவள் போல நின்றாள்.

''ஏன் மேடம்! அவுட் வித் இட்'' என்றான். ஒரு பணியாரத்தை எடுத்துத் திருப்பித் திருப்பிப் பார்த்து விட்டு,

''இல்லே! கேஸ் எப்படிப் போச்சுன்னு... கேட்கலாம்னு நினைச்சேன்..!

''சிவில் கேஸாச்சே! அவ்வளவு சீக்கிரமா முடிஞ்சுடுமா? எப்படியோ எனக்கு ஒரு ஐம்பது வயசு ஆகும்போது.. ஏதாவது சொத்துக் கிடைக்குமோ.. என்னவோ..'' என்று சிரித்தான்.

அவள் என்ன சொல்வதென்று விழித்தபடி பார்வை யில் அவன் மேலும் சிரித்துக் கொண்டு கேட்டான்.

''ஐம்பது வயசுக்கு சொத்து வாங்கி என்ன பண்றன்னு கேட்கறீங்களா? அதுக்குள்ள எனக்கு வாரிசுகள் வந்துரு

மில்லே! அவங்களுக்கு அவுங்க தாத்தா சொத்துல உரிமையிருக்குமில்லே..'' என்று சொல்கையிலேயே மதுரவாணி முகம் சிவக்கத் திரும்பிக் கொண்டாள்.

''நான்.. நான் உங்களுக்குத் தட்டு எடுத்துட்டு வரேன்'' என்று போனாள்.

சிரித்துக் கொண்டான்.

மதுரவாணிக்குத் தன் விஷயத்தில் பெரிதாக மறுப்பு எதுவும் இல்லையென்று புரிந்தது! ஆனால் ஏதோ ஒன்று உடனே சம்மதம் தெரிவிப்பதைத் தடுக்கிறது என்று புரிந்தது.

அந்த ஒன்று என்ன? அதைக் கண்டு பிடிக்க வேண்டும்.

தனக்காக அக்கறையாக உணவு கொண்டு வந்து பரிமாறும்போதெல்லாம் உன் பதில் என்ன என்று கேட்க வேண்டும் என்று நினைப்பான். உடனே ''அது எனக்கு! வேணும்கற டைம் எடுத்துக்கன்னு சொல்லியாச்சில்லே! இனிமே மறுபடியும் நாம கேட்கக் கூடாது! அவளாத்தான் பதில் சொல்லணும்'' என்று எண்ணிக் கொண்டான்.

வாரிசுகளைப் பற்றிப் பேசியவுடனே முகம் சிவந்து போக அவள் நடந்து சென்ற காட்சி மனதுக்குள் நினைத்து அவள் வருகைக்காகக் காத்துக் கொண்டிருந்தான்.

அவள் சிறிய தட்டு ஒன்று கொண்டு வந்து அதில் பணியாரங்களை பரிமாறி அதற்குத் தொட்டுக் கொள்ள சட்டினியும் பரிமாறினாள். இன்னொரு தட்டில் இனிப்புப் பணியாரம் பரிமாறினாள்.

இத்தனை செய்த போதும் அவன் முகத்தை நிமிர்ந்து பார்க்கவில்லை. அவள் பரிமாறுவதை பார்த்து மெதுவாக அவனும் தன் பார்வையைச் சாதாரணமாக்கிக் கொண்டான்.



அதே நேரம்!

நடேசன் பரபரப்பும், மகிழ்ச்சியுமாக வந்து நின்றார்.

''தம்பி! பள்ளிக்கூடம் ஹைஸ்கூல் ஆக அரசாங்க ஆணை போட்டாச்சாம்! மாவட்டக் கல்வி அலுவலகத்துல தெரிஞ்ச கிளார்க் ஒருத்தர்கிட்டே விசாரிச்சேன்! ரெண்டே நாள்ல வருதாம்'' என்றார்.

உடனே... மதுரவாணி பற்றிய நினைவுகளெல்லாம் பின்னே போக பள்ளிக்கூடம் முழுமையாக அவனை ஆக்கிரமித்துக் கொண்டது.

## 19



ஆணை கிடைத்தே விட்டது!

அவ்வளவுதான்! சசிசேகரன் தனது சொந்தப் பிரச்சினைகளையெல்லாம் தூக்கித் தூர வைத்து விட்டுப் பள்ளிக் கூடத்தில் உயர்நிலை வகுப்புக்கள் துவங்குவதற்கான ஏற்பாடுகளில் இறங்கினான்.

கிட்டத்தட்ட கல்வியாண்டு முடிவடைகிற நேரமாக இருந்தது.

முதலில் வகுப்பறைகளுக்குத் தேவையான பெஞ்சு, டெஸ்குகள் வாங்கினார்கள்.

தலைமையாசிரியர் அந்த ஆண்டோடு பணி ஓய்வு பெறுவதாலும், அதுவரை இடைநிலைப் பள்ளியாக இருந்ததாலும் அவரைத் தொடர்ந்து தலைமையாசிரியராக வைத்துக் கொள்ள முடியாது என்ற சிக்கல் தீர்ந்தது.

உயர்நிலை பள்ளிக்கான பட்டதாரி ஆசிரியர்களைத் தான் நியமிக்க வேண்டும் என்ற சூழ்நிலை எழுந்தது. இனிமேல் யார் முதலில் வேலைக்கு அமர்த்தப் படுவார்

களோ அவர்களுக்கே பணி மூப்பு கிடைக்கும். அந்த சீனியாரிட்டியின் அடிப்படையில்தான் தலைமை ஆசிரியர் பதவி கிடைக்கும்.

இது பற்றிய விஷயங்களையெல்லாம் தெரிந்து கொள் வதற்காக முழுமையாக இறங்கினான். ''பிரைவேட் ஸ்கூல் ரெகுலேஷன் ஆக்ட்'' என்று இருக்கிறது. அதைப் படித்தால் முழு விவரங்களும் தெரியும் என்றார் தங்கசாமி.

தங்கசாமியின் மூலமாகவே தருவித்துப் படித்துப் பார்த்தான். முழுமையாக விஷயங்கள் புரிந்தது.

மொத்தமாக பள்ளிக்காக ஐந்து ஏக்கர் நிலம் 'பள்ளிக் கென்றே எழுதி வைக்க ஏற்பாடு செய்து தேவையான ஏற்பாடுகளைச் செய்துதான் உயர்நிலைப் பள்ளியாக உயர்த்துவதற்கான ஆணை பெற்றிருந்தார்கள்.

நடேசனும் மாமாவுடனும், தங்கசாமி சசிசேகரனும் அமர்ந்து பேசினார்கள்.

''சார்! யார் ஸ்கூலுக்கு ஹெட் மாஸ்டரா வந்தாலும் பொறுப்பானவங்களா இருக்கணும்.. சார்! உயர்நிலைப் பள்ளிக்கு வரும் பெண்கள் கொஞ்சம் பெரிய பெண் களாக இருப்பார்கள். பொறுமையும், டெடிகேஷனும் இருக்கறவங்களாலதான் சமாளிக்க முடியும்'' என்றார் தங்கசாமி.

''அது சரி! புது அப்பாயின்ட்மென்டுன்னு போகும் போது இளையவங்களாத்தானே இருப்பாங்க'' என்றான் சசிசேகரன்.

சற்று நேரம் யோசனையில் ஆழ்ந்தான். பிறகு சொன் னான்.

''தங்கசாமி சார்.. ஒண்ணும் பிரச்சினையில்லே! இப் போதைக்கு ஒரு சில காரணங்களால நான் முழுமையா



இங்க உட்கார்ந்துகிட்டிருக்கேன்.. அப்புறம் நான் முழு மையா இருந்து பார்க்க முடியாது நம்ம பள்ளிக் கூடத்து டிரஸ்ட்லயும், ஸ்கூல் கமிட்டியிலயும் தொடர்ந்து நீங்க உறுப்பினரா இருங்க சார்! அப்புறம் நான் கரஸ்பான் டென்ட்ன்னு உட்கார்ந்தர்றேன். உங்களை செக்ரட்ட ரின்னு செஞ்சுடலாம். நீங்க பள்ளிக்கூடத்து நடவடிக் கைகளைப் பாத்துக்குங்க..'' என்றார்.

நடேசன் சசிசேகரனின் முகத்தைப் பார்த்தார்.

''தம்பி! நம்ம கொடிமலர்..!'' என்று இழுத்தார்.

''மாமா! சட்டதிட்டங்களுக்கு நாம முக்கியத்துவம் கொடுப்போம். தனி மனிதர்களைக் காட்டிலும் இன்ஸ்ட் டிட்டியூஷன் ரொம்ப முக்கியம். அதனால கவர்ன் மெண்ட்ல என்ன நார்ம்ஸ்னு சொல்றாங்களோ அதை பாலோ பண்ணுவோம்'' என்றான்.

தங்கசாமி முகம் மலர அவனைப் பார்த்துச் சிரித்தார்.

''சார்! உண்மையிலேயே நீங்க என்ன பதில் சொல்லப் போறீங்களோன்னு பாத்துகிட்டிருந்தேன். அருமையாச் சொன்னீங்க.. சார்! தெரிஞ்சவங்க, சொந்தக்காரங்க வேலை கொடுத்தோம்னா... நாம எதிர்பார்க்கற அளவுக்கு ரிசல்ட் கொண்டு வர முடியாது. ஏற்கனவே எந்த வேலை யும் கிடைக்காதவங்கதான் டீச்சர்ஸா வர்றாங்கன்னு ஒரு கருத்து இருக்கு! அப்படியில்லாம கத்துக் குடுக்கற தொழிலுக்கு விருப்பத்தோட வர்றவங்களா இருக்கணும்'' என்றவர் கூடவே இன்னொன்றும் சொன்னார்.

''இதெல்லாம்.. சொல்றதுனால கொடிமலர் மோசம்னு சொல்ல வர்லே! ரொம்ப அருமையா டீச் பண்ணுது. சக ஆசிரியர்கள்கிட்டே ரொம்பப் பண்பாடா நடந்துக்குது. ஆனா, ஒரு ஸ்கூல் நிர்வாகம் பண்ணனுங்கும்போது..''

சசிசேகரன் மனதில் எந்த உணர்வையும் காட்டாமல் வாங்கிக் கொண்டான். பிறகு சொன்னான்.

''பார்க்கலாம்.. சார்! அந்த ஸ்டேஜ் வரும்போது எல்லாருமா சேர்ந்து முடிவெடுக்கலாம்.. சார்!'' என்றான்.

அந்த ஸ்டேஜும் வந்தது!

வேலை வாய்ப்பு அலுவலகத்தில் இருந்து பட்டியல் வாங்கினார்கள். பத்திரிகையிலும் விளம்பரம் செய்தார்கள். பள்ளி அறிவிப்புப் பலகையிலும் போட்டார்கள்.

மிகவும் உள்ளே இருக்கிற கிராமம் என்பதாலே பத்து விண்ணப்பங்கள்தான் வந்தன.

நேர்முகத் தேர்வு நாளும் வந்தது!

தேர்வுக் குழுவில் தங்கசாமியும், சசிசேகரனும் நடேசனும் அமர்ந்திருந்தார்கள்.

''தம்பி! நான் வந்து என்னத்தைப் பண்றேன்! எனக்கும் படிப்பும்.. கம்மி..!'' என்றார் நடேசன்.

''அதனால் என்ன? இந்த ஸ்கூலைத் தூக்கி நிறுத்தணும்ங்கறதுக்காக நீங்க.. என்ன பாடு படறீங்க..? உங்களுக்குத் தெரிஞ்ச கேள்விகளைக் கேளுங்க'' என்றான் சசிசேகரன்.

ஒன்றிரண்டு பேர் உள்ளே வரும்போதே ஒருவிதமான தளர்வுடன் வந்த மாதிரி இருந்தது.

பத்து வருஷமாக வேலை தேடிக் கொண்டிருந்தோம் என்றார்கள்.

''ஏன்?'' என்று கேட்டான் சசிசேகரன்.

''இல்ல.. சார்! பர்மனன்ட் ஜாப் பாக்கறோம்'' என்றார்கள்.

சசிசேகரன் அப்படிப்பட்டவர்கள் போனதற்குப் பிறகு சொன்னான்.



''ஏதாவது ஒரு பள்ளிக் கூடத்துல கிடைச்ச வேலையில நுழைஞ்சிருந்தால் கூட இன்னைக்கு பத்து வருஷ அனுபவம் கையில வச்சிருப்பாங்க! தேடும்போதே நிரந்தர உத்தியோகம் தேடறாக. இவுங்க தொழிலை நேசிக்கறவங்க இல்லே! பாதுகாப்பைத் தேடறாங்க..'' என்றான்.

தங்கசாமி அதை ஆமோதித்தார்!

கொடிமலர் ஐந்தாவதாக வந்தாள்!

தங்கசாமி பாட சம்பந்தமான கேள்விகள் கேட்டார். நன்றாகவே பதில் சொன்னாள்.

''பள்ளியினுடைய வளர்ச்சிக்கு என்ன மாதிரிக் கருத்துக்கள் வைத்திருக்கிறீர்கள்?'' என்று கேட்டார்.

கொடிமலர் சில கருத்துக்கள் சொன்னாள்.

''நேரம் காலம் பார்க்காமல் வேலை செய்வீர்களா?'' என்று கேட்டார் தங்கசாமி.

''சார்! நான் இந்த ஆசிரியர் தொழில் பிடிச்சு வேலைக்கு வந்திருக்கேன். நாம லெட்ஜர்களோட வேலை செய்யப் போறதில்லே! குழந்தைகளோட இருக்கப் போறோம். அவர்களை நான் சின்ன மனிதர்களாகப் பார்க்கிறேன். அதனால பிடிச்சுப் போன தொழிலைச் செய்யற யாருக்குமே நேரம் முக்கியமாத் தெரியாது. அப்படித்தான் எனக்கும்!'' என்றாள்.

அந்த பதில் திருப்திகரமாக இருந்தது! அப்போது சசிசேகரன் மீண்டும் கேட்டான். ''நீங்க ஏதோ ஒரு சூழ்நிலையினால இந்த ஊருக்கு தங்கியிருக்கீங்கன்னு நினைக்கறேன். மறுபடியும் சூழ்நிலல மாறினா இந்த ஊரை விட்டுப் போகிற முடிவை எடுப்பீங்களோ..'' என்றான்.

''சார்! இந்த ஊர் என் சொந்த ஊர் இல்லைதான். ஆனால் இந்த ஊருக்கு வந்ததற்குப் பிறகுதான் எங்க சொந்த ஊர்ல கிடைக்காத நிம்மதியும், திருப்தியும் கிடைச்சது. அதனால நான் இந்த ஊரையும் இந்த ஊர்ல இருக்கிற நல்லவங்களையும் நேசிக்கறேன். இந்த ஊர்ல வேலை கிடைச்சா.. கல்யாணமே பண்ணிக்காமல் கூட இந்த ஊர்லயே இருப்பேன்..'' என்றாள்.

தன்னையுமறியாமல் சசிசேகரன் புன்னகைத்து விட்டான்.

கொடிமலரை அனுப்பி விட்டு சற்று நேரம் கொடி மலரின் தகுதி பற்றிப் பேசினார்கள்.

எல்லாருக்குமே திருப்திகரமாக இருந்தது. ஆனாலும் சசிசேகரன்.

''முடிவை பெண்டிங் வைக்கலாம்'' என்று சொன்னான்.

நடேசனும், தங்கசாமியும் கேள்விக்குறியுடன் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

''சரி.. இருக்கிற இன்னும் நாலு பேரையும் பாத்தரலாம்'' என்றார் தங்கசாமி.

வரச் சொன்னார்கள்.

தொடர்ந்து வந்த மூவருமே அவ்வளவாகத் திருப்தியளிக்கவில்லை.

ஒரே ஒரு பக்கம் ஒரு குறிப்பிட்ட விஷயம் பற்றி எழுதித் தரச் சொன்னார்கள். அந்த ஒரு பக்க விஷயத்திலேயே அவ்வளவு பிழைகள் இருந்தன.

சிரித்துக் கொண்டார்கள்.

அடுத்த இரண்டு பேரையும் எதிரிலே மாணவர்கள் இருப்பது போலக் கற்பனை செய்து வகுப்பெடுக்கச் சொன்னார்கள்.



எடுத்தார்கள்!

எதிரில் யாராவது அமர்ந்து கவனிக்கும்போது ஒருவித பயம் வரும். அது வேறு. ஆனால் இவர்களிடம் ஈடுபாடு இல்லையென்பதைப் புரிந்து கொண்டார்கள்.

''சரி.. கொடிமலர்தான் தேறும் போல இருக்கு!'' என்றார் தங்கசாமி.

சசிசேகரன் ஒன்றும் பேசவில்லை!

கடைசியாக இருந்தவரை அழைத்தார்கள். வந்திருந்தவர்களில் மூன்று பேர் ஆண்கள் அதில் பத்தாவது வந்த இவரும் ஒரு ஆண்.

அந்த இளைஞனின் கண்களில் ஒரு தீட்சண்யம் தெரிந்தது.

பி.எஸ்ஸி கணிதம் படித்திருந்தான். அன்றைக்கு நேர்முகத் தேர்வில் இரண்டு பேரைத் தேர்வு செய்ய நினைத்திருந்தார்கள்.

கணிதத்துக்கு ஒரு ஆசிரியரும், அறிவியலுக்கு ஒரு ஆசிரியரும் என்று முடிவு செய்திருந்தார்கள். அறிவியலுக்குக் கொடிமலருக்குக் கொடுத்து விடலாம் என்று சொன்னார் தங்கசாமி. அப்படியே வைத்துக் கொண்டாலும் கணிதத்துக்கு நல்ல ஆட்களாக யாரும் கிடைக்கவில்லையே என்று உள்ளே லேசாகக் கவலை இழையோடு அமர்ந்திருந்தவர்களுக்கு அந்த இளைஞனைப் பார்த்ததுமே பிடித்துப் போனது.

தங்கசாமி சில கேள்விகள் கேட்டார். சசிசேகரன் கணித மேதை ராமானுஜர் பற்றிச் சொல்லுங்கள் என்று கேட்டான்.

கேட்டு முடிப்பதற்குள்ளாகவே ராமானுஜத்தின் வாழ்க்கை வரலாற்றையே சுருக்கமாகச் சொல்லி முடித்து விட்டான் அந்த இளைஞன்.

இளைஞனுடைய பயோ - டேட்டா தங்கசாமியிடம் இருந்தது. அதை வாங்கிப் பார்த்தான் சசிசேகரன்.

அவன் கண்கள் விரிந்தன!

அந்த இளைஞனின் பெயர் அழகேசன் என்றிருந்தது.

இளைஞனின் தந்தையின் பெயர் கிருபாகரன். தொழில் வக்கீல் என்றிருந்தது.

விண்ணப்பப் படிவத்தை தங்கசாமியிடம் கொடுத்து விட்டு ஆழமான முக பாவத்தோடு அமர்ந்திருந்தான்.

ஒரு முடிவெடுத்து விட்டான் என்று அவன் முக பாவத்திலிருந்தே தெரிந்தது.

* * *

நடேசனும், சசிசேகரனும் ஒத்தையடிப் பாதை வழியாக பேசிக் கொண்டே காலார நடந்தார்கள்.

"தம்பி! அந்த விண்ணப்பப் படிவத்துல போட்டிருந்தது நிஜந்தானா? அந்தக் கிருபாகரன் நம்ம விவகாரத்துல மூக்கை நீட்டியிருக்காரே அந்தக் கிருபாகரனா?" என்றார்.

"ம்..!" என்றான்.

"கிருபாகரன் சொத்துக்காரன்னு கேள்விப்பட்டேன். அவரோட பையனா இருந்துட்டு பள்ளிக் கூடத்துல வேலை கேட்டுட்டு வர்றான்?"

"ம்..! அதான் எனக்கும் ஆச்சரியமாயிருக்கு" என்றான் சசிசேகரன்.

"ஏன் தம்பி! இங்கயும் வந்து நுழைஞ்சுகிட்டு நமக்கு நாளைக்கு ஏதாவது இடைஞ்சல் செஞ்சா, என்ன செய்வது?" என்றார் நடேசன்.

சசிசேகரன் புன்னகைத்தான்.



"கிருபாகரனுக்கு அப்படியெல்லாம் வெளிப்படையாக மோதிப் பழக்கமில்லைனுதான் நினைக்கிறேன்" என்று சிரித்தான் சசிசேகரன்.

"இல்லையே தம்பி! என்ன மாயம் செஞ்சானோ தெரியலையே..! உங்கப்பா அப்படி ஒரு உயில் எழுதி வச்சுட்டுப் போனாரா இல்லையா?"

"ஆமா! அது ஒரு மாயக்குகை மர்மம் மாதிரித்தான் போயிட்டிருக்கு ஆனா. பழைய காலத்துல குழந்தைங் களுக்கு தேவதைக் கதைகள் சொல்லுவாங்களே! அரக் கனோட உயிர்நிலை எங்க இருக்கு தெரியுமா? ஏழு கடல். ஏழு மலை தாண்டிப் போனா ஒரு பெரிய நெருப்பாறு ஓடும். அதுக்கு நடுவில் ஒரு சுழலும் தாமரைப் பூ இருக்கும். அதுக்கு நடுவில ஒரு பெரிய பொன் வண்டு உட்கார்ந்துருக்கும். அதோட இதயத்துல இருக்குன்னு! அது மாதிரி!" என்று இடியிடியென்று சிரித்தான்.

நடேசன் கூட லேசாகப் புன்னகைத்து விட்டார். "தம்பி! அந்த மர்மம் என்னவாவோ இருந்துட்டுப் போகட்டும். நீங்க இப்பச் சொன்ன விதம் ரொம்ப நல்லா இருந்துச்சு..." என்றார்.

சசிசேகரன் திரும்ப அவரை வாஞ்சையான புன்னகை யுடன் பார்த்தான்.

"இல்ல.. மாமா! நிஜமாத்தான் சொல்றேன். அந்த உயில்ல ஒரு பெரிய மர்மம் இருக்கு! ஜெயராமும், நானும் தோண் டித் தோண்டி சில விஷயங்களை கண்டு பிடிச்சிருக்கோம். கிட்டத்தட்ட உண்மையை நெருங்கிட்டோம்" என்றான்.

"என்ன உண்மை அது!" என்று கேட்கலாமா என்று நினைத்த நடேசன் சசிசேகரனே சொல்லட்டுமே! என்பது போல அமைதியாகப் பார்த்துக் கொண்டு வந்தார்.

அவன் லேசாகக் கோடி காட்டினான்.

''அப்படியா சொல்றீங்க?'' என்று அதிர்ந்து போனார்.

''மங்களத்துக்கு இது தெரியுமா?'' என்றார்.

''ம்ஹூம்! யாருக்குமே இது தெரியாது. ஜெயராமை அடுத்த வாய்தாவுலதான் இந்தக் கச்சேரியை ஆரம்பிக்கச் சொல்லியிருக்கேன்'' என்றான்.

''தம்பி! நான் ஒண்ணு சொல்லுவேன் தப்பா நினைக்கக் கூடாது! எனக்கென்னமோ ஜெயராம் இந்த வழக்கை நடத்தற மாதிரித் தெரியலை! நீதான் நடத்தற மாதிரித் தெரியுது.''

''இல்ல மாமா! கிருபாகரனோட எதிரிங்க முறையில கிருபாகரனோட சைக்காலஜி ஜெயராமுக்கு நல்லாப் புரியுது. எங்கப்பா குணம் எனக்குத் தெரியுமே? ரெண்டு பேரும் ரெண்டு டிஸ்கஷன்ல உட்கார்ந்தவுடனேதான் லேசா விஷயம் புரியற மாதிரி இருந்தது! அதே லைன்ல போனோம். ஓரளவு துப்புக் கிடைச்சிருச்சு.. அதனாலதன் அந்த மேட்டரை ஜெயராம் பொறுப்புல விட்டுட்டு நான் நிம்மதியா ஸ்கூல் வேலையைப் பாக்கறேன்'' என்றான்.

''அதுசரி! ஸ்கூல் வேலைன்னவுடனே ஞாபகம் வருது. யாருக்கு தம்பி வேலையை குடுக்கப் போறீங்க! அழகேசனுக்கா.. கொடிமலருக்கா..'' என்றார் தங்கசாமி.

''அதுவும் சஸ்பென்ஸ்தான்'' என்றான் அலட்டிக் கொள்ளாமல்.

நடேசன் விடை பெற்றுப் போன பிறகு வீட்டுக்குப் போன சசிசேகரனுக்கு ஓரத்தில் மதுரவாணி வரக் கூடும்! வந்து நேர்காணல் பற்றி ஏதாவது அறிந்து கொள்ள விழைவாள் என்று நினைத்தான். ஆனால் அவள் வரவேயில்லை!

அவன் உள்ளத்தில் ஏமாற்றம்தான் மிஞ்சியது.



20



வழக்கு விசாரணையில் சூடு பற்றிக் கொண்டது.

அன்றைக்கு அப்படியொரு குண்டைத் தூக்கிப் போட்டார் ஜெயராம்.

திரும்பத் திரும்ப உயில் எழுதும் போது நீங்கள் மட்டும்தான் இருந்தீர்களா? என்று கிருபாகரனிடம் கேட்ட போது கிருபாகரன் அதன் பின்னாலே இருக்கிற விவகாரத்தைத் தெரிந்து கொள்ளவில்லை. புரிந்து கொள்ளவில்லை.

இரண்டாவதாக உயிலில் குறிப்பிடப்பட்டிருக்கிற சொத்துக்களின் பட்டியல் கேட்டபோது அதிலேயும் விஷயம் இருக்கிறது என்பதையும் கிருபாகரன் புரிந்து கொள்ளவில்லை.

அன்றைக்கு!

வழக்கு விசாரணையில் தனது வாதத்தை முழுமையாக வைக்கப் போவதாக ஏற்கனவே ஜெயராம் கூறியிருந்தபடியால் சசிசேகரன் முன்பே புறப்பட்டுப் போய் அமர்ந்து விட்டான்!

அது மட்டுமல்ல இப்போது தங்கை அமர்ந்திருக்கிற இடமாகத் தேடிப் போய் அவள் அருகில் அமர்ந்தான்.

தன்னையும் மீறி மாலினியின் முகம் மலர்வதை குறும்புச் சிரிப்புடன் பார்த்துக் கொண்டான்!

''அண்ணா! நல்லாயிருக்கியா?'' என்று அவள் ஒருவித ஆதங்கத்துடன் கேட்பதை குறும்பாகப் பார்த்து விட்டு,

''ஹேய்! நீ பிரதிவாதி..! நான் வாதி! என்கிட்ட நலம் விசாரிக்கறே!'' என்றான்.

"ஹலோ! அது கேசில..! இது நீ என் அண்ணன்கறதும் நான் உன் தங்கைங்கறதும் தனிப்பட்ட உறவு" என்றாள்.

"குட்! நான் வளர்த்த வளர்ப்பு வீண் போகலே!" என்று சிரித்தான்.

"அண்ணா!" என்று அவள் ஏதோ கேட்க ஆரம்பிக்க "ஷ்" என்று வாயில் ஒற்றை விரலை வைத்துக் காட்டினான்.

"அங்கே கவனி!" என்பது போல் கோர்ட் வளாகத்தைக் காட்டினான். அவளும் திரும்பிக் கவனிக்க ஆரம்பித்தாள்!

வேறு இரண்டு சிறிய வழக்குகள் முடித்ததற்குப் பிறகுதான் இவர்களின் வழக்கு விசாரணைக்கு வந்தது.

ஜெயராம் அன்றைக்குத் தனது தரப்பு சாட்சியாக சசிசேகரனை அழைத்தார்.

சத்தியப் பிரமாணம் செய்த பிறகு சசிசேகரனிடம் கேட்டாள்.

"மிஸ்டர் சசிசேகரன். உங்களுக்கும் உங்கள் தந்தைக்கும் இடையே உறவு எப்படி இருந்தது?

"ஒரு தந்தைக்கும் மகனுக்கும் எப்படி இருக்க வேண்டுமோ அப்படித்தான் இருந்தது."

ஜெயராம் "என்ன சார் இப்படி விளையாடறீங்க" என்பது போல் ஒரு நிமிடம் பார்த்தார். பிறகு சொன்னார்.

"இல்லை! நான் ஏன் இந்தக் கேள்வியைக் கேட்கறேன்னா... பல குடும்பங்கள்ல தந்தைக்கும் மகனுக்கும் சொத்துத் தகராறுகள் காரணமாக சுமுக உறவு இருக்கறதில்லை. அதனால கேட்டேன்."

"இல்லை! அப்படியெல்லாம் இல்லை! எனக்கும் என் தந்தைக்கும் இடையே உறவு சுமுகமாகத்தான் இருந்தது."

"அப்புறம் ஏன் இப்படி ஒரு உயிலை எழுதினாரு."



"அதுதான் எனக்குப் புரியாத புதிரா இருக்கு! சரி! அது ஒருபுறம் இருக்கட்டும்! உயில்ல இருக்கும் சொத்து விவரங்கள் சரியா இருக்கா?"

"இல்லை!"

கோர்ட்டில் சலசலப்பு எழுந்தது. மங்களமும், மாலினியும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். "அப்படிப் போடு!" என்று முணுமுணுத்தான் குணசேகரன்.

அவன் தொடையைக் கிள்ளி அமைதியாக இருக்குமாறு சொன்னாள் மாலினி.

"எந்த விதத்தில் விவரங்கள் இல்லையென்கிறீர்கள்!" என்றார் ஜெயராம்.

கிருபாகரன் வழக்கு விசாரணை இந்த விதமாகப் போகும் என்று நினைக்கவில்லை. அவர் எதிர் பார்த்ததெல்லாம் 'உயில் படித்தான் சொத்துக்கள் பிரிக்கப்பட வேண்டும் என்று மங்களமும், மாலினி, குணசேகரனும் ஒரு அணியாக நிற்பார்கள் என்பதும், சசிசேகரன் அதை எதிர்ப்பான் என்பதும்தான். ஆனால், இது என்ன? இது வேறு விதமாகப் போய்க் கொண்டிருக்கிறதே..!' என்ற கவலை ஏற்பட்டு விட்டது.

அது மட்டுமில்லை! வழக்கு உண்மையை நெருங்கிக் கொண்டிருக்கிறதோ என்ற பயமும் ஏற்பட்டு விட்டது.

"எனக்கும், அப்பாவுக்கும் எந்தப் பிரச்சினையும் இல்லை என்பது ஒரு பக்கம் அப்பாவின் சொத்துக்கள் முழுமையாக இந்தப் பட்டியலில் வரவில்லை என்பது ஒரு பக்கம்."

"உங்கள் தந்தைக்கு உங்கள் மேல் கோபம் இல்லை என்று எப்படிச் சொல்றீங்க?"

''அப்படிக் கோபம் இருந்திருந்தால் என் பெயரில் இறப்பதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்பாக எதற்கு எனக்காக சொத்து வாங்குகிறார்.''

''ஓ!''

''ஆமாம்! பசுங்குடி கிராமத்தில் எனக்காக பத்தொன்பது ஏக்கர் நிலம் வாங்கியிருக்கிறார். என் பிறந்த நாளன்று அதை எனக்குப் பரிசாகக் கொடுக்க வேண்டுமென்று பத்திரத்தைக் கூட நடேசன் மாமாவிடம் கொடுத்து வைத்திருக்கிறார்!

''சரி.. நடேசன் சாட்சி சொல்வாரா?''

''தாராளமாகச் சொல்வார்?''

''சரி.. அடுத்த விசாரணையின் போது விசாரித்துக் கொள்கிறேன். மேலும் விட்டுப் போன விவரங்கள் பற்றிச் சொல்லுங்கள்.''

''இது இல்லாமல்.. மாலினியின் பெயரில் குணா பெயரில் - என் பெயரில் சென்னையில் மூன்று வீடுகள் வாங்கியிருக்கிறார். அந்தப் பத்திரங்கள் எங்களது குடும்ப நண்பர் விஸ்வேஸ்வரன் பொறுப்பில் இருக்கிறது.''

''அவரும் விசாரணைக்கு வருவாரா?''

''தாராளமா.. வருவார்! நான் சொல்ல வருவது என்னவென்றால் இப்படி அரை குறையாக உயிலில் விவரங்கள் கொடுத்து எதற்காக உயில் எழுத வேண்டும்? இந்த உயிலின் நம்பகத் தன்மை குறித்தே எனக்கு சந்தேகமாய் உள்ளது?'' என்றான் சசிசேகரன்.

உடனே ஜெயராம் ''கனம் கோர்ட்டார் அவர்கள் இந்தக் கருத்தைக் குறித்துக் கொள்ள வேண்டுமாய் வேண்டிக் கொள்கிறேன்'' என்றார்.

சசிசேகரன் மேலும் சொன்னான்.



''அது மட்டுமில்லாமல் என் தந்தையார் தனது நெருங்கிய நண்பர் விஸ்வேஸ்வரனிடம் எல்லா விவரங்களையும் பகிர்ந்து கொள்வார். என் தந்தையின் இறப்புக்கு முன்பாக சென்னையிலிருந்து வந்து பார்த்து விட்டுச் சென்றிருக்கிறார். அந்த முறை வரும்போது பத்திரங்களைக் கொண்டு வர மறந்து விட்டதாகவும், அடுத்த முறை கொண்டு வந்து கொடுப்பதாகவும் சொல்லிச் சென்றிருக்கிறார். அவர் அந்தப் பத்திரங்கள் என்னிடம் கொடுப்பதற்காக சமீபத்தில் போன் செய்தபோது சொன்னார். கண்டிப்பாக உங்கப்பாவுக்கு உயில் எழுதற ஐடியாவெல்லாம் இல்லை. அப்படி ஏதாவது இருந்திருந்தால் அவர் என்கிட்டே சொல்லியிருப்பார்'' என்று சொன்னார்.

கிருபாகரன் வெகுவாக அதிர்ந்து போனார்.

ஜெயராம் அடுத்த கேள்வி கேட்டார்.

''சரி! ஒருவேளை உயில் உண்மையாக இல்லாமல் இருந்தால் அப்படி ஒரு உயிலை யார் தயாரித்திருப்பார்கள் என்று நினைக்கிறீர்கள்? உங்கள் சித்தியின் மீது குற்றம் சாட்டுகிறீர்களா?''

மங்களம் ஆழ்ந்த அமைதியுடன் பார்த்துக் கொண்டிருந்தார். மாலினியும் நகத்தைக் கடித்துக் கொண்டு படபடப்புடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

சசிசேகரன் அலட்டிக் கொள்ளாமல் சொன்னான். "இல்லை! கண்டிப்பாக இல்லை! இப்போது கேட்டாலும் சொத்துக்கள் முழுவதும் என் பேரில் எழுதி வைத்து விடுவார்கள். என் தாயைக் காட்டிலும் என் மேல் பிரியம் வைத்து வளர்த்தவர்கள்'' என்றான்.

மங்களத்தின் கண்களில் இருந்து மௌனமாக ஆனந்தக் கண்ணீர் வடிந்தது.

சசிசேகரன் முகத்தில எந்த உணர்ச்சியையும் காட்டா மல் பார்த்து விட்டு வழக்கறிஞரை நோக்கித் திரும்பிக் கொண்டான்.

கிருபாகரன் ஒருவிதமான எரிச்சலுடன் மங்களத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

நீதிபதி கேட்டார்!

''உயில் சம்பந்தமாக எதிரெதிராக நிற்கிறவர்களே ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்காமல் பேசுகிறீர்கள். மிஸ்டர். ஜெயராம் நீங்கள் எதை நிரூபிக்க விரும்பு கிறீர்கள்!'' என்று கேட்டார்.

''கனம் கோர்ட்டார் அவர்களே! இரண்டு தரப்பின ருக்கும் சம்பந்தமே இல்லாமல் மூன்றாவதாக ஒரு தரப்பு இந்த உயில் விஷயத்தில் விளையாடி இருக்கிறார்கள் என்பதை நிலை நாட்டவே நான் விரும்புகிறேன்.

முதலாவதாக உயில் எழுதி வைக்கிற ஒருவர் தனது வசம் இருக்கிற எல்லா சொத்துக்கள் பற்றியும் அதில் குறிப்பிட்ட உயில் எழுதியிருக்க வேண்டும். அப்படிக் குறிப்பிடவில்லை என்பது மிகவும் விசித்திரமாக உள்ளது.

இரண்டாவதாக எந்த மகனுக்கு அந்த உயிலில் சொத் துக்கள் இல்லை என்று குறிப்பிட்டிருக்கிறாரே எந்த மகனுக்கு இந்த உயிலின் மூலம் அநீதி இழைக்கப் படுகிறதோ அந்த மகனுக்கு இரண்டு மாதங்களுக்கு முன் எதற்காக சொத்து வாங்கி வைக்க வேண்டும். அதுவும் பிறந்த நாள் பரிசாகக் கொடுக்க முடிவெடுத்திருக்க வேண் டும். சென்னையில் வீடு வேறு வாங்கியிருக்கிறார். இந்த விவரங்கள் தெரியாமல் அந்த மூன்றாவது தரப்பார் இந்த உயில் விளையாடி இருக்கிறார்கள் என்கிறேன்.



மூன்றாவதாக உயில் தயாரிக்கிற எவரும் சாட்சிகளுக்கு ஒன்றிரண்டு பேரை வைத்துக் கொள்ள மாட்டார்களா? வாதி சசிசேகரனுக்கு இந்த உயில் பற்றித் தெரியவில்லை! பிரதிவாதி மங்களத்தம்மாவுக்கும் இந்த உயில் பற்றித் தெரியவில்லை. இது புதிராக உள்ளது.''

''சரி..! நீங்கள் என்ன சொல்ல வருகிறீர்கள்?''

''கனம் கோர்ட்டார் அவர்களே! இந்த உயில் பொய்யான உயில் என்று அதில் உள்ள கையெழுத்து திருவாளர். மருதமுத்து அவர்களது அல்ல என்றும் என் வாதத்தை வைக்கிறேன்.''

''......''

''அப்படி அந்த உயில் உண்மையானது என்றால் அதை எதிர்க்கட்சி வழக்கறிஞர் நிரூபிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.''

''அப்படியானால்... அப்படியொரு பொய் உயிலை யார் தயாரித்தார்கள்? எதற்காகத் தயாரித்தார்கள்'' என்றார் நீதிபதி.

''கனம் கோர்ட்டார் அவர்களே! உயில் எழுதும் போது நான் மட்டும்தான் இருந்தேன் என்று எதிர்க்கட்சி வழக்கறிஞர் கிருபாகரன் அவர்கள்தான் பெருமையாக இந்த நீதிமன்றத்தில் சொல்லிக் கொண்டார். அவர்தான் அதை அறிந்திருக்க வேண்டும்'' என்று ஜெயராம் தன் வாதத்தை முடித்துக் கொள்ள நீதிபதி,

''உயிலின் கையெழுத்து உண்மையானதுதானா என்று நிரூபிக்கக் கையெழுத்து நிபுணர்களிடம் கருத்துக் கேட்க ஆணையிட்டு விட்டு வழக்கை ஒத்தி வைத்தார்.

கிருபாகரன் முகத்தில் வியர்வை முத்து முத்தாக அரும்பி யிருந்தது. கைகள் நடுங்க முகத்தைத் துடைத்துக் கொண்டார்.

கோர்ட்டில் இருந்து வெளி வருகிற நேரம்.

''அண்ணா! வீட்டுக்கு வாண்ணா!'' என்றாள் மாலினி.

மங்களத்தம்மாள் மகளிடம் எதுவும் பேசாமல் போய்க் காரில் ஏறிக் கொண்டார். மாலினியும் குணசேகரனும் நின்று பேசிவிட்டுப் புறப்பட்டார்கள்.

மாலினி காரில் ஏறும்போது சுற்று முற்றும் பார்த்தாள்.

''எங்கம்மா.. லாயர்!'' எனும் போதே கிருபாகரன் வந்தார்.

''மாலினி! நீங்க வீட்டுக்குப் போங்க! நான் சாயங்காலம் வர்றேன்'' என்றார்.

''ஏம்மா! அண்ணன்கிட்டே பேசியிருக்கலாமில்ல! உன்னைப் பத்தி அவ்வளவு நல்லா சொன்னாரில்லே!'' என்றாள் மாலினி.

மீண்டும் அம்மாவின் கண்களில் கண்ணீர் வழிந்தது.

''வேண்டாம்மா.. மாலினி! அப்புறம் அவன் முன்னாலயும் இப்படித்தான் அழுவேன்'' என்றார்.

அதே நேரம்!

காருக்கருகில் மகன் வருவதைப் பார்த்தார். சசிசேகரன் காருக்குள் குனிந்து எட்டிப் பார்த்தான்.

''சித்தி! ஒண்ணும் வொரி பண்ணிக்காதே! ஒரே மாசம்தான்! எல்லாம் முடிவுக்கு வந்துரும்'' என்றான்.

சித்தி ஒன்றும் பேசவில்லை! ஆனால் சசிசேகரனின் கைகளின் மேல் தன் கைகளை மட்டும் அழுத்தமாக வைத்துக் கொண்டார்.

ஒரு நிமிடம் அப்படியே இருந்தார். கண்களில் மட்டும் கண்ணீர் வழிந்தபடி இருந்தது.

''ஐயோ.. சித்தி! என்ன இது!'' என்று சிரித்த சசிசேகரன் கையை மெல்ல விடுவித்துக் கொண்டான்.



''டிரைவர்.. வண்டியை எடுப்பா!'' என்றான்.

டிரைவிங் சீட்டில் அமர்ந்திருந்த குணசேகரன் அண்ணனை செல்லமாக முறைத்து விட்டு வண்டியை எடுத்தான்.

''என்ன சார் கேஸ் இது! எல்லாக் கேஸ்லயும் வாதியும், பிரதிவாதியும் அடிச்சுக்காத குறையா முறைச்சுக்குவாங்க. இங்க என்னடான்னா.. பாசம் பொங்குது!'' என்று சிரித்தார் ஜெயராமன்.

சசிசேகரனும் சிரித்தான்.

''ஜெயராம் சார்! ரொம்ப நல்லாக் கொண்டு போனீங்க..! அடுத்தது என்ன?'' என்றான் சசிசேகரன்.

''சார்! அநேகமா அடுத்த ஹியரிங்குக்குள்ள கேஸ் முடிவுக்கு வந்துரும். நான் ரொம்ப நாளா எதிர்பார்த்து கிட்டிருந்த துருப்புச் சீட்டு என் கைக்குக் கிடைச்சுடும்'' என்றார் ஜெயராம்.

அதே சமயம்!

ஒருவிதமான கிலியுடன் கிருபாகரன் வந்து கொண்டிருக்க பின்னாலிருந்து ஒரு கை அவரது தோள் மேல் விழுந்தது.

''அரண்டவனுக்கு இருண்டதெல்லாம் பேய்!'' என்பது போலத் திடுக்கிட்டுத் திரும்பினார்.

தன் பின்னால் நின்று கொண்டிருந்த உருவத்தை அவர் சத்தியமாய் எதிர்பார்க்கவில்லை.

# 21



''அப்பா! நான்தான்!'' என்றான் அழகேசன்.

ஆசுவாசப் பெருமூச்சு விட்டார் கிருபாகரன்.

''அப்பா! நீங்க இன்னைக்குக் கார் ஓட்ட வேண்டாம்! நானே ஓட்டறேன்'' என்றான்.

அழகேசன் அப்படி வந்து நின்றது அவருக்கு ஆறுத லாக இருந்தது.

தான் போட்ட திட்டமெல்லாம் கண் முன்னாலேயே மாறிக் கொண்டிருப்பதைப் பார்த்துக் கொஞ்சம் அதிர்ந்து தான் போனார்.

கட்டிய கோட்டையெல்லாம் மண் கோட்டையாகப் போய் விட்டதே என்ற அதிர்ச்சி ஒரு பக்கம்!

இன்னொரு பக்கம்! தன்னை ஜன்ம எதிரியாக நினைக்கிற தொழில் போட்டிக்காரர் ஜெயராமிடம் போய் இப்படி ஒரு ரகசியம் சிக்கிக் கொள்கிறதே! என்னென்ன செய்வானோ என்ற பயம் ஒரு பக்கம்!

அழகேசன் காரை ஓட்டிக் கொண்டே சொன்னான்.

''அப்பா! பேசாம கேஸை வாபஸ் வாங்கிக்குங்க'' என்றான்.

கிருபாகரன் மௌனம் சாதித்தார்.

''அப்பா! நான் சொல்ல வேண்டியதில்லை. உங்களுக்கே தெரியும். ஜெயராம் கிட்டத்தட்ட உண்மைக்குப் பக்கமா வந்துட்டார். அவங்களா நிரூபிச்சாங்கன்னா... கிரிமினல் குற்றமாயிடும். போலி உயில் தயாரிச்சது ஃபோர்ஜரி அப்படி இப்படீன்னு..!'' என்றார்.

''அது ஒண்ணும் போலி உயில் இல்லே!'' என்றார் கிருபாகரன் குப்புற விழுந்தும் மீசையில் மண் ஒட்ட வில்லை என்பது போல. அழகேசன் திரும்பி அப்பாவைப் பார்த்தான்.

பிறகு அந்த உண்மையைச் சொன்னான். கிருபாகரன் அதிர்ந்து போனார்.



''ஆமப்பா! அன்னைக்கே எனக்குத் தெரியும்'' என்றான்.

கிருபாகரனுக்கு கிடுக்குப் பிடியில் மாட்டிக் கொண் டாற்போல இருந்தது.

''இத்தனையும் எதுக்காகப்பா செஞ்சே! சொத்துக்காகத் தானே! அதை வேற வழியில அடைய முடியுமான்னு பார்க்கலாம்'' என்றான்.

''வேற வழின்னா?'' என்றார்.

அழகேசன் சிரித்தான்!

''அடப் போங்கப்பா! எல்லாத்தையும் விவரமாவா சொல்ல முடியும்?''

''ஓ! நீ மாலினி கூட உனக்குள்ள பிரண்ட்ஷிப் பத்தி சொல்றியா?'' என்றார் ஆர்வமாக.

அழகேசன் அவரைப் பார்த்துப் புன்னகைத்தான். ''ஆம்!'' என்றும் சொல்லவில்லை. இல்லையென்றும் சொல்லவில்லை. ஆனாலும் கிருபாகரன் உற்சாகமானார்.

''சரிப்பா! நான் அவங்ககிட்டே பேசறேன்.''

''யார் கிட்டே?''

''மங்களத்தம்மாகிட்டே!''

''அவங்க கிட்டே பேசி வேலையாகாது. சசிசேகரன் சார் கிட்டே பேசுங்க..! அதுதான் வொர்க் அவுட் ஆகும்.''

''அவன் கிட்டயா?''

''ஏன்?''

''அவன் சும்மாவே என்னைப் பாக்கும்போது நக்கலாத் தான் பாக்கறான். இனி சமரசத்துக்கு வேற போகச் சொல்றே?''

''ஆமப்பா! வேற வழியே இல்லை. ஆப்போசிட் வக்கீல் தெரியுமில்ல. ஜெயராம். இப்பவே நீங்க கம்பிக்குப் பின்னால நிக்கற மாதிரிக் கற்பனை பண்ணிச் சந்தோஷப் பட்டுகிட்டிருப்பாப்ல..!'' என்றான்.

கிருபாகரனுக்குள் ஒருவித நடுக்கம் ஓடி மறைந்தது.

''செஞ்சாலும் செய்வான்'' என்று எண்ணிக் கொண்டார்.

''ஏம்ப்பா! உங்களுக்கும், அந்த ஜெயராமுக்கும் என்ன அப்படி ஒரு பகை!'' என்றான் அழகேசன்.

''அது ஒண்ணுமில்லிடா! வக்கீல் ராஜகோபாலன் இருக்காரில்லே! அவருகிட்டே இவன் ஜூனியரா சேர்ந்தான். நானும் அவர் கூட கொஞ்ச நாள் அசோசியேட் மாதிரி இருந்தேன். அப்ப இவனைப் பற்றி ஏதோ நான் சொல்ல ராஜகோபாலன் இவன்கிட்ட ரொம்பக் கோவிச்சகிட்டார். இவனுக்குக் கோபம் வந்து வெளியே வந்துட்டான். அதுக்கப்புறம் அவர் மறுபடியும் கூப்பிட்டாரு. ஆனா, இவன் வர்லே! அவ்வளவு பெரிய வக்கீல்கிட்டே ஜூனியரா இருந்து கொஞ்ச நாள் பிராக்டீஸ் பண்ண முடியாமப் போச்சேன்னு என் மேல கோபம்'' என்றார். விஷயத்தை லேசாகச் சொல்வது போல.

அழகேசனுக்கும் புரிந்தது.

அப்பா ஜெயராமுக்குப் பெரிய அளவில் இடைஞ்சல்கள் செய்திருக்கிறார் என்று.

''இப்போது அதையெல்லாம் பேசுவதற்கு நேரம் இல்லை!'' என்று பேச்சை மாற்றி விட்டான்.

''சரிப்பா! என்னவோ இருக்கட்டும். நீங்க சசிசேகரன் கிட்டே பேசித்தான் ஆகணும். வேற வழியில்லே'' என்றான் அழகேசன் அழுத்தமாக.

''சசிசேகரனிடமா?'' என்ற பயம் தோன்றியது.



ரொம்பவும் முட்டாள்தனம் செய்து விட்டோமா என்று தோன்றியது. ரொம்ப நாளாக் குடும்ப லாயராக இருக்கிறோம். அதனால உயில் என்று சொன்னால் நம்பிக் கொள்வார்கள் என்று நினைத்து விட்டார்..

ஆசை யாரை விட்டது? ஒரேயடியாக சசிசேகரனை ஒதுக்கி விடாமல் அவனுக்கும் ஒரு பங்கு கிடைக்கிற மாதிரிச் செய்திருந்தால் இந்தப் பிரச்சினை வந்திருக்காதோ..!

அது சரி! அவனை வெளியேற்றினால்தானே தான் காலூன்ற முடியும். ஆனால் மருதமுத்து உயிரோடு இருக்கிற வரைக்கும்.

''போப்பா! நிர்வாகமா? நீங்களே பாத்துக்குங்க'' என்று சொல்லி விட்டு விளையாட்டுப் பையனாக இருந்து விட்டான். அதே போலத் தன் காலத்திலும் இருப்பான் என்று நாம் எப்படி எதிர் பார்க்க முடியும்?

இப்போது எப்படி பாயிண்ட், பாயிண்ட்டாகப் பாத்து அடிக்கிறான்.

வேறு வழியில்லை!

அழகேசன் சொன்னதுதான் சரி! சாட்சிக்காரன் காலில் விழுவதைக் காட்டிலும் சண்டைக்காரன் காலிலே விழுவதே மேல் என்று எண்ணிக் கொண்டார்.

அன்றிரவு!

எட்டு மணிக்கு மேல் சாப்பிட்டு விட்டு வந்து அந்தத் திண்ணை ஹாலில் இருந்த மூங்கில் சேரில் சாய்ந்து அமர்ந்திருந்த சசிசேகரன் செல்போன் ஒலிக்கவும் எடுத்தான்.

''நான் கிருபாகரன் பேசறேன்'' என்ற குரல் கேட்டது. அதற்கு சசிசேகரன் காட்டிய பிரதிபலிப்பு.

கிருபாகரனுக்கு முகத்தில் அடித்தாற்பால இருந்தது.

* * *

அன்றைக்குக் காலையில் இருந்தே ஏதோ ஒரு பக்கம் காலியாக இருந்தாற் போலவே உணர்ந்தான் சசிசேகரன்.

இன்றைக்கும் காலையிலேயே மதுரவாணி வருவாள் என்று எதிர்பார்த்தான். வரவில்லை!

எப்போதும் வழக்கு விசாரணை முடிந்த பிறகு அன்று மாலையே அவளைச் சந்திப்பாள்.

விசாரணை எப்படிப் போயிற்று என்று விசாரிப்பாள்.

இன்றைக்கு வரவில்லை!

இன்றைக்கு மட்டுமல்ல! நேர்முகத் தேர்வு முடிந்ததற்குப் பிறகு அவளைக் காணவேயில்லை.

''ஏன் அப்படி?''

ஒருவேளை கொடிமலரின் அப்பாயின்மென்ட்டுக்கும் தங்கள் விஷயத்துக்கும் முடிச்சுப் போட்டுக் கொள்கிறாளோ!

தங்கள் விஷயம் என்ன தங்கள் விஷயம்?

நாமதான் சொல்லிகிட்டிருக்கோம்..! அந்தப் பக்கம் ஒப்புதலும் வரவில்லை! மறுப்பும் வரவில்லை!

மறுப்பு ஒன்றும் வராததால் ஒப்புதல்தான் என்று நினைத்துக் கொண்டிருந்தான். அப்படியில்லாமலும் போய்விடக் கூடுமல்லவா!

குழப்பமடைந்தான்!

சரியாக அந்த நேரம் கிருபாகரன் அழைத்தார். சசிசேகரன் சட்டென்று முகத்தில் அடித்தாற் போலச் சொல்லி விட்டான்.

''மிஸ்டர். கிருபாகரன்! நான் இப்ப உங்களோட பேசற மூடில இல்லை!'' என்று.

கிருபாகரன் முகம் வாடியபடி போனை வைத்து விட்டார்.



ஆறு மணியாகி விட்டது.

இதற்கு மேலும் மதுரவாணி வருவாள் என்று தோன்றவில்லை.

அவனே பைக்கை எடுத்துக் கொண்டு புறப்பட்டான். புறப்பட்ட பிறகுதான் தோன்றியது.

''என்னவென்று சொல்லிக் கொண்டு நேராக அவள் வீட்டிற்குப் போவது?'' என்று.

நேராக நடேசன் வீட்டிற்குப் போனான்.

''வாங்க தம்பி!'' என்று மகிழ்ச்சியாக வரவேற்றார் நடேசன்.

''சும்மாதான்! அன்னைக்கே அத்தை அடிக்கடி வீட்டுக்கு வாங்கன்னு சொன்னாங்க!'' என்று விளக்கம் வேறு சொல்லிக் கொண்டான்.

வழக்கமில்லாத வழக்கமாக அரைமணி நேரத்துக்கு மேல் இருந்தான்.

ராதாமணி செய்து கொடுத்த சுண்டலைச் சாப்பிட்டு காபி குடித்து.. ம்ஹூம்! மதுரவாணி எட்டிக் கூடப் பார்க்க வரவில்லை!

பொறுக்க முடியவில்லை! கேட்டே விட்டான்.

''ஏம் மாமா! மதுரவாணி எங்கே ரெண்டு மூன்று நாளா ஆளையே காணோம்'' என்று.

நடேசனுக்கு அப்போதுதான் விஷயமே புரிந்தது. அவன் வருகை இவ்வளவு நேரம் இங்கே தங்கியது எல்லாவற்றுக்கும் காரணம் புரிந்தது.

உள்ளுக்குள் சிரித்துக் கொண்டார்.

''அது தம்பி! ரெண்டு நாள் அவங்க ஊருக்குப் போச்சு. இன்னைக்குத்தான் வந்தது. என்னமோ உடம்பு சரியில்லேன்னு சொல்லுச்சு'' என்றார்.

''உடம்பு சரியில்லையா?'' அவனது மனம் பதை பதைத்துப் போனது.

''என்ன. என்ன உடம்புக்கு?'' என்றான்.

எவ்வளவோ அடக்கி பார்த்தும் பரபரப்பு வெளிப் படவே செய்தது.

''இருங்க தம்பி! வந்தர்றேன்'' என்று போனார்.

ராதாமணி சற்று நேரம் பேசிக் கொண்டிருந்தார். போன நடேசன் சும்மா வரவில்லை. மதுரவாணியையும் அழைத் துக் கொண்டு வந்தார்.

மதுரவாணியின் முகத்தில் லேசான களைப்புத் தெரிந்தது.

''ஒண்ணும் இல்லே! சும்மா லைட் ஃபீவர்தான்'' என்றாள்.

அவன் முகத்தை நேராகப் பார்க்கவில்லை!

''உட்காரு! உட்காரு!'' என்றான்.

நடேசன் இங்கிதம் தெரிந்தவராக உள்ளே போனார்.

மதுரவாணி தயக்கத்துடன் அமர்ந்தாள்!

''மதுரா! எப்பவுமே ஹியரிங் முடிந்தவுடனே விவரம் கேட்க வருவே! இண்டர்வ்யூ முடிந்ததுக்கப்புறம் ஆளைக் காணலே! ஒருவேளை இண்டர்வ்யூதான் காரணமோன்னு பதைச்சுப் போயிட்டேன்'' என்றான்.

அவள் அவன் முகம் பார்க்கவில்லை!

''அப்படியெல்லாம் இல்லே!''

''சரி...! நாளைக்கு வர்றியா?'' என்றான்.

''ஞாயிற்றுக்கிழமை வர்றேன்.''

''வேண்டாம்! உனக்கே உடம்பு சரியில்லே! சாப்பாடு கொண்டு வர்லேன்னா பரவாயில்லே! நான் மாதை



யனையே செஞ்சுக்கச் சொல்றேன். நாளைக்கு சும்மா வர்றியா?'' என்றான்.

''சரி...'' என்று தலையாட்டினாள்!

வீட்டுக்கு வந்த சசிசேகரனுக்குத் தன்னைக் குறித்து ஆச்சரியமாக இருந்தது.

முக்கியமான போன் அழைப்பு!

கிருபாகரன் கூப்பிட்டிருக்கிறார் பேசியிருந்தால் ஒரு வேளை பிரச்சினைக்கே தீர்வு கிடைத்திருக்குமோ என்னவோ அதை விட்டு விட்டு அவளைப் பார்ப்பதற்காக ஓடுகிறோமே...''

இது என்னது இது! என்று சிரித்துக் கொண்டான்.

கோபமாகவும் வந்தது!

ஒருவேளை! இப்படியெல்லாம் நடந்துகிட்டா... அப் பாயின்ட்மென்ட் தங்கைக்கே கிடைக்கும்னு நினைக் கிறாளோ!

இப்படி நினைப்பதோடு விட்டிருக்கலாம்! மாறாக மறுநாள் அவள் வந்த போது கேட்டும் விட்டான்.

மதுரவாணி சற்றே தளர்ந்தாற்போல் இருப்பதைப் பார்த்தவுடனே அவனுக்கு ஒரு மாதிரி இருந்தது.

''மதுரா! உட்காரு!'' என்று உபசரித்தான்.

''என்ன ஆச்சு மதுரா! ரெண்டு மூணு நாளா ஆளைக் காணோம்'' என்றான்.

அவள் அமர்ந்தாள்!

''என்ன சாப்பிடறே'' என்று உபசரித்தான்.

''ஏன்.. மதுரா... என் மேல ஏதாவது வருத்தமா?'' என்றான்.

"இல்ல! ஒரு விதமான தர்ம சங்கடம்'' என்றாள்.

"என்ன.. தர்ம சங்கடம்! ஓ! அப்பாயின்ட்மெனட் மேட்டரோ!'' என்றான்.

"ம்...!'' என்றாள்.

சட்டென்று அவனுக்குள் ஒரு ஏமாற்றம் நிலவியது. தன் மனம் கவர்ந்த பெண் தன்னை இப்படி பிளாக்மெயில் செய்வது போல் நடந்து கொள்வாள் என்பது அவன் எதிர்பாராதது.

"மதுரா...! உன்கிட்டே நான் இதை எதிர் பார்க்க வில்லை...!'' என்றான்.

"எது?'' என்பது போல் பார்த்தாள்!

"அப்பாயின்ட்மென்டையும் என் பிரபோசலையும் மிக்ஸ் அப் பண்றது?''

அவள் பரிதாபமாகப் பார்த்தாள்!

"நீ என்ன நினைக்கறே! ரெண்டு மூன்று நாளைக்கு... என்னைப் பார்க்காம பிளாக்மெயில் பண்ணினா... அப்பாயின்ட்மென்ட் குடுத்துடுவேன்னா?'' என்றான்.

மதுரவாணி சட்டென்று எழுந்து நின்றாள். அவனை வெறித்துப் பார்த்தாள்.

கண்களில் கண்ணீர் நிறைந்தது.

"என்ன சொன்னீங்க!'' என்றாள்.

அவன் தயக்கத்துடன் பார்த்து விட்டுப் பிறகு சொன்னான்.

"இல்லே! அப்பாயின்ட்மென்டுக்காக பிரஷர் குடுக்கறியோன்னு நினைச்சேன்'' என்றான்.

அவள் சரேலென்று வெளியேற முற்பட்டாள்.



அவன் தன்னையும் மறந்தவனாக அவள் தோளை எட்டிப் பிடித்தான்.

அவள் சட்டென்று தோளில் பதிந்திருந்த அவன் கையைப் பார்த்தாள்!

உதடுகள் நடுங்க ''ப்ளீஸ்! கையை எடுங்க.. சசி!'' என்றாள்.

அவன் திகைத்துப் போய்க் கையை எடுத்தான்.

அவள் வேக நடையில் நடந்து செல்வதை ஒருவிதக் கையாலாகத் தனத்துடன் பார்த்தான்.

'தான் என்ன தவறாகச் சொல்லிவிட்டோம். அவசர மாக வார்த்தையை விட்டு விட்டோமோ? இல்லை! அவளே அப்பாயின்ட்மேட்டருக்கும் தான் வராததற்கும் தொடர்பு இருக்கிறது என்று ஒத்துக் கொண்டாள்தானே! அதற்குப் பிறகுதானே அந்தக் கேள்வியைக் கேட்டோம்.''

'சே! இந்தப் பெண்களையே புரிஞ்சுக்கமுடியலைடா சாமி' என்று நொந்து கொள்ளும் போதுதான் அது உறைத்தது.

''சசி!'' என்று அழைத்திருந்தாள்!

முதன் முறையாக!

ஒரு பக்கம் மகிழ்ச்சி பொங்கினாலும் இன்னொரு பக்கம் அப்படி அழைத்தது எந்தச் சூழ்நிலையில் என்று நினைக்க வருத்தமாக இருந்தது.

அதே நேரம்!

மறுபடியும் செல்போன் ஒலித்தது எடுத்தான்.

கிருபாகரன்!

சலிப்புடன் காதுக்குக் கொடுத்தான்.



# 22

இரண்டு மூன்று நாட்களாகி விட்டது!

அந்த வெடிப்புக்குப் பிறகு இரண்டு மூன்று நாட்களாகி விட்டது.

மதுரவாணி கண்ணில் படவேயில்லை. அடுத்த நாள்!

அவள் பள்ளிக்குச் செல்கிற நேரம் பார்த்து அவனும் போனான். நேரத்திலேயே வந்து விட்டுப் போய் விட்டதாகச் சொன்னார்கள்.

அடுத்த நாள், கொஞ்சம் முன்னாலேயே போனான்.

அரை மணி நேரத்துக்கு மேல் பள்ளி விவகாரங்கள் பற்றிப் பேசி விட்டுத் திரும்பினான்.

கண்ணில் படவேயில்லை.

இப்போதெல்லாம் கொடிமலரிடம் கொடுத்தனுப்பி விடுவதாகச் சொன்னார்கள்.

எதைப் பார்த்தாலும் கோபமாக வந்தது!

இத்தனைக்கும் கடந்து இரண்டு நாட்களில் மிகப் பெரிய ஒரு விஷயத்தை முடிவுக்குக் கொண்டு வந்திருந்தான்.

அன்றிரவு!

கிருபாகரனின் போன் வந்த போது சலிப்போடுதான் செல்போனுக்குக் காதைக் கொடுத்தான்.

கிருபாகரன் பேசிய விஷயங்கள் கேட்டு சுறுசுறுப்பாய் நிமிர்ந்தான்.

''தம்பி! நான் உங்ககிட்டே பேசணும்!'' என்றார் கிருபாகரன்.



''பேசுங்க!'' என்றான் அலட்சிய பாவனையோடு.

''இல்ல தம்பி! நேர்ல பேசணும்!'' என்றார்.

''நாம என்ன அரசு அதிகாரிகளா? நம்ம விஷயத்தை யாரும் ஒட்டுக் கேட்டுடுவாங்களோன்னு பயப்படறதுக்கு...'' என்றான் நக்கலாக.

''இல்ல.. தம்பி! சில விஷயங்களை நேரில பேசறது தான் நல்லது!''

''சரி.. நீங்க... இங்க... வாங்க!'' என்றான்.

''இல்ல தம்பி! உங்க இடத்துலயும் வேண்டாம். ஊர்ல உங்க பங்களாவுலயும் வேண்டாம். வேற எங்கயாவது சந்திப்போம்...''

''ம்...'' என்று இழுத்தான். ஆனால் முடிவு சொல்லவில்லை.

''தம்பி!'' என்று மறுபடியும் இழுத்தார்.

அந்த இழுப்பில் ஒரு தயக்கம் தெரிந்தது.

''ம்.. சொல்லுங்க...!'' என்றான்.

''தம்பி! நாம ரெண்டு பேர் மட்டும் பேசணும்! நீங்க... நீங்க.!''

''ம்...''

''நம்ம சந்திப்பு பத்தி ஜெயராம்கிட்டே எதுவும் சொல்ல வேண்டாம்...''

''அதெப்படி? என்னோட லாயர்கிட்டே கன்சல்ட் பண்ணாம நான் எப்படி உங்களைச் சந்திக்கறது.''

''தம்பி! ப்ளீஸ்! இந்தத் தடவை நீங்க என்னைச் சந்திக்கறப்ப எல்லாம் நல்லதாத்தான் முடியும்...''

''ம்...'' என்று முன் கழுத்துப் பகுதியைக் கீழிருந்து மேலாக நீவிக் கொண்டான்.

சிந்திக்கும் போது அந்த மாதிரி நீவிக் கொள்வது அவன் வழக்கம்.

''சரி! இடம் சொல்லுங்க!'' என்றான்.

சொன்னான்.

சந்தித்தார்கள்.

''தம்பி! மங்களத்தம்மா கிட்டே சொல்லி கேஸை வாபஸ் வாங்கிக்கறோம்...'' என்றார் கிருபாகரன்.

சசிசேகரன் உள்ளுக்குள் சிரித்துக் கொண்டான்.

என்னதான் கிருபாகரன் அவனிடம் கிட்டத்தட்டக் கெஞ்சியிருந்த போதும் அவன் தன் பங்குக்கு ஜெயராமை சந்தித்துப் பேசி விட்டுத்தான் வந்திருந்தான்.

''சார்...! நான் இதை எதிர்பார்த்தேன்'' என்றார் ஜெயராம்.

''நானும்தான்'' என்று சிரித்தான் சசிசேகரன்.

''என்ன பேசுவாரு'' என்று கேட்டான்.

''வேறென்ன பேசுவாரு...! கேஸை வாபஸ் வாங்கிக் கறேன் பாரு...'' என்றார் ஜெயராம்.

''என்ன செய்யலாம்!''

''கேஸை வாபஸ் வாங்கினீங்கன்னா... பிரச்சினை தீரும். ஆனா, எனக்கும் கிடைச்ச அருமையான ஒரு வாய்ப்புப் பறிபோகும்.''

''எப்படி?'' என்றான் சசிசேகரன் புரியாதது போலவே.

''ஆமா... சார்! அந்த ஆள் செஞ்சிருக்கிற வேலை எப்படிப்பட்ட வேலை தெரியுங்களா? கிரிமினல் வேலை!



இதை மட்டும் நிரூபிச்சா... பார் கவுன்சில்ல இருந்தே நீக்கிடுவாங்க... என் நெடுநாள் கோபம் தீரும்!'' என்றார் ஜெயராம்.

''எனக்கும் அந்த அளவுக்குக் கோபம் இருக்கு...! ஆனா...'' என்று இழுத்து நிறுத்திவிட்டு சசிசேகரன் ஜெயராமின் முகத்தைப் பார்த்தான்.

ஜெயராம் அதே போல ஆழ்ந்து பார்த்துக் கொண்டிருந்தார்.

''ஜெயராம்... சார்! அவங்கப்பா எங்கப்பா காலத்துல இருந்து எங்க குடும்ப லாயர். அந்த நன்றிக்காக பார்க்க வேண்டியிருக்கு...'' என்றான்.

ஜெயராம் நீண்டதொரு பெருமூச்சு விட்டார்.

சசிசேகரன் மீண்டும் சொன்னான்.

''நீங்க... யங்கா இருக்கீங்க! உங்களுக்கு முன்னேறுவதற்கு எத்தனையோ வாய்ப்புக்கள் இருக்கு. ஆனா, அவருக்கு இந்தக் கெரியர் போச்சுன்னா வேற வாய்ப்புகளே இல்லை...'' என்று.

ஜெயராம் மறுக்கவில்லை!

ஒரே ஒரு ஆலோசனை சொன்னார்.

சசிசேகரன் முதலில் தயங்கினான்.

''சார்! எனக்காக! என் பாதுகாப்புக்காக ஃப்யூச்சர்ல அவரு என் லைன்ல கிராஸ் பண்ணாம இருக்கறதுக்காக...'' என்றார்.

''சரி...'' என்றான் சசிசேகரன்.

புறப்பட்டான்.

ஜெயராமின் அறையை விட்டு வெளியேறுகிற நேரம் ஜெயராம் அழைத்தார்.

''நலலா யோசிச்சு முடிவெடுங்க... சார்!'' என்றார் ஜெயராம்.

சசிசேகரன் நின்று அவர் முகம் பார்த்தான்.

''ஜெயராம்! சில நேரங்கள்ல மன்னிப்பை விடப் பெரிய தண்டனை எதுவும் இல்லே....!'' என்றான்.

ஜெயராம் சிரித்தார்.

''ஆமா... அதுக்காகத்தான் நானும் ஒத்துக்கறேன்'' என்றார்.

இப்போது கேட்டான்.

''நீங்க சொன்னா... எங்க சித்தி ஒத்துப்பாங்களா?'' என்று.

''அதெல்லாம் ஒத்துக்குவாங்க...!'' என்றார் கிருபாகரன்.

''அது சரி...! ஏன் இந்த முடிவு...!'' என்றான் ஒருவிதமாக அவரைப் பார்த்தபடி.

கிருபாகரன் அவன் முகம் பார்த்துப் பேசத் துணிவில்லாதவர் போல அங்கும், இங்கும் பார்த்துக் கொண்டு சொன்னார்.

''இல்லே! இந்தக் கேஸைக் கண்டின்யூ பண்றதுல ஒருவித அர்த்தமும் இல்லேன்னு அன்னைக்கே ஜட்ஜ் சொல்லிட்டாரு...'' என்றார்.

''ம்...! எப்படி?''

''இல்லே! மங்களத்தம்மா என் மகனுக்கே பூரா சொத்தையும் குடுக்கறதுல எந்த விதமான ஆட்சேபணையும் இல்லேங்கறாங்க! ஒத்துப் போகணும்னு நினைக்கிற ரெண்டு பார்ட்டிக்கு நடுவுல எதுக்குக் கேஸ்ன்னு எனக்கும் புரியலே!'' என்றார்.

உயிலைப் பற்றிய உண்மை நிரூபணமாகப் போகிறது என்ற பயத்தில் அதை விட்டு வேறு எதை எதையோ



பேசி சமாளிக்கப் பார்க்கிறார் கிருபாகரன் என்று புரிந்தது.

சசிசேகரன் ஒரு விதமாகச் சிரித்தபடி சொன்னான்.

''கிருபாகரன் சார்! நீங்க உண்மை மட்டுமே பேசினீங்கன்னாத்தான் நான் கேஸை வாபஸ் வாங்கறது பத்தி யோசிக்க முடியும்?'' என்றான் கண்டிப்பான குரலில்.

கிருபாகரன் கொஞ்ச நேரம் அவனை வெறித்துப் பார்த்தார்.

சசிசேகரன் அலட்டிக் கொள்ளவில்லை.

கிருபாகரன் தீனமான குரலில் கேட்டார்.

''எந்த உண்மையை சொல்லச் சொல்றீங்க?'' என்று.

''எந்த உண்மையை? உயில் பொய்யான உயில்ங்கற உண்மையத்தான்...! அதில் இருக்கிற கையெழுத்து எங்கப்பாவோடதே இல்லைங்கற உண்மையைத்தான்'' என்றான்.

கிருபாகரன் சற்று நேரம் ஒன்றும் பேசவில்லை. சசிசேகரன் சற்றே வேகமான குரலில் தொடர்ந்தான்.

''எங்களோட அடுத்த ஸ்டெப்... அதை நிரூபிக்கறதுதான். எங்களோட லாயர் அதுக்காகத்தான் காத்திருக்காரு.''

கிருபாகரன் மறுபடியும் சொன்னார்.

''சார்! ஜெயராமுக்கும் எனக்கும் எப்பவுமே ஆகாது. அந்த எரிச்சல்ல இப்படியெல்லாம் சொல்றாரு...'' என்று.

''சரி.. விடுங்க! என்கிட்டேயும் எங்க அப்பாவோட கையெழுத்து இருக்கிற பத்திரம் இருக்கு! விஸ்வேஸ்வரன் மாமாகிட்டே இருக்கு! கையெழுத்து நிபுணர்

கள்ன்னு இருக்காங்க இல்லே! அவங்க உயில்ல இருக்கிற கையெழுத்துக்களும், இந்தக் கையெழுத்துக்களும் ஒண்ணுதான்னு நிரூபிக்கட்டும்'' என்றான்.

கிருபாகரன் சுத்தமாக பயந்து போனார்.

''ஆமா.. சார்! உண்மையை ஒத்துக்குங்க! நான் கேஸை வாபஸ் வாங்கறேன். நாங்க வெளியே பேசித் தீத்துக் கறோம்ன்னு கோர்ட்ல சொல்றேன். அதை விட்டுட்டு... ஒரே பிடியில நின்னிங்கன்னா... கோர்ட்ல சந்திப்போம்.''

கிருபாகரன் சற்று நேரம் அமைதியாக இருந்தார். சசிசேகரன் அலட்டிக் கொள்ளாமல் காத்துக் கொண்டிருந் தான்.

பிறகு ஒரு வழியாக இறங்கி வந்தார். ஒரு விதமான அவமான உணர்வு முகத்தில் பரவ சன்னமான நடுங்கும் குரலில் சொன்னார்.

''ஆமா.. தம்பி! அது பொய்யான உயில்தான்! நான் தயாரிச்ச உயில்தான்...!'' என்றார்.

''தட்ஸ் குட்!'' என்றான் சசிசேகரன் முகத்தை இறுக்க மாக வைத்துக் கொண்டு.

ஏதோ ஓட்டப்பந்தயம் ஓடிக் களைத்தவர் போல கிருபாகரன் தயங்கி அமர்ந்து விட்டார்.

அந்தக் கணத்தில் அவரைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. ஆனால் நோயாளிக்கு வலிக்கிறதே என்பதற் காக அறுவை சிகிச்சை நடத்தாமல் இருக்க முடியுமா என்ன?

''அது சரி! எதுக்காக என்னைக் கழட்டி விடப் பாத் தீங்க...'' என்றான் அதே இறுகிய குரலில்.



''தம்பி! நீங்க எப்படியும் கண்டு பிடிச்சுடுவீங்கன்னு ஒரு பயம்தான். நீங்க பிக்சர்ல இல்லேன்னாதான் மத்த எல்லாத்தையும்..'' என்று இழுக்க.

''உங்க கண்ட்ரோல்ல கொண்டு வர முடியும். ஆனா, மங்களத்தம்மா என் மேல இவ்வளவு பாசம் வச்சிருப் பாங்கங்கறது நீங்க எதிர்பாராதது. மாலினி இவ்வளவு புத்திசாலித்தனமா இருப்பாங்கறதும் நீங்க எதிர்பாராதது இல்லே!'' என்றான்.

இப்போது கிருபாகரன் நிமிர்ந்து உட்கார்ந்தார்.

''தம்பி! இப்பவும் நான் ஏன்.. தைரியமா இதைச் சொல்ல வந்தேன் தெரியுமா? கடவுள் வேற விதமா எனக்கு நன்மை செஞ்சுட்டார்.''

''எப்படி?'' என்பது போல் பார்த்தான் ஆனால் கேட்க வில்லை.

அவரே தொடர்ந்தார்!

''என் மகன் அழகேசனும், உங்க தங்கையும் நெருங்கிப் பழகறாங்க'' என்றார்.

''ம்...!''

''அதுக்கு நீங்க சம்மதிக்கணும்.''

''இல்லேன்னா...!''

''இல்லேன்னா... இது போலி உயில்னு நான் ஒத்துக்க மாட்டேன்...'' என்றார்.

''கிருபாகரன் சார்! ஒரு விஷயம் புரிஞ்சுக்குங்க. ஒரு வேளை என் சிஸ்டர் மாலினிக்கு உங்க மகனைப் பிடிச்சிருந்தா... அது வேற விஷயம். இந்தக் கேஸ் வேற விஷயம்! நீங்க இதையும் அதையும் லிங்க் பண்ணாம

இருக்கறது நல்லது. முதல்ல கேஸ் விவகாரத்தை முடிங்க. நான் மாலினி விருப்பத்துக்கு ஒத்துக்கறேன். நானே முன்னால நின்று கல்யாணம் பண்ணி வைக்கறேன்.''

............!

சசிசேகரன் தொடர்ந்தான்!

''ஆனா, நீங்க ஒத்துவரலேன்னா...! நாங்க இந்த உயிலை பொய்ன்னு நிருபிப்போம்... அப்புறம் நீங்க கம்பி எண்ண வேண்டியதுதான்'' என்றான்.

கிருபாகரன் மறுபடியும் ஒன்றும் பேசவில்லை!

''எப்படிப் பார்த்தாலும். கேஸை நீங்க வாபஸ் வாங்கித்தான் ஆகணும்'' என்றான்.

வேறுவழியில்லை என்பதை உணர்ந்த கிருபாகரன் வேறு விதமாகப் பேச ஆரம்பித்தார்.

''தம்பி! ப்ளீஸ்! நாம ரொம்ப நாளாக் குடும்ப நண்பர்களா இருந்தவங்க. இதுவரைக்கும் நடந்ததெல்லாம் தப்பாய் போச்சு! இனிமே பிரச்சினைகளை முடிச்சுக்குவோம். பாமிலி லாயரும் பெரிய குடும்பமுமே மோதிகிட்டா நல்லாவா இருக்கும்?'' என்றார்.

''நீங்க அப்படி யோசிக்கலையே! குடும்பத்துக்குள்ளேயே ரெண்டு பிரிவு செய்யப் பாத்தீங்களே! யாருக்கு லாயரா இருந்தீங்களோ அவரோட மகனுக்கே வேட்டு வைக்கப் பாத்தீங்களே! இது என்ன நியாயம்!''

''அதுதான் சொல்லிட்டேனே! நடந்த எல்லாமே தப்பாப் போச்சு! இனிமே எல்லாத்தையும் சரி பண்ணிக்குவோம்னு. நான் கேஸை வாபஸ் வாங்கறதுக்கு ஏற்பாடு பண்றேன்.''

''முதல்ல அதைச் செய்ங்க!''



''சரி! ஆனா, அதுக்கப்புறம் அழகேசனுக்கும், மாலினிக்கும் கல்யாணம் செய்ய நீங்க ஒத்துக்கணும்'' என்றார்.

''அது மாலினியின் முடிவைப் பொறுத்து'' என்றான்.

விடைபெற்றுக் கொண்டு புறப்படும்போது செல் போன் வடிவில் தன் சட்டைப் பாக்கெட்டில் உட்கார்ந்து கொண்டிருந்த கேமராவைத் தட்டிப் பார்த்து சிரித்துக் கொண்டான் சசிசேகரன்.

அடுத்த இரண்டு நாட்களுக்குள்ளேயே கேஸை வாபஸ் வாங்குவதற்கான ஏற்பாடுகளை செய்யத் தொடங்கினார் கிருபாகரன்.

இத்தனை முக்கியமான நிகழ்வுகள் நடந்திருக்கும் போதும் நேரம் ஏற்படுத்திக் கொண்டு மதுரவாணியைச் சந்திக்க முயற்சி செய்து கொண்டிருந்தான்.

அவள் கிடைக்கவேயில்லை!

மாதையனை அழைத்தான்.

ஒரு வேலை சொன்னான். போய் விட்டு வந்த பிறகு மெடிக்கல் ஷாப்புக்கு போன் போட்டான்.

மதுரவாணியே போனை எடுத்தாள்.

''நான் சசிசேகரன் பேசறேன்'' என்றவுடன் மதுரவாணிக்கு அந்தப் புறம் உதறல் எழுந்தது.

மௌனமாக நின்றாள்.

''கடையில யாரு இருக்கா? நீ மட்டுமா?'' என்றான்.

முதல் முதலாக அவன் ஒருமையில் பேசுவது புரிய.

''ம்...!'' என்றாள்.

''என்ன மதுரா? கண்ணாமூச்சி காட்டறே! பூனை கண்ணை மூடிகிட்டா உலகம் இரண்டு போயிடுமா?

இன்னும் கொஞ்ச நேரத்துல உங்க ஒனர்கிட்டே அரை மணி நேரம் பர்மிஷன் வாங்கிட்டு இங்க வர்றே! இல்லே, நான் மெடிக்கல் ஷாப்புக்கு வந்துடுவேன்... புரியுதா...'' என்றான் மிரட்டலாக.

23



''எல்லாம் நேரம்! மிரட்டல் விட்டு வரவழைக்க வேண்டியிருக்கு!'' என்றான் கடுப்பாக.

நேற்றிலிருந்தே அவன் பேசுகிற முறையில் வித்தியாசம் தொனிக்கிறாற் போல் இருந்தது.

இன்று காலை பேசும்போது ஒருமையில் பேசியது மட்டுமில்லாமல் குரலிலும் ஒரு குழைவும், உரிமையும் தெரிகிறாற் போல் இருந்தது.

மதுரவாணிக்கு உள்ளுக்குள்ளே ஏதோ செய்கிறாற் போல இருந்தது. ஆனால் என்னவென்று புரியவில்லை.

''உட்கார்!'' என்றான்.

தடுமாறியபடி அமர்ந்தாள்!

''என் முகத்தைப் பாரு!'' என்றான்.

அவள் ஒருவிதமான சங்கடத்துடன் நிமிர்ந்து பார்த்தாள்.

''சொல்லு'' எதுக்காக அப்படிக் கோபிச்சுகிட்டுப் போனே! அப்பாயின்ட்மென்ட் சம்மந்தமாத்தான் ஒரு தர்ம சங்கடம்னு சொன்னயில்லே. அதனால்தான் ரெண்டு மூணு நாளா என்னைப் பார்க்க வர்லேன்னு சொன்னயில்லே...!'' என்றான்.



இப்போது தயக்கம் தர்மசங்கடம் எல்லாம் மாறி முகத்தில் ஒரு தீவிரம் தெரிந்தது. கோபமும் தெரிந்தது. எழுந்து நின்றாள்!

''பின்னே... நீங்க... அப்படி சொல்லலாமா... ச...'' என்று நிறுத்தினாள்.

அவன் பெயரைச் சொல்கிறோம் என்பது புரிய திடுக்கிட்டு நிறுத்தினாள்.

அவன் உற்சாகமாகச் சிரித்தான்.

''ம்... சொல்லு... சசி... ச..சி..சசி...'' என்று இழுத்தான்.

அவள் முகம் சிவந்தது. ஆனால் அதைக் காட்டிக் கொள்ளாமல் மென்று விழுங்கியவாறு.

''பின்னே... நீங்க அப்படி நினைக்கலாமா? சசி சார்!'' என்றாள்.

அவன் காற்றுப் போன பலூன் போல சத்தம் செய்து கொண்டு சோபாவில் அமர்வதைக் கண்டு அவளுக்குள் சிரிப்பு மூண்டது. ஆனால் காட்டிக் கொள்ளவில்லை.

''ம்.. சரி! விளையாட்டுக் காட்டறதுன்னு ஆச்சு...'' என்றவன் தீவிர முகபாவத்துக்கு வந்தான்.

''ம்...! சரி.. என்ன கோபம்னு சொல்லு...! நான் என்ன சொன்னேன்? எப்படிச் சொன்னேன்? நீ என்னன்னு புரிஞ்சுகிட்டே...'' என்றான்.

அவள் நிமிர்ந்தாள். தீரமான பெண்களைப் போல அவளைப் பார்த்தான். படபடவென்று பொரிந்தாள்.

''நீங்க சொன்னதைப் பார்த்தா... நான் ஏதோ ரெண்டு மூணு நாளைக்கு உங்களைப் பாக்காம இருந்தா... என் சிஸ்டருக்கே வேலை குடுங்கன்னு பிளாக்மெயில் பண்ற

மாதிரின்னு சொன்னீங்களே! இவ்வளவுதானா. நீங்க என்னைப் புரிஞ்சுகிட்டது!'' என்றாள்.

அவன் ஒன்றும் பேசவில்லை! சோபாவில் சாய்ந்து அமர்ந்து கொண்டு ஆழமாகப் பார்த்துக் கொண்டிருந்தான்.

''ஆனா...! நான் நினைச்சதே வேற'' என்றாள்.

''சரி...! என்ன நினைச்சே.. சொல்லு!'' என்றான்.

சொன்னாள்!

சொன்னவுடன் அவன் முகபாவம் முற்றிலும் மாறிப் போனது எழுந்தான்.

அவளருகில் நெருங்கினான்!

''மதுரா...!'' என்று குழைந்த குரலில் சொல்லியபடி அவளருகில் நின்றான். ஆனால் தொட முயற்சிக்கவில்லை.

கண்களாலேயே தன்னைப் பருகிக் கொண்டிருக் கிறான் என்பது தெரிந்தும் அவள் லேசாக உடல் நடுங்க நின்றிருந்தாளே தவிர நிமிர்ந்து பார்க்கவில்லை.

''தாங்க்ஸ்!'' என்றான். கிசுகிசுப்பான குரலில்.

''எதுக்கு?'' என்றாள் அவளும் குரலே எழும்பாத குரலில்.

''இல்ல! நேத்திலிருந்து ஒருவிதமான ஏமாற்றம். நாம மனசுல நினைச்ச பொண்ணு இப்படியெல்லாம் தரம் தாழ்த்திக்கலாமான்னு...!'' என்றாள்.

அவன் முகம் வாடியது!

''ஐ ம் சாரி மதுரா! ஐ ம் சாரி! தாங்க்ஸ் எதுக்குன்னு கேட்டயே... அது எதுக்குத் தெரியுமா? நீ அப்படிப்பட்டவ இல்லைன்னு நிரூபிச்சயே... அதுக்கு...!'' என்றான்.

அவள் மௌனமாகவே தரையைப் பார்த்துக் கொண்டே நின்றாள்.



''மதுரா...!'' என்றான்.

''ம்...!''

''நான் கேட்ட கேள்விக்கு நீ பதிலே தர்லையே'' என்றான்.

''எனக்கு... எனக்கு.. என்ன சொல்றதுன்னு தெரியலை...!'' என்றாள்.

''இப்ப நீ ஒண்ணும் சொல்ல வேண்டாம்...! நேத்தே நீ பதில் சொல்லியாச்சு.. தெரியுமா?'' என்றான்.

''கையை எடுங்க.. சசின்னு சொன்னயே... அப்ப.. அப்ப...!'' என்றான்.

இன்னும் சற்று நெருங்கினான்.

''அப்படியா... சொன்னேன்!'' என்பது போல் அவள் மலங்க மலங்க விழிக்க அவன் மெல்லப் பின்னாலிருந்து கைகளுக்குள் வளைத்தான்.

கழுத்தில் முகம் புதைத்துக் கொண்டான்!

''இப்ப.. இப்ப.. கூட சசின்னு கூப்பிட வந்தியே.. அப்பக் கூட பதில் சொல்லியாச்சு.. தெரியுமா?'' என்றான்.

அவள் அவன் தொடுகையால் ஈர்க்கப்பட்டவளாகவும் அதிர்ந்து போனவளாகவும் நின்றாள்.

''ப்ளீஸ்...!'' என்றாள்.

''ம்.. சொல்லு.. ப்ளீஸ்... சசின்னு.. சொல்லு...'' என்றான்.

''விடுங்க...'' என்றாள்.

''பதில் சொல்லு...! விட்டர்றேன்!'' என்றான்.

''ப்ளீஸ்... சசி...!'' என்றாள் தடுமாற்றத்துடன் மின்னல் வேகத்தில் அவள் கன்னத்தில் இதழ் பதித்து நிமிர்ந்தான்.

அவள் விதிர் விதிர்த்துப் போய் சுவற்றுப் பக்கம் திரும்பிக் கொண்டாள்.

அவனும் எதிர்ச் சுவரில் சாய்ந்து நின்று கொண்டான்.

''ஹல்லோ... நான் தள்ளித்தான் நிக்கறேன். திரும்பலாம்...'' என்றான்.

மெல்லத் திரும்பினாள். கண்கள் படபடக்க நின்றாள்.

அவன் குபீரென்று சிரித்தான்.

''ரெண்டு டபுள் எம்.ஏக்களும் தடுமாற்றதைப் பார்த்தா எப்படியிருக்கு?'' என்றான்.

அவள் முகத்தில் புன்னகை படர்ந்தது.

''இதுலயா... எம்.ஏ.. வாங்கியிருக்கோம்'' என்று முணுமுணுத்தாள்.

''இதுலேன்னா... எதுல?'' என்றாள்.

அவள் இப்போது துணிவாக அவன் முகம் பார்த்தாள்.

''ஒரு பள்ளிக் கூடத்து செக்ரட்டரி மாதிரிப் பேசுங்க'' என்றாள்.

''ஹேய்! அபத்தமா உளறாதே! அது வேற... இது வேற...! நான் இப்ப என் வருங்கால மனைவிகிட்டே பேசிகிட்டிருக்கேன். வெளியே நான் என்னவா இருக்கேன்கறது வேற விஷயம். வீட்டுக்குள்ளே உனக்கு ஒழுங்கான புருஷனா இருக்கேனான்னு பாத்துக்க...'' என்றவன் அவள் கொண்டு வந்திருந்த தூக்குப் பாத்திரத்தைத் திறந்து பார்த்தான்.

இனிப்பு வகையறாக்கள் இருந்தது!

''தூக்குப் பாத்திரத்தைக் காலியாக் கொண்டு வரக் கூடாதேன்னு.. கொஞ்சம் ஸ்வீட்ஸ் வாங்கிட்டு வந்தேன்'' என்றாள்.



''பரவால்லே! என் ஸ்வீட் பாக்ஸே எனக்கு வந்தாச்சு இல்ல...'' என்றான்.

''அவரு... மாதையன்.. இல்லையா!'' என்று அவள் பேச்சை மாற்ற அவன் அதைப் புரிந்து கொண்டு குறும்புச் சிரிப்புடன்.

''நான்தான் வெளிய அனுப்பினேன்'' என்றான்.

''பண்ணை வேலைக்காரங்க யாரும் வர மாட்டாங்க'' என்றான்.

''யாரும் ஹாலைத் தாண்டி வர மாட்டாங்க'' என்றான்.

அவன் ஒரு ஸ்வீட்டை எடுத்து இரண்டாக உடைத்து பாதியாக அவள் கையில் கொடுத்தான். அவள் வாங்கிக் கொண்டாள். ஆனால் கையில் வைத்துக் கொண்டே நின்றாள்.

''ஏன்..? ஊட்டி விடட்டுமா?'' என்று அவன் கேட்க அவள் ''லபக்'' என்று அவசரமாக வாயில் போட்டுக் கொண்டாள்.

அவன் சிரித்தான்.

''என்ன அவ்வளவு பயம்?'' என்றான். மறுபடியும் பார்வை மாறியது.

அவள் மறுபடியும் திணற புருவங்களை மட்டும் உயர்த்தி ''என்ன'' என்று கேட்டான்.

''எனக்குக் கஷ்டமா இருக்கு...?'' என்றாள் திணறலாக.

''ஏன்?''

''நீங்க.. இப்படி.. தொட்டு.. நெருக்கமா...'' என்று மறுபடியும் திணற.

''ஓ.கே...! ஓ.கே...! நான் டிஸ்டென்ஸ் கீப் அப் பண்றேன். அப்புறம் அதே பழக்கமா ஆயிடும். திடீர்னு யாராவது வந்தா வம்புதான்'' என்றான்.

திரும்பவும் சோபாவில் அமர்ந்து கொண்டான். மேலும் சொன்னான்.

''மதுரா! ஐ ம் சாரி! நான் உன்னைத் தப்பா நினைச் சுட்டேன்...''

''பரவாயில்லை! உங்க இடத்துல இருக்கற யாருமே அப்படித்தான் நினைப்பாங்க!'' என்றாள்.

அதற்குப் பிறகுதான் கேட்டாள்.

''கேஸ் எந்த நிலைமையில இருக்கு?''

''ஆல்மோஸ்ட் முடிஞ்சு மாதிரித்தான்'' என்றான்.

கிருபாகரனை சந்தித்ததையும், அவர் செய்த தில்லு முல்லு எல்லாவற்றையும் சொன்னான்.

''அவர் செஞ்ச வேலையால ஆறேழு மாசமா நீங்க எல் லாரையும் பிரிஞ்சிருக்க வேண்டி ஆயிடுச்சு இல்லே...!'' என்றாள் வருத்தத்துடன்.

''மதுரா!'' என்றான் தயக்கத்துடன்.

அவள் அவன் முகம் பார்க்க ''நம்ம ஸ்கூல்ல நடந்த இண்டர்வ்யூல கிருபாகரன் மகன் அழகேசனும் கலந்துகிட் டாப்ல...'' என்றான்.

''ஓ...!'' என்றாள். பிறகு அவனுக்கு உறுதியளிக்கும் விதமாகச் சொன்னாள்.

''நீங்க எந்த முடிவெடுத்தாலும் அதுல பள்ளிக் கூடத்தோட நன்மை அடங்கியிருக்கும்னு எனக்குத் தெரியும்'' என்றாள்.

''தேங்க்ஸ்'' என்றான் மறுபடியும் மன நிறைவுடன்.

மதுரவாணியைக் கூர்ந்து பார்த்தபடி மறுபடியும் கேட்டான்.



''இந்த வார்த்தைகளை அப்புறமா மறந்துரமாட்டியே!'' என்று.

''கண்டிப்பா... இல்லே!'' என்றாள். மறுபடியும் ''நீங்க எங்களுக்காக எவ்வளவோ நன்மைகள் செஞ்சிருக்கீங்க! கருப்பண்ணன் மாமாகிட்டேயிருந்து எங்களுக்கும் பாதுகாப்புக் குடுத்திருக்கீங்க! அதையெல்லாம் நீங்களே இனிஷியேட்டிவ் எடுத்துகிட்டு செஞ்சிருக்கீங்க. அப் படியிருக்கும் போது நீங்க எது செஞ்சாலும் எங்களுக்கு நல்லாத்தான் இருக்கும்'' என்றாள்.

மறுபடியும் அவன் முகம் மலர்ந்தது.

''மதுரா! இந்தப் போஸ்ட் யாருக்குக் குடுக்கறமோ அவங்கதான் சீனியாரிட்டி வைஸ் பள்ளிக் கூடத்துக்கு ஹெச்.எம்மா வருவாங்க. அவங்க பள்ளிக்கூடத்துக்கு டெடிகேட்டடா வேலை செய்யறவங்களா இருக்கணும். பணத்தைப் பெருசா நினைக்காதவங்களா இருக்கணும்'' என்றான்.

அவள் கேட்டுக் கொண்டாள்.

''அதான் சொல்லிட்டேனே! நீங்க எது செஞ்சாலும் சரின்னு...'' என்றாள்.

மதுரா தான் வராமல் இருப்பதன் மூலமாக மறைமுக மாகத் தன் தங்கைக்கே போஸ்ட் கொடுக்க வேண்டு மென்று ''பிரஷர்'' கொடுக்கறாளோ என்ற எண்ணத்தில் தான் இருந்தான் சசிசேகரன். மாறாக அவள் சொன்ன விளக்கம் அவன் மனத்தைப் பெரிதும் கவர்ந்தது.

''நான் அடிக்கடி வந்தாதான் என் தங்கைக்கு வேலை குடுங்கன்னு நான் பிரஷரைஸ் பண்ற மாதிரி இருக்கும். அதனாலதான் நான் வர்லே'' என்று அவள் சொன்ன

வுடனே அவன் மனமெல்லாம் நிறைந்து விட்டது. அதனால்தான் தனது கட்டுப்பாட்டை இழந்து அவன் தன் உணர்வுகளை வெளிப்படுத்தினான்.

அவளும் அதைப் புரிந்து கொண்டவளாகத்தான் இடம் கொடுத்தாள். இப்போதும் கூட அவன் யாருக்குக் கொடுக்கப் போகிறீர்கள் என்று கேட்கவில்லை என்பதை உணர்ந்தான்.

அதனாலேயே சொல்ல வேண்டுமென்று நினைத்தான்.

"மதுரா...! நான் சொல்லப் போறது நீ எப்படி எடுத்துக்குவேன்னு தெரியலை. ஆனா சொல்லாம இருக்க முடியலை. இப்போதைக்கு நான் போஸ்ட்டை அழகேசனுக்குத்தான் கொடுக்கணும்னு முடிவு பண்ணியிருக்கேன்" என்றான்.

அவள் முகத்தில் சற்றே ஏமாற்றம் தெரிந்தபோதும் உடனே திருத்திக் கொண்டாள்.

"சரிங்க. சரி!" என்றாள். அவன் முகம் அதைக் கேட்டு மலர்ந்தது.

"மதுரா! இந்த முடிவை நான் ஏற்கனவே நடேசன் மாமாகிட்டே சொன்னேன். அதுக்கு அவரு ஏங்க தம்பின்னு கேட்டாரு. அப்போ அவருக்கு நான் மழுப்பலா ஒரு காரணம் சொன்னேன். என்ன தெரியுமா? எதிரியோட மகன் இல்லையா? அதனால நம்ம பார்வையில நம்ம கண்ட்ரோல்ல இருக்கறதுதான் நல்லதுன்னு முடிவு அப்படீன்னேன். ஆனா, காரணம் அது வல்ல" என்றான்.

அவள் மௌனமாகவே பார்த்துக் கொண்டு நின்றாள்.

"உண்மையான காரணம் என் சம்பந்தபட்டதல்ல, உன் சம்பந்தப் பட்டது..."



"ஓ! நான் அடிக்கடி வந்து உங்ககிட்டே பேசி இந்தப் போஸ்ட்டை வாங்கினேன்னு ஊர்க்காரங்க நினைப்பாங்களோ..."

"உன் கௌரவம் காரணம். ஆனா அதைக் காட்டிலும் வேறு ஒரு காரணம் இருக்கு..." என்றான்.

அவள் வியப்புடன் பார்த்துக் கொண்டிருக்கையிலேயே அவன் காரணத்தைச் சொன்னான். அவள் அதிர்ந்து போனாள்.

"நிஜம்மாவா சொல்றீங்க?" என்றாள் மதுரவாணி.

"ஆமா!" என்று அவன் மேலும் சில விளக்கங்கள் சொன்னான்.

அந்த விளக்கங்கள் அவளுக்கு ஆறுதல் அளித்தாலும் அவள் கேட்டாள்.

"உங்களுக்கு யார் சொன்னாங்க!" என்று.

அவன் அதற்குச் சொன்ன பதில் அவளை மேலும் வியப்பிலாழ்த்தியது.

யோசனையுடன் நின்றாள்.

## 24



"ஓஹோ! அப்படி வேற நினைப்பிருக்காக்கும்..." என்றார் ஜெயராம்.

சசிசேகரன் சிரித்தான்.

"அந்த நினைப்பிருக்கவும்தான் இவ்வளவு தூரம் இறங்கி வந்து ஒப்புதல் வாக்கு மூலம் குடுத்திருக்காரு..." என்றான் சசிசேகரன்.

"சார்! அவருடைய எதிர்பார்ப்பு இல்லைன்னு ஆகும் போது.. பிரச்சினை பண்ணக்கூடும்ங்கற எதிர்பார்ப்புல தான் நான் இந்த வேலை செஞ்சேன்."

''ஏதோ பழைய காலத்துப் படத்துல வர்ற மாதிரியெல்லாம் செய்ய வேண்டியிருக்கு'' என்று சிரித்தான் சசிசேகரன்.

சி.டி.யைக் கம்ப்யூட்டரில் போட்டுப் பார்த்தார்கள். பத்துப் பதினைந்து நிமிடங்களுக்கு சசிசேகரனும், கிருபாகரனும் பேசிய பேச்சு முழுவதும் அதில் பதியபட்டு இருந்தது.

''சார் சி.டி. நான் ஒரு காப்பி வச்சுக்கட்டுமா?'' என்று கேட்டார் ஜெயராம்.

''வேண்டாம்...! ஜெயராம் சார்! தப்போ ரைட்டோ என்னை நம்பி ஒப்புதல் வாக்குமூலம் மாதிரிப் பேசியிருக்காரு. என்ன இருந்தாலும் நீங்க ரெண்டு பேரும் தொழில்ல எதிரிங்க...'' என்னைக்கிருந்தாலும் நீங்க பயன்படுத்துவீங்க.. வேண்டாம்'' என்றான்.

ஜெயராம் சிரித்தார்.

''நான் உங்களோட இதுவரைக்கும் பழகின விதத்துல இருந்த நீங்க இப்படி ஒரு பதிலைத்தான் சொல்வீங்கன்னு எதிர்பார்த்தேன். ஆனா, கிருபாகரன் செஞ்சது கிரிமினல் குற்றம். அது மட்டுமில்ல உங்களுக்கு சேர வேண்டிய சொத்தைக் கபளீகரம் செய்யறதுக்குப் பாத்திருக்காரு...'' என்றார் ஜெயராம்.

சசிசேகரன் நீண்டதொரு பெருமூச்சு விட்டார்.

''உண்மைதான்! எல்லாத்தையும் விட ரொம்பவும், முக்கியமான நேரத்துல தேவையான நேரத்துல என் குடும்பத்தோட இருக்க முடியாம, ஏழெட்டு மாசம் பிரிஞ்சிருக்க வேண்டிய சூழ்நிலைய வேற ஏற்படுத்திட்டாரு'' என்றான் சசிசேகரன்.



''இத்தனைக்கப்புறமும்... நீங்க பெருந்தன்மையாப் பேசறீங்களே!'' என்றார் ஜெயராம் சற்றே ஆதங்கத்துடன்.

''ஆமா! ஆனா.. என்ன செய்யறது? அவங்கப்பா காலத்துல இருந்து எங்க குடும்பத்துக்கு லாயராக இருந்திருக்காங்க. அது மட்டுமல்ல...!'' என்று ஒரு தகவலையும் பகிர்ந்து கொண்டான்.

ஜெயராம் கண்கள் விரிய ஆச்சரியத்துடன் பார்த்தார்.

''ஆஹா! அப்படியா விஷயம்'' என்று கலகலவென சிரித்தார்.

சசிசேகரன் முகம் சிவந்தது! பேச்சை மாற்றுவது போல் மாற்றிச் சொன்னான்.

''ஆனா! ஒரு விஷயத்துக்கு அனுமதி தரேன். உங்களுக்கு எப்பவாவது ரொம்பத் தொல்லை தர்ற மாதிரித் தெரிஞ்சா... எனக்குத் தகவல் தெரிவிங்க ஒரு மிரட்டு மிரட்டிரலாம்'' என்றான் சசிசேகரன்.

''சரி... அடுத்த ப்ரொகிராம் என்ன?'' என்றார் ஜெயராம்.

''வேற என்ன! நீங்களும் நானுமா எங்க வீட்டுக்குப் போய்... குடும்பத்துக்கு எல்லா விஷயங்களையும் விளக்க வேண்டியதுதான்.''

போனார்கள்!

* * *

குடும்பமே வாசலில் நின்று வரவேற்றார்கள்.

''அண்ணா! இரு.. இரு!'' என்று மாலினி ஆரத்தி எடுத்தாள்.

''ஹேய்! என்ன இது...'' என்று சசிசேகரன் சிரிக்க மங்களம் வாஞ்சையுடன் பார்த்துக் கொண்டிருந்தார்.

''அண்ணா! சீக்கிரமே அண்ணின்னு ஒருத்தரைக் கொண்டு வா! அவங்களையும் பக்கத்துல நிக்க வச்சு நான் ஆரத்தியெடுக்கணும்.. புரியுதா?'' என்றாள் மாலினி.

''அதெல்லாம் சீக்கிரம் ரெடி பண்ணிடுவாரு'' என்று சிரித்தார் ஜெயராம்.

சிவஞானம் பின்னணியில் நின்றபடி இதையெல்லாம் மகிழ்வாகப் பார்த்துக் கொண்டிருந்தார்.

''அண்ணா! அண்ணா!'' என்று தோளில் தொங்குகிற தங்கையை இடக்கையால் அணைத்துக் கொண்டான்.

குணசேகரன் அதற்கு மேல் கலகலப்பாக வாயடித் தான்.

''சார்! இப்படிப் பாசமா இருக்கற குடும்பத்தைப் பிரிஞ்சிருக்கறது கஷ்டம்தான்'' என்றார் ஜெயராம்.

''சரி... பேசுவோமா?'' என்று பேச அமர்ந்தார்கள்.

''ஏன் தம்பி! கிருபாகரனும் வருவாருன்னு நெனச் சேன்'' என்று முணுமுணுத்தார் மங்களம்.

''எந்த முகத்தை வச்சுகிட்டு வருவாரு...'' என்றாள் மாலினி.

''அம்மா!'' என்று ஆரம்பித்து ஜெயராம் கிருபாகரனின் செய்த மோசடிகளைப் பற்றி விரிவாகச் சொன்னார்.

''ம்... அப்படியா? உயில் பொய்யான உயிலா?'' என்று அலமந்து போனார் மங்களம்.

''ஆமா!'' என்றார் ஜெயராம்.

''அது சரி.. இப்ப உயில் எங்கே?'' என்றார்.

''சசிசேகரன் கஸ்டடியில இருக்கு...'' எனவும் சசிசேகரன் அதை தன் காரில் இருந்து எடுத்துக் கொண்டு வந்து காண்பித்தான்.



''தம்பி! முதல்ல... அந்த உயிலைக் கிழிச்சுப் போடு...'' என்றார் மங்களத்தம்மாள்.

''இல்ல சித்தி...! அது என் பொறுப்பில இருக்கட்டும். அப்பத்தான் நாளைக்கு ஏதாவது பிரச்சினைன்னா... அந்தாளை மடக்க முடியும்!'' என்றான் சசிசேகரன்.

''இன்னும் அந்தாளு எதற்காகப் பிரச்சினை பண்ணப் போறாரு...'' என்றார் மங்களத்தம்மாள்.

''இருக்கு...! அதற்கான காரணங்களும் இருக்கு!'' என்றான்.

''ஆனாலும் இது ரொம்ப அநியாயம்ப்பா! எனக்கும் அந்த உயில் மேல நம்பிக்கை இல்லாமத்தான் இருந்தது. ஆனா, அது போலி உயிலா இருக்கக் கூடும்னு யோசிக் கவேயில்லை'' என்றார் மங்களத்தம்மாள்.

மேலும் சற்று நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள்.

''அப்படியும்.. இப்படியும் பேசிகிட்டேயிருப்பீங்களா? சாப்பாட்டைப் பத்தி நினைக்க மாட்டீங்களா?'' என்றான் குணசேகரன்.

''சாப்பாட்டு ராமனுக்கு அதிலேயே நினைப்பு'' என்றாள் மாலினி.

''அண்ணா, இன்னைக்கு அம்மாவே எல்லாம் தயா ரிப்பு. வடை, பாயசம் எல்லாமும் இருக்கு! சசி என்னோட கைச்சாப்பாடு சாப்பிட்டு எத்தனை நாளாச்சுன்னு ஒரே பரபரப்புத்தான்'' என்றான் குணசேகரன்.

சசிசேகரன் அன்புடன் தன் வளர்ப்புத்தாயைப் பார்த் தான்.

''சரி.. சாப்பிடுவோம்!'' என்று எழுந்தார்கள்.

கலாட்டாவாகப் பேசிக் கொண்டு சாப்பிட்டு முடித்து ஜெயராமையும் அன்புடன் வழியனுப்பி வைத்து விட்டு சசியுடன் உள்ளே வந்தார்கள்.

''சரி.. நான் கொஞ்சம் ரெஸ்ட் எடுக்கறேன்'' என்று தனது வழக்கமான அறைக்குப் போனான்.

சட்டையை மாற்றிக் கொண்டு வீட்டில் அணிகிற மாதிரி ''காஷுவல் டிரஸ்'' என்பார்களே அது மாதிரி டீ ஷர்ட்டுக்கு மாறிக் கொண்டு லுங்கிய எடுத்து கட்டு கையில் அறையை முழுதும் நோட்டம் விட்டான்.

துப்புரவாக வைத்திருந்தார்கள்!

திடீரென்று இந்த வீட்டை விட்டு வெளியேறுகையில் இப்படியெல்லாம் மீண்டும் இந்த வீட்டுக்குள் நுழைவோமா என்று எண்ணியது நினைவுக்கு வந்தது.

அப்போதுதான் இன்னொரு சிந்தனையும் ஓடியது.

''மங்களம் சித்தி மட்டும் கிருபாகரனுடன் கூட்டு சேர்ந்து கொண்டிருந்தால் தன்னால் எதையும் நிரூபிக்க முடியாமல் போயிருக்க முடியும். தன் மேல் எவ்வளவு நம்பிக்கை வைத்தார்.''

நினைக்கும் போதே உள்ளம் நெகிழ்ந்தது.

''தம்பி! எப்பவுமே கொஞ்சம் பாயசம் டம்ளர்ல குடிப்பயே...'' என்று கொண்டு வந்தார் மங்களம்.

ஆழ்ந்த பார்வையுடன் வாங்கிக் கொண்டான் அதே நேரம்!

காச் மூச் என்று கத்திக் கொண்டு ஓடி வந்தார்கள் மாலினியும், குணசேகரனும்.

''ஏய்...! பாயசத்தை... தட்டி விட்றாதீங்க...!'' என்று மாலினியின் முதுகில் ஒன்று வைத்தார் மங்களம்.



''ஆமா! கல்யாணம் கட்டற வயசாச்சு'' இன்னும் ஆட்டம்... பாரு! என்று குணசேகரன் எடுத்துக் கொடுத்தான்.

''டேய்! வீட்ல மூத்தவருக்கே கல்யாணம் பேச வழியைக் காணோம். அப்புறம்தான் எனக்கு! அதுக்கப் புறம்தான் உனக்கு!'' என்று அவள் சொல்லிக் கொண் டிருக்கையிலேயே சசிசேகரன் தன் கட்டிலில் கால் நீட்டி அமர்ந்தான்.

வழக்கம் போல மங்களத்தம்மாள் வலது புறம் உட்கார மாலினியும், குணசேகரனும் இடது புறம் அமர்ந்தார்கள்.

''அண்ணா! மாலினி என்னவோ உனக்கு செய்தி விடுகிறாற் போல இல்லையா?'' என்றான் குணசேகரன்.

''நான் எதுக்கு செய்தியெல்லாம் விடுக்கணும். அண்ணன் பாத்து எந்த மாப்பிள்ளையைக் கையைக் காட்டினாலும் நான் கழுத்தை நீட்டிடுவேன்'' என்றாள் மாலினி.

''ரியலி!'' என்ற சசிசேகரன். குபீரென்று சிரித்தான்.

''ஹேய்... மாலு! கிருபாகரன் வேற கனவெல்லாம் வச்சிருக்காரு.. தெரியுமா?''

மங்களம் என்னவென்று கேட்க சசிசேகரன் ''அதை அப்புறம் சொல்றேன். ஆனா, அந்த எதிர்பார்ப்புனாலதான் உயிலைக் கையில குடுத்தார்'' என்றான்.

''சரிப்பா! அப்படி அவரோட எதிர்பார்ப்பு நிறைவேற லின்னா வேற விதமா இடைஞ்சல் செய்வாரோ?''

''நாம இடைஞ்சல் செஞ்சா பத்தாதா?''

''சித்தி இனிமே கவலையே படாதீங்க! நம்பகிட்டே தான் அவரோட குடுமி சிக்கியிருக்கு'' என்றான்.

கூடவே இன்னொன்றும் சொன்னான்.

''ஆனா... அவரோட பையன் ரொம்ப நல்லவன்... மாலினிக்கு பிரண்டு வேற'' என்றான்.

மாலினி சிரித்தாள்!

சசிசேகரனும், மாலினியும் பொருள் பொதிந்த பார்வை யாகப் பார்த்துக் கொண்டார்கள்.

''அம்மா...! இவங்க ரெண்டு பேரும் வேற என்னமோ திட்டம் போடறாங்க.''

''டேய்! குணா! சசி என்ன திட்டம் போட்டாலும் சரி! அதைப்பத்தி எனக்குக் கவலையில்லே! இனிமே எல்லாம் அவன் பொறுப்பு'' என்று எழுந்தார் மங்களம்.

''டேய்! ரெண்டு பேரும் அவனைக் கொஞ்ச நேரம் நிம்மதியா ரெஸ்ட் எடுக்க... விடுங்க'' என்று மங்களம் அதட்டவும் குணசேகரனும், மாலினியும் எழுந்தார்கள்.

''ஆமா... சித்தி! தூங்கணும்!'' என்றான் சசிசேகரன்.

மூவரும் அறைக்கு வெளியே போனார்கள்.

அவனும் ஒரு தலையணையைத் தலைக்குக் கொடுத்து ஒரு தலையணையை அணையாகக் கொடுத்தபடி உறக் கத்தில் ஆழ்கையில் மாலினி ஓடி வந்து.

''அண்ணா! ஸ்வீட் ட்ரீம்ஸ்'' என்று காதோரம் கலாட்டா செய்து விட்டுப் போனாள்.

சசிசேகரன் சிரித்தபடி உறக்கத்தில் ஆழ்ந்தான்.

நிம்மதியான உறக்கம்!

இந்த வீட்டை விட்டுப் போனதற்குப் பிறகு அவனுக்கு நிம்மதியான உறக்கமே இல்லாமல் போனது. அதற்குப் பிறகு மதுரவாணி வேறு அவன் வாழ்க்கையில் நுழைய ஆழ்ந்த உறக்கம் என்பதே இல்லாமல் போனது.



மீண்டும் ஒருமுறை இப்படியெல்லாம் வந்து இதே அறையில் உரிமையாக புழங்குவோமா என்று கூட எண்ணியிருக்கிறான்.

சட்டென்று வாழ்க்கையையே புரட்டிப்போட்ட உயில்!

இழந்த நிம்மதி!

தவித்து நின்ற தனிமைக் காலம்!

அதற்கெல்லாம் எது ஈடு கட்டும்! உயில் பொய் யென்று முடிவான கணத்தில் அவனுக்கு கிருபாகரன் மீது எல்லையற்ற கோபம் எழுந்தது.

எலும்பை எண்ணி விட வேண்டும் என்று நினைத் தான். ஆனால் அதற்கு நேர் மாறாக அவரது மகன் அழகேசன் நடந்து கொண்டான்.

அவனுக்காகப் பார்க்க வேண்டியிருந்தது.

அழகேசனை நினைக்கும் போதெல்லாம் கூடவே இன்னொரு முகமும் தோன்றியது.

அதைத் தாண்டிக் கொண்டு தன் மனம் கவர்ந்தவளின் முகமும் தோன்றியது.

தனது கைகள் இரண்டையும் முன்னால் கோர்த்துக் கொண்டு பதவிசாக அவள் நிற்கும் விதம்!

தான் நேசம் நிறையப் பார்க்கையில் படபடவென்று அடித்துக் கொள்ளும் கண்கள்!

ஆழ்ந்த உறக்கத்தில் கூட அவள் முகம் மின்னி மறைந்தது.

இன்னும் ஆழ்ந்த உறக்கத்தில் போய் நிம்மதியாக உறங்கி விழிக்கும்போது மணி நான்காகி இருந்தது.

புரண்டு படுத்தான்!

''நம்ம வீடு என்ற உணர்வு வந்து படுக்கையில் அப்படிப் புரண்டு படுப்பதே சுகமாக இருந்தது.''

எந்தப் பொருளும் நம் கையில் இருக்கும்போது அதன் அருமை புரிவதில்லை! இழந்து விடுவோமோ என்று என் னும் போதுதான் அருமை புரிகிறது.

இந்த வீடு! தன் சொந்த வீடு! ஆனால் இல்லை என்ற நிலைமை ஏற்பட்டிருந்த நாட்கள். ஆனால் கோர்ட்டில் வைத்த மங்களம் சொன்ன வார்த்தைகள் இப்போது எதிரொலித்தன.

சசிசேகரன்தான் முக்கியம் என்பதை எவ்வளவு உள் ளார்ந்த பிரியத்தோடு சொன்னார்.

அறை வாசலில் நிழலாடியது!

மங்களம் நின்றார்.

''என்ன சித்தி!'' என்று எழுந்து அமர்ந்தான் சசிசேகரன்.

''காபி கொண்டு வரட்டுமா?'' என்று கேட்டார்.

''என்ன சித்தி! வேணுன்னா... நான் கிச்சன்ல வந்து வாங்கிக்கறேன்.''

''இல்லப்பா! நானே கொண்டு வரேன்'' என்று போனார்.

மாலினி உள்ளே வந்தாள். முகத்தை கோபமாக வைத்துக் கொண்டு சொன்னாள்.

''ம்...! பெரிய மகன் வந்தாச்சில்ல! இனி அவ்வளவு தான் நம்மளைக் கவனிக்கமாட்டாங்க'' என்று சொல்லிக் கொண்டிருக்கையிலே மங்களம் வந்தார்.

மாலினியின் தலையில் ஒரு குட்டுக் குட்டினார்.

''போடி! குடுக்கலேன்னா... என்ன? நீ போய் சமையல் கட்டுல கேட்டு வாங்கிக்கவேன். ஆறேழு மாசமா.. எப்ப



அவன் வந்து இப்படிப் பழைய மாதிரி இருப்பான்னு ஏங்கிகிட்டு கிடந்தேன்.''

இத்தனைக்கும் அன்புக்கும் நாம் என்ன கைம்மாறு செய்வது என்ற நெகிழ்ச்சியுடன் பார்த்துக் கொண்டிருந்த சசிசேகரன் கேட்டான்.

''சித்தி! இவ்வளவு பிரியம் வச்சிருக்கியே! உனக்கு நான் என்ன செய்யட்டும்?'' என்றான்.

அவர் அவன் கன்னத்தில் நெட்டிமுறித்து ''ஒண்ணும் செய்ய வேண்டாம். நீ எங்களோட இருந்தாவே போதும்..'' என்றார்.

''இல்லல்லே...! ஏதாவது செஞ்சே ஆகணும்? என்ன செய்யப் போறேன் தெரியுமா?'' என்றான்.

மங்களம் அமைதியாய் பார்த்தார்.

''உன்னை அம்மான்னு கூப்பிடட்டுமா?'' என்றான்.

அவ்வளவுதான். ஆனந்தக் கண்ணீர் பெருகக் கதறிக் கொண்டு அவனைக் கட்டிக் கொண்டார்.

''கூப்பிடுடா... தம்பி! நீ எப்படா கூப்பிடுவேன்னு தானே நானும் காத்துக் கிடக்கேன்'' என்று தழுதழுக்க அவனது கண்களிலும் கண்ணீர் நிரம்பியது.

உணர்ச்சி மயமான நேரத்தில் வேடிக்கை பேசக் கூடாது என்பது போல மாலினியும், குணசேகரனும் கூட மனம் நெகிழ கண்களில் கண்ணீர் திரளப் பார்த்துக் கொண்டு நின்றார்கள்.

## 25



வாழ்க்கையில் எல்லாமும் சகஜம். இழப்புகளும், வெற்றிகளும்தான்.

சசிசேகரன் சிறு வயதிலேயே தாயை இழந்தான். ஆனால் அந்த வருத்தமே தெரியாத வண்ணம் அவன் சிற்றன்னை அவனை வளர்த்தார். இருப்பினும் உயில் என்ற பெயரில் தங்களுக்குள்ளேயே ஒருவருக்கொருவர் எதிர்த்துக் கொள்கிறார் போலச் செய்து விட்டாரே என்ற கோபத்தில் இருந்தான் சசிசேகரன்.

தான் வெளியேறி விட்டாலும் கூட தங்கள் வீட்டின் மேல் ஒரு கண் வைத்துக் கொண்டுதான் இருந்தான்.

சசிசேகரன் வெளியேறிய இரண்டு நாட்களுக்குள்ளாகவே கிருபாகரன் மெதுவாகக் குடும்பத்துக்குள் நுழைந்தார் என்று சிவஞானம் அய்யா போன் செய்தவுடனே கொஞ்சம் யோசனையில் ஆழ்ந்தான்.

எதிர்பாராத விதமாக மங்களத்தம்மாவே போன் செய்தார்.

''தம்பி! அந்தக் கிருபாகரன் அடிக்கடி வர்றாரு. நிலத்தைப் பாத்துக்கறேன். சொத்தைப் பாத்துக்கறேன்னெல்லாம் கேட்கறாரு. நீ இந்த நேரம் பாத்து எங்களை விட்டுட்டுப் போயிட்டே'' என்று அழுதார்.

அப்போதுதான் சசிசேகரன் அந்த முடிவைச் செய்தான். ''சித்தி! நான் இப்ப வெளியே வரதுக்கு ஒரு காரணம் இருக்கு! அதை அப்புறம் சொல்றேன். யார் மேலயும் கோபத்துனால நான் வெளியே வர்லை. புரியுதா. ஆனா, எனக்கு ஒரு சில விஷயங்கள் தெரிஞ்சாகணும். நீங்க ஒண்ணும் பயப்படாதீங்க! கிருபாகரன் என்ன சொன்னாலும் ஒத்துக்கற மாதிரியே நடிங்க!'' என்றான்.

''அதெப்படி தம்பி! கணக்கு வழக்குப் புத்தகமெல்லாம் கேட்கறாரே!'' என்றார் கவலையுடன்.



''சித்தி! அதைப் பத்திக் கவலைப்படாதீங்க. நான் நம்ம ஆட்கள் எல்லார்க்கும் தகவல் குடுத்துடறேன். குணாவை மட்டும் நம்ம ஏஜென்சி கடையில போய் கணக்கு வழக்கு பாக்கச் சொல்லுங்க!'' என்றான்.

மங்களத்தம்மாளும், சசிசேகரனும் பேசிக் கொள்கிறார்கள் என்பதை அறியாத கிருபாகரன் தொடர்ந்து திட்டங்களுக்கு மேல் திட்டங்கள் போட்டுக் கொண்டு போனார்.

திட்டங்களின் ஒரு பகுதியாகத்தான் மகன் அழகேசனைக் கொண்டு வந்து அவர்கள் வீட்டில் இறக்கினார்.

அழகேசன் அந்த பங்களாவுக்குள் நுழைந்த போது அவனுக்குள்ளும் காரணங்கள் இருந்தன என்பதை அவர் அறியவில்லை.

அழகேசனிடம் அவரது அப்பா ''நீ அடிக்கடி மங்களத்தம்மாவை பார்க்க வேண்டும்'' என்றவுடனேயே அழகேசன் யோசிக்க ஆரம்பித்துவிட்டான்.

ஏதோ தூண்டில் வீசும் திட்டத்துடன் தான் அங்கே நுழைகிறார் என்பது புரிய அவனும் ஒத்துழைப்புக் கொடுப்பது போலவே ஆரம்பித்தான்.

மாலினி அண்ணனுக்கு போன் செய்தாள். அதுவும் முதல் முதலாக அழகேசன் தங்கள் வீட்டுக்கு வந்த இரவே!

''அண்ணா! கிருபாகரன் ரொம்ப சுவாதினமா உள்ள வர்றதும், பழகறதுமே எனக்குப் பிடிக்கலை. அதுல அவரோட மகனை வேற கொண்டு வந்து உள்ளே விடறாரு. இதெல்லாம் எதுக்குன்னு தெரியலே! ஏதோ பெரிய திட்டத்தோடதான் இருக்காரு. அந்த வக்கீல்'' என்றாள்.

''அந்த வக்கீலு! என்று சொல்லும்போது அதில் ஏராளமான கோபம் தெரிந்தது.

சசிசேகரன் பொறுமையாகக் கேட்டுக் கொண்டான் பிறகு சொன்னான்.

''சரியம்மா! அந்தப் பையனும் படிச்சபையன்தானே! எப்படிப் பழகறான்னு பாரு! எந்த விஷயத்துலயும் பைனல் முடிவு நம்முளுதுதான். கவலைப்படாதே'' என்றான்.

''அண்ணா! அழகேசன் எங்க காலேஜ் ஸ்டூடன்ட்தான். பாத்திருக்கேன். பழக்கமில்லே! என்னைக் காட்டிலும் சீனியர்'' என்றாள்.

''அப்புறம் என்னம்மா? அப்பாவைப் போலவே மகனும் ஏதாவது நோக்கத்தோட வந்தாரானு பாரு... அப்புறம் என்ன செய்யறதுனு பார்க்கலாம்'' என்றான்.

மாலினி தெம்பானாள்! ஆனால் அழகேசன் மிகவும் பண்புடன் நடந்து கொண்டான்.

''மேடம்! சசி.. சார் ஏதோ வருத்தத்துல இருக்காரு! உங்கப்பாவோட உயில்ல ஏதோ விஷயம் இருக்கற மாதிரி இருக்கு. இந்த நேரத்துல சசி சார் வெளிய போயிருக்கக் கூடாது'' என்றான்.

''இல்லே! அவருக்கு மனசு கஷ்டமாப் போயிடுச்சு.''

''மேடம்! எங்கப்பாதான். ஆனா அவரு வக்கீல்! வக்கீலுங்க நினைச்சா... எந்த விளையாட்டு வேண்ணா விளையாடலாம்'' என்றான்.

மாலினி இப்படிப்பட்ட வெளிப்படையான பேச்சை எதிர்பார்க்கவில்லை. கொஞ்சம் திகைத்துப் போனாள். ஒருவேளை வாயைப் பிடுங்குகிறானோ என்று தோன்றியது. அதனால் முதலில் ஒன்றிரண்டு சந்திப்புக்களின் போது அழுத்தமாகவே இருந்தாள். ஆனால் மெது மெதுவாக அவன் இயல்பு புரிந்து போனது.



மனம் விட்டுக் கூட பேசினான்.

''அம்மா ரொம்பவும் சொகுசு வாழ்க்கைக்கு ஆசைப் படுகிறவர். பெரிய பணக்காரக் குடும்பத்திலிருந்து வந்ததனாலோ என்னவோ வாழ்க்கையின் நிதர்சனம் புரியவில்லை. அப்பா முதல்ல அவ்வளவு பெரிய இடத்துல பொண்ணு எடுத்திருக்கவே கூடாது! அது மட்டுமில்லாம தாத்தாவைப் போல அப்பாவுக்கு வக்கீல் தொழில்லயும் பெரிய அளவு சம்பாத்தியம் கிடையாது. கண்முன்னால் சொத்துக்கள் கரையும் போது அவரால் தாங்கிக்க முடியல. அதனால எத்தைத் திண்ணா பித்தம் தெளியும்னு என்னென்னவோ திட்டம் போட்டுகிட்டு அலையறார்'' என்றான்.

அந்தக் கணத்திலேயே மாலினி அவனை மிகவும் பிடித்துப் போய் விட்டது.

ஒரு நாள்,

அழகேசன் மிகவும் பரபரப்பாக வந்தான்.

''மாலினி! உன்கிட்டே பேசணும்'' என்றான்.

''ம்...!'' என்று அவனோடு கிளம்பினாள்.

''பார்க் அங்கயிங்கேன்னு வேண்டாம். ஏதாவது ஹோட்டல்ல உட்கார்ந்து பேசுவோம்'' என்றாள் மாலினி.

''வேண்டாம்.. மாலினி! அப்பாவோட ஆபீஸ் ரூம் போயிரலாம். இன்னைக்கு அவருக்கு ஏதோ கேஸ் இருக்கு. கிளரிக்கல் ஸ்டாஃப்பும் இன்னைக்கு லீவு. நமக்கு சௌகரியமான இடம்'' என்றான்.

போனார்கள்!

அழகேசன் லேசான அவமானம் முகத்தில் கவிய சொன்னான்.

''உங்களோட எல்லாப் பிரச்னைகளும் தீர்ந்து போற மாதிரி ஒரு விஷயம் சொல்லப் போறேன். ஆனா. அதுக் கப்புறம் நீங்க எனக்கு ஒரு உதவி செய்யணும்'' என்றான்.

''சரி..!'' என்றாள்.

அழகேசன் சொன்னான்.

''உங்க குடும்பத்துல இத்தனை பிரச்சினைகளுக்கும் காரணமா இருக்கற உயில் பத்தின விஷயம்'' என்று விவரம் சொன்னான்.

மாலினி சுத்தமாக அதிர்ந்து போனாள்.

''நிஜம்மாவா சொல்றீங்க?'' என்றாள்.

''ஆமா!''

''எப்படித் தெரியும்!''

'எங்கப்பாவே சொன்னாரு..!'' என்றான்.

''உங்கப்பாவே.. உங்கப்பாவே.. ஒத்துகிட்டாரா?''

''ஒத்துக்குவாரா..! உளறிட்டாரு! குடிபோதையில உளறினாரு..'' என்றான்.

''ஓ..! இப்ப என்ன செய்றது?''

''உங்க அண்ணனுக்குத் தெரிவிங்க.. மேற்கொண்டு இந்த லைன்ல விசாரணையைக் கொண்டு போகச் சொல்லுங்க..''

''அப்புறம்.. ஏதோ உதவி கேட்டீங்க!''

''அதை உங்கண்ணன்கிட்டேதான் பேசணும்'' என்றான்.

''ஓ! அண்ணன் ஒத்துக்கணுமே.!''

''ஒத்துக்குவாரு..! எவ்வளவு பெரிய உதவி செய்ய றேன். நீங்க எனக்கு ஒரு பிராமிஸ் பண்ணனும். இந்த விஷயத்தை நீங்க உங்கண்ணன்கிட்டே சொல்லக் கூடாது. நான்தான் சொல்லுவேன். அப்பத்தான் நான் உதவி கேட்க முடியும்.''



''அப்புறம்.. ஏன் என்கிட்டே சொன்னீங்க.''

''ரெண்டு காரணங்களுக்காக! நீங்க முதலாவது நான் உங்க மேலே எவ்வளவு நம்பிக்கை வச்சிருக்கேன்னு நீங்க புரிஞ்சுக்கணும். ரெண்டாவது இது எவ்வளவு சீரியஸான விஷயம்னு நீங்க புரிஞ்சுக்கணும்.''

உடனடியா அண்ணனுக்கு போன் செய்தாள்.

''அண்ணா! அழகேசன் அதாண்ணா கிருபாகரன் சாரோட சன் உங்ககிட்டே பேசணுமாம். ரொம்ப முக்கிய மான விஷயம்ண்ணா!'' என்றாள்.

''சரி சந்திக்கறேன்! என்றான்.

அன்று மாலையே சந்தித்தார்கள்!

அழகேசன் சசிசேகரனிடம் சொன்னான்.

''சார்! ஒரு முக்கியமான உண்மையை நான் உங் களுக்குச் சொல்லப் போறேன். ஆனா, அதுக்கப்புறம் நான் ஒரு பிரதியுபகாரம் எதிர்பார்ப்பேன்.''

''சரி..! விஷயத்தைச் சொல்லுங்க..!''

''இல்லே! சார் அந்தப் பிரதியுபகாரத்துக்கு ஒத்து கிட்டாத்தான் நான் மேற்கொண்டு பேசுவேன்.''

''என்னால செய்யக் கூடிய எந்த உதவியும் நான் செய்யத் தயாராயிருக்கேன்'' என்றான்.

''உங்களால செய்யக் கூடிய உதவிதான்'' என்றான்.

அதற்குப் பிறகுதான் அழகேசன் இடிபோல அந்தச் செய்தியை இறக்கினான்.

"சார்! எந்த உயிலுக்காகக் கோபிச்சுக்கிட்டு நீங்க வெளியேறினீங்களோ.. அந்த உயில் பற்றின பிரச்சினையை முடிச்சுத் தரேன்.

சசிசேகரன் ஆச்சரியமாகப் பார்த்தான். "எப்படி?" என்றான்.

"ஆமா சார்! முடிச்சுத் தரேன். ஆனா அதுக்குப் பிரதியுபகாரமா நீங்க எனக்கு ஒரு விஷயம் செஞ்சு தரணும்."

சசிசேகரன் மாலினியின் முகத்தைப் பார்த்தான். "சரின்னு.. சொல்லுண்ணா!" என்பதுபோல கண்ணமர்த்தினாள்.

சம்மதம் சொன்னான். பிறகுதான் அழகேசன் சொன்னான்.

"சார்! அந்த உயில் பொய்யான உயில் உண்மையான உயிலே அல்ல" என்றான்.

சசிசேகரன் சுத்தமாக அதிர்ந்து போனான். "இந்த அளவுக்கு அவன் எதிர்பார்க்கவில்லை. அப்பாவின் மனத்தை யாரோ கலைத்திருக்கிறார்கள். அதனால்தான் அப்பா அப்படி எழுதியிருக்கிறார் என்று தோன்றியதே தவிர இப்படி நினைக்கவேயில்லை. ஆனால் உயிலைப் பற்றிய ஏதோ சில விஷயங்கள் நெருடலாகவே இருந்தது.

நடேசன் கூட அன்றைக்குக் கேட்டாரே உயில்ல ஏன் பசுங்குடி கிராமத்து சொத்துக்கள் பற்றிய விவரங்கள் வர்லைன்னு. அப்போதிருந்தே அவனுக்குள்ளும் அந்தக் குழப்பம் இருந்தது. ஆனால் கிருபாகரன் இவ்வளவு கீழே இறங்குவார் என்று அவன் முற்றிலும் எதிர்பார்க்கவில்லை. அதைப் புரிந்து கொண்டாற் போல அழகேசன் சொன்னான்.

"அதுதான்.. சார்! எனக்கு வருத்தம். இவ்வளவு கீழே இறங்கிட்டாரேன்னு.." என்றான்.

சசிசேகரன் சற்று நேரம் மௌனமாக அமர்ந்து விட்டான்.

"அப்புறம் ஏதோ உதவி கேட்டீங்களே! அது என்ன?" என்றான்.



"சார்! எந்த மகனும் செய்யக் கூடாத ஒரு காரியத்தை நான் செய்திருக்கேன். அது என்னன்னா சொந்த அப்பாவையே காட்டிக் குடுத்துட்டேன். அப்பா சொன்னபடி அம்மாவைக் கொன்னுட்டு அதுக்குப் பலனா அதே அம்மாவை உயிர்ப்பித்துக் குடுன்னு கேட்டாரே பரசுராமர் அந்த நிலைமையில நான் இருக்கேன். எங்கப்பா இப்படி ஒரு குடும்பத்துக்குள்ளே நுழைஞ்சு குட்டையைக் குழப்பறதை நான் விரும்பலே. அதுவும் எங்க தாத்தா கூட இருந்து சர்வீஸ் செஞ்ச குடும்பம். பணத்தாசை, இழந்த சொத்துக்களை மீட்கணும்னு ஒரு வெறி.. அந்த வெறியில அப்படி நடந்துகிட்டாரு" என்றான்.

ஒரு நிமிடம் நிறுத்தினான்.

சசிசேகரனுக்குப் புரிந்து போனது.

"உங்க அப்பாவுக்கு எந்த இடைஞ்சலும் வரக்கூடாது.. அதுதானே..?"

"ஆமா.. சார்! இது மட்டும் புரூஃப்பானா அது பெரிய கிரிமினல் குற்றமாயிடும். அதுக்கப்புறம் என்ன நடக்கும்னு உங்களுக்கே தெரியும். பார் கவுன்சில்ல இருந்து பேரையே ரிமூவ் பண்ணிடுவாங்க..! அது மட்டுமில்ல பெரிய தலைக்குனிவா.. ஆயிடும்" என்றான்.

முகத்தில் சொல்ல வொண்ணாத வேதனை தெரிந்தது.

"புரியுது.. புரியுது" என்றான் சசிசேகரன்.

மேலும் சற்று நேரம் பேசினார்கள். அப்போதுதான் அழகேசன் தான் பி.எஸ்ஸி கணிதம் படித்து ஆசிரியப் பயிற்சி முடித்திருப்பதைச் சொன்னான்.

மனதுக்குள் அதைக் குறித்துக் கொண்டான் சசிசேகரன்.

அதற்குப் பிறகு அவனை உற்சாகப் படுத்தும் விதமாக கலகலப்பாகப் பேசினான் சசிசேகரன்.

''சரி.. தம்பி! அப்ப.. நான் ஊருக்கே.. கிளம்பட்டுமா?'' என்றார்.

''ஊருக்கே.. போய்..! அங்கே தனியாத்தானே பொழுதை ஓட்டணும். அதெல்லாம் வேண்டாம். பெரியவங்களா நீங்க இங்கயே இருங்க. நானும் ஸ்கூலைப் போய்ப் பாக்கப் போகணும். நிலத்தைப் பாத்துக்கணும். அங்கயும் ரெண்டொரு நாள் தங்கணும். அதனால வழக்கம் போல எல்லா நிர்வாகத்தையும் நீங்க பாத்துக்குங்க...'' என்றான்.

சிவஞானம் மகிழ்ந்து போனார்.

மாலினி ஏதோ வெளியே யாரையோ பிரண்ட்ஸைப் பார்த்து விட்டு வருவதாகப் போனாள். குணசேகரனும் வெளியே போயிருந்தான்.

சசிசேகரன் மெதுவாகச் சித்தியின் அறையை எட்டிப் பார்த்தான்.

மங்களம் சிவபுராணம் படித்துக் கொண்டிருந்தார்.

''என்ன.. தம்பி..!'' என்றார் வாஞ்சையாக.

''அம்மா..!'' என்று உள்ளே நுழைந்தான்.

முகத்தில் லேசான வெட்கம் இழையோடியது. மங்களம் ஆச்சரியமாகப் பார்க்க அவன் அம்மாவின் கட்டிலில் போய் அருகில் அமர்ந்தான்.

''அம்மா..!'' என்று மறுபடியும் இழுத்தான்.

''சொல்லு.. தம்பி..!''

''அம்மா..! நான் பசுங்குடி கிராமத்துல போய் இருந்தது வும் ஏதோ காரணத்துக்குத்தான்னு நினைக்கறேன்'' என்றான்.

அவர் மௌனமாக ஆனால் ஆர்வமாகப் பார்த்துக் கொண்டிருந்தார்.



மறுபடியும் அவன் தயங்கவும் ''சொல்லுப்பா...'' என்றார்.

''அம்மா! அந்த ஊர்ல நம்ம நடேச மாமா பொறுப்பில.. சிஸ்டர்ஸ் ரெண்டு பேரு.. இருக்காங்க.. அதுல.. பெரிய பொண்ணு.. பேரு.. மதுரவாணி..'' என்று இழுத்தவன் வெட்கத்துடன் சிரித்து விட்டான்.

மங்களத்தின் முகம் மலர்ந்தது.

''அப்படியா?'' என்றார் ஆர்வமாக.

''ஆமா! நடேச மாமாவுக்கு தூரத்துச் சொந்தம்! நல்ல பொண்ணு'' என்றான்.

மங்களத்தின் கண்களில் சிரிப்பு மலர்ந்தது. சசிசேகரன் கருப்பண்ணன் அவர்களை மிரட்டியது. நடேசனிடம் அடைக்கலம் வந்தது என்ற எல்லா விவரங்களையும் சொன்னான்.

மங்களம் எல்லாவற்றையும் கேட்டு விட்டு ஒரே ஒரு வார்த்தை சொன்னார்.

''தம்பி! உனக்குப் பிடிச்சிருக்குங்கற ஒண்ணே போதும். அதுக்கு மேல எதுக்கு விளக்கம் எல்லாம்..'' என்றார்.

''இல்லம்மா! எல்லாம் சொல்லிடணும் இல்லே!'' என்றான்.

''அது சரி..!'' என்றார்.

அம்மாவிடம் இருந்து விஷயம் கறந்து கொண்ட மாலினி பிற்பகல் முழுதும் ஒரே கேலியும் கலாட்டாவு மாக இருந்தாள்.

''அண்ணா! அவங்ககிட்டே பேசணும்'' என்று அடம் பிடித்தாள்.

''ஏய்! சொன்னாக் கேளு! மதுரா கிட்டே செல்போன் இல்லே..'' என்றான் சசிசேகரன்.

''மதுரா'' என்று விசிலடித்தான் குணசேகரன். ''பேரு நல்லாருக்கே'' என்று சிரித்தான்.

''அதெல்லாம்.. முடியாது! நாங்க பேசியே ஆகணும்.'' என்றாள் மாலினி.

''சரி! மெடிக்கல் ஷாப் நம்பர்ல வேண்ணா.. பேசுங்க' என்று நம்பர் கொடுத்தான்.

அவன் அடித்தவுடனே செல்போனை வெடுக்கென்று கையில் பிடுங்கிக் கொண்டாள் மாலினி.

''ஹல்லோ! மதுரவாணி இருக்காங்களா?'' என்றாள்.

''ஆமா! நான்தான் பேசறேன்'' என்றாள் மதுரவாணி.

''ஹல்லோ! பசுங்குடி கிராமம் என்ன டேன்ஜரஸா இருக்கு. யாராவது ஒரு இளைஞனை உங்க ஊருக்கு அனுப்பி வச்சா பத்திரமாத் திருப்பி அனுப்ப மாட்டீங் களா?'' என்று மிரட்டவும் மதுரவாணி திகைத்துப் போனாள்.

''ஹலோ! நீங்க யாரு? என்ன பேசறீங்க? எனக்குப் புரியலே..'' என்று திணறினாள்.

சசிசேகரன் அவளிடமிருந்து செல்போனை வாங்க முயற்சித்தான். ஆனால் அவள் அவன் கையில் கொடுக் காமல் ஆட்டம் காட்டினாள்.

''மேடம்! சசிசேகரன்னு ஒருத்தர் இருக்காரே... அவர் சிஸ்டர் பேசறேன்.. மாலினி! இல்லே.. அவரு இங்கிருந்து வந்தப்ப ரொம்ப கம்பீரமா வந்தாரு..! ஆனா.. இப்ப.. என்ன.. மதுரான்னு சொன்னாலே.. முகம்.. சிவந்து வெட் கப்படறாரு..'' என்றாள்.

மதுரவாணி திணறிப் போனாள்.



''என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் திணறி னாள்.

''என்ன பதில் வரமாட்டேங்குதா? சரி.. சரி..! பரவால்லே! நாங்க ஊருக்கு வரும்போது நல்லாக் கவனிக்கணும். இத பாருங்க! பக்கத்திலதான் நிக்கிறாரு.. குடுக்கறேன்'' என்று சகோதரனிடம் கொடுத்தாள்.

''மதுரா.. பயந்துட்டியா?'' என்றான் குரல் குழைய. குணசேகரனும், மாலினியும் இரண்டு பக்கமும் நின்றபடி அவன் முகத்தைக் கூர்ந்து கவனிக்க.

''ஏய் போங்கடி.. அந்தப் பக்கம். அவன் பேசட்டும்'' என்று மங்களம் மிரட்டுவது தெளிவாகக் கேட்டது மதுர வாணிக்கு.

''ஆமா.. திடீர்னு யாரு நம்மகிட்டே இப்படிப் பேசறாங்கன்னு'' என்று திணறினாள்.

''மாலினி! அறுந்த வாலு'' என்று சொன்னான். ''மது..'' என்று தனிமை நாடவும் அதற்கு மேல் மாலினியும், குணசேகரனும் விலகி நின்றார்கள்.

''மதுரா! ஒண்ணுமில்லே..! அம்மாகிட்டே இப்பத்தான் நம்ம விஷயம் சொன்னேன்! அம்மா.. உனக்குப் பிடிச் சிருந்தா சரின்னு சம்மதம் குடுத்தாங்க. அதுக்குத்தான் மாலினி இந்த கலாட்டா பண்றா..'' என்றான்.

''ஓ..'' என்றாள் மதுரவாணி. மேலே என்ன பேசுவ தென்று தெரியாமல் தடுமாறினாள்.

''சரி..! நான் அப்புறம் பேசறேன்! அநேகமா சீக்கிரமா அம்மா, மாலினி, குணசேகரன் எல்லாரும் நம்ம ஊருக்கு வருவாங்கன்னு நினைக்கிறேன்'' என்றான்.

''சரிங்க..!'' என்றாள்.

போனை வைக்கும்போது அவன் இன்னும் கொஞ்சம் பேசியிருக்கலாமோ என்று தோன்றியது. இரண்டு பக்கமுமே அந்த ஏக்கம் இருந்தது. அவன் வருகைக்காகக் காத்திருந்தாள் மதுரவாணி.

* * *

நடேசன், தங்கசாமி, சசிசேகரன் மூவரும் ஆலோசனையில் இருந்தார்கள்.

நேர் காணலுக்கு வந்த அத்தனை விண்ணப்பங்களையும் மறுமுறையும் பரிசீலித்துப் பார்த்தார்கள்.

சசிசேகரன் மறுபடியும் அதே முடிவுக்குத்தான் வந்தான்.

"அழகேசன்தான் திருப்திகரமா இருக்கு! "ஆர்டர் ரெடி பண்ணிடுங்க" என்றான்.

தங்கசாமி அந்தப் பணிகளில் ஈடுபடும்போது நடேசனின் முகத்தில் ஏற்பட்ட ஏமாற்றம் புரிய "அடுத்த சைன்ஸ் போஸ்ட்டுக் கொடிமலருக்குக் குடுத்தர்லாம்" என்றான்.

நடேசனின் முகம் மலர்ந்தது!

இன்றைக்கு அவனும், நடேசனுமாக மீண்டும் தோட்டத்துக்கு அந்த ஒத்தையடிப் பாதை வழியாக நடந்து போனார்கள்!

"தம்பி! ஒரு வகையில சந்தோஷமா இருக்கு!" என்றார்.

சசிசேகரன் அதைப் பார்த்தார் "என்ன?" என்பது போல.

அவர் தொடர்ந்தார்.

"ஆமா... தம்பி! எல்லாப் பிரச்சினையும் முடிஞ்சு இந்தத் தடவை நிம்மதியா வந்திருக்கீங்கன்னு தெரிஞ்சதும் ரொம்ப சந்தோஷமா இருக்கு! முதல்ல ரொம்ப



மனக்கஷ்டத்தோட வந்தீங்க இல்லே! இப்பத்தான் மனசு தெளிவாயிருக்கு." என்றார்.

சசிசேகரன் புன்னகைத்தான்.

"மாமா! இந்த ஊருக்கு வந்ததுல எனக்கு வாழ்க்கையில முக்கியமான மாற்றங்கள் இருக்கு. அதனால நீங்க ரொம்பவே சந்தோஷப்பட்டுக்கலாம்" என்றான் சசிசேகரன்.

"ஓஹோ!" என்றவர் அவன் என்ன சொல்ல வருகிறான் என்பதைப் புரியாதவராய் சொன்னார்.

"ஆனா, மதுரவாணிகிட்டே சொன்ன மாதிரிக் கொடிமலருக்கு போஸ்டிங் குடுக்க முடியாத நிலைமையாய் போச்சேன்னு கொஞ்சம் கவலையாப் போச்சு."

"கவலையே பட வேண்டாம். மாமா! நான் இந்த விஷயத்தை மதுராகிட்டயே பேசிட்டேன். பள்ளிக் கூடத்துக்கு எது நல்லதோ அதையே செய்ங்கன்னு சொல்லிட்டாப்ல. என்ன மாமா.. ரெண்டு முக்கியமான விஷயம்னு சொன்னேன். என்னனு கேட்க மாட்டேங்கறீங்க?" என்றான்.

அவன் உரிமையாக கோபித்துக் கொள்வதைச் சற்று வியப்பாகவே பார்த்தார்.

"மாமா! இந்த நிலம் கைக்கு வந்தது ஒரு சந்தோஷம். அதைக் காட்டிலும் இந்தப் பள்ளிக்கூடத்துக்குப் பொறுப்பேத்துகிட்டது ரொம்ப சந்தோஷம். இன்னொரு முக்கியமான விஷயம்.. இங்கே இருந்து போகும்போது நான்.." என்று நிறுத்தினான்.

லேசாக முகம் சிவந்து போனது.

நடேசன் குறுகுறுவென்று பார்த்தார். லேசாகப் புரிகிறாற் போல இருந்தது.

சசிசேகரன் ஒரு வெட்கம் கலந்த புன்னகையுடன் தொடர்ந்தான்.

''இந்த ஊரை விட்டு நான் போகும் போது குடும்பஸ் தனாப் போவேன்.. போல இருக்கு'' என்றான்.

நடேசனின் முகம் மலர்ந்து போனது. ''ரொம்ப சந்தோஷம் தம்பி...! ரொம்ப சந்தோஷம்'' என்றார்.

''ஆமா! மதுரவாணியை எனக்கு ரொம்பப் பிடிச் சிருக்கு.. அம்மாகிட்டே சொன்னேன். அம்மாவுக்கும் ரொம்ப சந்தோஷம். முறைப்படி உங்ககிட்டே வந்து பொண்ணு கேட்கறேன்னு சொல்லியிருக்காங்க..'' என்றான்.

''ஓ! ரொம்ப நல்லதுங்க.. தம்பி! மதுரவாணி எல்லா விதத்திலயும் தகுதியான பொண்ணு'' என்றார்.

''ஆனா.. அதுல ஒரு சிக்கல்..!'' என்றான்.

''என்ன?'' என்பது போலப் பார்த்தார்.

சிக்கல் என்னவென்று சொன்னான்.

''ம்.. கரெக்ட்டுத்தான்! என்று அவரும் சிந்தனையி லாழ்ந்தார்.

''அதனாலதான்.. நான் யோசிக்கறேன்.. யாருடைய பேரும் கெட்டுப் போகக் கூடாதில்லே..'' என்றான் சசிசேகரன்.

அப்போதுதான் நடேசன் அந்த யோசனையைச் சொன் னார்.

''தம்பி! இப்படி செஞ்சுடுவோம்..'' என்று திட்டம் சொன்னார்.

சசிசேகரன் உண்மையாகவே மகிழ்ச்சி அடைந்தான்.

''ரொம்ப நல்ல ஐடியா!'' என்றான். மேலும்,



''ஆனா.. மதுரா ஒத்துக்கணுமே..?!'' என்றான்.

''அதெல்லாம் ஒத்துக்குவா..'' என்றார் நடேசன்.

''மதுரா ஒத்துக்குவா! ஊர்ப் பெரியவங்ககிட்டே பேசணுமோ! அது எதுக்கு? எல்லாருக்குமே.. நீங்க எது செஞ்சாலும் பள்ளிக்கூடத்துக்கு நல்லதாத்தான் செய்வீங் கன்னு ஒரு நம்பிக்கை இருக்கு..'' என்றான்.

வீட்டை அடைந்தார்கள்.

நடேசன் கொஞ்சம் பரபரப்பாகக் காணப்பட்டார்.

''தம்பி! நான் போய் மதுரவாணியை அனுப்பறேன். பேசி முடிச்சிடுங்க..'' என்றார்.

மதுரவாணி வந்தாள்!

மெல்லத் தயங்கிய நடையுடன் அவள் வருவதை அந்தத் திண்ணை மேடையில் சேரில் அமர்ந்தபடி பார்த்துக் கொண்டிருந்தான் சசிசேகரன்.

வீட்டருகில் வரவும் எழுந்து உள்ளறைக்கு அழைத்துப் போனான்.

''மதுரா..!'' என்றான் கிறக்கக் குரலில்.

''ம்..!'' என்றாள்.

''அம்மா.. சம்மதம்.. சொல்லிட்டாங்க..! இனிமே நான் இங்கயே இருக்க முடியாது. ஊர்ல ரெண்டு நாள் இங்க ரெண்டு நாள்ன்னு சரியா இருக்கும். தேவி தரிசனம் தினமும் கிடைக்காது..'' என்றான்.

மெல்லத் தன்னருகில் இழுத்தான்!

''இனிமே.. தொடாதீங்க..ன்னெல்லாம் சொல்லாதே! எல்லார்கிட்டயும் சம்மதம் வாங்கியாச்சு..'' என்று இழைந் தான்.

பரிசுகள் கொடுத்தான்.

மதுரவாணியால் தடுக்க முடியவில்லை. மெல்ல விலகி னாள்.

''மதுரா..! ரெண்டு விஷயங்களைப் பத்தி யோசிச் சிருக்கு?'' என்றான்.

''இனிமே.. நான் என்ன யோசிக்கறது? அதான் நீங்க யோசிக்கறீங்களே.. எல்லாத்தையும்'' என்றாள்.

''குட்! அந்த நம்பிக்கை இருந்தாச் சரி..!'' என்றான்.

''மதுரா! அம்மா, மாலினி, குணா எல்லாரும் இந்த வெள்ளிக்கிழமை வர்றாங்க. நடேச மாமா கிட்டே சொல்லிட்டேன். இங்கே இந்தத் தோட்ட வீட்ல வச்சு.. வீட்டளவுக்கு பேசி முடிக்குது..'' என்றான்.

''ம்..!'' என்றாள். தானாகவே அவன் மார்பில் சாய்ந்து கொண்டாள்.

''அப்பா.. மயக்கமே.. வரும்போல இருக்கு..!'' என்று சிரித்தான்.

காதருகில் அவன் சிரிப்பது அவளுக்குள்ளே ஒரு வெட்கச் சிரிப்பை ஊட்டியது.

''அதுக்கு முன்னே.. ரெண்டு விஷயங்கள் தெளிவாக் கிடறேன். அழகேசனுக்குத்தான் ஃபர்ஸ்ட் அப்பாயின்ட் மென்ட். இரண்டாவது அப்பாயின்ட்மென்ட்டுத்தான் கொடிமலருக்கு. ஆனா.. அப்பாயின்ட்மென்ட் ஆகி ஜாயின் பண்றதுக்கு முன்னாடியே..'' என்று அவன் போட்ட கண்டிஷனை அவள் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டாள்.

அவள் முக மலர்ச்சியை ரசித்தபடியே ''நமக்கு.. நமக்கு.. ஒரே மாசத்துல கல்யாணம்..'' என்றான்.



''ஒரே.. மாசத்துலயா?'' என்று அவள் வியக்க ''ஆமா.. அதுக்கு மேல தாங்காது அம்மிணி!'' என்று இழுக்க.. அவள் மறுபடியும் அவன் மார்பில் முகம் புதைத்தாள்.

அதே நேரம்!

கிருபாகரன் வேறு திட்டங்கள் போட்டுக் கொண் டிருந்தார்.

## 27



''**சார்!**'' என்றார் தங்கசாமி பதட்டமாக போனில்.

''சொல்லுங்க..!'' என்றான் சசிசேகரன்.

''சார்! கல்வி அதிகாரிகள் வந்திருக் காங்க..! ஹைஸ்கூல் ஆகறதுக்கான இன்ஃப்ரா ஸ்ட்ரக்சர்.. நம்மகிட்டே இருக்கான்னு பார்க்க வந்திருக்காங்க? அதோட தனிப்பட்ட முறையில என் கிட்ட சொன்னாங்க! ஏதோ மொட்டைக் கடுதாசி போயிருக்காம். புதிதாக வந்திருக்கிற செயலர் தன்னோட சொந்த லாபத்துக்காக பள்ளிக் கூடத்தைப் பயன் படுத்துவதாகவும் கட்டிடமே அவரோடது இல்லைன்னும் எழுதி இருக்காங்களாம்.''

''சரி! வழக்கமா வர்ற மாதிரி நான் வர்றேன். அவங் களை நான் சந்திச்சுப் பேசறேன்'' என்றான்.

தங்கசாமி கொஞ்சம் நிம்மதியடைந்தார். ஆனால் சசிசேகரன் எந்த உரிமையில் பள்ளிச் செயலராக இருக் கிறார் என்று கேட்டால் எதைக் கொண்டு நிரூபிப்பது என்ற கவலையும் இருந்தது.

சசிசேகரன் தனது அறையில் இருக்கக் கல்வி அதி காரிகளை அழைத்து வந்தார் தங்கசாமி.

வரவேற்றுப் பேசினான்.

''கான்ஃபிடென்ஷியல்'' என்று ஒரு பைலை எடுத்துப் போட்டான்.

வெள்ளையநாயுடுவும் அவரது மகன்களும் அதில் தெளிவாக எழுதிக் கொடுத்திருந்தார்கள்.

பள்ளிக்கு மூன்று ஏக்கர் நிலம். வெள்ளைய நாயுடு சொந்தப் பணத்தில் கொடுத்திருப்பதாகவும், அதே போல பள்ளிக் கூடத்துக் கட்டிடங்களையும் சொந்த செலவில் கட்டியதாகவும் அவையனைத்துக்கும் உரிமையாளராக சசிசேகரனையே தொடர்ந்து இருக்கச் செய்ய ஒப்புதல் பத்திரமும் கொடுத்து அது பதிவும் செய்யப் பட்டிருந்தது.

தன்னிடம் கூட இந்த விஷயத்தைப் பெரிதாகச் சொல்லிக் கொள்ளாத பண்பு தங்கசாமியை அசரச் செய்தது. ஒரு நாளும்.

''நான்தான் இந்தப் பள்ளிக் கூடத்திற்கு உரிமைக் காரன்'' என்று அவன் சொல்லிக் கொண்டதே இல்லை.

பள்ளிக்கூடம் பொதுச் சொத்து என்பது போலவேதான் நடந்து கொண்டான்.

வழக்கமான கட்டணம் தவிர வேறு விதமாகச் செய்யப் படுகிற எல்லா வசூலுக்கும் பெற்றோர் ஆசிரியர் கழகத் தில் கணக்கு வைக்க வேண்டுமென்றும், எல்லாச் செலவு களுக்கும் முறையான கணக்கு வைக்க வேண்டுமென்றும் கண்டிப்பாக இருந்தான்.

எத்தனையோ விதங்களில் கல்வி நிறுவனங்களில் இருந்து சம்பாதிப்பவர்கள் இருக்கையில் கல்வியை முக்கியமான சேவையாகக் கருதி அவன் செய்தது அவன் பால் அவருக்குப் பெரு மதிப்பை ஏற்படுத்தியது.



கல்வி அதிகாரிகளும் திருப்தியடைந்தார்கள்! ஆசிரி யர்களைப் பணியமர்த்துதலிலும் சரியான முறையையே பயன்படுத்தியதை அவர்களுக்கு விளக்கினான்.

''சாரி சார்! நியாயப்படி மொட்டைக் கடுதாசிக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டியதில்லை. ஆனால் எதற்கும் விசாரிக்கறது நல்லது இல்லீங்களா.. அதனால தான் வந்தோம்'' என்றார்கள் மாவட்டக் கல்வி அதிகாரி யும் ஆய்வாளரும்.

''ரொம்ப சந்தோஷம்.. சார்!'' என்றான். தலைமை யாசிரியர் வழியனுப்பி வைத்து விட்டு வந்தார்.

''யார் சார் செய்திருப்பார்கள்?'' என்று. தங்கசாமி கேட்க சசிசேகரன் அதற்கு விடை போல கேட்டான்.

''ஏன்.. சார்! உங்களுக்கு அடுத்தபடியாத் தலைமை யாசிரியர் பதவியை எதிர்பார்த்துட்டிருந்தவங்க யாரா வது..''

''இல்ல.. சார்! சந்திரவேணி மேடம்தான் அடுத்து. ஆனா, அவங்களுக்கும் ஒரு வருஷம்தான் சர்வீஸ். பெரிய மானிட்டரி மெனிஃபிட்டும் வராது. அதனால தாராளமா ஹைஸ்கூல் ஆக்கறதுக்கு ஏற்பாடு செய்ங்கன்னு சொல் லிட்டாங்க'' என்றார்.

''அப்ப அவருதான்!'' என்றான் சசிசேகரன்.

தங்கசாமி கேள்விக் குறியாகப் பார்த்தார்.

''அது வேற ஒண்ணுமில்ல! எனக்கு ரொம்ப வேண்டிய நலம் விரும்பி ஒருத்தர் இருக்காரு.. அவராத்தான் இருக்கும்..'' என்றான்.

அவன் கருத்தே சரியாக இருந்தது.

* * *

''சசிசேகரன்.. நீ என்னை சரியாப் புரிஞ்சுக்கலப்பா..! என்ற கிருபாகரனின் குரலில் எக்கச்சக்கமான எரிச்சல் தொனித்தது.

''நான்தான் உங்களை நல்லாப் புரிஞ்சிருக்கேன்னு நினைக்கறேன். நிரூபிக்கட்டுமா? நீங்க இப்ப எதுக்காக என்னைக் கூப்பிட்டிருக்கீங்கன்னு நான் சொல்லட்டுமா? மாலினி, அழகேசன் விவகாரத்துக்காக...'' என்றான்.

கிருபாகரன் திகைத்துப் போனார்.

''நல்லா யோசிச்சுப் பாருங்க! நீங்க என்னோட பேச்சு வார்த்தை நடத்தும் போதெல்லாம்.. நான் எப்பவாவது மாலினியை அழகேசனுக்கு கல்யாணம் பண்ணித் தரேன்னு வாக்குறுதி குடுத்தேனா?

''மாலினியோட விருப்பத்தை நிறைவேற்றி வைக்கறேன்னுதான் சொன்னேன். ஆனா.. நீங்களாத்தான் மாலினிக்கு அழகேசன் மேல விருப்பம்னு நினைச்சுகிட்டீங்க..!'' என்றான்.

கிருபாகரன் ஒத்துக் கொள்ளத்தான் வேண்டியிருந்தது. ஏனென்றால் சசிசேகரன் வாய் திறந்து அப்படி எந்த வாக்குறுதியும் கொடுக்கவில்லை. ஆனால் மாலினி மட்டுமல்ல தன் மகன் அழகேசனும் சேர்ந்து இப்படித் தன்னைக் கவிழ்த்து விடுவார்கள் என்பது அவர் எதிர் பாராதது.

உயிலையெல்லாம் கொடுத்ததற்குப் பிறகு தன்னிடம் எந்தப் பிடிப்பும் இல்லாது போய்விடுமேயென்று யோசித்துக் கொண்டிருக்கையில் மாலினியும், அழகேசனும் விருப்பத்தோடு பழகுகிறார்கள் என்று தோன்றியது.

மனம் தேறிக் கொண்டது!



''எப்படியானால் என்ன? மாலினி இந்த வீட்டுக்கு வந்து விட்டால் சொத்தில் ஒரு பங்காவது வந்து விடும். அது மட்டுமல்ல அழகேசனின் வாழ்க்கை பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை! இந்தப் பயல்தான் பிழைக்கத் தெரியாத பயலா இருக்கானே! சசிசேகரன் கெட்டிக்காரன். அது மட்டுமல்ல மாலினி மேல் பாசமும் வைத்திருக்கிறான். மாலினிக்காக எதுவும் செய்வான்'' என்ற எண்ணம் தோன்றியதும் தெம்பாகி இருந்தார்.

அன்றைக்கு!

உயில் பொய்யானது தானே தயாரித்தது என்று தெரிந்த அன்றைக்கு அழகேசன் தன்னிடம் வெகுவாகக் கோபித்துக் கொண்டதும், கண்டித்ததும் நினைவுக்கு வந்தது. அது மட்டுமல்லாமல் உயிலைத் திருப்பிக் கொடுப்பதன் மூலம் சசிசேகரனை ஓரளவுக்காவது திருப்திப் படுத்த முடியும். அரை மனதோடாவது தங்கையைத் தன் மகனுக்குக் கல்யாணம் செய்து வைப்பான் என்று எண்ணித் தான் திருப்பிக் கொடுத்தார்.

ஒரு வாரமாகியும் அழகேசனும் சரி, சசிசேகரனும் சரி கல்யாணப் பேச்சை எடுக்கவேயில்லை.

சந்தேகம் வந்தது!

மகனிடம் கேட்டார். ''ஏண்டா..! மாலினியும் நீயும் ரொம்ப பிரண்ட்ஸ் மாதிரிச் சொன்னே! சசிசேகரனும்.. சரி.. நீயும் சரி.. கல்யாணப் பேச்சை ஆரம்பிக்கவே மாட்டேங்கறீங்க'' என்றார்.

''அப்பா! என்னப்பா.. சொல்றீங்க!''

''என்னடா.. இப்படிக் கேட்கறே..! நீயும் மாலினியும் கல்யாணம் பண்ணிக்கப் போறீங்கங்கற நப்பாசையில தானே நான் உயிலைத் திருப்பிக் கொடுத்தேன்.''

''அப்ப.. மனசு திருந்தி உயிலைக் குடுக்கலையா?''

''அடப்போடா! இந்த மாதிரி போலி ரெக்கார்ட்ஸ் தயாரிக்கறதெல்லாம் ரொம்ப சகஜம்பா! இன்னைக்குப் பெரிய பணக்காரங்கள்லாம் எப்படி வந்தார்கள்! ஒரே இடத்தை ரெண்டு பேருக்கு வித்தவங்க, அடியாள் வச்சு மிரட்றவன், கட்டைப் பஞ்சாயத்து..''

''அப்பா.. ப்ளீஸ்! ஸ்டாப் பண்ணுங்க. உங்க எதிராளி வக்கீல் யார் தெரியும் இல்லே! ஜெயராம். உங்களை எதுல சிக்க வைக்கலாமோங்கற மாதிரி ஆளு! என்னமோ உங்கப்பா காலத்துல இருந்து குடும்ப வக்கீலா இருந்திருக்கற ஒரே காரணத்துக்காக சசிசேகரன் உன்னைச் சும்மா விட்டார்ன்னு நான் நினைக்கறேன். அப்பா.. போதும்ப்பா..! நீ சொத்து சேக்கறது யாருக்காக! எனக்காக! வேண்டாம். நீ இப்படியெல்லாம் தில்லு முல்லு செஞ்சு எனக்கு சொத்து சேர்க்க வேண்டாம்'' என்றான்.

கிருபாகரன் ஒருவித எரிச்சலுடன் பார்த்தார். ''இந்தக் கீதோபதேசம் எல்லாம் இருக்கட்டும்! மாலினிக்கும், உனக்கும் உள்ள உறவு என்ன? அதைச் சொல்லு!''

''அப்பா! ஒரு பெண்ணும், ஆணும் சிரிச்சுப் பேசினாலே அதுக்குப் பேரு காதலா நானும் மாலினியும் பிரண்ட்ஸ். அவ்வளவுதான்'' என்றான்.

கிருபாகரன் மிகவும் கடுப்பானார்.

''ஏண்டா! நீயும் கூட்டு சேந்துட்டு என்னைக் கவுக்கறியா?''

''நான் கவுக்கறேனா? நான் உங்களைக் காப்பாத்தியிருக்கேன்னு வைங்க. ஆனா, எனக்கு இப்பவும் கூட ஒரு சந்தேகம். இருக்கு..! நீ தான் உயில்ல தில்லு முல்லு செஞ்சேன்னு நிரூபிக்கற மாதிரி.. ஏதாவது ஆதாரம்



சசிசேகரன்கிட்டே இருக்கும்னு நினைக்கறேன். இல்லாட்டி ஜெயராமும் இவ்வளவு ஈஸியா விடற ஆள் இல்லப்பா..'' என்றான் அழகேசன்.

அழகேசன் சசிசேகரனைப் புரிந்து கொண்ட அளவுக்கு கிருபாகரன் புரிந்து கொள்ளவில்லை என்பது உண்மைதான்!

அதனால்தான் மேலும் விளையாட முற்பட்டார். சசிசேகரன் பள்ளி விவகாரங்களில் நுழைந்து கிருபாகரன் விளையாடுகிறார் என்று தெரிந்தவுடனே போனில் பேசினான்.

''கிருபாகரன்.. சார்! நீங்க திருந்தவே மாட்டீங்களா?'' என்று கேட்டான்.

கிருபாகரன் சிரித்தார்.

''சார்! என்னை நீங்க இன்னும் சரியாப் புரிஞ்சுக்கலை. உங்களை எனக்கு நல்லாத் தெரியும். அதனால எப்ப வேண்ணாலும் உங்களைச் சிக்க வைக்கறதுக்கான அளவுக்கு சாட்சியங்கள் வச்சுகிட்டுத்தான் உங்களை விட்டு வச்சிருக்கிறேன்.''

..........!

''நேர்ல சந்திப்போமா?'' என்றான்.

சந்தித்தார்கள்!

''ஒரு அஞ்சு நிமிஷம்தான் ஓடும் பாருங்க!'' என்று காண்பித்தான்.

பார்த்தார்!

லேப் டாப்பைக் கையோடு கொண்டு வந்திருந்தான்.

''க்ளோஸப்பில் நான்தான் போலியாக உயில் தயாரித்தேன்'' என்று சௌகரியமாக வாக்கு மூலம் கொடுத்துக் கொண்டிருந்தார் கிருபாகரன்.

''அன்னைக்கு உங்களோட ஒட்டல்லே பேசினேனே! அன்னைக்கு ரெக்கார்ட் பண்ணினது'' என்றான்.

''அது மட்டுமல்ல! ஒரிஜினல் என்கிட்டே இருக்கு. என்ன இருந்தாலும் எங்கப்பா காலத்துலே இருந்து எங்க குடும்பத்துக்கு வேண்டியவங்க அப்படீங்கற காரணத் துக்காகத்தான் விட்டுருக்கேன். ஜெயராம் கூடக் கேட்டார். நான் இந்த சி.டி.யைக் குடுக்கலே..! ஆனா இனிமே எனக்கு இடைஞ்சல் செஞ்சா கண்டிப்பா கேஸைப் புதுப்பிச்சுடுவேன்'' என்றான்.

கிருபாகரன் வெடவெடத்துப் போனார்.

''என்ன தம்பி! நான் எதுக்குப் பிரச்சினை பண்ணப் போறேன்'' என்று சமரசத்துக்கு வந்தார்.

''அது மட்டுமில்லே! அழகேசனுக்காக நீங்க இந்தக் குறுக்கு வழியெல்லாம் தேட வேண்டிய அவசியமில்லே! அவரு இயற்கையிலேயே நேர்மையானவரு! நீங்க சொல்ற எந்தப் பெண்ணையும் அவரு கல்யாணம் பண்ணிக்க மாட்டாரு! அவருக்குன்னு சுய மரியாதை இருக்கு! சுய முடிவுகள் இருக்கு..! நீங்க உங்க அளவுக்குப் பாத்துக்குங்க'' என்றான்.

'அதைச் சொல்றதுக்கு. நீ யாரு' என்பது போல் அவர் பார்க்க. அவன் தொடர்ந்தான்.

''ஏன்னா! அழகேசனுடைய நேர்மைக்காகவும், திறமைக் காகவும் அவருக்கு வாழ்க்கை பூராவும் வேண்டியதைச் செய்ய நான் தயாராயிருக்கேன்'' என்றான்.

அவர் திகைத்துப் போய்ப் பார்க்க.

''எந்தப் பள்ளிக் கூடத்துக்கு இடைஞ்சல் செய்ற மாதிரி நீங்க மொட்டைக் கடுதாசிகள் போடறீங்களோ. அதே பள்ளிக் கூடத்துப் பொறுப்பையே நான் அழகேசனிடம் கொடுக்கப் போறேன்'' என்றான்.



கிருபாகரன் இதை முற்றிலும் எதிர்பார்க்கவில்லை.

''தம்பி!'' என்றார் இறங்கிய குரலில்.

''ஆனா.. அது நிச்சயமா உங்களோட மகன் என்கிற காரணத்துக்காக இல்லே! அவரு உங்களோட மகனா இருக்கறது ஒரு தன்னிச்சையான விஷயம். அவருடைய நேர்மை, சுயநலமில்லாத சிந்தனை இதெல்லாம் எனக்குப் பிடிச்சிருக்கு. அது மட்டுமல்ல கல்வியை நானும் வியாபாரமாக்கப் போவதில்லே! எங்க ரெண்டு பேரோட கொள்கைகளும் கோட்பாடுகளும் ஒத்துப் போகுது. அதனால அப்பாயின்ட்மென்ட் குடுக்கறேன்'' என்று கைகூப்பினான்.

கிளம்பினான்.

''தம்பி!'' என்று அழைத்தார் கிருபாகரன்.

''ஐ'ம் ஸாரி!'' என்றார்.

''நீ வருந்தினால் என்ன வருந்தாவிட்டால் என்ன?'' என்பது போல் தோளைக் குலுக்கினான்.

நகர முற்பட்டான்.

''தம்பி!'' என்று மறுபடியும் அழைத்தார். நின்றான். என்ன என்பது போலப் பார்த்தான்.

''தம்பி! அழகேசன் மனசுல இருக்கிற பொண்ணு யாருன்னு உங்களுக்குத் தெரியும் போல இருக்கு. சொல்லக் கூடாதா?'' என்றார் வேண்டுதல் போல.

''ஐ ம் சாரி! அது அழகேசனுடைய அந்தரங்கம் அதுல தலையிடறதுக்கு எனக்கு எந்த உரிமையும் கிடையாது. நீங்க அவருகிட்டயே கேட்டுக்குங்க'' என்றான்.

குறுஞ்சிரிப்புடன் நகர்ந்தான்!

கிருபாகரன் குழப்பத்துடன் பார்த்தபடி நின்றார்.

# 28



''நிஜமா... எனக்கேத் தெரியாது..!'' என்று மலங்க மலங்க விழித்தாள் மதுரவாணி.

''ஹேய்! இப்படி முழிக்காதே! எனக்கு என்னென்னமோ பண்ணனும் போல இருக்கு..!'' என்று கிறக்கமாகச் சிரித்தான் சசிசேகரன்.

''சசி.. ப்ளீஸ்! நானே ரொம்பக் கவலையில இருக்கேன்..'' என்றாள் மதுரவாணி.

''எதுக்குக் கவலை? எந்தத் தப்பும் நடந்துடலே.. புரியுதா?'' என்று அருகில் தான் நெருங்கி நின்றதும் அவள் பரபரத்துப் போனதும் இப்போது நினைவுக்கு வர புரண்டு படுத்தான் சசிசேகரன்.

மாலினி வந்தபோது பள்ளிக்கூடத்துக்கு அழைத்துக் கொண்டு போய் விட்டு வந்தானே அப்போது எதிரிலே மதுரவாணியைப் பார்த்தவுடனே மதுரவாணியைப் பற்றித் தெரியும் என்றவள் இரண்டு விஷயங்கள் சொன்னாள்.

முதலாவது விஷயம்!

மதுரவாணியும், கொடிமலரும் நல்ல வசதியான குடும்பத்தில் பிறந்தவர்கள். ஆனால் தகப்பனின் குடிப் பழக்கத்தாலும், மாமனின் துரோகத்தாலும் பாதிக்கப்பட்டவர்கள் என்பது.

அதைக் கேள்விப்பட்ட பிறகுதான் நடேசன் மாமாவிடம் சொல்லிக் கருப்பண்ணனைப் பற்றி விசாரிக்கச் சொன்னது.

அது மட்டுமில்லாமல் தானே நேராகப் போய் ஊர்ப் பெரியவரைச் சந்தித்தது!



நடேசன் மாமாவின் பொறுப்பில் அவர்கள் இருப்பதைச் சொன்னவுடனே அவர் கேட்டார்.

''ஏன்.. நடேசா.. நீ எங்ககிட்டயே இதைப் பத்தி பேசலே!'' என்று.

''அந்த விஷயம் பத்தி வாய் தவறி நீங்க யார் கிட்டயாவது சொல்லி அது அப்படியே பரவிடுச்சுன்னா.. மறுபடி கருப்பண்ணன் தொல்லை குடுத்தா என்ன செய்யறதுன்னுதான் சொல்லலே!'' என்றார்.

''நல்லா ஆச்சு.. போ! கருப்பண்ணனுக்கு நாம பயந்துகிட்டுத் திரியறதா? நாம அவரை மிரட்டிப் போடறதை விட்டுட்டு'' என்றார் தாண்டவராயன்.

கருப்பண்ணனை ஏகமாக மிரட்டி விட்டான் சசிசேகரன்.

''மிஸ்டர். கருப்பண்ணன், சொத்துப் பறிப்பு, கற்பழிப்பு முயற்சி, போர்ஜரி அப்படி இப்படின்னு போட்டு ஜாமீன் கூட வாங்க முடியாதபடி பண்ணிடுவோம். தெரியுமா?'' என்றான்.

கருப்பண்ணனுக்கு பயம் பிடித்துக் கொண்டது. அதற்குப் பிறகுதான் வழிக்கு வந்தார்.

கருப்பண்ணன் விஷயத்தை அந்த விதத்தில் முடித்துக் கொடுத்தான்.

மனம் கவர்ந்தவளின் பின்னணியை சரி செய்து நிமிர்ந்து நடமாட வழி செய்து கொடுத்தான்.

இரண்டாவதாக மாலினி சொன்ன விஷயம். அழகேசனுக்கு கொடிமலரை மிகவும் பிடிக்கும் என்று.

''ம்.. அப்படியா?'' என்று ஆர்வமானாள்.

''ஆமாண்ணா! காலேஜ் டேஸ்லயே அழகேசனுக்குக் கொடிமலரைப் பிடிக்கும். ஆனா, கொடிமலர் சம்மதம்

சொல்லலே. கங்காகிட்டே சொல்வார்களாம். ''கங்கா! எங்கப்பா சரியில்லே! ஏகப்பட்ட கடன் வாங்கி வச்சிருக் காரு. அக்காதான் குடும்பத்துல பொறுப்பு. அக்காவுக்கே கல்யாணம் ஆகாதப்ப நான் எப்படி என் வாழ்க்கையைப் பாத்துக்க முடியும்னு..'' என்று.

''சரி.. நீ போய்.. கொடிமலர் இங்கே வேலை செய்ய றான்னு சொல்லு. அது மட்டுமில்ல..! அழகேசனைப் பத்தி நல்லா விசாரிச்சுட்டு சொல்லு,'' என்றான் சசிசேகரன்.

ஆனால் அழகேசன் தனது தந்தை தயாரித்தது பொய் உயில் என்று தெரிந்த கணத்திலேயே மிகவும் நொந்து போனான் என்பதும், இந்தத் தப்பைத் திருத்தியே ஆக வேண்டும் என்ற தாளாத தவிப்பின் காரணமாகத்தான் தன்னை நேரிலேயே சந்தித்து விவரங்கள் சொன்னான் என்பதும் புரிய சசிசேகரனுக்கு அவன் மேல் நல்ல மதிப்புத் தோன்றியது.

மாலினி சொன்னாள்.

''அண்ணா! பர்ஃபெக்ட் ஜென்டில்மேன். எங்கம் மாவுக்கு போலி கௌரவம். எங்கப்பாவுக்கு பணத்தாசை. அதுக்காக என்னென்னவோ செய்யறாங்க. எனக்கு மெது மெதுவா வர்ற முன்னேற்றம் போதும். அதனால்தான் எனக்கு டீச்சிங் பிடிக்குது. அப்படீன்னு மெட்ரிக்குலேஷன் ஸ்கூலுக்கு வாத்தியாராய் போறாரு. ஏழாயிரமோ, எட்டா யிரமோ சம்பளம் கிடைக்குது. அது போதும் எனக் குன்னுட்டு அதுக்குள்ள வாழ்க்கை நடத்தறாரு. அது மட்டுமில்ல வீட்டுக்கும் செலவுக்கு ஒரு தொகை குடுக்கறாரு..'' என்றெல்லாம் மாலினி புகழ்ந்த விதம் சசிசேகரனுக்கே உள்ளூர ஒரு சந்தேகம் தோன்றியது.

''மாலினியைக் குறுகுறுவென்று பார்த்தான்.



''ஏன்.. மாலினி! உனக்கு அழகேசனை ரொம்பப் பிடிக்குதோ'' என்றான்.

''ஆமா..! ரொம்பப் பிடிக்குது. உன்னைக் கூடத்தான் ரொம்பப் பிடிக்குது. அதுக்காக.. வேற விதமா எதுவும் கணக்குப் போட்ராதே..! நாங்க ரெண்டு பேரும் ரொம்ப நல்ல பிரண்ட்ஸ் அவ்வளவுதான்...'' என்றாள்.

சசிசேகரன் மனம் தெளிந்தது.

மாலினி சிரித்துக் கொண்டே சொன்னாள்.

''அண்ணா! நான் கலாட்டாவுக்காக ஒரு நாள் சொன் னேன். ஏன், அழகேசன் நீங்களும் உங்கப்பா மாதிரி ஆதாயம் கருதி யோசிக்க ஆரம்பிச்சுட்டீங்களோ... அதனால்தான் எங்ககிட்டே ஃப்ரீயாப் பழகறீங்களோ...'' என்று. அதுக்கு அழகேசன் சொன்ன பதில் என்ன தெரியுமா?''

''மாலு! உண்மையாவே ஒரு வேளை எனக்கு உன்னை அந்த மாதிரிப் பிடிச்சிருந்ததுன்னு வச்சுக்க.. எங்கப்பா இந்த மாதிரி உயிலில் ஊழல் பண்ணினதுக்காகவே நான் அந்த ஐடியாவை மாத்திக்குவேன். ஏன்னா.. அந்த மாதிரி ஏதாவது நடந்தா எங்கப்பா ஜெயிச்ச மாதிரி ஆயிடும். அப்படீன்னாரு'' என்றாள்.

சசிசேகரன் சிந்தனையில் ஆழ்ந்தான். அந்தக் கணத்தில் அழகேசன் என்ற சுயமரியாதை உள்ள இளைஞனை அவனுக்கு மிகவும் பிடித்தது.

நேர்முகத் தேர்விலும் நன்றாகவே பதில் சொன்னான். அதற்குப் பிறகு அந்தப் பேச்சு வந்தபோதுதான் மதுர வாணியிடம் அவன் சொன்னான்.

''மதுரா! அழகேசனுக்கு போஸ்ட் குடுக்கலாம்னு நான் முடிவெடுத்ததுக்கு முக்கியமான காரணம்.. அழகேச

னுடைய திறமை..! நாணயம். அதுமட்டுமல்ல அழகேசனுக்கு போஸ்ட் கிடைச்சாலும் அதனால பயனடையப் போறது உன் தங்கை கொடிமலர்தான். ஏன்னா.. அழகேசனுக்குக் கொடிமலரை ரொம்பப் பிடிக்கும். அது உனக்குத் தெரியுமா.. தெரியாதா?'' என்று கேட்டபோது தான் மதுரவாணி மலங்க மலங்க விழித்தாள்.

அப்போதுதான் அவன் அது போல சொல்லிச் சிரித்தான்.

''ப்ளீஸ் சசி!'' என்று அவள் தவிக்கத் தவிக்க தன்னருகில் இருந்தான்.

''ஹேய்! அழகேசன் மாதிரி ஒரு மாப்பிளை கிடைக்க உன் சிஸ்டர் எவ்வளவோ புண்ணியம் பண்ணியிருக்கணும். அதனால நாமளே அழகேசன் கிட்டே பேசி கொடி மலரை அழகேசனுக்கு நிச்சயம் பண்ணிடுவோம்.. என்ன?'' என்றான்.

''எனக்கொண்ணும் பிரச்சினையில்லே.. ஆனா..''

''ஆனா.. என்ன? அக்கா இருக்கும்போது எப்படின்னு தங்கை யோசிப்பாளா?'' என்றபடி இழைந்தான்.

''சசி..! பேசாம இருங்க!'' என்று விலகிக் கொண்டாள்.

அவனும் பெரிதும் வற்புறுத்தவில்லை. விட்டு விட்டான். ஆனால் அருகில் நெருக்கமாக நின்று கொண்டான்.

''மது.. மதுரா..!'' என்று குழைந்தான்.

மதுரவாணி வெட்கத்துடன் பேசாமல் நின்றாள்.

''ஹேய்... மதுரா..! முக்கியமான வேலைகள் எல்லாம் முடிஞ்சுது. உயில் மேட்டர் கிளியர் ஆயிட்டா போதும். அடுத்தது.. நம்ம மேட்டர்தான்'' என்றான்.

''உங்க வீட்ல ஒத்துக்குவாங்களா?''



''ஏன்.. ஏன்.. ஒத்துக்க மாட்டாங்க. சித்தி நான் எப்படா கல்யாணத்துக்கு சம்மதம் சொல்வேன். எப்படா வீட்டுக்கு வந்து சேருவேன் பாத்திட்டிருக்காங்க.. தெரியுமா?'' என்றான்.

அன்றைக்குப் 'பார்த்ததுதான். பல வேலைகளில் அலைந்து கொண்டிருந்ததாலோ என்னவோ மறுபடியும் அவளைப் பார்க்கவேயில்லை.

அதற்குப் பிறகு மீண்டும் வீட்டுக்குச் சென்று வந்ததையும் சித்தியை அம்மா என்று அழைக்க ஆரம்பித்ததையும் அவளிடம் பகிர்ந்து கொள்ளவேயில்லை.

உடனேயே மதுராவைப் பார்க்க வேண்டும் என்று மனது தவித்தது.

காலை வரை பொறுத்துக் கொண்டிருந்தான். மறுநாள் காலை!

நடேசன் வீட்டுக்கு போன் செய்தான். ''மாமா!'' என்றான்.

இதுநாள் வரை போல பேசாத ஆளுமை தொனிக்கும் விதமாக இல்லாமல் வெட்கம் இழையோடிய குரலில் அழைத்தான்.

நடேசனுக்கும் ஏதோ வித்தியாசம் புரிய ''சொல்லுங்க.. தம்பி!'' என்றார் அப்பொழுது.

''மாமா! மதுராகிட்டே சில முக்கியமான விஷயங்கள் பேசணும். வர்ற வெள்ளிக்கிழமை அம்மா வராங்க இல்லே.. அது விஷயமா மதுராகிட்டே பேசணும்'' என்றான்.

''சரிங்க தம்பி! நானே கூப்பிட்டு வரேன். தனியா வர வேண்டாம். ஊர்க்காரங்க நாலும் பேசுவாங்க'' என்றான்.

அவரே அழைத்து வந்து சற்று நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு,

"நான் நிலத்தைப் பார்த்துட்டு வரேன்" என்று போனார். போகும்போது மதுரவாணியிடம் என்ன சொன்னாரோ தெரியவில்லை.

மாதையன் எட்டிப் பார்த்து "எதும் காபி கீபி வேணுங்களா?" என்று கேட்டார்.

"ஆமா..!" என்றவுடன் காபியைக் கொண்டு வந்து கொடுத்து விட்டு,

"அய்யா! நான் போய்க் கொஞ்சம் காய்கறி பறிச்சுட்டு வாரேன்" என்று போய் விட்டார்.

"அப்பாடா!" என்று அவன் கைகளைத் தூக்கி சோம்பல் முறிப்பதை அவள் தவிப்புடன் பார்த்தாள்.

"மதுரா! அன்னைக்கு இப்படித்தான் உங்கிட்ட பேச ஆரம்பிச்சேன். நம்ம வக்கீல் எதிர்பாராம விளையாடிட்டார். எப்படியோ ரெண்டு நாள்ல மேட்டரை முடிச்சேன்னு வைய். இப்ப நிம்மதியாப் பேசலாம்னு கூப்பிட்டேன்" என்றான்.

அவள் மௌனமாகவே அமர்ந்திருந்தாள்.

"அம்மா.. அம்மா.." என்று அன்புடன் குறிப்பிடுவதை மங்களத்தைப் பற்றி ஒரு பெருமையோடு பேசுவதை அவளும் ஒரு நெகிழ்ச்சியோடு கேட்டுக் கொண்டாள்.

பிறகு சொன்னாள்.

"எனக்கு அவங்களையெல்லாம் பாக்கணும்னு ரொம்ப ஆசையாயிருக்கு" என்றாள்.

வந்தார்கள்!

மங்களத்துக்கு மதுரவாணியை மிகவும் பிடித்து விட்டது.

அமைதியாக இருக்கிறாள். சுறுசுறுப்பாக இருக்கிறாள்.



"மாலினிதான் கலாட்டா செய்து கொண்டிருந்தாள்.

"அம்மா.. உங்கண்ணன் நம்மளை விட்டுட்டுப் போய்த் தனியா இருக்கானே! என்று சலிக்காம புலம்பிகிட்டேயிருந்தியே! பாரு.. இப்ப என்னென்ன சாதிச்சிருக்காருன்னு."

உடனே மங்களம் புரியாதவரைப் போல.

"ஓஹோ! பள்ளிக்கூடத்தை டெவலப் பண்ணியிருக்கானே.. அதைச் சொல்றியா?" என்றார்.

"அம்மா!" என்று மாலினி சிரித்தாள்.

மங்களத்தின் கண்களில் அந்த மாதிரிக் குறும்புச் சிரிப்பை இதுவரை பாத்திராத சசிசேகரன் கூட ஆச்சரியப் பட்டுப் போனான். ஆனால் ஒருவிதமான மௌனச் சிரிப்போடு அந்த மாதிரிக் கேலிகளை அனுமதித்துக் கொண்டிருந்தான். ரசித்துக் கொண்டிருந்தான்.

"அம்மா.. புரியாத மாதிரிப் பேசாதே" என்று மதுரவாணியை இழுத்து முன்னாலே நிறுத்தினாள்.

"பாரு..! எவ்வளவு அழகா பஞ்சலோகச் சிலை மாதிரி ஒரு அண்ணி சம்பாதிச்சிருக்காரு. இது பெரிய சாதனையில்லையா!" என்றாள்.

"நீ வாம்மா!" என்று அருகில் அமர்த்திக் கொண்டார்.

மதுரவாணியும் அமைதியாக அமர்ந்து கொண்டாள்.

"ஐஸ்! ஐஸ்!" என்று கலாட்டா செய்தான் குணசேகரன்.

"உனக்கேன்டா.. பொறாமை! உன்னோட டயம் வரும்போது நான் ஸ்ட்ராங்கா.. ரெகமண்ட் பண்றேன்டா.." என்றான் சசிசேகரன்.

"ஆமா..! அதுக்கு இன்னும் எத்தனை காலம் காத்திருக்கணுமோ..! இதுக்காக நான் வீட்ல கோபிச்சுட்டு வெளியூர் போகணுமா..?"

அப்படியே போனாலும் உனக்கேத்த மாதிரி ஏமாளி கிடைக்கணும்'' என்று இழுத்தாள் மாலினி.

எல்லாரும் சிரித்தார்கள்.

''ஏய்.. மாலு! என் ரெப்யுடேஷனை டேமேஜ் பண்றே!'' என்று பொய்யாக நடித்துக் கொண்டான் சசிசேகரன்.

''கவலைப்படாதீங்க! இவங்க யார் என்ன சொன்னாலும் நான் நம்பணும் இல்லே!'' என்றாள் மதுரவாணி.

''அப்படிப் போடு!'' என்று வெகுவாகச் சிரித்தான் சசிசேகரன்.

மங்களம் அதை ஆனந்தமாகப் பார்த்துக் கொண்டிருந்தவர்.

''சரிப்பா! ஏற்பாடெல்லாம் எப்ப ஆரம்பிக்கலாம்'' என்று திட்டமிட ஆரம்பித்தார்.

அப்போதுதான் மதுரவாணி அப்படிச் சொன்னாள்.

''அத்தை! எனக்கு அப்பா அம்மா கிடையாது. நடேச மாமாதான் ஆதரவு தந்தார். அது மட்டுமல்ல. கொடி மலருக்கும் ஏதாவது வழி செய்துட்டுத்தான் நான் கல்யாணத்தைப் பத்தி நினைக்க முடியும்'' என்றாள்.

ஒரு நிமிடம்.

''பாரும்மா! மதுரவாணி! இனிமே இந்த மாதிரியெல்லாம் பேசவே கூடாது. தெரியுதா! உன் மனசு திருப்திக்காக கொடிமலருக்கு ஒரு நிச்சயம் செஞ்சரலாம். உன் கல்யாணம் அடுத்த மாசமே வச்சர்லாம். அப்புறம் நீயும் சசியுமா முன்னால நின்னு கொடிமலருக்குக் கல்யாணம் செய்யலாம்'' என்றார்.

மதுரவாணி அழுது விட்டாள்!

''ஏய்... எதுக்கு இந்த அழுகை!'' என்று சசிசேகரன் அணைக்க அவள் கண்களைத் துடைத்துக் கொண்டே,



''இல்ல.. இது சந்தோஷக் கண்ணீர்..'' என்றாள்.

மங்களம் கண்ணைக் காட்ட குணசேகரனும், மாலினியும் எழுந்தார்கள்.

''அண்ணா! சந்தோஷக் கண்ணீராம் ஆறுதல் சொல்லிடு..'' என்று கேலி செய்து விட்டு தனிமை கொடுத்து வெளியேற அவனும் தனக்கே உரிய முறையில் தேற்ற ஆரம்பித்தான்.

எல்லாம் சரியாகப் போய் விடும் என்றுதான் நினைத்தார்கள். ஆனால் அழகேசன் நேர் எதிராக மாறிப் போக பூதாகாரமாக ஒரு சிக்கல் எழுந்தது.

## 29



வெற்றிகரமாகப் பேச்சு வார்த்தை நடந்து முடிந்தது!

''மாப்பிள்ளை வந்தார் மாப்பிள்ளை வந்தார்.

மாட்டு வண்டியிலே!

பொண்ணு வந்தா பொண்ணு வந்தா

பொட்டி வண்டியிலே''

என்று பாடினான் குணசேகரன்.

''போடா! ஓல்டு ஃபேஷன் பாட்டுடா!'' என்று மாலினி சொல்ல,

குணசேகரன் ''லேட்டஸ்ட்டாப் பாடட்டுமா..?'' என்று.

''கல்யாணந்தான் கட்டிக்கிட்டு ஓடிப் போலாமா?''

என்று ஆரம்பிக்க சசிசேகரன் கொஞ்சம் சீரியஸாகவே ஒரு அடி வைத்தான்.

''எதுக்குடா.. ஓடிப் போகணும்! கனவு மணம்னு அந்தக் காலத்துல இலக்கியத்துலயே சொல்லி இருக்கு. காந்தர்வ

மணம்னு பஞ்சாங்கத்துலயே இருக்கும் பாரு. ஓடிப் போறானாம்?'' என்று சொல்ல எல்லாரும் கொஞ்சம் திகைத்துத்தான் போனார்கள்.

மதுரவாணி கொஞ்சம் அதிர்ச்சியாகவே பார்த்தாள்.

''என்னங்க ஆச்சு?'' என்றாள்.

''இல்லே! காதல்ன்னா என்ன? லேசான விஷயமா? கொச்சைப் படுத்தினா கோபம் வருது'' என்றான்.

''சரி.. சரி.. குணா.. ஏதோ தமாஷுக்கு'' என்று ஆசுவாசப்படுத்தினாள்.

''சாரிடா!'' என்று குணசேகரனைத் தோளோடு சேர்த்துக் கொண்டான். பிறகு சொன்னான்.

''இந்த அழகேசனைப் பாரு! எவ்வளவு டீசன்டா நடந்துகிட்டாப்ல. கொடிமலர்கிட்டே தன்னோட விருப்பத்தைத் தெரிவிச்சதுக்கப்புறம் எவ்வளவு டீசன்டா... நடந்துகிட்டாரு'' என்று சொல்லும்போதே நடந்த எல்லாமும் மனதில் ஓடி மறைந்தது.

அழகேசனிடம் பேசினான் சசிசேகரன்.

''அழகேசன், உங்ககிட்டே பேசணும்! பசுங்குடி கிராமத்துக்கு வந்தர்றீங்களா?'' என்றான்.

அழகேசன் வந்தான்.

''அழகேசன்... உங்களுக்குத்தான் போஸ்ட் குடுக்கணும்னு முடிவு பண்ணியிருக்கு. ஆர்டர்ஸ் வந்துரும்'' என்றான்.

அதற்கு அழகேசன் சொன்ன பதில் அவனுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

''சார்! நான் இந்தப் பள்ளிக் கூடத்துக்கு வேலைக்கு வர்லே!'' என்றான்.



''ஏன் அப்படிச் சொல்றீங்க?'' என்றான் அதிர்ச்சியாக.

''சார்! நீங்க யாரோ நான் யாரோன்னு இருக்கற வரைக்கும் வேலைக்கும் வர்றதுல பிராப்ளம் இருந்திருக்காது. ஆனா, இப்ப நீங்க யார்னு எனக்குத் தெரியும். நான் யார்னு உங்களுக்குத் தெரியும். என்ன இருந்தாலும் உங்க குடும்பத்தின் அமைதியைக் குலைக்க முற்பட்டவர் எங்கப்பாங்கறது ஒரு ஓரத்திலே நெருஞ்சி முள் மாதிரி குத்திகிட்டேயிருக்கும். அப்புறம் இன்னொரு காரணமும் இருக்கு'' என்று தயக்கத்துடன் நிறுத்தினான் அழகேசன்.

சசிசேகரனின் கண்களில் சுவாரசியம் கூட தனது சுழல் நாற்காலியில் சாய்ந்து அமர்ந்தான். ''மேலே சொல்லுங்க'' என்பது போலப் பார்த்தான்.

அழகேசன் தொடர்ந்தான்.

''நீங்க கொடிமலருக்கும் அப்பாயின்ட்மென்ட் கொடுக்கப் போறதாகக் கேள்விப்பட்டேன். நாங்க ரெண்டு பேரும் ஒரே இடத்துல இருந்தா சரிவராதுன்னு நினைக்கறேன்'' என்றான்.

''ஏன்?'' என்றான் சசிசேகரன் எதுவுமே தெரியாதவன் போல.

''சார்! உங்களுக்கு மாலினி சொல்லலையா? நான் கொடிமலர்கிட்டே ஏற்கனவே பிரபோஸ் பண்ணியிருக்கேன்'' என்றான்.

''மேட்டர் ஆஃப் ஃபாக்ட்'' என்பார்களே அதுபோல அழகேசன் பேசும் விதம் சசிசேகரனை வசீகரித்தது. அவனும் அதே போன்ற ஒரு முகபாவத்துடன் சொன்னான்.

''விஷயம் அப்படியா போகுது? நான் உங்களுக்கும் மாலினிக்கும்தான் ஏதோ பிரண்ட்ஷிப்'' என்று முடிக்கு முன்னே மறுபடியும் குறுக்கிட்டான்.

''ஒரு வேளை நீங்க அப்படி நினைச்சிருந்தீங்கன்னா.. கண்டிப்பா நான் இந்த வேலையை ஒத்துக்கவே கூடாது. அப்படி ஒத்துகிட்டேன்னா நீங்க எடுத்துக் குடுக்கற அடிமைச் சங்கிலியை நானே எடுத்து ஆசையாச் சுத்திக்கற மாதிரி அர்த்தம்'' என்றான்.

சசிசேகரன் சிரித்து விட்டான்.

''இல்லல்லே! எனக்குத் தெரியும். மாலினி என் கிட்டே விவரமாச் சொல்லிட்டா. அதுக்கப்புறம்தான் உங்களுக்கு இங்கே வேலை குடுக்கறது பத்தியே நான் யோசிச்சேன். இப்ப பாருங்க.. அழகேசன்.. நீங்க உங்க ளோட அப்ஜெக்‌ஷனுக்கு சப்போர்ட்டா ரெண்டு பாயிண்ட்ஸ் வைக்கறிங்க.. ரொம்ப ரொம்ப ஏத்துக்க வேண்டிய விஷயங்கள். வெரி ரீசனபிள். ஆனா அந்த ரெண்டு பாயிண்ட்ஸ்க்கும் என்கிட்டே விளக்கம் இருக்கு. சரியான விளக்கங்கள்ன்னு தான் நினைக்கறேன். கேட்டுட்டு முடிவெடுக்கலாம். சரியா?'' என்றான்.

அழகேசன் மௌனமாக அமர்ந்திருந்தான் சசிசேகரன் தொடர்ந்தான்.

''எனக்கு நீங்க யாருங்கறது தெரியும்கறது ஒரு பக்கம் இருக்கட்டும் இண்டர்வ்யூவில நல்லா பண்ணினீங்க. அது ஒரு முக்கியமான விஷயம். அது மட்டுமில்லாம இதுவரைக்கும் நீங்க வேலை செஞ்ச பள்ளிக் கூடத்திலே உங்களைப் பத்தின கருத்து சேகரிச்சோம். ரொம்ப நல்ல விதமா சொன்னாங்க. நல்ல டீச்சிங் எபிலிட்டியும் இருக்கு. ஜஸ்ட் எங்களுக்குத் தெரிஞ்ச ஒருத்தருங்கறது னாலயே ஒரு தகுதியுள்ள நபரை ஒரு இன்ஸ்டிடியூஷன் இழக்க வேண்டாமில்லே. அப்புறம் உங்களை எனக்கு நல்லாத் தெரியும். அதனாலதான் உங்களைப் பத்தித் தெளிவான ஒரு ஜட்ஜ்மெண்டுக்கு நான் வர முடிஞ்சுது..''



..........!

''உங்கப்பா.... செஞ்ச தவறை ஒத்துக்கலை அப்ப டீன்னு வந்தப்ப அந்தத் தவறைக் காட்டிக் குடுத்தீங்க. ஆனா, அதே சமயத்துல அவரோட கௌரவம் பாதிக்காத அளவுக்கும் பாத்துகிட்டீங்க. கண்டிப்பாத் தப்பைக் கண்டிக்கணும். ஆனா முடிஞ்ச அளவுக்குத் திருத்திக் கொண்டு வரணுமே தவிர இதயமில்லாம தண்டிக்க வேண்டிய அவசியம் இல்லை. அந்த அப்ரோச் உங்க கிட்டே இருக்கு. எல்லாத்துக்கு மேல இந்தத் தொழிலை நேசிக்கிறீங்க. அதனால உங்களை நம்பி இந்தக் கல்வி நிறுவனத்தை ஒப்படைக்கலாம்னு நினைக்கறேன்'' என்றான்.

''சார்...'' என்று ஏதோ சொல்ல ஆரம்பிக்க...''

''என்ன சொல்லப் போறீங்க! தொழிலை நேசிக்கற அளவுக்குக் கொடிமலரையும் நேசிக்கறீங்கன்னா...! நீங்க நினைக்கறதைக் காட்டிலும் கொடிமலருக்கு போஸ்ட் கொடுக்கறதுல எனக்கும் சிக்கல் இருக்கு! என்ன தெரியும்? வைப்போட சிஸ்டர்கறதுனால வேலை குடுக்க றான்னு பேச்சு வரும்.''

அழகேசன் கண்கள் விரிந்தன.

''அப்படியா.. சார்?'' என்று கைகளைப் பிடித்துக் குலுக்கினான்.

சசிசேகரன் மலர்ந்த சிரிப்புடன் ஆமோதித்துக் கொண்டான்.

அழகேசன் தொடர்ந்து சொன்னான்.

''அது மட்டுமில்ல.. சார்..! கொடிமலரும் அங்கயே வேலைக்கு வந்தா... எப்படியும் மறுபடியும் பிரபோஸ் பண்ணுவேன். வந்தவுடனே பள்ளிக்கூடத்தை உருப்படி

பண்றாங்களோ இல்லையோ.. கல்யாணம் பண்ணிகிட் டாங்கன்னு பேச்சு வரும்..'' என்றான்.

சசிசேகரன் சிந்தனையில் ஆழ்ந்தான்.

''ஆமா..! அதுவும் உண்மைதான்! ஆனா நீங்க ரெண்டு பேருமே நல்ல ஹேண்ட்ஸ்! நீங்க ரெண்டு பேருமே பள்ளிக்கூடத்துக்காக உழைப்பீங்க!'' என்று தனக்குள் ளேயே பேசிக் கொள்வது போல உரக்கப் பேசியவன் 'யுரேகா!' என்று கத்தாத குறையாக உற்சாகமானான்.

''என்ன சார்!'' என்றான் அழகேசன்.

''இங்க வேலைக்கு வந்ததுக்கப்புறம் கல்யாணம் செஞ்சாத்தானே கண்டபடி பேச்சு வரும். கல்யாணத்தை நிச்சயம் செய்வோம். அப்புறம் முதல்ல நீங்க ஜாயின் பண்ணிடுங்க. அதுக்கப்புறம் கல்யாணம் முடிஞ்ச கையோட கொடிமலர் ஜாயின் பண்ணட்டும்'' என்றான்.

அழகேசன் மறுபடியும் தயங்கினான்.

''அழகேசன்! புரிஞ்சுக்குங்க! உங்களுக்குக் கொடுக்கப் படுகிற இந்த வேலைக்கும் லாயர் கிருபாகரனுக்கும் எந்த சம்மந்தமும் இல்லே! இன்பாக்ட் உங்க நேர்மையை நம்பித்தான் தலைமைப் பொறுப்பையே கொடுக்கறேன்.. போதுமா..'' என்றான்.

அதற்குப் பிறகுதான் அழகேசன் ஒத்துக் கொண்டான். குபீரென்று சிரித்தான்.

''சார்! நீங்க என்ன நினைக்கறீங்களோ அதை நடத் திக்கறதுக்கு ஒரு சாமர்த்தியம் உங்களுக்கு இருக்கு...'' என்றான்.

சசிசேகரன் புன்னகைத்தான்.

''அநேகமா அந்தத் திறமையை எங்கப்பாகிட்டே காட் டித்தான் கல்யாணத்துக்கு சம்மதிக்க வைக்கணும்'' என்றான், மறுபடியும்.



கிருபாகரனுக்கு பலத்த ஏமாற்றம்தான். ஆனால் கொடிமலர் மதுரவாணியின் தங்கை என்பதனால் எப் படியும் சசிசேகரனால் தொல்லை இருக்காது. அதோடு அழகேசனுக்கும் நல்ல ஆதரவு இருக்கும் என்று ஒத்துக் கொண்டார்.

''எப்படியோ ஒத்துக் கொண்டால் சரி...'' என்று எண்ணிக் கொண்டான் சசிசேகரன்.

அந்த ஏற்பாட்டின் படி இன்றைக்கு நிச்சயதார்த்தம் நடந்து முடிந்திருந்தது.

அழகேசன் சசிசேகரன், மாலினி, எல்லாரும் நின்றிருந்த இடம் நோக்கி வந்தான்.

சசிசேகரன் மதுரவாணியிடம் சொன்னான்.

''மதுரா..! அவனவன் வேலை கிடைக்காம அலை யறான். ஒரு நல்ல ஆளா இருக்காரேன்னு கூப்பிட்டு வேலை குடுத்தா.. கண்டிஷன்ஸ் போடற ஆளைப் பாத்திருக்கியா'' என்று கிண்டல் செய்தான் சசிசேகரன்.

''சார்! நீங்க.. என்னோட எம்ப்ளாயர். அதனால நீங்க என்ன வேண்ணா கிண்டல் செய்யலாம்'' என்றான் அழகேசன் அலட்டிக் கொள்ளாமல்.

''ஐயய்யோ! உங்களுக்கு விஷயமே புரியலே!'' என் றான் குணசேகரன்.

''என்னடா.. பெரிய மனுஷா?'' என்றாள் மாலினி.

''உங்க எஜமானியம்மாவோட சிஸ்டர்தானே அண்ணா வோட எஜமானியம்மா! அதனாலே நீங்க பவர்ஃபுல்லான பொஸிஷன்ல இருக்கிங்க..! எங்க அண்ணன்தான் பாவம் வெறும் ''ரப்பர் ஸ்டாம்ப்'' என்றான்.

எல்லாரும் சிரித்தார்கள்.

''ஏன் மதுரா... அப்படியா?'' என்று அவன் குறும்பாகப் பார்க்கவும் மறுபடியும் சிரிப்பு.

''அத்தை.. வர்றாங்க!'' என்று அவள் நகரப் பார்க்க,

''எங்கம்மா.. ஓடறே! ஒரே மாசம்தான் கல்யாணத்துக்கு இருக்க..! இப்ப கல்யாணம் முடிச்சவுடனே ஜவுளி எடுக்கப் போகணும்'' என்றார் மங்களம்.

''அண்ணா! நீங்க பயங்கரமான ஆள்! எங்களுக்கு பங்ஷன்னு சொல்லிகிட்டு கூடவே உங்க பங்ஷனையும் நடத்திக்கிறீங்க'' என்று அழகேசன் கேலி செய்ய.

''ஐய! என்னப்பா.. நீ! தனியா நாம மட்டும் பேசிக்க வேண்டிய விஷயத்தையெல்லாம் இப்படி இவங்க முன்னால போட்டு உடைக்கறியே'' என்று சசிசேகரன் சிரித்தான்.

''நீங்க வேற அண்ணா! இனிமே யாருகிட்டயுமே தனியாப் பேசற சுதந்திரமே போச்சு. அப்புறம் வீட்டுக்குப் போயி என்ன பேசினோம். எதுக்குப் பேசினோம். ஏன் பேசினோம். என்றெல்லாம் விவரிக்கணும்'' என்றான் அழகேசன் சோகம் போல முகத்தை வைத்துக் கொண்டு.

''மிஸ்டர் அழகேசன் ஜாக்கிரதை! அப்புறம் நாங்க எல்லாருமா சேர்ந்து கடுமையான நடவடிக்கை எடுப்போம்'' என்றாள் மாலினி.

''என்ன செய்வீங்க!'' என்றான் பயந்தவன் போல

''என்ன செய்வோம்? கொடிமலர் அண்ணிக்கும் உங்களுக்கும் கல்யாணம்'' என்றாள் மாலினி.

கொடிமலர் முறைத்தாள்!

''பாத்தீங்களா! நெற்றிக் கண் திறந்தா எப்படி இருக்கும்னு இப்பவே பாத்துக்குங்க'' என்றாள் சளைக்காமல்.



கொடிமலர் உடனே சிரித்து விட்டாள்.

சாப்பாட்டுப் பந்தியில் மதுரவாணியின் அருகிலே வந்து அமர்ந்தான் சசிசேகரன்.

''ப்ளீஸ்!'' என்றாள் மதுரவாணி.

''என்ன நீ? எப்பப் பாரு.. ப்ளீஸ் ப்ளீஸ்னுகிட்டு! இப்ப என்ன உன்னையா முழுங்கப் போறேன்!'' என்று அவன் சீறவும் அமைதிக்கு வந்தாள்.

அவன் குரலை இறக்கிக் கொண்டான். ''மதுரா..! இயல்பாயிரு! ஏன் இப்படி டென்ஷனாவே இருக்கே..'' என்று சற்றுக் கலாட்டாவாகப் பேசி இயல்புக்குக் கொண்டு வந்தான்.

இயல்பாகச் சிரிக்கிறாள் என்று தெரிந்தவுடனே தனது வெடியை எடுத்துப் போட்டான்.

''மதுரா! எப்படா.. இந்த ஒரு மாசம் ஓடுமோன்னு இருக்கு..!'' என்றான்.

''பேசாம சாப்பிடுங்க!'' என்றாள் மதுரவாணி.

''ஆமா! இனிமே பேசாம எல்லாம் செய்யறதுக்குப் பழகிக்கணும்..!'' என்றான் சளைக்காமல்.

மதுரவாணி முகம் சிவக்க சாப்பாட்டைக் கைகளால் அளைந்தாள்.

அவன் சிரித்தான்.

லேசாகப் பட்டும் படாமலும் அவன் அருகில் அமர்ந்திருப்பதே அவளுக்கு இதமாய் இருந்தது என்றாலும். அவனது கிண்டலும் கேலியும் சுகமாக இருந்தது என்றாலும் வெட்கமாகவும் இருந்தது.

அமர்ந்திருந்த இடம் வேறு பந்தியில் கடைசியாக இருந்ததால் அவனுக்கு இன்னும் வசதியாகப் போயிற்று.

“என்ன சசி... சாப்பிட விடாமப் படுத்தறீங்க?” என்று வெட்கப்பட.

“நீ என்னைப் படுத்தினதை விடவா? தூங்க முடியாம, சாப்பிட முடியாம.. நான் அவஸ்தைப் படலே! அது மட்டுமில்லே..! இப்ப வரைக்கும் நான் கேட்ட கேள்விக்குப் பதிலே சொல்லலை தெரியுமா? அதுக்கு எப்படியெப்படியெல்லாம் பதில் வாங்கப் போறேன் தெரியுமா?” என்று மேலும் அவன் பேசி விட்டு சிரிக்க மங்களத்தம்மாள் அதை ஒரு புறமாக மகிழ்வாகப் பார்த்துக் கொண்டு நின்றார்.

எதிர்பார்த்த அந்த நாளும் வந்தது.

## 30



“உட்கார்றீங்கறேன்..” என்று சிரித்தான் சசிசேகரன். கழுத்தில் புது மஞ்சள் கயிறு பளபளக்க நின்று கொண்டிருந்தாள் மதுரவாணி.

திருமணம் முடிந்து நான்கைந்து நாட்களாகி இருந்தது. பசுங்குடிக்கு வந்து விட்டார்கள்!

ஞாயிற்றுக்கிழமை நாள்!

மங்களத்தம்மாள், மாலினி, குணசேகரன் எல்லாரும் பசுங்குடி கிராமத்து வீட்டில்தான் இருந்தார்கள். இப்போது எல்லாரும் குலதெய்வம் கோவிலுக்குப் போயிருந்தார்கள்.

“குலதெய்வத்துக்குப் பொங்கல் வைக்கணும் எப்படியும் மத்தியானம் ஆயிடும். மெதுவாக வாங்க” என்று தனிமை கொடுத்துப் போயிருந்தார்கள்.



அதிகாலை நேரத்திலேயே தலைக்குக் குளித்து ஈர முடிச்சுடன் அழகாக தேவதை போல இருந்தாள் மதுரவாணி.

கண்களால் விழுங்கிக் கொண்டான் சசிசேகரன்.

“சும்மா எதுக்கு அப்படிப் பாக்கறீங்க?” என்றாள்.

“பகல் நேரம். சும்மா பாக்கத்தான முடியும்?” என்று சிரித்தான்.

“ஆமா! எப்பவும் இதே பேச்சுத்தான்!” என்றாள் மதுரவாணி.

“ஹலோ..! ஹலோ..! நீங்க யாரு தெரியுமா? எங்க அதிகார பூர்வமான மனைவி. உங்ககிட்ட பேசாம வேற யாருகிட்டே பேசறது?” என்றான் சசிசேகரன்.

அங்குமிங்கும் எதையோ தேடுவது போலப் பார்த்தாள்.

“என்ன தேடறே!” என்றான் சசிசேகரன்.

“எதுல சாத்தலாம்னு பாக்கறேன்!” என்றாள்.

“ம்..!” என்றான் ஆச்சரியமாக.

“பின்னே! அதிகாரப் பூர்வமான மனைவியாமே! அப்ப அதிகார பூர்வமா இல்லாமே வேற மாதிரியும் தேடுவீங்களோ?” என்றாள் காட்டமாக.

“ஆஹா.. கோபம் பார்றா!” என்று ரசித்துச் சிரித்தான்.

அருகில் இழுத்துக் கொண்டான்.

தென்னந்தோப்பில் கயிற்றுக் கட்டிலில் அமர்ந்து கொண்டிருந்தான் சசிசேகரன். மதுரவாணி அருகில் அமர்ந்து கொண்டு அவன் மேல் சாய்ந்து கொண்டாள்.

“நிஜமா.. அடிச்சுடுவியா? நீதான் பயந்தாங்கொள்ளியாச்சே! கருப்பண்ணன் மிரட்டலுக்கே பயந்துகிட்டு ஓடி வந்தவதானே” என்றான் கேலிபோல்.

''ஹலோ.. அத்தான்! அப்படி மட்டும் நினைக்காதீங்க! அது மானப் பிரச்சினை! ஆனா இது உரிமைப் பிரச்சினை. உங்களைச் சொந்தம் கொண்டாடிகிட்டு யாராவது வந்தா.. நடக்கறதே வேறே'' என்று மிரட்டினாள்.

அவன் கலகலவென்று சிரித்தவண்ணம் இன்னமும் அருகில் இழுத்துக் கொண்டான்.

இடம் கொடுத்து சில வினாடிகள் கழித்து நிமிர்ந்தவள் மெல்லிய குரலில் கேட்டாள்.

''ஏங்க..! நான் ஒண்ணு கேட்பேன்! என்கிட்டே என்ன இருக்குன்னு.. என்னைப் புடிச்சுது..'' என்றாள்.

தன் கையணைப்பில் வைத்துக் கொண்டு அவனும் அதே போல மெல்லிய குரலில் சொன்னான்.

''மதுரா! ஒரு விஷயம் எனக்கு ஆச்சரியம்தான். இது நாள் வரையிலும் காதல்ங்கற மாதிரி மேட்டர்ல எல்லாம் நம்பிக்கையில்லை. ஆனா உன்னைப் பார்த்தவுடனே என் மனசு பேதலிச்சுப் போச்சு. அது மட்டுமில்ல! அப்ப உன்னைப் பத்தி எனக்கு எதுவுமே தெரியாது. இருந் தாலும் படிச்ச பொண்ணு. பக்குவமான பொண்ணு இப்படியெல்லாம் என் மனசுல தெளிவா எண்ணம் விழுந்துடுச்சு'' என்றான்.

''ஓ..!'' என்றாள் ஆச்சரியமாக.

''அப்புறமா ஒரு தடவை நடேச மாமா லேசாக் கோடி காட்டினார். நம்மைப் போலவே பாதிக்கப்பட்ட பொண் ணுன்னு தெரிஞ்சவுடனே இன்னும் கொஞ்சம் நெருக்கமா உணர ஆரம்பிச்சேன்'' என்றான்.

''அதாவது.. ஒருவிதமான பரிதாபம்தான்'' என்றாள் மதுரவாணி.



''இல்லல்லே! பரிதாபமெல்லாம் கிடையாது. மதிப்புத் தான். பரவாயில்லையே இந்தப் பிரச்சினைக்காகவெல் லாம் துவண்டுடாமே. அதைப் பத்தியே புலம்பிகிட்டிருக் காமே இயல்பா ஏத்துகிட்டு கிடைக்கிற வருமானத்தை வச்சுகிட்டு வாழ்க்கை நடத்தினீங்களே.. அது ரொம்பப் பிடிச்சுது...'' என்றான்.

''இதுல பியூட்டி என்ன தெரியுங்களா? பணம் இருந்தும் பயன்படுத்த முடியாத கொடுமை. ஊர்ல எங்களோட ரெண்டு வீட்டுக்கும் வாடகை வந்துச்ச. கிராமங்கறது னால பெரிய அளவு வாடகை இல்லே! இருந்தாலும் ஓரளவுக்கு எங்களுக்கு ஹெல்ப்புல்லா இருந்திருக்கும். ஆனா, போய் பேங்க்ல இருந்து எடுத்தாக் கூட கருப்பண் ணன் நாங்க எங்கே இருக்கோன்னு கண்டு பிடிச்சுடு வாருன்னு பயம்'' என்றாள்.

சசிசேகரன் ஒரு பெருமூச்சு விட்டான்.

''ஆமா! ஐ கேன் அன்டர்ஸ்டான்ட்'' என்றான்.

''ஒண்ணு சொல்லட்டுமா? அப்பல்லாம் நான் உங் களை நினைச்சுக்குவேன். சசிசேகரன் சார். இப்ப அத்தனை வசதிகளையும் விட்டு இங்க வந்து இருக்கலையா? அது மட்டுமல்லாம வந்த இடத்துலயும் பள்ளிக் கூடத்தை டெவலப் பண்றாரேன்னு'' என்றாள்.

''ஆஹா.. இது ரொம்ப நல்லாருக்கே! நான் என்ன மனசு சோர்ந்து போகும்போதெல்லாம் உங்களை நினைச்சுப் பேன்... தெரியுமா? ரெண்டு பொண்ணுங்க.. தைரியமா வந்து இங்க இருக்காங்க.. நமக்கென்ன அப்படீன்னு..'' என்றான்.

இரண்டு பேரும் ஒருவரையொருவர் பார்த்து சிரித்துக் கொண்டார்கள்.

சற்று நேரம் அமைதியாக அவன் மார்பில் சாய்ந்து கொண்டாள். அவள் தலையைக் கோதிக் கொடுத்த வண்ணம் அவனும் மௌனமாக அந்த இனிமையை அனுபவித்துக் கொண்டான்.

தென்னை ஓலைகளின் சலசலப்பும் மென்மையான காற்றும். இதமான காலை நேரத்துத் தட்பவெப்ப நிலையும் வெகு சுகமாக இருந்தன.

''மதுரா! ஆனா, நானும் வருத்தப்பட்டுக்கற மாதிரி யான ஒரு விஷயம் உண்டு. அது என்ன தெரியுமா? அப்பா இருக்கிற வரைக்கும் நானும் கொஞ்சம் விளையாட்டுப் பிள்ளையாவே இருந்துட்டேன். அப்பா நீயும் வாடா! சொத்தெல்லாம் பாத்துக்கடான்னு தலையால அடிச்சு கிட்டாரு. அப்பவே நானும் நிர்வாகத்துல நுழைஞ்சிருந் தேன்னா.. கிருபாகரன் விளையாடி இருக்கவே முடியாது..'' என்றான்.

''அது உண்மைதான்!'' என்று ஒத்துக் கொண்டாள் மதுரவாணி.

''உயில்ல ஏதோ கோளாறுன்னு தெரியுது. அப்பா ஏமாந்தப்பக் கையெழுத்து வாங்கிருப்பாங்கன்னு நினைச்சேனே ஒழிய போலி உயில் தயாரிக்கிற அளவுக் குப் போவாருன்னு நானும் நினைக்கலே...'' என்றான்.

''ஆமா! ரொம்ப தைரியம்!'' என்று இப்போதும் கூட முகத்தில் கவலை காட்டினாள்.

''ஹேய்! அதுக்கு எதுக்கு இப்படிக் கவலை!'' என்று சிரித்தான். கொஞ்சம் கொஞ்சிக் கொண்டான்.



''இல்லைங்க..! மக்கள் ஏன் இப்படி அடுத்தவங்க சொத்துக்கு ஆசைப்படறாங்க. கருப்பண்ணன் மாமாவும் இப்படித்தானே செஞ்சாரு'' என்றாள்.

''என்ன செய்வது? பணம், பதவி, சொத்து, அரசியல் இது மேல எல்லாம் ஆசை வந்துட்டா.. ஒரு வெறி மாதிரி ஆயிடுது. அந்தச் சுழல்ல சிக்கிட்டா.. வெளிய வரவே முடியாது'' என்றான்.

''எதுவும் செய்யற லெவலுக்குப் போயிடறாங்க'' என்றான்.

''ம்.. இன்னொண்ணை விட்டுட்டேன்'' என்றான் சிரித்தான்.

''எது?'' கேட்கும்போதே அவளுக்குத் தெரியும் ஏதோ விவகாரமாக வரப் போகிறது என்று.

''காதல்..!'' அதை விட்டுட்டேன். பாத்தியா? அதுலயும் சிக்கிகிட்டா.. மீளவே முடியறதில்லை'' என்றான்.

அவள் குறும்பாகச் சிரித்தாள்.

''எதுக்கு இந்தச் சிரிப்பு..!''

''ஐயா.. உளர்ற உளறல்லே.. இருந்தே தெரியுது! என்றாள்.

அவன் அழகாகச் சிரித்தான். பிறகு நினைவு வந்தவன் போலச் சொன்னான்.

''மதுரா! போலி உயில் தயாரிக்கறதுக்கும், ஏமாத்திக் கையெழுத்து வாங்கறதுலயும் துணிச்சல் வேணும்னு சொன்னயே! இன்னொரு விஷயத்துக்கும் துணிச்சல் வேணும். இது கொஞ்சம் நல்ல விதமான துணிச்சல்'' என்றான்.

அவள் ஆர்வமாகக் கேட்பதைப் பார்த்தபடி சொன்னான்.

"தப்பு செஞ்சது அப்பாவா இருந்தாக் கூட என்கிட்டே தைரியமா வந்து உண்மையைச் சொன்னாரே அழகேசன் அதைச் சொல்றேன்'' என்றான்.

மதுரவாணி கணவனின் மார்பில் சாய்ந்து கொண்டவள் செல்லமாக அவன் புருவங்களை நீவி விட்டாள். தலையைத் தடவிக் கொடுத்தாள்.

''அத்தான்! அதுக்குக் காரணம் அவரோட துணிச்சல் மட்டும் இல்லே! உங்க மேலே வச்ச நம்பிக்கையும்தான். உயில் பத்தின விவரங்களை புரூஃப் பண்ணக் கூடிய சக்தி உங்களுக்கு இருக்குன்னும் அழகேசனுக்குத் தெரியும். அப்படி செஞ்சுட்டா அவங்கப்பாவோட தொழிலே பறி போகும்னு தெரியும். ஆனா.. அதுக்கு மேலே இன்னொண்ணும் தெரியும். என்ன இருந்தாலும் நீங்க ஒரு கண்ணியமான மனிதர். அதனால அந்த லெவலுக்குப் போக மாட்டீங்கன்னு ஒரு நம்பிக்கைதான்.''

"தேங்க்ஸ். பார் தி காம்ப்ளிமென்ட்.''

''எப்படியோ நான் கண்ணியமான மனிதர்ன்னு நீ ஒத்துக்கிட்டா.. சரி..'' என்றான்.

அவள் முறைத்தாள்.

அவன் மறுபடியும் தீவிர சிந்தனைக்கு மாறினான். ''மதுரா! எல்லா நேரத்திலயும் நீ என்னை சரியாப் புரிஞ்சுகிட்டே.. அதுல கொஞ்சம் எனக்கும் பெருமை தான். கொடிமலர்கிட்டே சொன்னியாம். அவரு எது செஞ்சாலும் சரியா இருக்கும்னு.. ஆனா.. எல்லா நேரத்திலயும் நான் ஏமாளி இல்லை மதுரா! அழகேசனுக்கு அவனோட அற்புதமான குணங்களுக்காக வேலை



கொடுத்தேன்னது மட்டுமில்ல எப்பவும் கிருபாகரனுடைய சன் நம்ம பார்வையில இருப்பது நல்லது'' என்றான்.

"பொய்! சும்மாவாவது என் வாயைப் பிடுங்க அப்படிச் சொல்றீங்க! ஆனா.. எனக்குத் தெரியும்! கிருபாகரனை மடக்கறதுக்கு நீங்க வேற ஆயுதம் வச்சிருக்கீங்கன்னு ஜெயராம் சொன்னார். அவருகிட்டே கூட கொடுக்க மாட்டேன்னு சொல்லிட்டீங்களாம்'' என்றாள்.

அவன் மறுபடியும் சிரித்தான்.

''பாத்தியா! நீ என்னைக் கரெக்டாப் புரிஞ்சிகிட்டிருக்கே..!'' என்றான்.

''பின்னே! என் தங்கப் பொக்கிஷமாச்சே.. நீங்க!'' என்றாள். மேலும் சொன்னாள் ''நான் இந்தப் பசுங்குடி கிராமத்துக்கு வந்தப்ப பயந்து போய் வந்தேன். பாதுகாப்பும், நிழலும் கிடைச்சாப் போதும்னு வந்தேன். ஆனா அப்ப நான் நினைக்கவே இல்லை! இங்க எனக்கு வாழ்க்கையே கிடைக்கும்னு'' என்றாள்.

''நானும்தான் நினைக்கலே! அதிலயும் வீட்டை விட்டுக் கிளம்பும்போது பெரிய மனப் போராட்டம் உயிலைப் படித்தவுடனே முதல் கோபம் சித்தி மேல வந்தது. சித்திதான் விளையாடிட்டாங்களோன்னு நினைச்சேன். ஆனா, என்னோட ஆழ்மனசே எனக்கெதிரா வாதாடுது கண்டிப்பா சித்தி இந்த வேலையைச் செஞ்சிருக்க மாட்டாங்கன்னு. யாரை நம்பறது. யாரை நம்பாம இருக்கணும்னு ஒண்ணுமே புரியலை. ஒரே குழப்பம். திடீர்ன்னு எல்லாருமே அப்பா உள்பட என்னைக் கைவிட்டுட்டார்ன்னு ஒரு தனிமை உணர்வு. நல்ல வேளையா நடேசன் மாமா போன் பண்ணி பசுங்குடி கிராமத்து நிலத்தைப் பத்திச் சொன்னாரு. மறுபடியும்

குழப்பம். அப்பா எதுக்கு எனக்கும் கூடச் சொல்லாம வாங்கிப் போட்டாரு. ஒருவேளை மங்களம் சித்திக்கு தெரியாம இருக்கணும்கறதுக்காக செஞ்சாரோ அப்படீன்னு தோணவும் மறுபடியும் சித்தி மேல சந்தேகம். ச்சே! நரக வேதனை!'' என்று அவன் முகம் வாடவும் மதுரவாணி பாய்ந்து அவனை மார்போடு அணைத்துக் கொண்டாள்.

''வேண்டாம்.. மறந்துடுங்க!'' என்று தேற்றினாள். அவன் மெதுவாக இயல்புக்கு வந்தான்.

''அப்புறம்தான். நாம தூரவே இருப்போம். அப்பத்தான் உண்மையான கல்ப்ரிட்டை வெளியே கொண்டு வர முடியும்னு தங்கினேன். ஆனா.. இந்த ஸ்கூல் என்னோட வேதனைகளையெல்லாம் மறக்கடிச்சுது'' என்றான்.

''ஸ்கூல்ன்னவுடனே ஞாபகம் வருது! என்னமோ கொடி மலரையும், அழகேசனையும் ஒரே மிரட்டா மிரட்டினீங்களாமே!''

''ஆமா! ரெண்டு பேரும் டீச்சர்ஸா இருக்கப் போறீங்க! ஸ்டூடன்ட்ஸ் எல்லாம் ரெண்டும் கெட்டான் வயசு வேற. ரொம்ப உன்னிப்பாக் கவனிப்பாங்க. அதனால எல்லா ரொமான்ஸையும் வெளியிலதான் வச்சுக்கணும். அப் பாயின்ட்மென்ட் குடுத்தர்றேன். கல்யாணமும் பண்ணி வச்சர்றேன். அதுக்கப்புறம் தேனிலவெல்லாம் போயிட்டு வந்து பள்ளிக்கூடத்துக்கு வந்து சேருங்க..! வந்ததுக்கப் புறம் ஸ்கூலை முழுசா கவனிக்கணும்னு சொல்லி வச் சிருக்கேன்'' என்றான்.

கலகலவென்று சிரித்தார்கள்!

''இது நல்லாருக்கே! ஒவ்வொரு நாளும் நைட்ல கூட உங்ககிட்டே பர்மிஷன் கேட்கணும்னு சொல்லுவீங்க.. போலே'' என்றாள்.



''மதுரா..! கண்ணம்மா! உனக்கு விஷயமே புரியலே! நம்ம இந்திய நாட்டுக்காரங்க இந்த விஷயத்துல ரொம்ப ரொம்ப கெட்டிக்காரங்க.. பாரேன். அந்தக் காலத்துல கூட்டுக் குடும்பமாத்தான் இருந்திருக்காங்க..! ஆனா ஒவ்வொருத்தரும் ஏழு.. எட்டுன்னு.. பெத்துத் தள்ளி யிருக்காங்க'' என்று மறுபடியும் சிரித்தான்.

மதுரவாணி கணவன் சிரிப்பதைக் கண்கொட்டாமல் ஆசையாகப் பார்த்தாள்.

''ஏங்க..! எப்படிங்க இப்படி இருக்கீங்க?'' என்றாள்.

''உரிமைகளுக்காகப் போராடறீங்க! அன்புக்கு அடிமை யாகறீங்க! லட்சியமும் வச்சுக்கறீங்க! காதல்னு வந்தா.. இப்படி'' என்று சிரிக்க.

''டவுன் டு எர்த்'' என்று புன்னகைத்தான்.

மதுரவாணி மேலும் தொடர்ந்தாள்.

''அத்தை சொன்னார்! என் வயித்துல பொறந்த மாலினி யும், குணசேகரனும் மூச்சுக்கு முன்னூறு தரம் அம்மா அம்மான்னு கூப்பிட்டாலும் அன்னைக்கு சசிசேகரன் அம்மான்னு கூப்பிட்டானே அன்னைக்குதான் என் மடி நிறைஞ்ச மாதிரி உணர்ந்தேன்னாங்க'' என்றாள்.

அந்த நினைவு வர அவனும் சற்று நேரம் நெகிழ்ந்து போய் அமர்ந்திருந்தான்.

''அம்மா... மாதிரி.. எல்லாத்துக்கும் கிடைக்காது'' என்றான். மீண்டும் மனைவியின் தலையைக் கோதி கொடுத்து ஆழ்ந்து அமைதியில் இருந்தான்.

பிறகு மெல்ல நிமிர்ந்தான். மனைவியின் முகத்தையும் நிமிர்த்தினான்.

''அது சரி! காலைல இண்டர்வ்யூ மாதிரி பேட்டி எடுத்து கிட்டிருக்கே.''

"சரி.. நீங்களும் கேள்வி கேளுங்க! அன்னைக்குத் தான் என்னமோ பதில் வாங்காம விட மாட்டேன்னு மிரட்டினீங்க.." என்றாள்.

"ம்.. நீயே எடுத்துக் குடுக்கறே! இந்த வாய்ப்பை விடவே கூடாது" என்று இழுக்க அவள் எழுந்து வீட்டுக் குள் ஓடினாள்.

அவனும் தொடர்ந்தான்.

"ஹேய்.. பதில் சொல்லிட்டு.. போ..!" என்றான்.

அவள் கட்டை விரலை ஆட்டிக் கலகலவெனச் சிரித்தபடி ஓட அவன் எட்டிப் பிடித்தான்.

பதில்கள் கொடுத்த மனைவியை கேள்வியே கேட் காமல் இழைந்தான்!

இருவரின் சிரிப்பும் தென்னை மரங்கள் எழுப்பிய காற்று சத்தத்திலும், பச்சைக் கிளிகளும், சிட்டுக் குருவி களும், மைனாக்களும் எழுப்பிய கீச்சுச் சத்தத்தில் கலந்து கொண்டன. இயற்கையும் கூட அவர்களோடு சேர்ந்து சிரித்தது.

ஜன்னல் வழியே எட்டிப் பார்த்த தென்னை ஓலைகள் உள்ளே நடக்கிற விஷயங்கள் பார்த்துக் கொண்டு பரிமாறிக் கொண்டன. சலசலவென்று சிரித்தன.

## 31



எல்லாரும் வட்டமாக அமர்ந்து கொண்டிருந்தார்கள்.

பெண்கள், எல்லாருக்கும் வாழை இலையில் பொங்கலை வைத்துப் பரி மாறிக் கொண்டிருந்தார்கள்.



சசிசேகரனும் ஒரு இலையை வாங்கிக் கொண்டான். அழகேசன், கொடிமலர் மதுரவாணி, மாலினி எல்லாரும் இருந்தார்கள்.

மதுரவாணி தானும் எழுந்து உதவி செய்வதற்காக போனாள்.

"நீ புதுப் பொண்ணு! உட்கார்ந்து பேசிகிட்டிரு போ" என்று அனுப்பி வைத்து விட்டார்கள்.

"உட்காரு அண்ணி! கொஞ்ச நாளைக்குத்தான் இந்த கவனிப்பெல்லாம். அப்புறம் எழுந்து உதவிக்கு வராளா பாருன்னு பேசுவாங்க" என்றாள் மாலினி.

சற்று நேரம் கலாட்டாவாகவும், கலகலப்பாகவும் பேசிக் கொண்டிருந்தார்கள்.

அழகேசன் அப்போது திடீரென்று சொன்னான்.

"உண்மையாவே எங்கப்பா உங்க கேஸ் மாதிரி ஒரு கேஸ் பாத்தே இருக்க மாட்டாரு. ரொம்பக் குழம்பிப் போயிட்டாரு" என்று சிரித்தான்.

"ஏன்.. அப்படி சொல்றே?" என்றான் சசிசேகரன்.

"பின்னே! எந்த வழக்கிலயாவது பிரதிவாதிகள் வாதி களுக்காக வாதாடுவது உண்டா!" என்றான் அழகேசன்.

சசிசேகரன் சிரித்தான்.

"முதல்ல என்னமோ மாலினி எப்ப அண்ணன் கோர்ட்டுக்குன்னு போனாங்களோ அப்பவே நம்மளும் கோர்ட்டுக்குப் போகணும்னு வீரமாய் பேசினா. உங்கம் மாவும் அப்படித்தான் சசியே நம்மளை நம்பாதப்ப நாம செய்யறதைச் செஞ்சுத்தானே ஆகணும்னாங்க. அப்புறம் பாத்தா கோர்ட்டில் எல்லாம் தலைகீழாய் பேசறாங்க" என்றான்.

சசிசேகரன் இரண்டு கைகளையும் பின்னால் ஊன்றிய படி அழகேசனைப் பேச விட்டுக் கொண்டிருந்தான்.

அழகேசன் மறுபடியும் சிரித்தான்.

''அப்புறம் கோர்ட்ல வந்து மங்களத்தம்மா என் மகன் பக்கம்தான் நியாயம்கறாங்க. மாலினியும் எங்க அண்ணன் பக்கம்தான் நியாயம்கறாங்க'' என்றான்.

குணசேகரன் சிரித்தான்.

ஆமா! வக்கீல் நொந்து போயிட்டார்!

மாலினி எடுத்துக் கொடுத்தாள்.

''அப்புறம் எதுக்குத்தான் கேசுக்கு வந்தீங்கன்னு ஜட்ஜே கேட்டுட்டாரு...'' என்றாள்.

எல்லாரும் சிரித்தார்கள்.

சிரிப்பு அடங்கியதற்குப் பிறகு அழகேசன் சொன்னான்.

''எனக்கென்னமோ.. சசி.. சார்..!''

''ஹலோ.. இங்க நாம உறவுக்காரங்க மட்டும்தான் இருக்கோம். அதனால சாரு. மோரெல்லாம் வேண்டாம் புரியுதா?'' என்றான் சசிசேகரன்.

''சரிங்கண்ணா..!'' என்ற அழகேசன் மறுபடியும் விட்ட இடத்தைப் பிடித்தான்.

''எனக்கென்னமோ.. எல்லாருமா சேர்ந்துகிட்டு எங்கப்பாவை முட்டாளாக்கிட்டீங்களோன்னு தோணுது'' என்றான்.

சசிசேகரனும், மாலினியும் குணசேகரனும் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டு புன்னகைத்துக் கொண் டார்கள்.

குணசேகரன் மட்டும் சிரித்துக் கொண்டே சொன் னான்.



''அண்ணா! கணடு பிடிச்சுட்டீங்க!'' என்றான். சசிசேகரன் தடுக்கவில்லை. தெரிந்தால் தெரிந்து கொள்ளட்டும் என்பதுபோல அமர்ந்து கொண்டிருந்தான்.

சரியாக பொங்கல் வைக்கிற நேரத்துக்கு அவர்கள் கோவிலுக்கு வந்து விட்டார்கள்.

காலையில் தோப்புக்குள்ளேயிருந்து வீட்டுக்கு வந்தவுடனே தன் பின்னாலேயே வந்து வம்பு செய்கிற கணவனிடம் மெல்லச் சொன்னாள்.

''ஏங்க! கோவிலுக்குப் போலாங்க. எல்லாரும் நமக்காகப் பொங்கல் வைக்காம காத்துக்கிட்டிருப்பாங்க..'' என்றாள்.

''ம்..!'' என்றான் சோகமாக.

மெல்லக் கைப்பிடியிலிருந்து விடுவித்தான். மதுரவாணி சிரித்தாள்.

''நம்ம கல்யாணம் நல்லபடியா முடிஞ்சதுக்காக கோயிலுக்கு வந்து பொங்கல் வைக்கறேன்னு அத்தை வேண்டியிருக்காங்க..! நான் எங்க போயிடப் போறேன். இருபத்து நாலு மணி நேரமும் உங்க கூடத்தானே இருக்கப் போறேன்'' என்றாள்.

''ஹை.. இது நல்ல ஐடியாவா இருக்கே! அப்ப என்னை வேலை கீலைன்னு எதுவும் பாக்காதய்யா. என் கூடவே இருய்யான்னா.. சொல்றே..?'' என்றான். மறுபடியும் நெருங்கினான். முகம் நோக்கிக் குனிந்தான்.

கொஞ்சம் இடம் கொடுத்தவள் பிறகு விலகிக் கொண் டாள். சிரித்தாள்.

''நான் அப்படிச் சொல்லலே! நீங்க எங்க இருந்தாலும். நான் உங்க கூடத்தானே இருபத்து நாலு மணி நேரமும் இருப்பேன்னு.. அதுக்கு அர்த்தம். இந்த மனசுக்குள்ளே தானே இருப்பேன்கறதுதான்..'' என்றாள்.

மெல்ல அவன் மார்பை நீவிக் கொடுத்தாள். அவன் தன்னையே மறந்தாற் போல் பார்த்துக் கொண்டு நின்ற வன் கிறக்கமாக ஆழமான குரலில் சொன்னான்.

''ஹேய்! இப்படியெல்லாம் பேசினா.. அப்புறம் கோவி லுக்குப் போற ஐடியாவே டிராப் ஆயிடும்'' என்று.

''ம்ஹூம்! கொஞ்ச நேரம்தானே! போயிட்டு வர்லாம் வாங்க!'' என்றாள்.

''வழக்கமா.. இந்த நேரத்துல ஒரு வசனம் சொல்லு வீங்களே.. அதைச் சொல்லு!'' என்றான்.

கைகள் மட்டும் விளையாடிக் கொண்டிருந்தன என்ன? என்பதுபோல் அவன் பார்க்க.

''கிணற்று தண்ணியை ஆத்து வெள்ளமா கொண்டு போயிடும்ன்னு... அது சொல்லலையா?'' என்றான்.

அவள் குபீரென்று சிரித்தாள். மெல்ல அவன் முன் நெற்றி முடியை நீவி விட்டாள்.

''ம்.. எல்லா விஷயமும் அப்புறமா? அதான் நாம நாளைக்கு வெளியூர் போறமே..! அங்க பேசலாம்! சரியா?'' என்றாள்.

''ம்.. சரி..'' என்றான் சோகமாக. ஆனால் புறப்பட்டார்கள்.

இப்போது உறவினர்களுக்கு மத்தியில் கிண்டலும் கேலியுமாக அவன் அமர்ந்திருப்பதைப் பார்த்து அவ ளுக்கு ஒரே சிரிப்பு.

நிலவுலகுக்கு வந்தாற் போல குணசேகரன் சொன்ன விஷயத்திற்குக் காது கொடுத்தாள்.

அப்போதுதான் குணசேகரன் ''கண்டு பிடிச்சுட்டீங்க அண்ணா!'' என்று சொல்லிக் கொண்டிருந்தான.



மாலினி அழகேசனிடம் சொன்னாள்.

''ஆமா.. அண்ணா! எல்லாமே எங்க அண்ணனோட ஐடியாதான்'' என்றாள்.

''முதல் முதலாக உங்கப்பா.. உங்களை எங்க வீட்டுக்கு கூட்டிட்டு வந்தவுடனே நான் பதைச்சுப் போய் அண்ண னுக்கு போன் பண்ணினேன். அப்போ அண்ணன் சொன்னாரு. அதனாலதான் நானும் உங்ககிட்டே அந்த மாதிரி நடக்கச் சொல்லி கேட்டுகிட்டேன்'' என்றாள்.

''அழகேசண்ணா! நீங்களும் உடந்தையா?'' என்றான் குணசேகரன்.

''ஆமா! அதுக்கப்புறம், பசுங்குடி கிராமத்துல கொடி மலரைப் பாத்துட்டு வந்தேன்னு சொன்னவுடனே எனக்கு ரொம்ப ஆர்வமாய் போச்சு. அப்பத்தான் எங்கப்பா.. உயில் போலிங்கறதை என்கிட்டே சொன்னாரு'' என்றான் அழகேசன்.

பெரிய பந்தலின் கீழே விரிக்கப்பட்டிருந்த பறம்புப் பாயில் ஒருக்களித்தாற் போல் சாய்ந்து கொண்ட சசிசேகரன் மதுரவாணியிடம் சொன்னான்.

''ஆமா.. மதுரா! உயில் போலிங்கற உண்மையை எங் களுக்குச் சொன்னதே அழகேசன்தான். ஆனா, எங்கப்பா மேல எந்தக் கிரிமினல் நடவடிக்கையும் எடுக்காமப் பாத்துக்கணும்னும் சொன்னாப்ல..!''

மதுரவாணி கொடிமலரைப் பார்த்தாள். கொடிமலரின் முகத்தில் பெருமை ஜொலித்தது.

சட்டென சசிசேகரன் சொன்னான்.

''அழகேசா! கொடிமலரைக் கூட்டிட்டுப் போய்க் கொஞ்ச நேரம் பேசிட்டு வாங்க..'' என்றான்.

அழகேசன் உடனே சொன்னான்.

''போங்கண்ணா நீங்க வேற! அதுக்கு அந்தப் பக்கம் சம்மதிக்கணுமே! இதுல பியூட்டி என்ன தெரியுங்களா.. நான் பிரபோஸ் பண்ணி இதுவரைக்கும் மூணு வருஷ மாச்சு. ஆனா, கொடிமலர் வாயிலே சம்மதம் வர்லே! ஏதோ நீங்கள்ளாம் பார்த்து ஃபிக்ஸ் பண்ணினதாலே தப்பிச் சேன்'' என்றான்.

சசிசேகரன் குபீரென்று சிரித்தான்.

''அங்கயும் இதே கதிதானா? நம்ம நிலைமையும் அதேதான்! இன்னைய வரைக்கும் அம்மிணி வாயால சம்மதம் வர்லை.''

எல்லாரும் சிரித்தார்கள்.

''அண்ணா! தாலிகட்டி எல்லா சடங்கும் முடிஞ்சு தேனிலவு கிளம்பற நேரத்துல இப்படி ஒரு குண்டை போடறீங்களே?'' என்றான் அழகேசன்.

''அதுக்குச் சொல்லலை! கேட்டா என்ன சொல்வாங்க தெரியுமா? பிடிக்காமயா கழுத்தை நீட்டினேன். தாலிகட்டி கிட்டேன்பாங்க.. இருந்தாலும் நாம ப்ரபோஸ் பண்ற நேரத்துல 'எனக்கும் சம்மதம்னு' ஒரு பதில் சொன்னா எவ்வளவு நல்லா இருக்கும்.''

''அண்ணா! ரெண்டு பேரும் சொந்த அனுபவங் களைப் பேச ஆரம்பிச்சுட்டீங்க..! நான் இருக்கவா.. போகவா..'' என்றாள் மாலினி.

''அட இரும்மா! அடுத்தது உனக்குத்தானே கல் யாணம். மாப்பிள்ளை பாக்க ஆரம்பிச்சாச்சு. நீயாவது அவன் கேட்டா மனசுல வச்சுக்காம வாய் விட்டு சொல்லு!'' என்றான்.



மாலினியின் முகம் சிவக்க மறுபடியும் வெடிச் சிரிப்புக் கிளம்பியது.

சசிசேகரன் சிரிக்காமல் சோகமாகச் சொன்னான்.

''அட.. சிரிக்காதீங்கடா! அந்த அவஸ்தை என்னன்னு எனக்குத்தானே தெரியும்? ஏன்.. அழகேசா..'' என்றான்.

உடனே அவனும் ''ஆமாண்ணா!'' என்றான். அதே போல சோகமாக.

''ஆமாடா.. குணா! 'பதில் சொல்லச் சொல் பெண்ணே'ன்னு பின்னாலயே அலையணும்'' என்றான்.

''ஐயோ.. போதுங்க'' என்று மதுரவாணியே சிரிக்கவும் தான் நிறுத்தினான்.

''அழகேசா! நிஜமாத்தான் சொல்றேன்! சும்மா காலார அந்தத் தோப்புக்குள்ளே போயிட்டு வாங்க'' என்றான்.

அழகேசனும், கொடிமலரும் சற்று தூரம் நடந்த பின் கொடிமலர் சொன்னாள்.

''மச்சான்! இப்படி கேலி பேசுவாருன்னு நினைக்கவே இல்லை'' என்று.

''உங்க மச்சான்..! அருமையான ஆள். மாலினி கிட்டே ஒரே பாசம்தான். குணா கிட்டே விளையாட்டு சித்தி கிட்டே அம்மா.. அம்மான்னு அன்புமழை'' என்றான்.

''பாவம்.. எங்கக்கா! இனிமேலாவது நிம்மதியா இருக்கட்டும். கருப்பண்ணன் மாமா எங்களுக்கு துரோகம் செஞ்சப்ப.. ஊரை விட்டு ஓடி பசுங்குடி கிராமத்துல இருக்கும்போது வெளிப்படையா தன் துக்கத்தைக் காட்டிக்க மாட்டா! ஆனா, ராத்திரி நேரங்கள்ல என் முகத்தைப் பாத்துகிட்டுக் கண்ணீர் விட்டுட்டு இருப்பா...'' என்றாள்.

அழகேசன் நின்றான். இரண்டு கைகளாலும் அவள் முகத்தை ஏந்திக் கொண்டான்.

''வேண்டாம்.. மலரு! அந்தக் கடினமான காலங்களை யெல்லாம் மறந்துடுங்க.. இனிமே நிம்மதியா இருங்க.'' என்றான்.

''ஆமா! இனிமே எதுக்குத் துக்கம்! அக்காவுக்கு சசி மாமாவும் எனக்கு நீங்களும் கிடைசசதுக்கப்புறம் எதுக்குத் துக்கம்'' என்றாள்.

''சற்று நேரம் மௌனமாக தோப்புக்குள் நடந்தார்கள்.

அப்போது கொடிமலர் சொன்னாள்.

''என்ன இருந்தாலும் மாமா... அதான்... உங்கப்பா இப்படியெல்லாம் செஞ்சிருக்க வேண்டாம். ஆனாலும் எல்லாம் அவரைக் குறைவாய் பேசும்போது எனக்கு 'சுருக்' என்று வருது'' என்றாள்.

அழகேசன் தன் வருங்கால மனைவியைப் பெருமை யாகப் பார்த்தான்.

''எனக்கும் அப்படித்தான் இருக்கு. ஆனா.. சசி அண்ணா வோட இடத்துல வேற யாராவது இருந்திருந்தா... எங்கப்பா... இந்நேரம் கம்பி எண்ணிகிட்டிருக்கணும். வெறும் வாய்ப் பேச்சுல கிண்டல்தானே பண்றார். பண்ணிட்டுப் போகட்டும். ஜெயராம் சார்கிட்டே சொன்னாராம் நான் அந்த சி.டி.யைத் தரமாட்டேன். சார்! ஏன்னா.. என்ன இருந்தாலும்.. நீங்க எதிரி... ஒரு நாள் இல்லாட்டி ஒரு நாள் வேலையைக் காமிச்சுடுவீங்கன்னு.. அதனால அவருக்கு என்னவும் பேச உரிமையிருக்கு. பேசட்டும்'' என்றான்.

அதே நேரத்தில்!



குணசேகரனும், மாலினியும் கூட இங்கிதம் அறிந்த வர்களாக சசிசேகரனுக்கும், மதுரவாணிக்கும் தனிமை கொடுத்து பெரியவர்களோடு சேர்ந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் கோயிலுக்குப் பின்னாலே நந்தவனத்தில் நடந்து கொண்டிருந்தார்கள்.

''அதுதான்... கல்யாணம் ஆனதுல இருந்து வேணுங் கற பதில் கேட்டுக் கேட்டு வாங்கிக்கறீங்களே! அப்புறம் எதுக்கு.. பதில் சொல்லலை.. சொல்லலைன்னு.. இப்படி மானத்தை வாங்கறீங்க..'' என்றாள்.

''ஆஹா..! அது சும்மா.. கலாட்டா! நீதான் முதல்லயே எத்தனையோ விதமா பதில் சொன்னியே!'' என்றான்.

அவள் புரியாமல் பார்க்க.

''ஆசை ஆசையா சமைச்சுக் கொண்டு வர்றது... ஏதாவது கேலி செஞ்சா.. முகம் சிவந்து போறது.. அப்படீன்னு அதுலயே எனக்கு பதில் கிடச்சுப் போய்த்தானே நான் அம்மா கிட்டே சொல்லிக் கல்யாணம் பேசச் சொன்னேன். ஆனாலும் நீ வாய் திறந்து சம்மதம் சொல்லிருந்தா ரொம்ப சுகமா இருந்திருக்கும்'' என்றான்.

பேசிக் கொண்டே தென்னந்தோப்புக்கு வந்திருந் தார்கள்.

''இப்ப.. என்ன விதமா காம்பன்ஸேட் செய்யணும்?'' என்றாள்.

''இருக்கட்டும்.. விடு! ஆயுசு பூராவும் அதைச் சொல் லியே பிளாக்மெயில் செஞ்சு வேணுங்கறதெல்லாம் வட்டியும், முதலுமா வாங்கிக்குவேன் இல்லே...'' என்றான்.

ஒரு விதமாகச் சிரித்தான்.

அவளும் ஒரு விதமாகச் சிரித்தாள்.

"மிஸ்டர்.. சசிசேகரன்.. தென்னந்தோப்பைக் கண்டாலே.. உங்களுக்கு என்னமோ ஆயிடுது.." என்றாள்.

கொஞ்ச தூரத்துல ஒரு நந்தவனம். நேர் பின்னால ஒரு தென்னந்தோப்பு.. கொஞ்ச தூரத்துல ஒரு சலசலக்கிற ஆறு..! பக்கத்துல புத்தம் புது வைஃப். அதுக்கப்புறமும் ஒருத்தனுக்கு என்னமோ.. ஆகலேன்னா.. அவனை என்னன்னு சொல்றது?" என்றான்.

"அத்தை கூப்பிடறாங்க!" என்று அவள் நகர அவன் எட்டி அவள் கையைப் பிடித்தான்.

"பதில் சொல்லிச் செல்.. பெண்ணே!" என்றான்.

இருவரும் ஒருவருக்கொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

சிரித்தார்கள்!

தென்னை மரங்களும் சலசலத்துச் சிரித்துக் கொண்டன. ஒன்றையொன்று பார்த்துக் கொண்டன. அவள் பதில் சொன்னாள். அவன் கேட்டு வாங்கிக் கொண்டான்.

கேள்விகளுக்கும், பதில்களுக்கும் அப்பாற்பட்ட மன நிறைவு அவர்கள் உள்ளங்களை ஆக்கிரமித்தது.